மயனே நேரில் நிருமித்தானென்னும்படி தனது சிறந்த முயற்சியினால் சமைக்கப்பட்டு, பூதலத்தில் ஸர்வ விதத்திலும் சிறந்துள்ள இலங்கைமன்னன் கிரஹங்களை அனுமான் கண்டார். 4

[அ-கை. இனி உள்ளே யிருக்கும் புஷ்பகவிமானத்தை வருணிக்கிறார்.]

அநந்தரம், உயர்ந்த மேகம்போ லுருவத்தோடு, மனதிற் கினிதாய், பொன்போ லழகிய நிறத்ததாய், இராக்கதர்கோன் பலத்திற் கிசைந்ததாய், இணையிலா வழகு பொருந்தியதான உத்தமகிருஹமொன் றுகாணப்பட்டது.

அதுதான், புவியில்வீழ்ந்த சுவர்க்கம்போலிலங்கி, பல ரத்தினங்கள் பதித்துத்துலங்கி, பலவகை மலர்களும் சிதறுண்டு, காவிப்பொடி சிந்து கிரிசிகரம்போல் விளங்குவதாய், 6

𑌨𑌾𑌰𑍀𑌪𑍍𑌰𑌵𑍇𑌕𑍈𑌰𑌿𑌵 𑌦𑍀𑌪𑍍𑌯𑌮𑌾𑌨𑌂 𑌤𑌡𑌿𑌦𑍍𑌭𑌿𑌰𑌮𑍍𑌭𑍋𑌦𑌵
𑌦𑌰𑍍𑌚𑍍𑌯𑌮𑌾𑌨𑌮𑍍 । 𑌹𑌂𑌸𑌪𑍍𑌰𑌵𑍇𑌕𑍈𑌰𑌿𑌵 𑌵𑌾𑌹𑍍𑌯𑌮𑌾𑌨𑌂 𑌶𑍍𑌰𑌿𑌯𑌾
𑌯𑍁𑌤𑌂 𑌖𑍇 𑌸𑍁𑌕𑍃𑌤𑌾𑌂 𑌵𑌿𑌮𑌾𑌨𑌮𑍍 ॥ ௭

𑌯𑌥𑌾 𑌨𑌗𑌾𑌗𑍍𑌰𑌂 𑌬𑌹𑍁𑌧𑌾𑌤𑍁𑌚𑌿𑌤𑍍𑌰𑌂 𑌯𑌥𑌾 𑌨𑌭𑌶𑍍𑌚 𑌗𑍍𑌰𑌹
𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌚𑌿𑌤𑍍𑌰𑌮𑍍 । 𑌦𑌦𑌰𑍍𑌶 𑌯𑍁𑌕𑍍𑌤𑍀𑌕𑍃𑌤𑌮𑍇𑌘𑌚𑌿𑌤𑍍𑌰𑌂 𑌵𑌿𑌮𑌾𑌨𑌰𑌤𑍍𑌨𑌂
𑌬𑌹𑍁𑌰𑌤𑍍𑌨𑌚𑌿𑌤𑍍𑌰𑌮𑍍 ॥ ௮

𑌮𑌹𑍀 𑌕𑍃𑌤𑌾 𑌪𑌰𑍍𑌵𑌤𑌰𑌾𑌜𑌿𑌪𑍂𑌰𑍍𑌣𑌾 𑌶𑍈𑌲𑌾𑌃 𑌕𑍃𑌤𑌾
𑌵𑍃𑌕𑍍𑌷𑌵𑌿𑌤𑌾𑌨𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌃 । 𑌵𑍃𑌕𑍍𑌷𑌾𑌃 𑌕𑍃𑌤𑌾𑌃 𑌪𑍁𑌷𑍍𑌪𑌵𑌿𑌤𑌾𑌨
𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌃 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌕𑍃𑌤𑌂 𑌕𑍇𑌸𑌰𑌪𑌤𑍍𑌰𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑍍 ॥ ௯

𑌕𑍃𑌤𑌾𑌨𑌿 𑌵𑍇𑌶𑍍𑌮𑌾𑌨𑌿 𑌚 𑌪𑌾𑌣𑍍𑌡𑍁𑌰𑌾𑌣𑌿 𑌤𑌥𑌾 𑌸𑍁𑌪𑍁𑌷𑍍𑌪𑌾
𑌣𑍍𑌯𑌪𑌿 𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑌾𑌣𑌿 । 𑌪𑍁𑌨𑌶𑍍𑌚 𑌪𑌦𑍍𑌮𑌾𑌨𑌿 𑌸𑌕𑍇𑌸𑌰𑌾𑌣𑌿 𑌧
𑌨𑍍𑌯𑌾𑌨𑌿 𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌤𑌥𑌾 𑌵𑌨𑌾𑌨𑌿 ॥ ௧௦

𑌪𑍁𑌷𑍍𑌪𑌾𑌹𑍍𑌵𑌯𑌂 𑌨𑌾𑌮 𑌵𑌿𑌰𑌾𑌜𑌮𑌾𑌨𑌂 𑌰𑌤𑍍𑌨𑌪𑍍𑌰𑌭𑌾𑌭𑌿𑌶𑍍𑌚 𑌵𑌿𑌵
𑌰𑍍𑌧𑌮𑌾𑌨𑌮𑍍 । 𑌵𑍇𑌶𑍍𑌮𑍋𑌤𑍍𑌤𑌮𑌾𑌨𑌾𑌮𑌪𑌿 𑌚𑍋𑌚𑍍𑌚𑌮𑌾𑌨𑌂 𑌮𑌹𑌾𑌕𑌪𑌿𑌸𑍍𑌤
𑌤𑍍𑌰 𑌮𑌹𑌾𑌵𑌿𑌮𑌾𑌨𑌮𑍍 ॥ ௧௧

𑌕𑍃𑌤𑌾𑌶𑍍𑌚 𑌵𑍈𑌦𑍂𑌰𑍍𑌯𑌮𑌯𑌾 𑌵𑌿𑌹𑌙𑍍𑌗𑌾 𑌰𑍂𑌪𑍍𑌯𑌪𑍍𑌰𑌵𑌾
𑌲𑍈𑌶𑍍𑌚 𑌤𑌥𑌾 𑌵𑌿𑌹𑌙𑍍𑌗𑌾𑌃 । 𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌚 𑌨𑌾𑌨𑌾𑌵𑌸𑍁𑌭𑌿𑌰𑍍𑌭𑍁𑌜
𑌙𑍍𑌗𑌾 𑌜𑌾𑌤𑍍𑌯𑌾𑌨𑍁𑌰𑍂𑌪𑌾𑌸𑍍𑌤𑍁𑌰𑌗𑌾𑌃 𑌶𑍁𑌭𑌾𑌙𑍍𑌗𑌾𑌃 ॥ ௧௨

மின்னல்கள் அழகுசெய்யு மேகம்போல் பெண்மணிகள் பொலிவுசெய்ய, புண்ணியம் செய்தவரின் (சிறந்த அன்னம் சுமக்கும்) ஆகாயவிமானத்திற்குரிய அழகுற்றதாய், 7

பலவகைக் காவிகளால் விசித்திரமான கிரி சிகரம் போலும், சந்திரன் முதலிய கிரஹங்களா லழகாய வாகாயம்போலும், சித்திரமான மேகங்களைச் சேர்த்துவைத்தாப்போலும், பல ரத்தினங்களால் விசித்திரமான விமான ரத்தினமாய்க் காணப்பட்டது. 8

அதில் புவியும், புவிநிறைந்த மலைகளும், மலைகள் நிறைந்த மரங்களும், மரங்கள் நிறைந்த மலர்களும், மலர்கள் நிறைந்த விதமும் மகரந்தப்பொடிகளும், 9

அப்படியே வெண்ணிறத்த மாளிகைகளும், நன்மலர்கள் மலர்ந்த குளங்களும், தாதுகள் நிறைந்த தாமரைகளும், பொழில்செறிந் தழகாய பூங்காவனங்களும் சித்திரமாய் அமைக்கப்பட்டிருந்தன. 10

இப்படி ரத்தினகாந்திகள் செறிந்து, உத்தமமாளிகைகட்கும் மேலாய் வளர்ந்து, பெயர்பெற்று விளங்கும் அந்த மஹா விமானத்தை, வானரோத்தமன் புஷ்பக விமானமெனக் கண்டுகொண்டார். 11

பின்னும் அதில் வைடூரியப் பறவைகளும், வெள்ளியும் பவழமுங் கலந்துசெய்த வன்னங்களும், பற்பல ரத்தினங்களிற் செய்த விசித்திரமான ஸர்ப்பங்களும், அப்படியே பிறந்தாப்போல் நல்ல லக்ஷணங்கள் பொருந்திய சாதிக்குதிரைகளும் செய்யப்பட்டிருந்தன. 12

ப்ரவாதஜாம்பூநதவர்ஷ்வவக்ஷா ஸ்ஸ்ரீவத்ஸவஜ்ரி
தஜிஹ்வவக்ஷா:। காலஸ்யஸாக்ஷாத்விவஹாம் திவக்ஷா: க்ருதா
விஹங்கஸ்ஸர்வாஸ்ஸர்வவக்ஷா:॥ ௧௩

நியர்ஜ்யோ நாஸ்த்ரைர்கஜாஸ்ஸர்வஹஸ்தா ஸ்ஸகேஸரா ஶ்ரோ
த்ரவத்ர ஹஸ்தா:। ஸஹப்ரவலைவீ ச க்ருதாஸர்வஹஸ்தா ஶ்ர
க்ஷ்ஸ்தஸயாவஷ்டிநிவஹஹஸ்தா॥ ௧௪

இதீவ தக்ஷஶ்ருஹ்லஹிஶ்ய ஶோஜநம் ஸவிஷ்மயோ நஶ
ஶிவஹாரர்ஶோஜநஃ। வர்நஷ்ட தக்ஷவாரலஸர்கம்யிவர்ம்
தரம் ஹிஶா த்யெநஶஶிவஹாரர்கம்தரஃ॥ ௧௫

ததஸ்தாம்கவிரஹிவத்யவப்ரஜிதாம் சரநுவர்ஶீம்
தஶலர்வஸாஸர்வாஶ்ரிதாஃ। கத்ருஶ்யதாம்ஜநகஸ்லர்தாம்
ஸர்வப்ரஜிதாம் ஸர்தர்ஃவிதஃவதிஶர்ணவெஶநிஜி
தாஃ॥ ௧௬

ததஸ்தராஸஹர்வியஸாவிதாத்நஃ க்ருதாத்வெநாஜ
நகஸர்தாம்ஸர்வத்ர்நஃ। கவஶ்யதாஃஹவததிதர்ஃவி
தம்லந ஸ்ஸர்வக்ஷர்ஷஃப்ரவிசாரதொலஹாத்நஃ॥ ௧௭

இதி ஶ்ரீமதுத்தரகாண்டே - ஸப்தமஸ்ஸர்கஃ

பூவழத்திலும் பொன்னிலும் செய்த மலர்களமைந்த சிறகுகளும், வேடிக்கைக்காக வளைத்த சிறகுகளும், காமனுக்குத் துணையென்னும்படி சுந்தரமானசிறகுகளும் நன்முகமும்படைத்த பக்ஷிகள் அமைக்கப்பட்டிருந்தன. 13

மேலும் அதில் தாமரையினுடையும், அதிலிறங்கிய வேழங்களும், தாதுமொய்த்த அவற்றின் துதிக்கைகள் பெய்யுமந்த தாமரை யிதழ்களும், அவற்றினிடையில் கமலமேந்து மங்கையளான திருமங்கையரும் திகழக் கண்டார். 14

இப்படிபோல், மிகவும் அழகாய மலைபோல் விளங்கும் மங்களகரமான அந்த ராவணன் மாளிகையை முற்றும் சுற்றி, பின்னும் பார்க்கில் அது, பனி நீங்கினகாலத்தில் அழகான குஹைகளோடு சுந்தரமாய் மணக்கின்ற பர்வதம்போல் விளங்காநின்றது. 15

அநந்தரம் அந்த கபிவரன், தசமுகன் தோள்வலியால் புரக்கப்படுமந்த சிறந்த நகரத்தை இங்ஙனம் முற்றும் சுற்றியும், பதியின் குணாதிசயத்திற்குத் தோற்றுக் கிடக்கின்ற பரிசுத்தையான ஜனகன் திருமகளைக் காணுமல் போர நொந்தார். 16

இப்படி கூர்மதியும், நேர்நெறியும், நன்னுேக்கும் படைத்த மஹா ஸமர்த்தரான ஹனுமான், பலவகையும் சிந்தித்துப் பல்படியும் பலகாலும் திரிந்துபார்த்தும் பிராட்டியைக் காணுமையால், அப்பொழுது அவர் சிந்தை மிகவும் நொந்தது. 17

ஏழாம் ஸர்க்கம் முற்றிற்று.

ஶ்ரீஉத்ஸ்ராந்ரகாணு - க்ஷ்உஸ்ஸஹ:

ஸதஸ்யஉெஜ்யஹவநஸ்யஸம்ஹ்ரிதம் உஹாஃதிரா நம்உணீ
ரந்தவித்ரிதஃ| ஐந்தவ்ஜாம்ப ஜிநஃஜாமக்ருத்ரிஉம் ஃஃஶ்ரு
வீ°ர:வவநா த்ஜ:கஃ்ஃி:|| ௧

தஃவ்ருஸெயாவ்ருதிகாரக்ருத்ரி உம் க்ருதம்ஸ்யம்ஸாஃவ்
திவிஶ்வகஉணா| ஃவம்ஹதம்வாய வயவ்ருதிஷிதம் வ்ருராஜ
தாஉித்ருவயஸ்ருமக்ஷவக|| ௨

நதத்ரகிம்விந்நக்ருதம்வ்ருபதந்தொந தத்ருகிம்விந்நஉ
ஹாஹிரத்வக| நஜெதவிஶெஷாநியதாஸ்ஸரொஷ்வி
நதத்ருகிம்விந்நஉஹாவிஶெஷவக|| ௩

தவ்ஸ்ஸ உாயா நவா ராக்ருஉாஜிதம் உநஸ்ஸஉாயா நவி
உாரவாஸிணஃ| கஃநகஸம்ஸ்ஸா நவிஶெஷஙிஜிதம் தக
ஷஃதஷஃமவ்ருவிஶெஷஃஸிநஃ|| ௪

எட்டாம் ஸர்க்கம்

[அ-கை. முன்சொன்ன விமானத்தையே
விவரமாய் வர்ணிக்கிருர்.]

இப்படி வச்சிரமுதலிய உத்தம ரத்தினத்தால் சித்திரமிழைத்து, புடமிட்ட தங்கத்திற் சமைந்து, இராவணன் மனையின் நடுவில் நிறுத்தப்பட்டுள்ள விமான ரத்தினத்தை அந்த வாயுகுமாரனுன கபிவீரன் கண்டார். 1

அது எண்ணற்கரியதாய் ஈடற்று, விசுவகர்மனுல் "இது நன்றுகண்டது" என்று புகழ்ந்து நிருமிக்கப்பட்டு திவத்திலும் நடக்கவற்ருய், ஆதித்தன்வழிக்கு மோரழகு செய்து, இராவணன் மனைநடுவில் அந்தரத்தில் நிலைபெற்று விளங்காநின்றது. திவம்-ஸ்வர்க்கம். 2

விசேஷ முயற்சியோடு செய்யப்படாததாவது, விலையுயர்ந்த ரத்தினமுடைத்தாகாததாவது, அதில் யாதுங் கிடையாது; ஸுரலோகத்திற் சிறந்தவைகளும் அதிலில்லாதவையன்று; மிகவும் விசேஷமுடைத் தாகாதவஸ்து அதில் யாதொன்றுமின்று. 3

தவத்தை யனுட்டிப்பதாலும் பராக்கிரமத்தாலும் பெறப்பட்டதும், மனதிற்கிசைந்தப்டி விதம்விதமாய்ச் செல்லவல்லதும், (விமானம் கோபுரம் முதலிய) அநேக ஸன்னிவேசத்தோடு நிருமிக்கப்பட்டதும், ஆங்காங்கு ஒன்றுக்கொன்று விசேஷமான காக்ஷிகள் தருவதும்; 4

ஸந்த்யாயாமதஶீக்ரம் ஶாஸிநம் ஜாராவரம் ஸரார்த
தார்த்யம் ஶாஸிநம்। ஸஹாத்ரநாம் வாணீக்யதாம் ஸஹஸிநாம்
யஶஸ்விநா ஸர்வ்ய ஸாஜாஸிவாமயம்॥ ௫

விஶேஷாட்யம் ப்ரவிஶேஷஸம்ஸ்தீதம் விசித்ர கபி
டம் பஹுகபிடஸம்பிதம்। ஸநாஹிநாஸம் ஶரக்ஷம் ஜாநிஸர்
ஷம் விசித்ர கபிடம் ஶிவரம் ஶ்ரேயர்யா॥ ௬

வஹஞ்சியம் காம் ஸமஶோஹிதாநநா ஸஹாஶநாவேஞா
ஸவாநிஶாவா:। விவ்ருத்தவித்வத்விஶாமஶோபநா ஸஹா
ஜவா ஸுதகணாஸஸஹஸ்ரஶ:॥ ௭

வஸந்தவர்ஷோத்கராவாரஜர்ஶநம் வஸந்தஸாலா
ஜவிகாந்தஜர்ஶநம்। ஸவர்ஷ்கம் தத்ரவிஸாநஸாத்தஸம் ஜஜ
ஶர்தஸாநரவீரஸத்தஸ:॥ ௮

இதி ஶ்ரீ ஸுந்தரகாண்டே - ஷஷ்டஸ்ஸர்க:

மனம்வைத்தால் அதிவேகமாய்ச் செல்லக்கூடியதும், தடையறக் காற்றெனக் கடிதோடுவதும், புண்ணியம் செய்து செல்வம் மல்கிப் புகழ்பெற்றுப் பேரானந்தங் கொண்ட (இந்திரன் முதலிய) மஹாத்மாக்களுக்கு உரைவிடம்போன்றதும்; 5

பல விசேஷங்களோடு கூடிய விசேஷங்களுடையதும், (அதற்கு உதாரணமாய்) அநேக சிகரங்களுடன் கூடிய விசித்திரமான சிகரங்களுற்றதும், மனதிற்கினியதும், சரத்கால சந்திரன்போல் தெளிவுற்றதும், கிரிசிகரம்போன்ற விசித்திரமான (பிரதான) சிகரமுடையதும்; 6

குண்டல மிலங்கு முகத்தோரும், பெரிய வயிறு படைத்தோரும், ஆகாயத்தில் இரவிற்றிரிவோரும், உருண்டு குழிந்தகன்ற கண்கள் படைத்தோரும், அதிவேக சாலிகளுமான பூதகணங்கள் ஆயிரமாயிரமாய் அடியிற் றுங்கப்பெற்றதும்; 7

வஸந்தருதுவில் மலர்ந்த மலர்க்குவியல்போல் அழகியதும், வஸந்தமாஸத்தைவிட இனிய காட்சி தருவதுமான அந்த புஷ்பகமென்னும் விமானத்தை அந்த வானரோத்தம வீரன் கண்டிருந்தார். 8

எட்டாம் ஸர்க்கம் முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 - 𑌨𑌵𑌮𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃

𑌤𑌸𑍍𑌯𑌾𑌲𑌯𑌵𑌰𑌿𑌷𑍍𑌠𑌸𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯𑍇𑌵𑌿𑌪𑍁𑌲𑌮𑌾𑌯𑌤𑌮𑍍।
𑌦𑌦𑌰𑍍𑌶𑌭𑌵𑌨𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌹𑌨𑍂𑌮𑌾𑌨𑍍𑌮𑌾𑌰𑍁𑌤𑌾𑌤𑍍𑌮𑌜𑌃॥ ௧

𑌅𑌰𑍍𑌧𑌯𑍋𑌜𑌨𑌵𑌿𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌣𑌮𑌾𑌯𑌤𑌂𑌯𑍋𑌜𑌨𑌂𑌹𑌿𑌤𑌤𑍍।
𑌭𑌵𑌨𑌂𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌬𑌹𑍁𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌸𑌙𑍍𑌕𑍁𑌲𑌮𑍍॥ ௨

𑌮𑌾𑌰𑍍𑌗𑌮𑌾𑌣𑌸𑍍𑌤𑍁𑌵𑍈𑌦𑍇𑌹𑍀𑌂 𑌸𑍀𑌤𑌾𑌮𑌾𑌯𑌤𑌲𑍋𑌚𑌨𑌾𑌮𑍍।
𑌸𑌰𑍍𑌵𑌤𑌃𑌪𑌰𑌿𑌚𑌕𑍍𑌰𑌾𑌮 𑌹𑌨𑍂𑌮𑌾𑌨𑌰𑌿𑌸𑍂𑌦𑌨𑌃॥ ௩

𑌉𑌤𑍍𑌤𑌮𑌂𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌵𑌾𑌸𑌂 𑌹𑌨𑍂𑌮𑌾𑌨𑌵𑌲𑍋𑌕𑌯𑌨𑍍।
𑌆𑌸𑌸𑌾𑌦𑌾𑌥𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌵𑌾𑌨𑍍 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌨𑌿𑌵𑍇𑌶𑌨𑌮𑍍॥ ௪

𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌷𑌾𑌣𑍈𑌰𑍍𑌦𑍍𑌵𑌿𑌰𑌦𑍈 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌷𑌾𑌣𑍈𑌸𑍍𑌤𑌥𑍈𑌵
𑌚। 𑌪𑌰𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑌮𑌸𑌂𑌬𑌾𑌧𑌂 𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌾𑌣𑌮𑍁𑌦𑌾𑌯𑍁𑌧𑍈𑌃॥ ௫

𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌭𑌿𑌶𑍍𑌚𑌪𑌤𑍍𑌨𑍀𑌭𑌿𑌃 𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌯𑌨𑌿𑌵𑍇𑌶𑌨𑌮𑍍।
𑌆𑌹𑍃𑌤𑌾𑌭𑌿𑌶𑍍𑌚𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌰𑌾𑌜𑌕𑌨𑍍𑌯𑌾𑌭𑌿𑌰𑌾𑌵𑍃𑌤𑌮𑍍॥ ௬

ஒன்பதாம் ஸர்க்கம்

இப்படிப்பட்ட புஷ்பகம் வைத்திருக்கும் அந்த நன் மனையின் நடுவில் விசாலமாய் நீண்ட நன்மாளிகை ஒன்று காணப்பட்டது. 1

[இதுதான் இராவணனிருக்கும் மூலஸ்தானம்; இதை மேலே 4-5-6-களிற் சொல்லுகிறார். ஆனாலிப்படி பெரிதான புஷ்பகவிமானமும், இப்படி ஓர் பெரிய மாளிகையும், மற்றும் இராவணன் மனையில் அடங்கும்படி எங்ஙனேயென்னில் சொல்லுகிறார்.]

அந்த அரக்கர்பதியின் அரண்மனை ஒருயோஜனம் நீளமும் அரையோஜனம் அகலமும் அனேக உப்பரிக்கைகளடர்ந்ததுமன்றோ? 2

அதில்தான், செற்றார்க்கு வெப்பந் தரவல்ல ஹனுமான், விதேஹன் பெற்ற நெடுங்கண் சீதையைத் தேடி எங்குந் திரிந்தார். 3

அதில் அரக்கர்க்கென்று வகுத்த உத்தமமான விடமெங்கும் பார்த்துக்கொண்டே, பிறகு அரக்கர்கோன் உரையும் (மேற்சொன்ன மூல) ஸ்தானத்தை தைரியமாய்க் கிட்டினார். உரையும்-வஸிக்கும். 4

அதைச்சுற்றிலும் ஆங்காங்கு நான்கு மூன்று இரண்டு தந்தங்களுடைய யானைகளை நிறுத்தி, ஆயுதமுங் கையுமாய் அரக்கர்கள் காத்திருக்கின்றனர். 5

அதில் இராவணன் மனைவிகளான ராக்ஷஸிகளும், வலுவில் கொண்டுவந்த இராஜகுமாரத்திகளும் நிறைந்திருந்தார்கள். 6

தந்நு கைலாஸகீர்ணம் த்ரிம்ஶத்ரஸஷாகராரம்|
வாயாவேமஸமாயோதம் வந்நமைஶிவஸாஸ்ரம்|| எ

யாஹிவேஶ்ரவணேமுக்த்யுராவேம்தேஹஸிவாஹநே||
ஸாராவணஶ்ரேஹஸவுரா நித்யமேவாநவாயிநீ|| அ

யாவராஜ்ஞ:காபோரஸ்ய யமஸ்யவராணஸ்யச|
தாத்ருஶீ தச்சிஶிஷ்டாவா ஜ்ஞாரலக்ஷாஶ்ரேஹஷ்வி|| கூ

தஸ்யஹர்ம்யஸ்யமஸ்யஸ்ஸம் வேஶ்ரசாந்யஸுஸாநிர்மிதம்|
பஹாநிர்யத்ஹஸம்கீர்ணம் தத்ஶ்வவாநாத்ரஜ:|| க௦

ஸுஹ்ரணோऽக்ஷ்யக்ஷதம்த்வ்யம் த்விய்சிஶ்வகமர்ணா|
விமாநம்வார்ஷகம் நாம ஸவர்ணத்விஜஷிதம்||
வரேணதவஸாமேஹ யஸகாபோர:விதாமஹாஸ| ()

காபோரமோஜஸாஜிகா மேஹதத்ராக்ஷவேஶ்வர: *
ம்ரம்ஹார்யமஸமாயாமை த்த: காதுல்யாரஹிரண்யமயை:|
ஸாக்யமைதராவிதம்ஸ்தம்மேஹ: ஶ்ருத்யுத்விவச்ஶ்ரியா|| *
மோரம்மஸம்காமேஶ ரத்நவேஹ்ரிவிவாம்பரம்|
கர்பூராமோரஶ்ரஹாகாமேர ஸ்வர்ணஸ்மம்க்யதம்||*

அந்த கிரஹம், முதலே சுரு திமிங்கிலம் மீன் பாம்பு இவை நிறைந்து வாயுவின் வேகத்தால் அலேயெறிகின்ற ஸாகரம்போ லிராநின்றது. 7

குபேரனிடத்திற் செல்வமும், (உச்சைச்சிரவமென்னும்) குதிரை யூரும் இந்திரனிடத்திற் செல்வமும், மற்றும் யாவும் இராவணன் பவநத்தைவிட்டு இறையுமகலகில்லா. பவநம்-அரமனே. 8

குபேரன் இயமன் வருணன் (என்னும் திக்பாலகர்) செல்வத்தையொத்ததோ, அல்லது மிஞ்சியதோ, இங்கிந்த அரக்கர்தம் வீடுகளிலுள்ள செல்வம்; (அப்படியல்லது குறைந்ததன்று.) 9

அந்த அரண்மனையின்நடுவில் நன்கு நிருமிக்கப்பட்டு அநேகம் பிறைதிண்டுகள் நிறைந்த புஷ்பகவிமானம் கண்டாரன்றே? 10

அதுதான், தேவலோகத்தில் பிரமனுக்கென்று விசுவகர்மனுல் நிருமிக்கப்பட்டு, ஸகல ரத்தினங்களாலும் அலங்கரிக்கப்பட்டு, புஷ்பகவிமானமெனப்பெயர்பெற்று பிறகு பிரமனிடத்திலிருந்து குபேரனுல் சிறந்த தவஞ்செய்து பெறப்பட்டது. 11½

ஓநாய்போல் பிரதிமைகளமைந்து நன்ருய் நிருமித்த பொற்கம்பங்களும் வெள்ளிக்கம்பங்களும் எங்கும் நிறைந்து, காந்தியினுல் ஜ்வலிப்பதுபோலிருப்பதாய், மேருமந்தரம்போல் ஆகாயத்தைக் கிழிக்கின்றனவோ வென்னும் படியான கூடாகாரங்களால் எங்கும் அழகா யலங்கரிக்கப்பட்டதாய், அக்கினியும் ஆதித்தனும்போல் பிரகா

𑌜𑍍𑌵𑌲𑌨𑌾𑌰𑍍𑌕𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑌾𑌶𑌂 𑌸𑍁𑌕𑍃𑌤𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 ।
𑌹𑍇𑌮𑌸𑍋𑌪𑌾𑌨𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌚𑌾𑌰𑍁𑌪𑍍𑌰𑌵𑌰𑌵𑍇𑌦𑌿𑌕𑌮𑍍 ॥ *

𑌜𑌾𑌲𑌵𑌾𑌤𑌾𑌯𑌨𑍈𑌰𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑍈𑌸𑍍𑌸𑍍𑌫𑌾𑌟𑌿𑌕𑍈𑌰𑌪𑌿 ।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌨𑍀𑌲𑌮𑌹𑌾𑌨𑍀𑌲𑌮𑌣𑌿𑌪𑍍𑌰𑌵𑌰𑌵𑍇𑌦𑌿𑌕𑌮𑍍 ॥ *

𑌵𑌿𑌦𑍍𑌰𑍁𑌮𑍇𑌣 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑍇𑌣 𑌮𑌣𑌿𑌭𑌿𑌶𑍍𑌚 𑌮𑌹𑌾𑌧𑌨𑍈𑌃 ।
𑌨𑌿𑌸𑍍𑌤𑍁𑌲𑌾𑌭𑌿𑌶𑍍𑌚 𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌭𑌿𑌸𑍍𑌤𑌲𑍇𑌨𑌾𑌭𑌿𑌵𑌿𑌰𑌾𑌜𑌿𑌤𑌮𑍍 ॥ *

𑌚𑌨𑍍𑌦𑌨𑍇𑌨 𑌚 𑌰𑌕𑍍𑌤𑍇𑌨 𑌤𑌪𑌨𑍀𑌯𑌨𑌿𑌭𑍇𑌨 𑌚 ।
𑌸𑍁𑌪𑍁𑌣𑍍𑌯𑌗𑌨𑍍𑌧𑌿𑌨𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌤𑌰𑍁𑌣𑍋𑌪𑌮𑌮𑍍 ॥ ௧௮

𑌕𑍂𑌟𑌾𑌗𑌾𑌰𑍈𑌰𑍍𑌵𑌰𑌾𑌕𑌾𑌰𑍈𑌰𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑍈𑌸𑍍𑌸𑌮𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑌮𑍍 ।
𑌵𑌿𑌮𑌾𑌨𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌕𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑌾𑌰𑍁𑌰𑍋𑌹 𑌮𑌹𑌾𑌕𑌪𑌿𑌃 ॥ ௧௯

𑌤𑌤𑍍𑌰𑌸𑍍𑌥𑌸𑍍𑌸 𑌤𑌤𑍋 𑌗𑌨𑍍𑌧𑌂 𑌪𑌾𑌨𑌭𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌸𑌂𑌭𑌵𑌮𑍍 ।
𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌸𑌂𑌮𑍂𑌰𑍍𑌛𑌿𑌤𑌂 𑌜𑌿𑌘𑍍𑌰𑌨𑍍 𑌰𑍂𑌪𑌵𑌨𑍍𑌤𑌮𑌿𑌵𑌾𑌨𑌿𑌲𑌮𑍍 ॥ ௨௦

𑌸 𑌗𑌨𑍍𑌧𑌸𑍍𑌤𑌂 𑌮𑌹𑌾𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌬𑌨𑍍𑌧𑍁𑌰𑍍𑌬𑌨𑍍𑌧𑍁𑌮𑌿𑌵𑍋𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌇𑌤 𑌏𑌹𑍀𑌤𑍍𑌯𑍁𑌵𑌾𑌚𑍇𑌵 𑌤𑌤𑍍𑌰 𑌯𑌤𑍍𑌰 𑌸 𑌰𑌾𑌵𑌣𑌃 ॥ ௨௧

𑌤𑌤𑌸𑍍𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑌶𑍍𑌶𑌾𑌲𑌾𑌂 𑌦𑌦𑌰𑍍𑌶 𑌮𑌹𑌤𑍀𑌂 𑌶𑍁𑌭𑌾𑌮𑍍 ।
𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌯 𑌮𑌨𑌃𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌂 𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌮𑌿𑌵 𑌵𑌰𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 ॥ *

சிப்பதாய், விசுவகர்மனுல் நன்கு சமைக்கப்புட்டதாய், சுவர்ணப்படிகளும் அழகிற்சிறந்த திண்ணைகளும் ஸ்வர்ண மய ரஜதமய ஜாலகங்களும் துவாரங்களுமுடையதாய், இந்திரநீலங்களாலும் (ஸிம்மளத்தீவிலுண்டான) மஹா நீலங்களாலும்செய்த சிறந்த திண்ணைகளுடையதாய், பவ ழங்களும் விசித்திரமாய் விலையுயர்ந்த இரத்தினங்களும் இழைத்த தளவரிசையா லெங்கும் விளங்குவதாய், சுவர் ணம்போற் சிவந்து மிகவும் பரிமளிக்கின்ற சந்தனத்தால் பூசப்பெற்று, உச்சிவேளையில் சூரியன்போல் பிரகாசிப்ப தான அதை, குபேரனிடத்திலிருந்து ராக்ஷஸராஜன் தன் பலத்தால் ஜயித்துப் பறித்துக்கொண்டான். (சமைக்கப் பட்ட-செய்யப்பட்ட.) 12½-18

அழகாய்ச் சமைந்த பலவித கூடாகாரங்களால் நன் கலங்கரிக்கப்பட்ட திவ்வியமான அந்த புஷ்பகவிமானத் தின்மீது வானரோத்தமன் ஏறிவிட்டார். 19

அங்கிருந்தபடியே பானம் பக்ஷியம் அன்னம் இவை களிலிருந்துண்டாய், எங்கும் பரந்து கமழ்ந்து, உருவெடு த்த காற்றுப்போல் வீசும் திவ்விய கந்தத்தை மொகர லானுர். 20

அந்த கந்தம், (விஷயபோகத்தைக் கண்டு சபலிக் காத) அதிதீரனுன அந்த ஹனுமானையும் இங்கே வாவெ ன்று தனக்குச் சொந்த பந்துவைப்போல் இராவணனிரு க்குமிடத்திற்கு அதாவது: முதல்சுலோகத்தில் சொன்ன விடத்திற்கு கூப்பிட்டதுபோலும். 21

அனந்தரம், ஹனுமான் புறப்பட்டு, இராவணன் மன திற்கிசைந்த காதலிபோல் மிகவினிதாய் பெரிதாய் அழ கியதாய், மணிமயமான படிகளிலங்க, பொற்சாளரங்கள்

ஊணீமொவா நவிக்ஷ்ய தாம் ஹெஊஜாரவிஹ-ுஷிதாம்|
ஸ்வாபியெணாவ்ருததமாம் ஊஞாஞஸிதாற-ுவிசாம்॥ *

ஊ க்த்ராஹிஸ்வ்ருவாஜெஸ்ஷ்ட ற-ுவ்ருவாஜீகமொறவீ|
விஹ-ுஷிதாம் ஊணீஸ்தம்மெஹ ஸ்ஸாபஹாஸ்தம் ஹஹ-ுஷிதாம்॥ *

ஸமெஃஜாஹிறத்ருமெச்ச ஸ்ஸம்தாஸ்ஸவிஹ-ுஷிதை:| ஸ்தம்மெஸ:வமெக்ஷஸிவாத்ருமெச்ச ஷிவம்ஸம் ப்ருஷ்ஷிதாமிவ॥ *

ஊஹத்யா கயஸ்ஸாஸ்தீணாம் வ்ருயஶிவீ ஶக்ஷணாம்கயா|
வ்ருயஶிவீமிவவிஸ்தீணாம் ஸறாஷ்ட்ர ஶ்ரு ஹாஊஞீநீம்॥ *

நாஷிதாம் ஊத்தவிஹமெர ஷிருவ்ருஶம்யாயவாஸிதாம்|
வறாய்ருாஸ்தறணொவெதாம் றக்ஷொயிவநிஷெவிதாம்॥
யஶுஊரஊஶறயஶுவெந ஷீஊரம் ஹம்ஸ வாசொறாம்|
ஷிக்ராம் வஷொவஹாரெண கஷாஷீமிவ ஸ்ஸுருஹாம்॥ *
ஊநஸ்ஸம் ஹ்ராஊஜநநீம் வணுஸ்யாவி ப்ருஸாஷிநீம்|
தாம் ஶொகநாஶநீம் ஷிவ்யாம் ஶ்ரியஸ்ஸம் ஜநநீமிவ॥ ௨௯

ஜம்ஷிரியாணீம் ஷிரியாமெசஷ்ஸ்தா வம்சவம்சஹி றத்தமெ:| தவுயாஊஹஊமெதவ தஜாறாவணவாஷீதா॥ ௩௦

ஸ்ஸமைுயம்ஷெவமொகாய ஶிம்ஶ்ருஷெயம்வாரீஹவெக| ஹிஷிவெஶயம்வராஹிஸ்யா ஷிக்ருஊந்ருதஊராத்தி:॥ ௩௧

துலங்க, படிகம் பதித்த தலவரிசையோடு இடையில் தந்தக்கொடி யெடுக்கப்பட்டு, முத்து பவழம் வெள்ளி தங்கம் இவைகளாற்செய்த மணிக்கம்பங்களும், மற்றும் சில்லரைத் தூண்களும் திகழ, ஸமமாய் நேராய் மிகவும் உன்னதமாய் நாற்புறமும் அலங்கரிக்கப்பட்ட தூண்கள் காணில், உன்னதமான சிறகுகளுடன் ஆகாயத்திற்கிளம்புவதுபோலும், பூமியைப்போல் (அதற்குண்டான லக்ஷணத்தோடு) தோன்றும்படி செய்த இரத்தினகம்பளத்தால் போர்க்கப்பட்டு, அதனால் இராஜ்ஜியமும் கிருஹ வரிசைகளுமுடைய பூமண்டலம்போலும் கொழுத்த பறவைகள் ஒலிசெய்ய, திவ்வியமான கந்தம் கமழ, உயர்ந்த போர்வையுடையதாய், அரக்கர்கோமானு லாளப்பட்டதாய், அகிற்புகை கமழ, நிர்மலமாய் அன்னம்போல் வெளுத்து, மலர்கள் சிதறுண்டு சித்திரவர்ணமாய், சபள வர்ணமான வஸிஷ்டர் பசுவைப்போல் நல்ல காந்தியுடையதாய், மனதிற்குக் குதூஹலத்தை யுண்டுபண்ணுவதாய், நல்ல நிறத்திற்குக்கூட புகரூட்டுவதாய், சோகத்தைப் போக்குவதாய், திவ்வியமாய் திருமகட்குத் தாயான அந்த சாலையைக் கண்டார். 22-29

இராவணன் புரக்கும் அச்சாலை, தாயைப்போல் ஐம்புலன்களுக்கும் ஐந்துவகை உத்தம விஷயங்களாலும் திருப்தியுண்டாக்கியது. 30

அப்பொழுது மாருதியார், "இஃதென்ன சுவர்க்கமா! அதிலும் தேவர்கள் வசிக்குமுலகா! அதிலும் இந்திரன் நிகழும் பொன்னகரா! இல்லையென்று சிறந்த பதவியேயா!" என்று சிந்தித்தார். 31

𑌪𑍍𑌰𑌧𑍍𑌯𑌾𑌯𑌤 𑌇𑌵𑌾𑌪𑌶𑍍𑌯𑌤𑍍 𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑌾𑌂𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌕𑌾𑌂𑌚𑌨𑌾𑌨𑍍।
𑌧𑍂𑌰𑍍𑌤𑌾𑌨𑌿𑌵 𑌮𑌹𑌾𑌧𑍂𑌰𑍍𑌤𑍈𑌰𑍍𑌦𑍇𑌵𑌨𑍇𑌨 𑌪𑌰𑌾𑌜𑌿𑌤𑌾𑌨𑍍॥

𑌦𑍀𑌪𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍇𑌨 𑌤𑍇𑌜𑌸𑌾 𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌯 𑌚।
𑌅𑌰𑍍𑌚𑌿𑌰𑍍𑌭𑌿𑌰𑍍𑌭𑍂𑌷𑌣𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑍍𑌤𑍇𑌤𑍍𑌯𑌭𑍍𑌯𑌮𑌨𑍍𑌯𑌤॥ ௧௧

𑌤𑌤𑍋𑌽𑌪𑌶𑍍𑌯𑌤𑍍𑌕𑍁𑌥𑌾𑌸𑍀𑌨𑌂 𑌨𑌾𑌨𑌾𑌵𑌰𑍍𑌣𑌾𑌂𑌬𑌰𑌸𑍍𑌰𑌜𑌮𑍍।
𑌸𑌹𑌸𑍍𑌰𑌂 𑌵𑌰𑌨𑌾𑌰𑍀𑌣𑌾𑌂 𑌨𑌾𑌨𑌾𑌵𑍇𑌷𑌵𑌿𑌭𑍂𑌷𑌿𑌤𑌮𑍍॥ *

𑌪𑌰𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌽𑌰𑍍𑌧𑌰𑌾𑌤𑍍𑌰𑍇 𑌤𑍁 𑌪𑌾𑌨𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌵𑌶𑌂 𑌗𑌤𑌮𑍍।
𑌕𑍍𑌰𑍀𑌡𑌿𑌤𑍍𑌵𑍋𑌪𑌰𑌤𑌂 𑌰𑌾𑌤𑍍𑌰𑍌 𑌸𑍁𑌷𑍍𑌵𑌾𑌪 𑌬𑌲𑌵𑌤𑍍𑌤𑌦𑌾॥ ௧௫

𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌂 𑌵𑌿𑌰𑍁𑌰𑍁𑌚𑍇 𑌨𑌿𑌶𑍍𑌶𑌬𑍍𑌦𑌾𑌨𑍍𑌤𑌰𑌭𑍂𑌷𑌣𑌮𑍍।
𑌨𑌿𑌶𑍍𑌶𑌬𑍍𑌦𑌹𑌂𑌸𑌭𑍍𑌰𑌮𑌰𑌂 𑌯𑌥𑌾 𑌪𑌦𑍍𑌮𑌵𑌨𑌂 𑌮𑌹𑌤𑍍॥ ௧௬

𑌤𑌾𑌸𑌾𑌂 𑌸𑌂𑌵𑍃𑌤𑌦𑌨𑍍𑌤𑌾𑌨𑌿 𑌮𑍀𑌲𑌿𑌤𑌾𑌕𑍍𑌷𑌾𑌣𑌿 𑌮𑌾𑌰𑍁𑌤𑌿𑌃।
𑌅𑌪𑌶𑍍𑌯𑌤𑍍𑌪𑌦𑍍𑌮𑌗𑌨𑍍𑌧𑍀𑌨𑌿 𑌵𑌦𑌨𑌾𑌨𑌿 𑌸𑍁𑌯𑍋𑌷𑌿𑌤𑌾𑌮𑍍॥ ௧௭

𑌪𑍍𑌰𑌬𑍁𑌦𑍍𑌧𑌾𑌨𑍀𑌵 𑌪𑌦𑍍𑌮𑌾𑌨𑌿 𑌤𑌾𑌸𑌾𑌂 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌕𑍍𑌷𑌪𑌾𑌕𑍍𑌷𑌯𑍇।
𑌪𑍁𑌨𑌸𑍍𑌸𑌂𑌵𑍃𑌤𑌪𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌰𑌾𑌤𑍍𑌰𑌾𑌵𑌿𑌵 𑌬𑌭𑍁𑌸𑍍𑌤𑌦𑌾॥ ௧௮

𑌇𑌮𑌾𑌨𑌿 𑌮𑍁𑌖𑌪𑌦𑍍𑌮𑌾𑌨𑌿 𑌨𑌿𑌯𑌤𑌂 𑌮𑌤𑍍𑌤𑌷𑌟𑍍𑌪𑌦𑌾𑌃।
𑌅𑌂𑌬𑍁𑌜𑌾𑌨𑍀𑌵 𑌫𑍁𑌲𑍍𑌲𑌾𑌨𑌿 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌯𑌨𑍍𑌤𑌿 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍁𑌨𑌃॥ *

அங்கு, விடபுருஷர்கள் சூதாடும்பொழுது தம்மில் வலிய எதிரிகளால் தோல்வி யடைந்து சிந்திப்பதுபோல், சுவர்ணதீபங்கள் அசையாம லெரிய, ஹநுமான் கண் டார். 32

தீபங்களினொளியாலும், இராவணன் காந்தியாலும், ஆபரணச்சோதியாலும், அச்சாலை எரிகிறதென்றெண்ணி மிட்டார். 33

அனந்தரம் இரவும் பாதிசெல்ல, பலவர்ணமான உடைகளும் மாலைகளும் பலவகைக் கோலங்களுந்தரித்த ஆயிரம் பெண்மணிகள், நெடுநேரம் விளையாடி யலுத்து, பானஞ்செய்ததினால் நித்திரைக்கு வசப்பட்டு, தம்மையு மறியாமல் இரத்தின கம்பளத்தில் படுத்துறங்க, அதை யுங் கண்டார். 34-35

அணிகளொலியுமடங்கி அரவமற்றுறங்கு மன்னிலை காணில், அன்னங்களும் வண்டுகளுமுறங்கி நிச்சப்தமான தோர் தாமரையோடைபோல் தெம்பட்டது. அணிகள்-ஆபரணங்கள். 36

மறைந்த பற்களும் மூடிய கண்களும் கமலம்போல் மணமுமுற்ற அப்பெண்மணிகளின் முகங்களை மாருதி யார் கண்டார். 37

பகலில் மலர்ந்திருந்த பதுமங்கள், இரவில் இதழ் கூம்புமாப்போல் அவர் முகங்கள் விளங்கலுற்றன. 38

"இந்த முகக்கமலங்களை மீளவும் மீளவும் மலர்ந்த பங்கயங்களைப்போல் மதங்கொண்ட வண்டுகள் நிச்சப மாய் நச்சப்போகின்றன" என்று யுக்தியாய் அந்தவான

𑌇𑌤𑌿 𑌵𑌾𑌮𑌨𑍍𑌯𑌤 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑌾 𑌮𑌹𑌾𑌕𑌪𑌿𑌃।
𑌮𑍇𑌨𑍇 𑌹𑌿 𑌗𑍁𑌣𑌤𑌸𑍍𑌤𑌾𑌨𑌿 𑌸𑌮𑌾𑌨𑌿 𑌸𑌲𑌿𑌲𑍋𑌦𑍍𑌭𑌵𑍈𑌃॥ ௪௦

𑌸𑌾 𑌤𑌸𑍍𑌯 𑌶𑍁𑌶𑍁𑌭𑍇 𑌶𑌾𑌲𑌾 𑌤𑌾𑌭𑌿𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌭𑌿𑌰𑍍𑌵𑌿𑌰𑌾𑌜𑌿𑌤𑌾।
𑌶𑌾𑌰𑌦𑍀𑌵 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌾 𑌦𑍍𑌯𑍌𑌸𑍍𑌤𑌾𑌰𑌾𑌭𑌿𑌰𑌭𑌿𑌶𑍋𑌭𑌿𑌤𑌾॥ ௪௧

𑌸 𑌚 𑌤𑌾𑌭𑌿𑌃 𑌪𑌰𑌿𑌵𑍃𑌤 𑌶𑍁𑌶𑍁𑌭𑍇 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌧𑌿𑌪𑌃।
𑌯𑌥𑌾 𑌹𑍍𑌯𑍁𑌡𑍁𑌪𑌤𑌿𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌂𑌸𑍍𑌤𑌾𑌰𑌾𑌭𑌿𑌰𑌭𑌿𑌸𑌂𑌵𑍃𑌤𑌃॥ ௪௨

𑌯𑌾𑌶𑍍𑌚𑍍𑌯𑌵𑌨𑍍𑌤𑍇𑌽𑌮𑍍𑌬𑌰𑌾𑌤𑍍𑌤𑌾𑌰𑌾𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌶𑍇𑌷𑌸𑌮𑌾𑌵𑍃𑌤𑌾𑌃।
𑌇𑌮𑌾𑌸𑍍𑌤𑌾𑌃 𑌸𑌂𑌗𑌤𑌾𑌃 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌾 𑌇𑌤𑌿 𑌮𑍇𑌨𑍇 𑌹𑌰𑌿𑌸𑍍𑌤𑌦𑌾॥ ௪௩

𑌤𑌾𑌰𑌾𑌣𑌾𑌮𑌿𑌵 𑌸𑍁𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌮𑌹𑌤𑍀𑌨𑌾𑌂 𑌶𑍁𑌭𑌾𑌰𑍍𑌚𑌿𑌷𑌾𑌮𑍍।
𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌰𑍍𑌣𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌶𑍍𑌚 𑌵𑌿𑌰𑍇𑌜𑍁𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌯𑍋𑌷𑌿𑌤𑌾𑌮𑍍॥ ()

𑌵𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌗𑍁𑌰𑍁𑌪𑍀𑌨𑌸𑍍𑌰𑌕𑍍𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌣𑌵𑌰𑌭𑍂𑌷𑌣𑌾𑌃।
𑌪𑌾𑌨𑌵𑍍𑌯𑌾𑌯𑌾𑌮𑌕𑌾𑌲𑍇𑌷𑍁 𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌪𑌹𑍃𑌤𑌚𑍇𑌤𑌸𑌃॥ ௪௫

𑌵𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌤𑌿𑌲𑌕𑌾𑌃 𑌕𑌾𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌕𑌾𑌶𑍍𑌚𑌿𑌦𑍁𑌦𑍍𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌨𑍂𑌪𑍁𑌰𑌾𑌃।
𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌗𑌲𑌿𑌤𑌹𑌾𑌰𑌾𑌶𑍍𑌚 𑌕𑌾𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌪𑌰𑌮𑌯𑍋𑌷𑌿𑌤𑌃॥ ௪௬

𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌹𑌾𑌰𑌾𑌵𑍃𑌤𑌾𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌾𑌃 𑌕𑌾𑌶𑍍𑌚𑌿𑌦𑍍𑌵𑌿𑌸𑍍𑌰𑌸𑍍𑌤𑌵𑌾𑌸𑌸𑌃
𑌵𑍍𑌯𑌾𑌵𑌿𑌦𑍍𑌧𑌰𑌶𑌨𑌾𑌦𑌾𑌮𑌾𑌃 𑌕𑌿𑌶𑍋𑌰𑍍𑌯 𑌇𑌵 𑌵𑌾𑌹𑌿𑌤𑌾𑌃॥ ௪௭

ரோத்தமன் குணங்களையிட்டு, அவைகளைக் கஞ்சங்களுக்கீடாக நெஞ்சில் நினைத்தார். (கஞ்சங்கள்-தாமரஸபுஷ்பங்கள்.) 39-40

நக்ஷத்திரங்களெங்கும் திகழத் தெளிந்துகாட்டும் சரத்கால ராத்திரிபோல் தெரிவையர்கள்நிறைந்த அவன் சாலை சாலத்துலங்கியது. 41

அந்த மடவார்சூழப்படுத்திருக்கும் அந்த ராக்ஷஸர் கோனும், அப்படியே தாரைகள் சூழத்துலங்கும் அம்புலி போல் திகழலுற்றான். 42

அப்பொழுது "புண்ணிய சேஷத்தோடு அந்தரத்தினின்றும் சிந்துகின்ற தாரைகள் யாவு மிங்ஙன மொன்று கூடினவாயென்ன?" என்று அனுமான் எண்ணினார். 43

அம்மாதர்களுக்கும் நன்றாய் ஒளிர்கின்ற பெரும் தாரைகளுக்கும், நிறமும் காந்தியும் தெளிவும் ஸ்பஷ்டமாய் ஒரேமாதிரி யென்னும்படி விளங்கிற்று. 44

அப்பாவையர்கள் பாநம்செய்து திளைத்தகாலத்தில், மாலைகள் பிரண்டு ஆபரணங்கள் கலைந்து துயில்மேவி மெய்மறந்தனர். 45

திலகம் கொலைந்தவர் சிலர்; தண்டை பிரண்டவர் சிலர்; பக்கத்தில் ஆரங்கள் நழுவக்கிடந்தவர் சிலமாதரசிகள். 46

முத்துமாலை (யறுபட்டு) சூழப்பெற்றவர் சிலர்; உடைநழுவிப்போனவர் சிலர்; அறுபட்ட அரைநூல் மாலையுடையார் சிலர்; பெண்குதிரைபோல் புரளுவோர் சிலர். 47

𑌪𑌰𑍍𑌯𑌂𑌕𑌾𑌸𑍍𑌤𑌰𑌣𑌾𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌾 𑌵𑌿𑌚𑍍𑌛𑌿𑌨𑍍𑌨𑌮𑍃𑌦𑌿𑌤𑌸𑍍𑌰𑌜𑌃।
𑌗𑌜𑍇𑌂𑌦𑍍𑌰𑌮𑍃𑌦𑌿𑌤𑌾𑌃𑌫𑍁𑌲𑍍𑌲𑌾 𑌲𑌤𑌾𑌇𑌵𑌮𑌹𑌾𑌵𑌨𑍇॥ ௪௮

𑌚𑌂𑌦𑍍𑌰𑌾𑌂𑌶𑍁𑌕𑌿𑌰𑌣𑌾𑌭𑌾𑌶𑍍𑌚 𑌹𑌾𑌰𑌾𑌃𑌕𑌾𑌸𑌾𑌂𑌚𑌿𑌦𑍁𑌤𑍍𑌕𑌟𑌾𑌃।
𑌹𑌂𑌸𑌾𑌇𑌵𑌬𑌭𑍁𑌸𑍍𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌃 𑌸𑍍𑌤𑌨𑌮𑌧𑍍𑌯𑍇𑌷𑍁𑌯𑍋𑌷𑌿𑌤𑌾𑌮𑍍॥ ௪௯

𑌅𑌪𑌰𑌾𑌸𑌾𑌂𑌚𑌵𑍈𑌡𑍂𑌰𑍍𑌯𑌾𑌃 𑌕𑌾𑌦𑌂𑌬𑌾𑌇𑌵𑌪𑌕𑍍𑌷𑌿𑌣𑌃।
𑌹𑍇𑌮𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌣𑌿𑌚𑌾𑌨𑍍𑌯𑌾𑌸𑌾𑌂 𑌚𑌕𑍍𑌰𑌵𑌾𑌕𑌾𑌇𑌵𑌾𑌭𑌵𑌨𑍍॥ ௫௦

𑌹𑌂𑌸𑌕𑌾𑌰𑌂𑌡𑌵𑌾𑌕𑍀𑌰𑍍𑌣𑌾 𑌶𑍍𑌚𑌕𑍍𑌰𑌵𑌾𑌕𑍋𑌪𑌶𑍋𑌭𑌿𑌤𑌾𑌃।
𑌆𑌪𑌗𑌾𑌇𑌵𑌤𑌾𑌰𑍇𑌜𑍁 𑌰𑍍𑌜𑌘𑌨𑍈𑌃𑌪𑍁𑌲𑌿𑌨𑍈𑌰𑌿𑌵॥ ௫௧

𑌕𑌿𑌂𑌕𑌿𑌣𑍀𑌜𑌾𑌲𑌸𑌂𑌕𑌾𑌶𑌾 𑌸𑍍𑌤𑌾𑌹𑍇𑌮𑌵𑌿𑌪𑍁𑌲𑌾𑌂𑌬𑍁𑌜𑌾𑌃।
𑌭𑌾𑌵𑌗𑍍𑌰𑌾𑌹𑌾𑌯𑌶𑌸𑍍𑌤𑍀𑌰𑌾 𑌸𑍍𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌨𑌦𑍍𑌯𑌇𑌵𑌾𑌬𑌭𑍁𑌃॥ ௫௨

𑌮𑍃𑌦𑍁𑌷𑍍𑌵𑌂𑌗𑍇𑌷𑍁𑌕𑌾𑌸𑌾𑌂𑌚𑌿 𑌤𑍍𑌕𑍁𑌚𑌾𑌗𑍍𑌰𑍇𑌷𑍁𑌚𑌸𑌂𑌸𑍍𑌥𑌿
𑌤𑌾𑌃। 𑌬𑌭𑍂𑌵𑍁𑌰𑍍𑌭𑍂𑌷𑌣𑌾𑌨𑍀𑌵 𑌶𑍁𑌭𑌾𑌭𑍂𑌷𑌣𑌰𑌾𑌜𑌯𑌃॥

𑌅𑌂𑌶𑍁𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌶𑍍𑌚𑌕𑌾𑌸𑌾𑌂𑌚𑌿 𑌨𑍍𑌮𑍁𑌖𑌮𑌾𑌰𑍁𑌤𑌕𑌂𑌪𑌿𑌤𑌾𑌃।
𑌉𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌰𑌿𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌵𑍍𑌯𑌾𑌧𑍂𑌯𑌨𑍍𑌤𑍇𑌪𑍁𑌨𑌃𑌪𑍁𑌨𑌃॥

சிராந்த குழைபூண்ட சிலபெண்கள், அறுபட்டு மிதியுண்ட மாலைகளையுடையோராய், பெருங்கானில் மத களிற்றால் மிதியுண்ட மலர்க்கொடிபோல் விளங்காநின் றார். 48

சில பெண்டுகளின் சந்திரகிரணங்கள்போல் ஒளிர் கின்ற சிறந்த ஹாரங்கள் தனங்களுக்கிடையில் படுத்துற ங்கு மன்னங்கள்போ லிலங்காநின்றன. 49

சில ஸ்திரீகளின் வைடூரியமயஹாரங்கள் களஹம் ஸங்கள்போலும், சிலர் பொன்மாலைகள் சக்கரவாகங்கள் போலும் இருந்தன. 50

அதனால் அப்பெண்மணிகள், ஹம்ஸம் களஹம்ஸம் சக்கரவாகம் இவை நிறைந்த நதிகள்போல் மணற்குன் றன்ன ஜகனங்களோடு விளங்கினார்கள். 51

கிங்கிணியின் ஸமூஹங்களே மொக்குகளாகவும், சுவர்ணாபரணங்களே பரந்த தாமரை மலர்களாகவும், நெஞ்சத்திலோடும் ஸாத்விகபாவங்கள் முதலைகளாகவும், காந்தியே கரைகளாகவும், (நித்திரை செய்கின்ற) அப் பெண்மணிகள் நதிகள்போல் விளங்கினார்கள். 52

சில பெண்களின் மெல்லிய அவயவங்களிலும் குசங் களின் சிகரங்களிலும் இலங்கும் அழகிய ஆபரணஜாலங் கள், (செந்தாழை தாமரை முதலிய மலர்களில் மொய்க் கின்ற) பொன் வண்டுகள்போல் பிரகாசித்தன. 53

சில பெண்களின் நுட்பமான தலைப்பின் நுனிகள் முகத்திலிருந்துண்டான காற்றினால் முகத்திற்குமேல் அடிக்கடி அசைந்து காட்டின. 54

தாம்பதாகாஜவொஙூதா: வத்னீநாம்ரவிரவுஷா:|
நாநாவணஸெவணாநாம் வக்ஷ்ரூஉஞெஷவெஜிவெ||

வவுஸ்துகாஸாம்விஸ் கம்பயாநிஶாஹாவிஷாழ்|
உவஶாதஸம்ஸஹா ஜ்ஞம்ஜம்ஶம்ஜம்ஸயொஷிதாழ்|| ()

ஶகொஸவஹம்யெஸ்து வ்ருக்ஷதாஸாஹிஸ்வ:|
தாஸாம்வஜநிஸ்வாஸ ஸிஷெவொவணம்தஜா|| ௫௭

ராவணாநநஶம்காஸ்து காஸ்சிஜ்ராவணயொஷித:|
உவாநிஷ்ஸவதீ்நா உவாஜிவ்ருநுவநஂவந:|| ௫௮

கத்ருஸஂஸக்ஷ்உநஹொ ராவணெதாவஷ்த்ரிய:|
கஸ்வதம்த்ராஸ்வதீ்நாம் வ்ரியஶோவாவரம்ஸ்தஜா|| ௫௯

பாஹூநவநியாயாந்யா: வாஸிஹாய்ஸிஹஹஷி
தாநு| கம்ஶகாநிவரஸ்ராணி ப்ரஜொஸ்தஶிஶிஶ்ரிரெ||௬௦

கந்யாவக்ஷஸிவாந்யஸ்யா ஸ்தஸ்யா:காஸ்சிஸ்வநஹஜ்ழ்|
கவராகம்கஉந்யஸ்யா ஸ்தஸ்யாஸ்தாவ்யவராஹஜள|
உளரவாஸ்வகடீவ்யஷ ஜநெ்யாந்யஸ்யஸஶர்ஶ்ரிதா:|
வரஸ்வநிவிஷ்டாம்ஜெ்யா ஜஜெஸ்ஹவஶாநஹா:|| ௬௨

அப்படி அசையும்பொழுது அவைகள் சுந்தரமான பல வருணங்களுற்ற பத்தினிகளின் முகங்கள்மீது அழகிய காந்தியுற்ற பதாகைகள்போல் துலங்காநின்றன. (பதாகை-டக்கயம்.) 55

மின்னொளியரான சில பெண்டுகளின் குண்டலங்கள் மூச்செறியும்பொழுது மந்த மந்தமாய் குலுங்காநின்றன.

ஸ்வபாவமாகவே மணமுற்றிருக்கின்ற அவர் மூச்சுக் காற்று, இனிய மதுவினது கந்தமுங்கலந்து அப்பொழுது இராவணனைச் சூழ்ந்து கமழ்ந்தது. 57

இராவணன் முகமென்று சங்கித்து, சில இராவணன் மனைவிகள், ஸபத்தினிகளின் முகங்களை அடிக்கடிமோகந்தார்கள். (ஸபத்தினிகள்-ஒருவன் மனைவிகள்.) 58

அப்படி மோகரப்பட்ட அப்பெண்மணிகளும் இராவணனிடத்தில் மிகவும் அன்புகூர்ந்தவராதலின், (பானஞ் செய்த மயக்கத்தால்) தங்களையுமறியாமல் (இராவணன் றான் மோகருகிறுனென்றெண்ணி தாமும் மோகந்து) ஸபத்தினிகளுக் கினிதே செய்தார்கள். 59

அங்கு சிலமாதர்கள் வளையணிந்த கைகளையும் அழகிய தலைப்புக்களையும் தலையணையாக வைத்துக்கொண்டு நித்திரை செய்தார்கள். 60

ஒருத்தி மார்பி லொருத்தியும், அவள் புயத்தில் ஒருத்தியும், அவள் மடியில் ஒருத்தியும், அவள் புயங்களில் ஒருத்தியும், இப்படி தொடைபக்கம் இடுப்பு பின்புறம் முதலியவைகளில் சாய்ந்துக்கொண்டு மதத்திற்கு வசப்பட்டு ஒருவர்மீதொருவராய்ப் படுத்துறங்கினார்கள்.

𑌅𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌭𑍁𑌜𑌸𑍂𑌤𑍍𑌰𑍇𑌣 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌮𑌾𑌲𑌾 𑌗𑍍𑌰𑌥𑌿𑌤𑌾 𑌹𑌿 𑌸𑌾।
𑌮𑌾𑌲𑍇𑌵 𑌗𑍍𑌰𑌥𑌿𑌤𑌾 𑌸𑍂𑌤𑍍𑌰𑍇 𑌶𑍁𑌶𑍁𑌭𑍇 𑌮𑌤𑍍𑌤𑌷𑌟𑍍𑌪𑌦𑌾॥ ௬௩

𑌲𑌤𑌾𑌨𑌾𑌂 𑌮𑌾𑌧𑌵𑍇 𑌮𑌾𑌸𑌿 𑌫𑍁𑌲𑍍𑌲𑌾𑌨𑌾𑌂 𑌵𑌾𑌯𑍁𑌸𑍇𑌵𑌨𑌾𑌤𑍍।
𑌅𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌮𑌾𑌲𑌾𑌗𑍍𑌰𑌥𑌿𑌤𑌂 𑌸𑌂𑌸𑌕𑍍𑌤𑌕𑍁𑌸𑍁𑌮𑍋𑌚𑍍𑌚𑌯𑌮𑍍॥ ௬௪

𑌵𑍍𑌯𑌤𑌿𑌵𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌸𑍁𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑌮𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌭𑍍𑌰𑌮𑌰𑌾𑌕𑍁𑌲𑌮𑍍।
𑌆𑌸𑍀𑌦𑍍𑌵𑌨𑌮𑌿𑌵𑍋𑌦𑍍𑌧𑍂𑌤𑌂 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌵𑌨𑌂 𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍॥ ௬௫

𑌉𑌚𑌿𑌤𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 𑌸𑍁𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌨 𑌤𑌾𑌸𑌾𑌂 𑌯𑍋𑌷𑌿𑌤𑌾𑌂 𑌤𑌦𑌾।
𑌵𑌿𑌵𑍇𑌕𑌃 𑌶𑌕𑍍𑌯 𑌆𑌧𑌾𑌤𑍁𑌂 𑌭𑍂𑌷𑌣𑌾𑌙𑍍𑌗𑌾𑌮𑍍𑌬𑌰𑌸𑍍𑌰𑌜𑌾𑌮𑍍॥ ௬௬

𑌰𑌾𑌵𑌣𑍇 𑌸𑍁𑌖𑌸𑌂𑌵𑌿𑌷𑍍𑌟𑍇 𑌤𑌾𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑍋 𑌵𑌿𑌵𑌿𑌧𑌪𑍍𑌰𑌭𑌾𑌃।
𑌜𑍍𑌵𑌲𑌨𑍍𑌤𑌃 𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌾 𑌦𑍀𑌪𑌾𑌃 𑌪𑍍𑌰𑍈𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑌾𑌨𑌿𑌮𑌿𑌷𑌾 𑌇𑌵॥ ௬௭

𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌿𑌪𑌿𑌤𑍃𑌦𑍈𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌾𑌣𑌾𑌂 𑌚 𑌯𑍋𑌷𑌿𑌤𑌃।
𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌯𑌾𑌃 𑌕𑌨𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑌾𑌮𑌵𑌶𑌂 𑌗𑌤𑌾𑌃॥ ௬௮

𑌯𑍁𑌦𑍍𑌧𑌕𑌾𑌮𑍇𑌨 𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾 𑌰𑌾𑌵𑌣𑍇𑌨 𑌹𑍃𑌤𑌾𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃।
𑌸𑌮𑌦𑌾 𑌮𑌦𑌨𑍇𑌨𑍈𑌵 𑌮𑍋𑌹𑌿𑌤𑌾𑌃 𑌕𑌾𑌶𑍍𑌚𑌿𑌦𑌾𑌗𑌤𑌾𑌃॥ ௬௯

டிபங்களே சரடாக ஒருவர்க்கொருவர் தொடை யுண்டு மாலைபோல் கிடக்கும் அத்தோகையர்கள், சரட்டில் தொடுபட்டு மதங்கொண்ட வண்டுகள் மொய்க்கப் பெற்றதொரு மாலைபோல் விளங்கினார்கள். 63

ஒருவர்மீதொருவர் மூச்செறிந்தும், ஒருவராடை யொருவர்மீது படிந்தும், ஒருவர்கேச மொருவர்மீது சரிந்தும், ஒருவர்தோள் ஒருவர்க் கணையாயிருந்தும், மாலைபோல் பின்னிக்கிடக்கும் அந்த ராவணன் காதலி கள், வசந்தகாலத்தில் இளந்தென்னல்வீசப் பூங்கொடி கள் ஒன்றின்மீதொன்றாய் மலர்கள் செறிந்து வண்டுகள் பிணைந்து கிளைகள் வளைந்து சூழப்பெற்ற பூங்காவனம் போல் தோன்றினார்கள். 64-65

அம்மாதர் தம் ஆபரணங்களும், அவயவங்களும், ஆடைகளும், ஆரங்களும், இஃதின்னாரதென்று பிரித்தறி வதற்குக் கூடாதபடி பின்னிக்கிடந்தன. 66

இராவணன் சுகமே யுரங்கும்பொழுது பலவிதமாய் ஒளிர்கின்ற அத்தெரிவையர்களே, பொற்கம்பங்களிற் சொலிக்கின்ற விளக்குகள் இமையாமல் கண்டிருந்தன போலும். 67

ராஜர்ஷிகள், பிதுருக்கள், அசுரர்கள், கந்தருவர்கள், ராக்ஷஸர்கள் (முதலானோருடைய) மாதர்கள் யாவரும் அவனிடத்திற் காமுற்றிருந்தார்கள். 68

போர்புரியக்கோலி ராவணன் சில மாதரைச் சிறை பிடிக்க, மதங்கொண்ட அவர்களும் அவனிடத்தில் மன் மதனைக் கண்டதுபோல் மோகங்கொண்டு மேல்விழுந் தார்கள். 69

நதத்ருகாஸ்த்விகவ்ருஷா: வ்ருஷஹ்ய வீயேர்ாவவ
நேந்நகர்ணே நஶ்யா:। நவாந்யகாரோவிநவாந்யவதி
வர்ா விநாவராஹர்ாஂஜநகாத்ஜாஂதா॥ ௭௦

நவாகர்ஶ்ரீநாநவஹீநாரதிவா நாஷகக்ஷிணாநாநர்
வவாரயர்க்தா। ஹாயர்ாலவத்தஸ்யநஹீநஸகாா நவாவி
காஂதஸ்யநகாரநீயா॥ ௭௧

பஹதிவபர்ஜிஸ்தர்ஹரீஸ்வரஸ்ய யதீக்ஷ்யஶீராவவ
யரர்வத்நீ। இரோயஶாராக்ஷஸராஜஹாயுரஸ்ஸர்ஜாதரவஸ்ய
திஹி ஸாயர்ஸர்ஜே:॥ ௭௨

வர்நஸ்த்வஷோஹிஂதயஷாதுரதிவொ ரர்வஂவி
ஶிஷ்டாகர்ணேதாஹிஸீதா। கயோயஸேஸ்யாஂக்யதவாநு
ரஹாத்ரா மஂகேஸ்வர: கஷ்டரநாயுகரு॥ ௭௩

இதி ஶ்ரீருக்மிணீகல்யாணே - நவமஸ்ஸர்க:

அங்குள்ள பெண்கள் யாவரும் இராவணன் குணத்தி லீடுபட்டு வந்தவர்களேயன்றி வீரியத்தால் கொண்டுவரப் பட்டார்களென்பதில்லை. ஏனெனில்: ஒருத்தியாவது வேறொருவனைச் சிந்தித்தாவது, வேறொருவனுக்கு உடம்பு கொடுத்தாவது போந்தவளில்லை. ஜனகன் திருமகளொ ருத்தியே (அவன் குணத்தி லகப்படாதவள்.) 70

அவன் துணைவியரான அவர்களில், நல்லகுலத்தில் பிறவாதவளில்லை; அழகில் குறைந்தவளில்லை; சமர்த்தில் குறைந்தவளில்லை; உபசாரத்தில் குறைந்தவளில்லை; பலத் தில் குறைந்தவளில்லை; அன்பனான அவனன்பிற் காளா காதாளில்லை. 71

அப்பொழுது தர்மபுத்தியான வானரோத்தமன் மனதில், "இந்த ராக்ஷஸராஜன் மனைவியர்போல் இராகவனார் தர்மதேவியுமிருந்தாரென்றால் அப்பொழுது இவ னுக்கு அழகாயிருக்கும்" என்பதொரு புத்தியுண்டா யிற்று. 72

மீளவும் அவர் மிகவும் நொந்தவராய்ச் சிந்திக்கின் றார். ஆ! ஆ! பிராட்டி, குணத்தில் சிறந்தவரன்றோ? அப் படியிருக்க, இவ்விலங்கைக்கிறைவன்(பெருந்தவம்புரிந்து) மஹாத்மாவாயிருந்தும் ஏனோ அவர்விஷயத்தில் அயோக் கியமான செயலைச் செய்தான். 73

ஒன்பதாம் ஸர்க்கம் முற்றிற்று.

ஸ்ரீ ௨த்தாஜூரகாஷ்ணம் ஊஶஷ்ஞஹு:

தத்ஷிவொாவஃம்ஃவ்யம் ஷாடிகம் ரத்ஹஷிதந்॥
கிவெகஷோணாஹநாஹா ஊஶம்ஶயநாஸநந்॥ க

ஊாம் தகாம் வநவித்ராம்ரூெ ரெயுபரைெயுஶ
வராஸரெந:। ஃஹாஹுராஷாரணாமெரைக் ரவவ
நூம்ஃஹாயரெந:॥ உ

தஸ்யெவக தஃஜெெஶ வெஶாஜ்யாரொயாவிஹஷிதந்।
ஊஶாுவாம்பாரம்ஷத்ரும் தாராயிவகிஸநிஹந்॥ ௩

ஜாகாரவவரிகஷிவ்த்ம் விதுஹாநாஸவ்யஹந்।
கரெஶாகாொயாவிததம் ஊஶாுவாராஸநந்॥ *

வாயவ்யஜநஹ்ஷாஹி வீஜ்யாநம்ஸஃம்தத:।
மம்யெஸ்ருவிவிெயஜாுஷம்வாரயவெநயவிதந்॥ *

வாஃாஷாரணாஷீணஃாவிகாஜிநஸம்வ்யதந்।
ஊாஃஹிவ்ுராயாநாம் ஸம் தாஊவரொஹிதந்॥ சா

தவிஙஜீஃதஸம்காஶம் வ்யஜீஷொததகும்பயந்।
மொஹிதாகூம்ஃஹாபாஹும் ஃஹாரஜதவாஸஸந்॥ *

மொஹிதெநாநகிவ்தாம்மம் வம்ஊெநஸம்யிநா।
ஸம்யாரதூவிவாகாஶெ தொயதும்ஸதழிஜூணந்॥ *

பத்தாம் ஸர்க்கம்

அநந்தரம் ஹநுமான் அங்கு பார்க்கும்பொழுது, தேவலோகத்திற் குரியதுபோல் இரத்தினங்களிழைத்த சிறந்த படிகக்கட்டிலொன்று புலப்பட்டது. 1

அது தந்தமும் தங்கமும்சேர்த்து விசித்திரமாயிழைத்த அவயவங்களோடு விலையுயர்ந்த மேல்போர்வையுடன் கூடி பெருவிலையனுய்ச் சிறந்த வைடூரியாஸனங்க ளிடப்பெற்றுளது. 2

அதின் ஓர் பிரதேசத்தில் (அதாவது மேல்பாகத்தில்) உயர்ந்த மாலைகள் அலங்கரித்துச் சந்திரன்போல் விளங்கும் வெண்குடையொன்று தெம்பட்டது. 3

செம்பொன்னிற்செய்து சூரியன்போ லொளிர்கின்ற சிறந்த அவ்வாஸனம் அசோகமாலைகள் துலங்க, நாற்புறமும் ஆலவட்டமுங் கையுமாய்த் தாசியர் வீச, பலவகைக் கந்தமும் கமழ, சிறந்த தூபங்களும் புகைக்க, மேல்பரப்புகள் போர்க்கப்பட்டு, ஆட்டுத்தோல்களால் மேற்பலகை தைக்கப்பட்டு, சிறந்த மாலைக ளெங்குந்தொங்க விளங்காநின்றது. 6

அதில் மேகத்தை ஒத்து, வில்வீசு குண்டலங்கள் தரித்து, சிவந்தகண்களும் நெடுந்தோள்களும் பொன்னிழை ஆடையுமாய் கந்தங்கமழ்கின்ற செஞ்சாந்தம்பூசி, சந்தியாகாலத்தில் ஆகாயத்தில் மின்னல்களடர்ந்த செம்மேகம்போல் திவ்வியமான ஆபரணங்கள் சூழப்பெற்று, நினைத்தபடி யுருவெடுக்க வல்லவனுகையால் அழகிய

𑌵𑍃𑌤𑌮𑌾𑌭𑌰𑌣𑍈𑌰𑍍𑌦𑌿𑌵𑍍𑌯𑍈𑌃 𑌸𑍁𑌰𑍂𑌪𑌂 𑌕𑌾𑌮𑌰𑍂𑌪𑌿𑌣𑌮𑍍।
𑌸𑌵𑍃𑌕𑍍𑌷𑌵𑌨𑌗𑍁𑌲𑍍𑌮𑌾𑌢𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌮𑌿𑌵𑌮𑌨𑍍𑌦𑌰𑌮𑍍॥ *
𑌕𑍍𑌰𑍀𑌡𑌿𑌤𑍍𑌵𑍋𑌪𑌰𑌤𑌂 𑌰𑌾𑌤𑍍𑌰𑍌 𑌵𑌰𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌮𑍍।
𑌪𑍍𑌰𑌿𑌯𑌂𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌕𑌨𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌨𑌾𑌂𑌸𑍁𑌖𑌾𑌵𑌹𑌮𑍍॥ *
𑌪𑍀𑌤𑍍𑌵𑌾𑌪𑍍𑌯𑍁𑌪𑌰𑌤𑌂𑌚𑌾𑌪𑌿 𑌦𑌦𑌰𑍍𑌶𑌸𑌮𑌹𑌾𑌕𑌪𑌿𑌃। ௧௧

𑌭𑌾𑌸𑍍𑌵𑌰𑍇𑌶𑌯𑌨𑍇𑌵𑍀𑌰𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌂𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌧𑌿𑌪𑌮𑍍॥
𑌨𑌿𑌶𑍍𑌵𑌸𑌂𑌤𑌂𑌯𑌥𑌾 𑌨𑌾𑌗𑌂 𑌰𑌾𑌵𑌣𑌂𑌵𑌾𑌨𑌰𑌰𑍍𑌷𑌭𑌃।
𑌆𑌸𑌾𑌦𑍍𑌯𑌪𑌰𑌮𑍋𑌦𑍍𑌵𑌿𑌗𑍍𑌨𑌃 𑌸𑍋𑌪𑌾𑌸𑌰𑍍𑌪𑌤𑍍𑌸𑍁𑌭𑍀𑌤𑌵𑌤𑍍॥ ௧௨

𑌅𑌥𑌾𑌰𑍋𑌹𑌣𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯 𑌵𑍇𑌦𑌿𑌕𑌾𑌂𑌤𑌰𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌃।
𑌸𑍁𑌪𑍍𑌤𑌂𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌶𑌾𑌰𑍍𑌦𑍂𑌲𑌂 𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑌤𑍇𑌸𑍍𑌮𑌮𑌹𑌾𑌕𑌪𑌿𑌃॥

𑌶𑍁𑌶𑍁𑌭𑍇𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌪𑌤𑌃𑌶𑌯𑌨𑍋𑌤𑍍𑌤𑌮𑌮𑍍।
𑌗𑌂𑌧𑌹𑌸𑍍𑌤𑌿𑌨𑌿𑌸𑌂𑌵𑌿𑌷𑍍𑌟𑍇 𑌯𑌥𑌾𑌪𑍍𑌰𑌸𑍍𑌰𑌵𑌣𑌂𑌮𑌹𑌤𑍍॥ ௧௪

𑌕𑌾𑌂𑌚𑌨𑌾𑌂𑌗𑌦𑌸𑌨𑍍𑌨𑌦𑍍𑌧𑍌 𑌦𑌦𑌰𑍍𑌶𑌸𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃।
𑌵𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑍌𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌭𑍁𑌜𑌾𑌵𑌿𑌂𑌦𑍍𑌰𑌧𑍍𑌵𑌜𑍋𑌪𑌮𑍌॥

𑌐𑌰𑌾𑌵𑌤𑌵𑌿𑌷𑌾𑌣𑌾𑌗𑍍𑌰𑍈 𑌰𑌾𑌪𑍀𑌡𑌨𑌕𑍃𑌤𑌵𑍍𑌰𑌣𑍌।
𑌵𑌜𑍍𑌰𑍋𑌲𑍍𑌲𑌿𑌖𑌿𑌤𑌪𑍀𑌨𑌾𑌂𑌸𑍌 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌚𑌕𑍍𑌰𑌪𑌰𑌿𑌕𑍍𑌷𑌤𑍌॥ *
𑌪𑍀𑌨𑍌𑌸𑌮𑌸𑍁𑌜𑌾𑌤𑌾𑌂𑌸𑍌 𑌸𑌂𑌗𑌤𑍌 𑌬𑌲𑌸𑌂𑌯𑍁𑌤𑍌।
𑌸𑍁𑌲𑌕𑍍𑌷𑌣𑌨𑌖𑌾𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑍌 𑌸𑍍𑌵𑌙𑍍𑌗𑍁𑌲𑍀𑌤𑌲𑌲𑌕𑍍𑌷𑌿𑌤𑍌॥ *

ரூபந்தரித்து, மரங்களும் வனங்களும் புதர்களுமடர்ந்த மந்தரமலைபோல் உறங்குகின்றவனுய், இரவெல்லாம் பெண்களுடன் விளையாடித்திளைத்து, சிறந்த ஆபரணங்களணிந்து, இராக்ஷஸஸ்திரீகளுக்கு இனியனுய், இராக்ஷஸர்களுக்கு இனிது செய்பவனுய், மதுபானம்செய்து சலித்த ராவணனை அந்த வானரோத்தமன் கண்டார். 10½

தேஜோமயமான அந்த சயனத்தில் இராக்ஷஸர் கோனுய் வீரனுன ராவணன் மஹா ஸர்ப்பம்போல் சீறிக் கிடந்துறங்க, அவனைக்கிட்டி மிகவும் பயந்தவர்போல் அப்புறம் விலகிச்சென்ருர். 12

அநந்தரம் படியின் வழியே மற்ருெரு மேடையின் மேலிருந்து அந்த வானரோத்தமன், உறங்குகின்ற இராக்ஷஸராஜனை யுற்றுநோக்கினுர். 13

இராக்ஷஸ்ராஜன் துயில்கொள்ளும் அந்த உத்தம சயனம், மதயானை படுத்துறங்கும் மலைச்சுனைபோல் விளங்காநின்றது. 14

மஹாத்மாவான அந்த இராக்ஷஸர் கோமானின், பொன்மயமான தோள்வளைகளணிந்து இந்திரத்துவசம் போல் நீட்டிவிடப்பட்ட தோள்களைக் கண்டார். 15

ஐராவதத்தின் நுனித்தந்தங்கள் பொத்துண்டும், வச்சிராயுதத்தால் கிழியுண்டு பருத்த தோள்களுற்றும், உபேந்திரன் சக்கரத்தால் கொத்துண்டும், பருத்து ஒன்றுக்கொன்றீடான புயங்களுடன் பொருந்தியும், மிகுந்த பலன்கொண்டும், நல்ல லக்ஷணங்களமைந்த நகங்களும்

𑌸𑌂𑌹𑌤𑍌 𑌪𑌰𑌿𑌘𑌾𑌕𑌾𑌰𑍌 𑌵𑍃𑌤𑍍𑌤𑍌 𑌕𑌰𑌿𑌕𑌰𑍋𑌪𑌮𑍌।
𑌵𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑍌 𑌶𑌯𑌨𑍇 𑌶𑍁𑌭𑍍𑌰𑍇 𑌪𑌞𑍍𑌚𑌶𑍀𑌰𑍍𑌷𑌾𑌵𑌿𑌵𑍋𑌰𑌗𑍌 ॥ ௧௮

𑌶𑌶𑌕𑍍𑌷𑌤𑌜𑌕𑌲𑍍𑌪𑍇𑌨 𑌸𑍁𑌶𑍀𑌤𑍇𑌨 𑌸𑍁𑌗𑌨𑍍𑌧𑌿𑌨𑌾।
𑌚𑌨𑍍𑌦𑌨𑍇𑌨 𑌪𑌰𑌾𑌰𑍍𑌧𑍍𑌯𑍇𑌨 𑌸𑍍𑌵𑌙𑍍𑌗𑌰𑌾𑌗𑍇𑌣 𑌸𑍍𑌵𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑍌॥
𑌉𑌤𑍍𑌤𑌮𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌵𑌿𑌮𑍃𑌦𑌿𑌤𑍌 𑌗𑌨𑍍𑌧𑍋𑌤𑍍𑌤𑌮𑌨𑌿𑌷𑍇𑌵𑌿𑌤𑍌।
𑌯𑌕𑍍𑌷𑌪𑌨𑍍𑌨𑌗𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑌦𑌾𑌨𑌵𑌰𑌾𑌵𑌿𑌣𑍌॥ *
𑌦𑌦𑌰𑍍𑌶 𑌸𑌕𑌪𑌿𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌬𑌾𑌹𑍂 𑌶𑌯𑌨𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑍌।
𑌮𑌨𑍍𑌦𑌰𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑍇 𑌸𑍁𑌪𑍍𑌤𑍌 𑌮𑌹𑌾𑌹𑍀 𑌰𑍁𑌷𑌿𑌤𑌾𑌵𑌿𑌵॥ ௨௧

𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌸𑌪𑌰𑌿𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌭𑍁𑌜𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇
𑌶𑍍𑌵𑌰𑌃। 𑌶𑍁𑌶𑍁𑌭𑍇𑌽𑌚𑌲𑌸𑌙𑍍𑌕𑌾𑌶𑌃 𑌶𑍃𑌙𑍍𑌗𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑌿𑌵 𑌮𑌨𑍍𑌦𑌰𑌃॥ ()

𑌚𑍂𑌤𑌪𑍁𑌨𑍍𑌨𑌾𑌗𑌸𑍁𑌰𑌭𑌿𑌰𑍍𑌵𑌕𑍁𑌲𑍋𑌤𑍍𑌤𑌮𑌸𑌂𑌯𑍁𑌤𑌃।
𑌮𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌨𑌰𑌸𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌪𑌾𑌨𑌗𑌨𑍍𑌧𑌪𑍁𑌰𑌸𑍍𑌸𑌰𑌃॥ *
𑌤𑌸𑍍𑌯 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌸𑌿𑌂𑌹𑌸𑍍𑌯 𑌨𑌿𑌶𑍍𑌚𑌕𑍍𑌰𑌾𑌮 𑌮𑌹𑌾𑌮𑍁𑌖𑌾𑌤𑍍।
𑌶𑌯𑌾𑌨𑌸𑍍𑌯 𑌵𑌿𑌨𑌿𑌶𑍍𑌵𑌾𑌸𑌃 𑌪𑍂𑌰𑌯𑌨𑍍𑌨𑌿𑌵 𑌤𑌦𑍍𑌗𑍃𑌹𑌮𑍍॥ ௨௪
𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌮𑌣𑌿𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑍇𑌣 𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑍇𑌨 𑌵𑌿𑌰𑌾𑌜𑌿𑌤𑌮𑍍।
𑌮𑍁𑌕𑍁𑌟𑍇𑌨𑌾𑌪𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌨 𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌿𑌤𑌾𑌨𑌨𑌮𑍍॥ *
𑌰𑌕𑍍𑌤𑌚𑌨𑍍𑌦𑌨𑌦𑌿𑌗𑍍𑌧𑍇𑌨 𑌤𑌥𑌾 𑌹𑌾𑌰𑍇𑌣 𑌶𑍋𑌭𑌿𑌨𑌾।
𑌪𑍀𑌨𑌾𑌯𑌤𑌵𑌿𑌶𑌾𑌲𑍇𑌨 𑌵𑌕𑍍𑌷𑌸𑌾𑌭𑌿𑌵𑌿𑌰𑌾𑌜𑌿𑌤𑌮𑍍॥ *

விரல்களுமமைந்தும், நல்ல அகங்கைகளுடையனவாயு மிருக்கின்ற அவன் கைகள், ஐந்து பைந்தலை யரவங்கள் போல் வெண்மையான சயனத்தில் விளங்காநின்றன. 18

முயலினது ரத்தம்போல் சிவந்து குளிர்ந்து மணச் சாந்தம் பூசி, கஸ்தூரி முதலிய சிறந்த கந்தங்கள் தீட்டப் பட்டு, நன்மடவார்பிடிக்கப்பெற்று, யக்ஷ பந்நக கந்தர்வ தேவ தானவர்களைக் கதறவைக்கின்றவைகளான அவன் புயமிரண்டும், மந்தரமலையில் படுத்துக்கிடந்த படநாகங் கள்போல் படுக்கையிலிருக்கக் கண்டார். 21

[பெண்களுக்கினியனுகைக்காக இரண்டு புயங்களும் ஒருதலையுமா யிருக்கிறனென் றறிக.]

பருத்துருண்ட அவ்விரண்டு புயங்களுடன் அரக்கர் கோன், இரண்டு சிகரங்களோ டிலங்கு மந்தரமலைபோல் விளங்கலானன். 22

படுத்துக்கிடக்கும் அந்த ராக்ஷஸசிங்கத்தின் முகத் தின் மூச்சு, மா புன்னை மகிழ் மணக்க, அறுசுவை யுண்டி யோடு மதுவினது கந்தமும் கமழும்படி அந்த கிருஹ மெங்கும் நிறம்பியதுபோலும். 23-24

முத்தும் மணியுங்கூடி விசித்திரமாய் சுவர்ணமயக் கிரீடம் கொஞ்சம் கழன்றிலங்கக் குண்டலங் துலங்கு முக மும், செஞ்சாந்து பூசி ஆரங்களிலங்கிப் பருத்தகன்ற நெடுமார்பும், சிவந்த கண்களும், பெருவிலையனுய்ச் சிற ந்த வெண்பட்டாடையொன்று கலைந்து சூழ, உளுத்தங் குவியல்போல் கறுத்து, நாகம்போல் நெட்டுயிர்ப்பிட்டு,

வாம்ப³ரோப⁴ரணாவிஷ்டேந க்ஷளமேண க்ஷதஜேக்ஷணம்।
ஸஹாரேணாவஸாஸம்வீதம் பீதேநாத்தவாஸஸா॥ *
ஶோஷராஶிப்ரதீகாஶம் நிஶ்வஸந்தம் பு⁴ஜங்க³வத்।
கா³ங்கே³ மஹதி தோயாந்தே ப்ரஸுப்தமிவ குஞ்ஜரம்॥ *
சதுர்பி⁴: காஞ்சநைர்தீ³பைர்தீ³ப்யமாநம் சதுர்தி³ஶம்।
ப்ரகாஶீக்ருதஸர்வாம்ஶம் மேக⁴ம் வித்³யுத்³க³ணைரிவ॥ *
பாத³மூலக³தாஶ்சாபி த³த³ர்ஶ ஸுமஹாத்மந:।
பத்நீ: ஸ ப்ரியபா⁴ர்யஸ்ய தஸ்ய * ரக்ஷ:பதேர்க்³ருஹே॥ ௧௦

ஶஶிப்ரகாஶவத³நாஶ்சாருகுண்ட³லபூ⁴ஷிதா:।
அம்லாநமால்யாப⁴ரணா த³த³ர்ஶ ஹரியூத²ப:॥ ௧௧

ந்ருத்தவாதி³த்ரகுஶலா ராக்ஷஸேந்த்³ரபு⁴ஜாங்ககா³:।
வராப⁴ரணதா⁴ரிண்யோ நிஷண்ணா த³த்³ருஶே ஹரி:॥ ௧௨

வஜ்ரவைடூ³ர்யக³ர்பா⁴ணி ஶ்ரவணாந்தேஷு யோஷிதாம்।
த³த³ர்ஶ தாபநீயாநி குண்ட³லாந்யங்க³தா³நி ச॥ ௧௩

தாஸாம் சந்த்³ரோபமைர்வக்த்ரை: ஶுப்⁴ரைர்லலிதகுண்ட³லை:।
விரராஜ விமாநம் தந்நப⁴ஸ்தாராக³ணைரிவ॥ ௧௪

மத³வ்யாயாமகி²ந்நாஸ்தா ராக்ஷஸேந்த்³ரஸ்ய யோஷித:।
தேஷு தேஷ்வவகாஶேஷு ப்ரஸுப்தாஸ்தநுமத்⁴யமா:॥()

கங்கையினது பெருவெள்ளத்தில் படுத்துறங்கு மதகஜம் போலும் நாற்றிசையு மேற்றிய பொன்னின் விளக்குக ளிடையிற்படுத்து மின்னல்கொடிகளா லெங்குந்துலங்கு மேகம்போலும் விளங்க, மஹா பாக்கியவானான அவன் பாதமூலத்தில் அன்பிற்குரிய நாயகிகளும் படுத்திருக்கக் கண்டார். 30

ஆங்கவர்கள் மதிநிகர்முகமும், அழகுசெய் கனங் குழையும், வாட்டமுறு மாலையும், ஆபரணங்களுமாய் விளங்கக் கண்டார். 31

ஆடல் பாடல்களிற் றேர்ந்த அச்சீரிழை மாதர்கள், அரக்கர்பதியின் தோளிலும் துடையிலும் கிடக்கக்கண் டார். 32

அச்சேயிழையர்தம் செவிமுனையில் வச்சிர வைடூரி யம்பதித்த செம்பொன்செய்கனங்குழையும் தோள்களில் வளையுந் தெரியக்கண்டார். 33

சுந்தரமான குண்டலங்களோ டந்தமுற்ற அவர் மதி முகங்களால் அந்த புஷ்பகவிமானம், நக்ஷத்திரகணங்கள் நிறைந்த வாகாயம்போல் அழகுசெய்தது. 34

மதத்தால் அலைந்து திளைத்தும்போன அவ்வரக்கர் பதியின் நடங்கிடைகள், அப்படியே அவ்வவ்விடத்தில் படுத் துறங்கிக் கிடந்தார்கள். 35

𑌅𑌂𑌗𑌹𑌾𑌰𑍈𑌸𑍍𑌤𑌥𑍈𑌵𑌾𑌨𑍍𑌯𑌾 𑌕𑍋𑌮𑌲𑍈𑌰𑍍𑌨𑍃𑌤𑍍𑌤𑌶𑌾𑌲𑌿
𑌨𑍀। 𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌶𑍁𑌭𑌸𑌰𑍍𑌵𑌾𑌂𑌗𑍀𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌵𑌰𑌵𑌰𑍍𑌣𑌿𑌨𑍀॥ ௩௬

𑌕𑌾𑌚𑌿𑌦𑍍𑌵𑍀𑌣𑌾𑌂𑌪𑌰𑌿𑌷𑍍𑌵𑌜𑍍𑌯 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌸𑌂𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑍇।
𑌮𑌹𑌾𑌨𑌦𑍀𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌣𑍇𑌵 𑌨𑌳𑌿𑌨𑍀𑌪𑍋𑌤𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾॥ ௩௭

𑌅𑌨𑍍𑌯𑌾𑌕𑌕𑍍𑌷𑌗𑌤𑍇𑌨𑍈𑌵 𑌮𑌡𑍍𑌡𑍁𑌕𑍇𑌨𑌾𑌸𑌿𑌤𑍇𑌕𑍍𑌷𑌣𑌾।
𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌭𑌾𑌮𑌿𑌨𑍀𑌭𑌾𑌤𑌿 𑌬𑌾𑌲𑌪𑍁𑌤𑍍𑌰𑍇𑌵𑌵𑌤𑍍𑌸𑌲𑌾॥ ௩௮

𑌪𑌟𑌹𑌂𑌚𑌾𑌰𑍁𑌸𑌰𑍍𑌵𑌾𑌂𑌗𑍀 𑌪𑍀𑌡𑍍𑌯𑌶𑍇𑌤𑍇𑌶𑍁𑌭𑌸𑍍𑌤𑌨𑍀।
𑌚𑌿𑌰𑌸𑍍𑌯𑌰𑌮𑌣𑌂𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌪𑌰𑌿𑌷𑍍𑌵𑌜𑍍𑌯𑍇𑌵𑌭𑌾𑌮𑌿𑌨𑍀॥ ௩௯

𑌕𑌾𑌚𑌿𑌦𑍍𑌵𑌂𑌶𑌂𑌪𑌰𑌿𑌷𑍍𑌵𑌜𑍍𑌯 𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌕𑌮𑌲𑌲𑍋𑌚𑌨𑌾।
𑌰𑌹𑌃𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑌮𑌂𑌗𑍃𑌹𑍍𑌯 𑌸𑌕𑌾𑌮𑍇𑌵𑌚𑌕𑌾𑌮𑌿𑌨𑍀॥ ௪௦

𑌵𑌿𑌪𑌂𑌚𑍀𑌂𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌾 𑌨𑌿𑌯𑌤𑌾𑌨𑍃𑌤𑍍𑌤𑌶𑌾𑌲𑌿𑌨𑍀।
𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌵𑌶𑌮𑌨𑍁𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾 𑌸𑌹𑌕𑌾𑌂𑌤𑍇𑌵𑌭𑌾𑌮𑌿𑌨𑍀॥ ௪௧

𑌅𑌨𑍍𑌯𑌾𑌕𑌨𑌕𑌸𑌂𑌕𑌾𑌶𑍈𑌰𑍍𑌮𑍃𑌦𑍁𑌪𑍀𑌨𑍈𑌰𑍍𑌮𑌨𑍋𑌰𑌮𑍈𑌃।
𑌮𑍃𑌦𑌂𑌗𑌂𑌪𑌰𑌿𑌪𑍀𑌡𑍍𑌯𑌾𑌂𑌗𑍈𑌃 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌮𑌤𑍍𑌤𑌲𑍋𑌚𑌨𑌾॥ ௪௨

அதில் நர்த்தநத்தில் தேர்ந்த ஓர் சுந்தரி ஆட்டமாடுவதுபோலவே அவயவங்களை யழகா யமைத்துக்கொண்டு அப்படியே ஸர்வாங்க சுந்தரியாய் துயில்கொண்டிருந்தாள். 36

ஒருத்தி வீணையைத் தழுவிப் படுத்திருந்து, பெருக்காற்றில் பட்டதொரு ஓடம்சேர் தாமரை யோடைபோல் விளங்கலானாள். 37

மட்டுகமென்னும் வாத்தியத்தை அக்களி லிடுக்கி ஓர்மையகண்ணாள், பரிவுடன் பாலகனைத் தழுவிக்கிடப்பவள்போல் துயில் கொண்டிருந்தாள். (மட்டுகம்-டவண்டை யென்பார்கள்.) 38

மேனியெங்கு மழகாய ஓர் மென் முலையாள், படகமென்னும் பறையைத் தழுவிக்கொண்டு, நெடுநாள் கழித்துக்கிடைத்த காதலனைக்கட்டி யணைப்பதுபோல் காணலானாள். 39

குழலைப் பிடித்தபடியே கண்ணுறங்கு மோர் கமலக்கண்ணி, தனியிடத்தில் தனிக் காதலனைத் தழுவி காதல் தீர்ந்த காமினிபோல் காட்சி தந்தாள். 40

விபஞ்சியைத் தழுவிக்கொண்டு துயிலுறுகின்ற ஓர் நடனக்காரி, காதலனுடன் கூடிக் களைத்தவள்போல் காட்சிதந்தாள். (விபஞ்சி-ஏழுதந்தி வீணை. 41

மற்றொரு மாழைநோக்கி, மெல்லியதாய் பருத்து மனதிற்கினிதாய பொன் மேனிகொண்டு மத்தளத்தை அழுந்தக்கட்டி மெய்மறந்தாள். 42

[illegible]|
[illegible] ப்ரஸந்நா [illegible]|| ௪௩

[illegible]|
ப்ரஸந்நதா [illegible] விஹாரிணீ|| ௪௪

[illegible]|
[illegible] ப்ரஸந்நோ [illegible] ஹிதா|| ௪௫

[illegible] ப்ரஸந்நா [illegible] ஹாரிணீ|
[illegible] விராஜிதா|| ௪௬

[illegible]|
[illegible] ப்ரஸந்நா [illegible] விராஜிதா|| ௪௭

[illegible] ஜநா|
[illegible] ப்ரஸந்நா [illegible] விக்ரஹா|| ௪௮

[illegible]|
[illegible]|| ௪௯

[illegible]||
[illegible]|| ௫௦

கொடியிடையா ளின்னொருத்தி, மதச்சோர்வினல் கையிடுக்கி லகப்பட்ட பணவத்தை யணைத்தபடியே துயில் கொண்டிருந்தாள். 43

மற்ருெரு பெண், டிண்டிமமென்னும் வாத்தியமொன்று கையிலிருக்கையில்தானே மற்ருென்றை யணைத்துக் கொண்டு, நாயகனையும் சிறுவனையு மிருபுறமும் தழுவினுப்போல் நித்திரைசெய்தாள். 44

முளரியிதழ்க்கண்ணுடைய மற்ருெருத்தி மதத்தால் மதிமயங்கி, ஆடம்பரமென்னுமோர் தூரியத்தைத்தோள்களா லாரத் தழுவியபடியே தூங்கலுற்ருள். 45

மற்ருெருத்தி வசந்தகாலத்தில் தண்ணீர் தெளித்த கலம்பகமாலைபோல், கையிலிருந்த கலசத்தைச் சோர விடும்பொழுது அதில் நீர் தெளிக்க அப்படியே உறக்கங் கொண்டாள். 46

நித்திரைக்குத்தோற்ற வோரிளமாது, பொற்கலசம் போன்ற தன்குசங்களையே தழுவிக்கிடந்தாள். 47

முளரியிதழ்க்கண்ணும் முழுமதிபோல் முகமும் படைத்த மற்ருெருத்தி மதத்தால் கலங்கி மற்ருேர் மாதையணைந்து மெய்மறந்தாள். 48

இவ்வாறந்த பெண்மணிகள், காதலரைக் காதலிகள் கட்டியணைக்குமாறு விசித்திரமான வாத்தியங்களைத் தனங்களோ டணைத்துத் துயில்கொண்டார்கள். 49

அவர்களுக்குள் அழகாயதோர் தனிப்படுக்கையில் கண்வளர்கின்ற ஓர் சுந்தரியை அனுமான் கண்டார். 50

மர்த்தாணிஸமாயாதே த்வ ஹர்ஷேணைஷாவிஹர்ஷிதாம்। விஹ்ருஷ்யந்தீவ தக ஸ்ஸ்ரீ யாஹவேநாத்மநம்॥ ௫௧
ரஸீம்கநகவண்ணாம் பீஷிதாம்தவேவேஸ்ரீம்।
கவிமும்நோஷீம் தத்ர ஸயாநாம்வாரரவிணீம்॥ ()
ஸதாம்த்ருஷ்டா மஹாபாஹு ஹர்ஷிதாம்மாதாத்மஜ:। தகர்யாமாஸஸீதேதி ரவியளவநஸம்வதா॥ ௫௩

ஹஷேர்ணமஹதாயாதேத்தா நநம்தஹாஸியவ:॥ ௫௩௨

ஸ்ஹோடியாமாஸவாவாம்பவாஹும் நநம்தவிக்ரீ ஜமளஜமாம்। ஸம்ஹாநநோஹந்நிவாதஹமேள நிதஶயநுஸ்வாம்வ்ருக்ருதிம்கவீநாம்॥ ௫௪௨

இதி ஶ்ரீ உத்தரகாண்டே - ஏகஸப்ததிதம: ஸர்க:

முத்தும் மணியும் செறிந்த அணிகளை நன்கணிந்து, தன்னழகால் அவ்விடத்தைத் துலங்கச் செய்கின்றவளாய், பொன் புரை மேனியுடையளாய், பிரியனுக்கினியளாய், அந்தப்புரத்தரசியாய் அழகியான மந்தோதரியை அனுமான் கண்டார். 52

அலங்காரங்கொண்ட அவளைக் கண்ட மாருதாத்மஜன், அவளுருவத்தையும் பருவத்தையும் உற்றுப் பார்த்து இவள்தான் ஸீதையோவென்று ஸந்தேஹித்தார். 53

உடனே அளவிலாத ஆனந்தத்துக்குள்ளானார். 53½

தோளைத்தட்டி, வாலைமுத்தமிட்டுக் களித்துக் கூத்தாடிப் பாடியோடி கம்பத்திலேறி தரையிற் குதித்து, குரங்குகளுக்குண்டான தன்மை யடங்கச் செய்து காட்டினார். 54½

பத்தாம் ஸர்க்கம் முற்றிற்று.

ஶ்ரீமத்ஸாந்ரகாண்ட - ஸகாதஶஸ்ஸர்ஃ

அவயப்யவதாம்பாஜிம் பஹப்வாவஸ்திதஸ்தா।
ஜமாஹிவாவரம்ஹிம்தாம் வீதாம்ப்ருதிஹோகவிஃ॥ க

நராஶேணவியா ஸ்தாஸா ஸ்வதாஹர்தீஹாஜிநீ।
நஹோதக்ஷம்நாவ்யுமங்கதர்ம்நவாநஶ்வஶெவிதாழ்॥
நாந்யம்நரஹவஸ்தாதம் ஸராணாஹிவிவெஸ்வரழ்।
நஹிராஹஸஃகஸ்த்வி ஷிந்யதெத்ரு தஶெஷ்வவி॥ ✳
கநெந்யயஜிதிநிஸ்த்விந்ய வாநஹப்ளவசாரஸஃ। ௩௨
கீர்ஷிதெநாவராஃக்ஷாஞா நீதெநவதயாவராஃ ✳
ந்யத்தெநவாவராஃக்ஷாம்தாஃ வாநவிருஹஸ்தாஷ்யா।
ஹராஜெஷந்யுதம்ரெஷ வர்ஜிகாவஸவஸம்ஸ்திதாஃ॥ ✳
தயாஸ்தாணஹவெப்யஷ ஸம்ஷிஷ்டாஸ்தாவராஸ்ரியஃ। ௩௨
கம்மநா நாம்ஸஹஹெர்யணஹப்ஷிதெநவிஹப்ஷிணெஃ॥
ரப்வஸஷ்ராவஸ்ரீமெநயா க்ஷிதாகதுஹாஷிணா।
தெஶகாமாஹியாதெக்ஷந யாக்ஷவாகர்யாஹியாயிநா॥ ௭௨

தாஸாம்ஹெஜ்யஹோஸ்வாஹா ஸ்ஸஶஹெராக்ஷவெஸ்வரஃ॥
மொஷெஹஹாதிஹவ்யாநாம் மவாம்ஹெஜ்யயயாவ்யஷஃ॥ ௮௨

பதினொராம் ஸர்க்கம்

உடனே அந் நினைவை யொழித்துத் தன்னிலையில் நின்ற திருவடிகள், ஸீதையைப்பற்றி மற்றோர் சிந்தை செய்யலுற்றார். 1

இராமனைப் பிரிந்த பிராட்டியார்க்கு ஊணேது! உறக்கமேது! அலங்காரமேது! இராமனைத் தவிர மற்றொருவனை (அவன் அமரர்கோனாயினும்) அணுகுவதேது! இராமனுக் கிணையாகத் தேவரில்தா னுளுண்டோ! ஆதலினிவள் வேறென்று நிச்சயித்து பானபூமியில் அவர் திரியலுற்றார். 3½

சிலர் ஆடியும் சிலர் பாடியும் சிலர் விளையாடியும் வாடி, பின்னும் சிலர் பானம்செய்து சோர்வுற்று முரவங்களிலும், மிருதங்கங்களிலும், பீடங்களிலும் சாய்ந்திருந்தார்கள்; பின்னும் சிலர் சுகமான மெல்லணைமேற் கண்டுயின்றார்கள். 5½

விதம் விதமான ஆபரணங்களணிந்த தம் அழகைப் பற்றி இன்மொழிகளாடியும், ஸமயத்துக்கேற்ற பண்கள் பாடி அவற்றின் பொருள் சொல்லியும், காலதேசங்களுக்குத் தக்கபடி ஸம்பாஷித்தும் போருகின்ற ஆயிரம் பெண்களுடன் கலவியிற் கலந்து கண்படுகின்ற ராவணனை அனுமான் கண்டார். 7½

பெருந் தொழுவத்தில், சிறந்த பசுக்களுடன் கலந்த காளைபோல், அந்த பெண்கள் நடுவில் அப்பெருந்தோள் மன்னன் பிரகாசித்தான். 8½

[illegible]
[illegible] கூஉ

[illegible]
[illegible] ()

[illegible] *
[illegible] ககஉ

[illegible]
[illegible] ()

[illegible]
[illegible] கரு உ

[illegible] *
[illegible]
[illegible] ()

[illegible]
[illegible]

அந்த ராக்ஷஸேந்திரன், கானகத்தினிடையில் பிடிகள் புடைசூழ்ந்த பெரு வேழம்போல் பெண்மணிகள் சூழவிருந்தான். பிடி-பெண்யானை. 9½

அந்த ஹனுமான், சீமானன அரக்கர் கோமானின் மனையில் பானசாலையிற் புகுந்து பார்க்கும்பொழுது, அது காமுற்றவை யாவையும் கொடுக்கவற்று யிருந்தது. 10½

அந்த பானசாலையில் மான், எருமை, பன்றி இவற்றின் மாமிசங்கள் வகைவகையாய் வகுக்கப்பட் டிருக்கக் கண்டார். 11½

செம்பொன் மயமாய் விசாலமான கலங்களில், பாதி புசித்து மிகுத்தப்பட்ட மயில் மாமிசங்களும் கோழிப் புலாலும் காணப்பட்டது. 12½

பன்றி, வார்த்திராணஸமென்னு மோர் ஆடு, சல்லியம், மான், மயில் இவற்றின் மாமிசங்கள், தயிரும் (ருசகமென்னு மோர்) லவணமும் சேர்த்து பக்குவம் செய்திருக்கக் கண்டார். 13½

கிரகரமென்னும் பக்ஷி விசேஷங்களும், பக்குவம் செய்து பாதி புசிக்கப்பட்ட சகோரங்களும், எருமைகளும் ஒற்றைமுள் மீன்களும் சித்தமான ஆடுகளும், உயர்ந்த லேஹியங்களும், பானகங்களும், வகை வகையான புசிப்புகளு மிருக்கக் கண்டார். 15

அப்படியே, லவணம் பிரதானமாயும் புளி பிரதானமாயுமுள்ள பதார்த்தங்களாலும், திராக்ஷை முதலிய ரஸங்களிற் செய்து முறையே நீத்தும் அழுந்தியு மிருக்

𑌪𑌾𑌨𑌭𑌾𑌜𑌨𑌵𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑍈𑌃 𑌫𑌲𑍈𑌶𑍍𑌚𑌵𑌿𑌵𑌿𑌧𑍈𑌰𑌪𑌿 ।
𑌕𑍃𑌤𑌪𑍁𑌷𑍍𑌪𑍋𑌪𑌹𑌾𑌰𑌾 𑌭𑍂𑌰𑌧𑌿𑌕𑌂 𑌪𑍁𑌷𑍍𑌯𑌤𑌿 𑌶𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 ॥ ()

𑌤𑌤𑍍𑌰𑌤𑌤𑍍𑌰𑌚𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑍈𑌃 𑌸𑍁𑌶𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑍈𑌃 𑌶𑌯𑌨𑌾𑌸𑌨𑍈𑌃 ।
𑌪𑌾𑌨𑌭𑍂𑌮𑌿𑌰𑍍𑌵𑌿𑌨𑌾 𑌵𑌹𑍍𑌨𑌿𑌂 𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑍍𑌤𑍇𑌵𑍋𑌪𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 ॥ ௧௮

𑌬𑌹𑍁𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍈𑌰𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑍈𑌰𑍍𑌵𑌰𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑍈𑌃 । 𑌮𑌾𑌂𑌸𑍈𑌃 𑌕𑍁𑌶𑌲𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑍈𑌃 𑌪𑌾𑌨𑌭𑍂𑌮𑌿𑌗𑌤𑍈𑌃 𑌪𑍃𑌥𑌕𑍍 ॥ *

𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌾 𑌵𑌿𑌵𑌿𑌧𑌾 𑌸𑍁𑌰𑌾𑌃 𑌕𑍃𑌤𑌸𑍁𑌰𑌾𑌅𑌪𑌿 ।
𑌶𑌰𑍍𑌕𑌰𑌾𑌸𑌵𑌮𑌾𑌧𑍍𑌵𑍀𑌕 𑌪𑍁𑌷𑍍𑌪𑌾𑌸𑌵𑌫𑌲𑌾𑌸𑌵𑌾𑌃 ॥ ௨௦

𑌵𑌾𑌸𑌚𑍂𑌰𑍍𑌣𑍈𑌶𑍍𑌚𑌵𑌿𑌵𑌿𑌧𑍈𑌰𑍍𑌮𑍃𑌷𑍍𑌟𑌾𑌸𑍍𑌤𑍈𑌸𑍍𑌤𑍈𑌃 𑌪𑍃𑌥𑌕𑍍𑌪𑍃𑌥𑌕𑍍 । 𑌸𑌂𑌤𑌤𑌾 𑌶𑍁𑌶𑍁𑌭𑍇 𑌭𑍂𑌮𑌿𑌰𑍍𑌮𑌾𑌲𑍍𑌯𑍈𑌶𑍍𑌚 𑌬𑌹𑍁𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑍈𑌃 ॥ *

𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑍈𑌶𑍍𑌚𑌵𑌿𑌵𑌿𑌧𑍈𑌰𑍍𑌭𑌾𑌜𑌨𑍈𑌃 𑌸𑍍𑌫𑌾𑌟𑌿𑌕𑍈𑌰𑌪𑌿 ।
𑌜𑌾𑌮𑍍𑌬𑍂𑌨𑌦𑌮𑌯𑍈𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑍈𑌃 𑌕𑌰𑌕𑍈𑌰𑌭𑌿𑌸𑌂𑌵𑍃𑌤𑌾 ॥ ()

𑌰𑌾𑌜𑌤𑍇𑌷𑍁𑌚𑌕𑍁𑌮𑍍𑌭𑍇𑌷𑍁 𑌜𑌾𑌮𑍍𑌬𑍂𑌨𑌦𑌮𑌯𑍇𑌷𑍁𑌚 ।
𑌪𑌾𑌨𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌤𑌦𑌾𑌭𑍂𑌰𑌿 𑌕𑌪𑌿𑌸𑍍𑌤𑌤𑍍𑌰𑌦𑌦𑌰𑍍𑌶𑌸𑌃 ॥ ௨௩

𑌸𑍋𑌽𑌪𑌶𑍍𑌯𑌚𑍍𑌛𑌾𑌤𑌕𑍁𑌮𑍍𑌭𑌾𑌨𑌿 𑌶𑍀𑌧𑍋𑌰𑍍𑌮𑌣𑌿𑌮𑌯𑌾𑌨𑌿𑌚 ।
𑌰𑌾𑌜𑌤𑌾𑌨𑌿𑌚𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌨𑌿 𑌭𑌾𑌜𑌨𑌾𑌨𑌿𑌮𑌹𑌾𑌕𑌪𑌿𑌃 ॥ ௨௪

கின்ற ராக ஷாடபங்களாலும், ஆரம் தண்டை விலை யுயர்ந்து கலந்த தோள்வளை இவற்றாலும், பானபாத்திரங் களில் வைத்த வகைவகையான கனிகளாலும், மலர்க் காணிக்கைகளாலும் அவ்விடம் அழகெழுந்தது. 17

ஆங்காங்கு சேர்ந்தாப்போல் அமைக்கப்பட்ட சய ஞஸங்களால், அந்த பானசாலை நெருப்பின்றியே சொலிப் பதுபோல் காணப்பட்டது. 18

வகைக்குள் வகையாய் போக்கியத்தில் போக்கிய மாய் சிறந்த சமையற்காரர்களால் சமைக்கப்பட்டு பான சாலையில் தனித் தனியே அமர்த்திய மாம்ஸங்களோடு கூடி திவ்வியமாய் தெளிந்த விதம் விதமான கட்களும், சக்கரை, திராக்ஷை, புஷ்பங்கள், பழங்கள் இவற்றிற் செய்த சாராயங்களும் வைத்திருக்கக் கண்டார். 20

விதம் விதமான கந்தப்பொடிகளும், தனித்தனியே வகுத்த பலவகை மாலைகளும், பொன்மயமாயும் படிக மயமாயு மிருக்கின்ற பலவகை மாலைகளும், செம்பொற் கலசங்களும் எங்கும் நிறைந்த அவ்விடம் அழகாய் விளங் கியது. 22

வெள்ளிக்குடங்களிலும் பொற்குடங்களிலும் சிறந்த பானகங்கள் நிறைந்திருக்க அந்த வானரன் கண்டார். ()

வெள்ளிமயமாயும், சுவர்ணமயமாயும், நவரத்தின மயமாயு மிருக்கும் கட்குடங்களும் கனக்கக் கண்டார். ()

क्वचिद्दलावशेषाणि क्वचित्पीतानि सर्वशः ।
क्वचिद्दैवप्रवीतानि पानानि सद्दशान्यहो ॥ २५

क्वचिद्द्राक्ष्याश्च विविधान् क्वचित्पानानि हा गमः ।
क्वचिद्भावशेषाणि पश्यन्नेवैवचाराहो ॥ *
क्वचित्प्रहिण्वैःकरैकैः क्वचिद्भ्रायोविमैतपुः
वैः । क्वचित्संपत्न्यान्तराण्यानि जलानि च पयांसि च ॥ *
शयनान्यत्र नारीणां शय्याणि बहुधाऽऽबभुः ।
परस्परं संश्लिष्य काश्चित्सुप्ता वराङ्गनाः ॥ *
काश्चिच्च वस्त्ररन्यस्याः स्वपन्त्यः परियायच ।
गुह्यत्वा भयात्सुप्ता निद्राभयपराजिताः २९

तावरात्र्चस्वापेतन वस्त्रं रात्र्यं च गात्रजम् ।
नात्यर्थं स्वप्नदैवत्रं प्राप्यन्दविवानिलम् ॥ ३०

चन्दनस्य च शीतस्य शीर्योद्धर्षस्य च ।
विविधस्य च गन्धस्य पुष्पस्य विविधस्य च ॥ *
बहुधाऽऽधारात्तत्र गन्धं विविधमुद्बभौ । ३१

रसानां चन्दनानां च पुष्पाणां चैवधूपितः ॥
प्रववलसारभिष्टं यो वीरनेदत्पटकेतवा । ()

श्यादावता तास्तत्रान्याः काश्चित्कृष्णवराङ्गनाः ॥
काश्चित्काञ्चनवर्णाङ्गाः प्रलोभाराक्षसालये । ३३

சிலவிடத்தில் பாதி குடித்தும், சிலவிடத்தில் முற்றுங் குடித்தும், சிலவிடத்தில் முதலே குடிக்காமலுமிருக்கின்ற பானபாத்திரங்கள் காணப்பட்டன. 25

சிலவிடங்களில் வகை வகையான பக்ஷியங்களும், சிலவிடங்களில் புசித்து மிகுந்த அன்னங்களும், சிலவிடங்களில் கலசங்களுடைந்தும், சிலவிடங்களில் குடங்கள் அசைந்தும் சிதறிய ஜலத்தில் மாலைகளும் பழங்களும் பிசிரிக்கொண்டு கிடக்க, அங்கு பெண்டுகளது வெண்மையான பல வகைச் சயனங்களும், ஒருவரையொருவர் தழுவிக்கொண்டுறங்கு தெரிவையரும், உறங்குகின்ற சிலராடையை தூக்கக் கலக்கத்தால் தாமிழுத்து சுற்றிக்கொண்டு துயில்கின்ற சில இளம் பெண்களுங் காணப் பார்த்துச் சென்றார். 29

அவர்கள் வஸ்திரமும் புஷ்பமும் மூச்சுக்காற்றினால் விசேஷமாய் அசையாமலிருப்பது கண்டால், அவர் சரீரத்தி லிருந்து வருகின்ற மந்தமாருதத்தைத் தாமும் அனுபவித்துச் சுகிப்பதுபோல் விசித்திரமாய் விளங்காநின்றது. 30

குளிர்சாந்து, கள், சாராயம், விதம் விதமான தூமம் இவற்றின் பலவித கந்தத்தோடு வகை வகையாய் காற்று வீசிற்று. 31½

இரஸங்கள், சந்தனங்கள், தூபங்க ளிவைசேர்ந்து மணக்கும் கந்தமானது, புஷ்பகவிமானமெங்கும் சூழ்ந்து கமழ்ந்தது. 32½

அவ்வரக்கன் மனையிலிருக்கு மிளம் பெண்களில் சிலர் கறுத்தும், சிலர் மானிறமாகவும், சிலர் பொன்னிறமாயும் இருந்தார்கள். 33½

𑌤𑌾𑌸𑌾𑌂 𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌵𑌶𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 𑌮𑌦𑌨𑍇𑌨 𑌵𑌿𑌮𑍂𑌰𑍍𑌛𑌿𑌤𑌮𑍍॥
𑌪𑌦𑍍𑌮𑌿𑌨𑍀𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌰𑍂𑌪𑌮𑌾𑌸𑍀𑌦𑍍𑌯𑌥𑍈𑌵 𑌹𑌿। ()

𑌏𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑌶𑍇𑌷𑍇𑌣 𑌰𑌾𑌵𑌣𑌾𑌨𑍍𑌤𑌃𑌪𑍁𑌰𑌂 𑌕𑌪𑌿𑌃॥
𑌦𑌦𑌰𑍍𑌶 𑌸 𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌾 𑌨 𑌦𑌦𑌰𑍍𑌶 𑌚 𑌜𑌾𑌨𑌕𑍀𑌮𑍍। ௩௫

𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑌶𑍍𑌚 𑌤𑌦𑌾 𑌤𑌾𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌸 𑌮𑌹𑌾𑌕𑌪𑌿𑌃॥ *
𑌜𑌗𑌾𑌮 𑌮𑌹𑌤𑍀𑌂 𑌚𑌿𑌨𑍍𑌤𑌾𑌂 𑌧𑌰𑍍𑌮𑌸𑌾𑌧𑍍𑌵𑌸𑌶𑌙𑍍𑌕𑌿𑌤𑌃।
𑌪𑌰𑌦𑌾𑌰𑌾𑌵𑌰𑍋𑌧𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌸𑍍𑌯 𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑌣𑌮𑍍॥ *
𑌇𑌦𑌂 𑌖𑌲𑍁 𑌮𑌮𑌾𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌧𑌰𑍍𑌮𑌲𑍋𑌪𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿।
𑌨 𑌹𑌿 𑌮𑍇 𑌪𑌰𑌦𑌾𑌰𑌾𑌣𑌾𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌰𑍍𑌵𑌿𑌷𑌯𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑍀॥ *
𑌅𑌯𑌂 𑌚𑌾𑌤𑍍𑌰 𑌮𑌯𑌾 𑌦𑍃𑌷𑍍𑌟𑌃 𑌪𑌰𑌦𑌾𑌰𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌃। ௩௮

𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌦𑍁𑌰𑌭𑍂𑌚𑍍𑌚𑌿𑌨𑍍𑌤𑌾 𑌪𑍁𑌨𑌰𑌨𑍍𑌯𑌾 𑌮𑌨𑌸𑍍𑌵𑌿𑌨𑌃॥
𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑍈𑌕𑌾𑌨𑍍𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑌾𑌰𑍍𑌯𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑍀। ௩௯

𑌕𑌾𑌮𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾 𑌮𑌯𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌤𑌾 𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃॥
𑌨 𑌹𑌿 𑌮𑍇 𑌮𑌨𑌸𑌃 𑌕𑌿𑌂𑌚𑌿𑌦𑍍𑌵𑍈𑌕𑍃𑌤𑍍𑌯𑌮𑍁𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇। ௪௦

𑌮𑌨𑍋 𑌹𑌿 𑌹𑍇𑌤𑍁𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌨𑍇॥
𑌶𑍁𑌭𑌾𑌶𑍁𑌭𑌾𑌸𑍍𑌵𑌵𑌸𑍍𑌥𑌾𑌸𑍁 𑌤𑌚𑍍𑌚 𑌮𑍇 𑌸𑍁𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍। ௪௧

𑌨𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌹𑌿 𑌮𑌯𑌾 𑌶𑌕𑍍𑌯𑌾 𑌵𑍈𑌦𑍇𑌹𑍀 𑌪𑌰𑌿𑌮𑌾𑌰𑍍𑌗𑌿𑌤𑍁𑌮𑍍॥
𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑍋 𑌹𑌿 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌷𑍁 𑌦𑍃𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌦𑌾 𑌸𑌂𑌪𑌰𑌿𑌮𑌾𑌰𑍍𑌗𑌣𑍇।

நித்திரைக்குள்ளாகி காமத்திற்காளான அவர்கள் ரூபம், தூங்குகின்ற பத்மினீஜாதி ஸ்திரீகளின் ரூபம் போல் சுந்தரமாய் விளங்காநின்றது. 34½

இப்படி யிராவணன் அந்தப்புரத்தில் சிறிதும் விடாமல் முற்றும் சுற்றியும், அந்த வல்லாளன் ஜானகியைக் கண்டாரில்லை. 35½

மாதர்களைக் காணும்பொழுது அந்த வானரோத்தமன் தருமத்திற்கஞ்சி மஹத்தான சிந்தைக் கிலக்கானார். இப்படி பிறர் மனைவி யுறங்குகையில் காண்பதென்பது என் தருமத்தைக் கேவலம் போக்கடிக்குமே! எனது நோக்க மொருக்காலும் பிறர் மனைவியரிடம் திரும்பியதில்லையே! அப்படியிருக்க இதோ பிறர் மனைவியரைக் கண்ணாரக்கண்டேனே! 38½

கலங்காத சிந்தையுடைய அந்த தீரர்க்கு மீளவுமோர் சிந்தை, காரியத்தின் முடிவை காட்டிக்கொண்டு தோன்றியது. 39½

இராவணன் பெண்டீர்கள் யாவரையும் யான் கண்டு கொண்டேனேனும், பாவம் செய் கலக்கத்தை நெஞ்சத்தில் சிறிதேனுங் கொண்டேனில்லை. 40½

நல்லதும் தீயதுமான விஷயங்களில் புலன்கள் யாவையும் விடுப்பது மனமேயன்றோ! அதுதான் எனக்கு நிலைநின்றிருக்கிறது. 41½

வைதேஹியை இவ்விடம் விட்டால் எங்கே தேடலாகும்! பெண்களைத் தேடுவதென்பது பெண்களுக்குள்ளன்றோ! 42½

யஸ்யஸக்ஷஸ்யயாமயோநி ஷ்ஸஸ்யாம் தக்ஷவஸிஷ்டாஹ்யுதே ॥
நஶக்யாஷ்டாநஷ்டா த்ரீஷ்டாவஸிஷ்டாநிதாஂ । ௪௩

தத்ஸம்ஸ்ராஸிதம் தாவ ஷ்ட்வாஜைநஸநஸாஸயா ॥
ராவணாஞ்ஶ்வராஂஸவஹஂ த்ருஶ்யதேநவஜாநகீ । ௪௪

தேவமஂயவல்கந்யாஷ்ஷ நாமகந்யாஷ்ஷவீயஹ்வாநு ॥
கவெக்ஷஸாணோஹநாஸா ஜைவாவஶ்யதஜாநகீ । ௪௫

தாஸவஶ்யநுகவிஷ்டத்ர வஶ்யஂஷ்டாந்யாவஷ்ட்ரியஃ ॥
கவக்ரத்யதஹாவீரஃ வ்ருஷ்யாதஸவவக்ரஜ । ௪௬

ஸஹஸ்ரியஷ்ஷவரஂஶ்ரீராநு ஸாராதியந்த்ராஷிதஃ ॥
ஶ்ருவாநஹஸ்ரீஸஷ்டஜ்ஜ்ய தஷிவெதஂப்ருவக்ரஜ । ௪௭

இதி ஶ்ரீஸ்காந்தபுராணே - ஶங்கரஸம்ஹிதா

எந்த பிராணிக்கு எதுஜாதியோ அதில் தானே அதைத் தேடவேண்டும்; பெண்பிள்ளையைக் காணு மென்று மான்பேடுகளிற் றேடுவதுண்டோ. 43½

ஆகையால் பரிசுத்த மனத்தனாய் இராவணன் அந்தப்புரம் முழுதும் தேடிப் பார்த்தேன்; ஜானகியோ அகப்பட்டாளில்லை. 44½

தேவகன்னிகைகள், கந்தருவக்கன்னிகைகள், நாகக் கன்னிகைகள், என்றாற்போல் யாவரையும் அந்த வீரியவான் கண்டாரேனும், ஜனகன் திருமகளை மாத்திரம் கண்டாரில்லை. 45½

மற்ற மாதர்கள் அகப்படுகிறாரல்லது அவள் அகப் படாமையால், அதினின்றுந் திரும்பி அந்த வானரோத் தமன் சிந்திக்கத் தொடங்கினார். 46½

மறுபடியும் அந்த தீரன் தேறிக்கொண்டு பானசாலை யைவிட்டு இராவணன் அந்தப்புரத்தில் சிரத்தையுடன் தேடத் தொடங்கினார். 47½

பதினோராம் ஸர்க்கம் முற்றிற்று.

ஶ்ரீ உத்தரகாண்டே - ஆத்யஸர்க:

ஸததஸ்யைகஸ்ய ஹவநஸ்யைவாராதி விஸ்ருஷ்டா க்ருஹாம் ஸ்த்ரீ
த்ருக்ருஹாந்நிஶா க்ருஹாத்। ஜகாம ஸீதாம் ப்ரதி தர்ஶநேநா
ஸ்த்ரேகோ நவேவ தாம் பஶ்யதி வா ரதர்ஶநாத்॥ ௧

ஸகீம் தயா ஸாகமஸௌ ஹதாஶயா: ப்ரியாவிதஶ்ச
ரவாநந்த நஸ்யதா। ப்ராதர்ஶஸீதாம் யதேதயா஽ந
மே விஹிததேதாதர்ஶநமேதஸ்மை஽யமி॥ ௨

ஸா ராக்ஷஸாநாம் ப்ரவரேண ஜாநகீ ஸ்வஶீலஸம்ரக்ஷ
ணதத்பரா ஸதீ। அநேந நந்தநம் ப்ரதிதர்ஷகர்ணா ஹ
தாஹவேதாய வ்யவரோஷிதா॥ ௩

விருத்தவருத்தாவிக்ருதா விவர்ணவர்ணா ஹாநநா
வர்விருத்தவதர்ஶநா:। ஸக்ஷ்யஸாராக்ஷஸராஜயோஷி
தாஹயாதிநஷ்டா ஜநகேஶ்வராத்மஜா॥ ௪

ஸீதா த்ருஷ்டா ஹ்யநவத்யவர்ணாரம் விஹ்ருத்ய
காமம் ஸஹவாநரேஶ்வரை:। நமோஸ்திஸாத்ரீ வஸீவமாம
தி ஸ்தீக்ஷ்ணம் ஶோபமவாம் ஸ்வாந:॥ ௫

பனிரண்டாம் ஸர்க்கம்

இவ்வாறு மாருதியார் அந்த மனையின் நடுவில், கொடிமாடங்களையும் சித்திரச்சாலைகளையும், இராச்சாலைகளையும் ஸீதையைக் காணு மாசையால் தேடிச்சென்று, கண்ணுக்குக் காட்சிதரு மவளைமாத்திரம் கண்டாரில்லை.

அநந்தரம், இரகுநந்தனன் சிந்தைக் கிசைந்த தேவியைக் காணமல் அந்த வானரோத்தமன், சிந்திக்கலுற்றார்.—"நிச்சயமாய் சீதை இறந்தாள் போலும்; ஏனெனில்-யானிப்படி அலகலகாய்த் தேடியும் காட்சி தந்தாளில்லையே. 2

ஆரியருக்கேற்ற நன்னெறியில் நிலைநின்ற ஜானகியார், தம் சீலத்தைக் காப்பதில் ஊன்றிப் போருவது கண்டு, கொடுந்தொழில் புரியும் அரக்கர்கோனன இப்பையல் நிச்சயமாய்க் கொன்றான்போலும். 3

விகாரமான உருவமும் விகாரவேஷமும் ஒளியிழந்த பெருமுகமும் நெடிதாய் விகாரமான நோக்கமும் படைத்த அரக்கியரை, ஜனகராஜன் திருமகள் கண்டு நடுங்கி மாய்வுற்றாளோ! 4

ஸீதையைக் காணமலும், பவுருஷத்தைப் பெருமையும், நெடுங்காலம் குரக்கருடன் திரிந்தலைந்து இனியானும், சுக்கிரீவனிடத்திற்குச் செல்ல வழிதானேது! மேலும், பலசாலியான மஹாராஜர். மிகவும் கொடிய தண்டத்தை விதிப்பவராயிற்றே! 5

த்³ருஷ்ட்வா தே³வ: ஸமாஸநம் த்³ருஷ்டா ஸஸர்வணோ யோஷித:।
நவீநாத்³ருஶ்யதே ஸாத்⁴வீ வ்யாஜாதேநாஶ்ரம:॥ ௬

கிம் நாமாவாநஸ்வே ஸதம் வக்ஷ்யந்தி ஸம்ஸதா:।
ஸஹா தத்ர ஜய்யாவீர கிம் க்ருதம் தத³ஸ்வ ந:॥ *
ஸத்³ருஷ்டா கிம் ப்ரவக்ஷ்யாமி தாமஹம் ஜநகாத்மஜாம்। ௭

ப்ரவம் ப்ராயமேவ வக்ஷ்யந்தி காமவ்யவ்யதிவர்தநே॥ ௮

கிம் வா வக்ஷ்யதி வ்ருத்³த⁴ஶ்ச ஜாலவாநம் மஹஸ்வஸ:।
ஸதம் வாமஸம் ஸமத்³ருஷ்ய வாநாஸ்வஸோ ஸதா:॥ ௯

கநிவேத³யிஷ்யோஸி மம கநிவேஶ்வ வாமஸாவஹ।
கநிவேத³யோஹி ஸதம் ஸவர்ணேஷு ப்ரவர்தக:॥

கரோதி ஸஹமம் ஜநோ: கலியதஸ்கரோதி ஸ:।
தஸ்யாநிவேஶ்வ க்ருதம் யத்ரம் வேஷ்டே ஹஸ்தம்॥ ௧௧

ஹரிப்ராவஸிவேஷ்யாமி தேஶாநுஸ்வர்ணவாமிதாநு।
ரூவாநஶாஸாவிநிதா ஸ்யாவஷ்டஹரணீவ॥ *

அந்தப்புரம் முழுதும் பார்த்தேன்; இராவணன் பெண்டீரையும் கண்டேன்; கற்புடைய சீதையரைக் கண்டேனில்லை; என்சிரமம் வீணாயிற்றே!. 6

யான் இங்கிருந்து சென்றேனாகில் வானரர்கள் கூடிக் கொண் டென்னை யென்ன வினவுவார்களோ! "வீரனாய் அங்குசென்று நீசெய்ததை எங்கட்குச் சொல்லிக் காண் பாய்" என்பார்களாகில் ஜானகியைக் காணாது என்னதா னவர்கட்குச் சொல்ல வல்லேன். 7½

இனி இன்னு மிங்குதானே காலத்தைக் கழிப்பே னாகில் நிச்சயமாய் அவர்கள் பிராயோப்வேசம் செய்யப் போகிறார்கள். 8

ஆதலின், எப்படியோ கடலைக்கடந் தக்கரைப்படு வோமென்றாலும், பெரியராய் என்னைத் தெரிந்தனுப் பிய ஜாம்பவான், அங்கதன், மற்றும் வானரர்கள் ஒன்று கூடி என்னை யென் பேசுவரோ! 9

உம், எப்பொழுதும் உத்ஸாஹமா யிருப்பது நன் மைக்குக் காரணம்; முதல் உத்ஸாஹமே மிகவும் சுக ரூபம்; ஸகல காரியத்திற்கும் உத்ஸாஹமே யன்றோ தூண்டுகோலாகின்றது! 10

ஒருவ னெடுத்த காரியத்தைத் தலைக்கட்டுவதும் உற் சாகமே யாதலின், மேல் நடக்க வேண்டியதற்கும் உற் சாகத்துடனே யத்தனம் செய்கிறேன். 11

இராவணன் புரக்கு மிவ்விடமெங்கும் மீளவும் தேடு கிறேன்; பானகச்சாலையைத் தேடினேன்; அப்படியே புஷ்பச்சாலைகளுந் தேடியாயிற்று; சித்திரசாலையும், லீலைச்

𑌚𑌿𑌤𑍍𑌰𑌶𑌾𑌲𑌾𑌶𑍍𑌚 𑌵𑌿𑌵𑌿𑌧𑌾 𑌹𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌃 𑌕𑍍𑌰𑍀𑌡𑌾𑌗𑍃𑌹𑌾𑌣𑌿 𑌚 ।
𑌨𑌿𑌷𑍍𑌕𑍁𑌟𑌾𑌨𑍍𑌤𑌰𑌰𑌥𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌵𑌿𑌮𑌾𑌨𑌾𑌨𑌿 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 ॥ *

𑌇𑌤𑌿 𑌸𑌞𑍍𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌹𑌨𑍂𑌮𑌾𑌨𑍍 𑌵𑌿𑌚𑍇𑌤𑍁𑌮𑍁𑌪𑌚𑌕𑍍𑌰𑌮𑍇 ।
𑌹𑌨𑍂𑌮𑍀 𑌗𑍃𑌹𑌾𑌂𑌶𑍍𑌚𑍈𑌤𑍍𑌯𑌗𑍃𑌹𑌾𑌨𑍍 𑌗𑍃𑌹𑌾𑌨𑌤𑌿𑌗𑍃𑌹𑌾𑌨𑌪𑌿 ॥

𑌉𑌤𑍍𑌪𑌤𑌨𑍍𑌨𑌿𑌪𑌤𑌂𑌶𑍍𑌚𑌾𑌪𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌪𑍁𑌨𑌃𑌪𑍁𑌨𑌃 ।
𑌅𑌪𑌾𑌵𑍃𑌣𑍍𑌵𑌂𑌶𑍍𑌚 𑌦𑍍𑌵𑌾𑌰𑌾𑌣𑌿 𑌕𑌪𑌾𑌟𑌾𑌨𑍍𑌯𑌵𑌘𑌾𑌟𑌯𑌨𑍍 ॥ *
𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌨𑍍𑌨𑌿𑌷𑍍𑌪𑌤𑌂𑌶𑍍𑌚𑌾𑌪𑌿 𑌪𑍍𑌰𑌪𑌤𑌨𑍍𑌨𑍁𑌤𑍍𑌪𑌤𑌨𑍍𑌨𑌪𑌿 ।
𑌸𑌰𑍍𑌵𑌮𑌪𑍍𑌯𑌵𑌕𑌾𑌶𑌂 𑌸 𑌵𑌿𑌚𑌚𑌾𑌰 𑌮𑌹𑌾𑌕𑌪𑌿𑌃 ॥ ௧௬

𑌚𑌤𑍁𑌰𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑌾𑌤𑍍𑌰𑍋𑌽𑌪𑌿 𑌨𑌾𑌵𑌕𑌾𑌶𑌸𑍍𑌸𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ।
𑌰𑌾𑌵𑌣𑌾𑌨𑍍𑌤𑌃𑌪𑍁𑌰𑍇 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌯𑌂 𑌕𑌪𑌿𑌰𑍍𑌨 𑌜𑌗𑌾𑌮 𑌸𑌃 ॥ ௧௭

𑌪𑍍𑌰𑌾𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑌰𑌥𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌵𑍇𑌦𑌿𑌕𑌾𑌶𑍍𑌚𑍈𑌤𑍍𑌯𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌾𑌃 ।
𑌦𑍀𑌰𑍍𑌘𑌿𑌕𑌾𑌃 𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑌿𑌣𑍍𑌯𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑍇𑌨𑌾𑌵𑌲𑍋𑌕𑌿𑌤𑌮𑍍 ॥ ()

𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑍋 𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌕𑌾𑌰𑌾 𑌵𑌿𑌰𑍂𑌪𑌾 𑌵𑌿𑌕𑍃𑌤𑌾𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌦𑍃𑌷𑍍𑌟𑌾 𑌹𑌨𑍁𑌮𑌤𑌾 𑌤𑌤𑍍𑌰 𑌨 𑌤𑍁 𑌸𑌾 𑌜𑌨𑌕𑌾𑌤𑍍𑌮𑌜𑌾 ॥ ௧௯

𑌰𑍂𑌪𑍇𑌣𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾 𑌲𑍋𑌕𑍇 𑌵𑌰𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌧𑌰𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌦𑍃𑌷𑍍𑌟𑌾 𑌹𑌨𑍁𑌮𑌤𑌾 𑌤𑌤𑍍𑌰 𑌨 𑌤𑍁 𑌰𑌾𑌘𑌵𑌨𑌨𑍍𑌦𑌿𑌨𑍀 ॥ ௨௦

𑌨𑌾𑌗𑌕𑌨𑍍𑌯𑌾 𑌵𑌰𑌾𑌰𑍋𑌹𑌾𑌃 𑌪𑍂𑌰𑍍𑌣𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌨𑌿𑌭𑌾𑌨𑌨𑌾𑌃 ।
𑌦𑍃𑌷𑍍𑌟𑌾 𑌹𑌨𑍁𑌮𑌤𑌾 𑌤𑌤𑍍𑌰 𑌨 𑌤𑍁 𑌸𑍀𑌤𑌾 𑌸𑍁𑌮𑌧𑍍𑌯𑌮𑌾 ॥ ௨௧

சாலைகளிலும் பலவாறு தேடிப்பார்த்தேன்; வீட்டுத்தோட்டம் இடைச்சந்துகள் விமானங்கள் யாவு மாயிற்று; ஆயினு மாகட்டும்'' என்று யோசித்து, மீளவும் ஹனுமான் நிலை மாளிகைகளையும், நற்சந்தி மண்டபங்களையும் அரமனைக்கு அடுத்தாப்போல் ஸ்வைரஸஞ்சாரத்துக்காகக் கட்டியுள்ள சாலைகளையுந் தேடத்தொடங்கினார்.

எழும்பியும், குதித்தும், நின்றும், சென்றும், அடிக்கடி வாசல்களைத் திறந்தும், கதவுகளைத் தள்ளியும், புகுந்தும், வெளிப்பட்டும், விழுந்தும், எழுந்தும், சகலமான விடங்களிலும் அந்த வானரோத்தமன் திரிந்து போந்தார். 16

இராவணன் அந்தப்புரத்தில் அந்த வானரன் செல்லாதவிடம் நான்கு அங்குலத்தளவும் கிடைக்கமாட்டாது. 17

மதிலுக்குட்பட்ட வீதிகளும், சாவடித் திண்ணைகளும், நடை வாவிகளும், புஷ்கரிணிகளும், எல்லாம் அவர் கண்டதே. 18

பல் லுருவெடுத்து விகாரமாய் விகார வேஷந்தரித்த ராக்ஷஸிகளை ஹனுமான் கண்டார்; ஆனல் பிராட்டியைக் கண்டவரன்று. 19

அழகில் நிகரின்றி உலகிற் பரிசு பெற்ற விச்சாதரக் கன்னிகளைக் கண்டாரேனும் இராகவன் தேவியைக் கண்டவரன்று. 20

முழுமதிபோல் முகம்படைத்த நாகக் கன்னிகளைக் கண்டாராயினும் நுண்ணிடைய சீதையரைக் கண்டாரில்லை. 21

ப்ரத்யக்ராக்ஷவம்ஶேந நாமகந்யாபலாஞ்சித:।
ஶ்ரேஷ்டா ஹந்தா தத்ர நவாஜநகநந்திநீ॥ ௨௨

ஸோऽவஶ்யம் ஸாம்ஹாஸாஹா:வஶ்யம் ஸ்தாந்யாவஸ்த்ரய:
விஷவாதஹாயீபோது ஹநாநோரதாத்ஜ:॥௨௩

உத்யாமம்வாநமேரம் ராணாம் பூவநம்ஸாமரவ்யா।
வ்யஷும்வீக்ஷ்யாநிலஸாத ஸ்வம் தாம்வாநரவாமகே॥(

கவதீயவிஶாநாத்ர ஹநாநோரதாத்ஜ:।
விஞாவஜமாராய ஸோகோவஹதவேதந:॥ ௨௫

இதி ஶ்ரீரங்கநாதகாவ்யே - த்வாதஶஸ்ஸர்க:

அரக்கர்பதியால் வலுவில்கொண்டுவரப்பட்ட நாகக் கன்னிகளகப்பட்டாரேலும் ஜனகன் திருமகள் அகப் பட்டாளில்லை. 22

இப்படி ஜானகியைத்தவிர மற்றவர்யாவரும் காணும் பொழுது, மஹா பலவானான அந்த மாருதாத்மஜன், அடிக்கடி மதியெல்லா முள்கலங்கி மயங்கிக்கிடந்தார். 23

வானரமுதலிகள் பிரயத்தினமும், கடலைக்கடந்ததும் வீணென்றெண்ணி, அந்த வாயுமைந்தன் மீளவும் சிந் திக்கலுற்றார். 24

உடனே விமானத்திலிருந்து கீழேயிறங்கி, சோகத் தால் கசிந்த நெஞ்சத்தோடு சிந்திக்கலுற்றார். 25

பன்னிரண்டாம் ஸர்க்கம் முற்றிற்று.

ஶ்ரீமத்ராமாயணே - த்ரயோதஶஸ்ஸர்க:

விமாநாத்து ஸுஸங்க்ரம்ய ப்ராகாரம் ஹரியூதப: |
ஹநூமாந் வேகவாநாஸீத் யதா வித்யுத்கநாந்தரே || ௧

ஸம்பரிக்ரம்ய ஹநூமாந் ராவணஸ்ய நிவேஶநாத் |
அத்ருஷ்ட்வா ஜாநகீம் ஸீதாமப்ரவீத்வசநம் கபி: || ௨

பூயிஷ்டம் லோடிதா லங்கா ராமஸ்ய சரதா ப்ரியம் |
ந ஹி பஶ்யாமி வைதேஹீம் ஸீதாம் ஸர்வாங்கஶோப
நாம் || ௩

பல்வலாநி தடாகாநி ஸராம்ஸி ஸரிதஸ்ததா |
நத்யோऽநூபவநாந்தாஶ்ச துர்காஶ்ச தரணீதரா: || ※
லோடிதா வஸுதா ஸர்வா ந து பஶ்யாமி ஜாநகீம் | ௪½

இஹ ஸம்பாதிநா ஸீதா ராவணஸ்ய நிவேஶநே ||
ஆக்யாதா க்ருத்ரராஜேந ந ச பஶ்யாமி தாமஹம் | ௫½

கிம் நு ஸீதாத வைதேஹீ மைதிலீ ஜநகாத்மஜா ||
உபதிஷ்டேத விவஶா ராவணம் துஷ்டசாரிணம் | ௬½

பதின்மூன்றும் ஸர்க்கம்

வானரோத்தமனான ஹனுமான், மேகத்தினிடையிற் படுமின்னல்போல் அதிவேகமாய் அந்த விமானத்திலிருந்து மதிளிற் குதித்தார். 1

இராவணன் மனையை விட்டு மதிள் முழுதும் சுற்றி வந்து ஜானகியைக்காணுமல் இஃதுரைத்தார். 2

இராமனுக்கினிது செய்யவேண்டுமென்று இவ்விலங்கையைப் பலமுறையுங் கலக்கிப்பார்த்தேன்; ஸர்வாங்க ஸௌந்தரியான வைதேஹியை மாத்திரம் காணப்பெற்றிலேனே! 3

குட்டைகள், குளங்கள், ஏரிகள், ஓடைகள், ஆறுகள், ஜலப்பிராயமான வனப்பிரதேசங்கள், புதறுகள், மலைகளகப்படப் புடவியெங்கும் ஆராய்ந்துவிட்டேன்; ஜானகி மாத்திரம் அகப்படவில்லையே! 4½

இந்தராவணன் நிவேசத்தில் சீதை யிருத்தப்பட்டாளென்று கழுகுக்கரசான சம்பாதியின் சொலவுமாத்திரமேயன்றி இங்கு அவளைக்காணப்பெற்றேனில்லையே! 5½

அயோநிஜையாய்ப்பிறந்து விதேஹநாட்டில்தோன்றி, ஆசாரப் பிரதானரான ஜனகர் திருமகளான பிராட்டி, தன்னுலாகாமல் ஒருக்கால் துஷ்டாத்மாவான ராவணனுக்குத்தான் வசப்பட்டாளோ! 6½

𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌮𑍁𑌤𑍍𑌪𑌤𑌤𑍋 𑌮𑌨𑍍𑌯𑍇 𑌸𑍀𑌤𑌾𑌮𑌾𑌦𑌾𑌯 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌃 ॥
𑌬𑌿𑌭𑍍𑌯𑌤𑍋 𑌰𑌾𑌮𑌬𑌾𑌣𑌾𑌨𑌾𑌮𑌨𑍍𑌤𑌰𑌾 𑌪𑌤𑌿𑌤𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௭

𑌅𑌥𑌵𑌾 𑌹𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑌾𑌯𑌾𑌃 𑌪𑌥𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌨𑌿𑌷𑍇𑌵𑌿𑌤𑍇 ॥
𑌮𑌨𑍍𑌯𑍇 𑌪𑌤𑌿𑌤𑌮𑌾𑌰𑍍𑌯𑌾𑌯𑌾 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌸𑌾𑌗𑌰𑌮𑍍 । ௮

𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌯𑍋𑌰𑍁𑌵𑍇𑌗𑍇𑌨 𑌭𑍁𑌜𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌪𑍀𑌡𑌿𑌤𑍇𑌨 𑌚 ॥
𑌤𑌯𑌾 𑌮𑌨𑍍𑌯𑍇 𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑍍𑌯𑌾 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌜𑍀𑌵𑌿𑌤𑌮𑌾𑌰𑍍𑌯𑌯𑌾 । ௯

𑌉𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌰𑌿 𑌵𑌾 𑌨𑍂𑌨𑌂 𑌸𑌾𑌗𑌰𑌂 𑌕𑍍𑌰𑌮𑌤𑌸𑍍𑌤𑌦𑌾 ॥
𑌵𑌿𑌵𑍇𑌷𑍍𑌟𑌮𑌾𑌨𑌾 𑌪𑌤𑌿𑌤𑌾 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑍇 𑌜𑌨𑌕𑌾𑌤𑍍𑌮𑌜𑌾 । ௧௦

𑌅𑌹𑍋 𑌕𑍍𑌷𑍁𑌦𑍍𑌰𑍇𑌣 𑌚𑌾𑌨𑍇𑌨 𑌰𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑍀 𑌶𑍀𑌲𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥
𑌅𑌬𑌨𑍍𑌧𑍁𑌰𑍍𑌭𑌕𑍍𑌷𑌿𑌤𑌾 𑌸𑍀𑌤𑌾 𑌰𑌾𑌵𑌣𑍇𑌨 𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌨𑍀 । ௧௧

𑌅𑌥𑌵𑌾 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌪𑌤𑍍𑌨𑍀𑌭𑌿𑌰𑌸𑌿𑌤𑍇𑌕𑍍𑌷𑌣𑌾 ॥
𑌅𑌦𑍁𑌷𑍍𑌟𑌾 𑌦𑍁𑌷𑍍𑌟𑌭𑌾𑌵𑌾𑌭𑌿𑌰𑍍𑌭𑌕𑍍𑌷𑌿𑌤𑌾 𑌸𑌾 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 । ௧௨

𑌸𑌮𑍍𑌪𑍂𑌰𑍍𑌣𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌂 𑌪𑌦𑍍𑌮𑌪𑌤𑍍𑌰𑌨𑌿𑌭𑍇𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥
𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌧𑍍𑌯𑌾𑌯𑌤𑍀 𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌂 𑌪𑌞𑍍𑌚𑌤𑍍𑌵𑌂 𑌕𑍃𑌪𑌣𑌾 𑌗𑌤𑌾 । ௧௩

𑌹𑌾 𑌰𑌾𑌮 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌹𑌾𑌯𑍋𑌧𑍍𑌯𑍇 𑌚𑍇𑌤𑌿 𑌮𑍈𑌥𑌿𑌲𑍀 ॥
𑌵𑌿𑌲𑌪𑍍𑌯 𑌬𑌹𑍁 𑌵𑍈𑌦𑍇𑌹𑍀 𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌦𑍇𑌹𑌾 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥ ௧௪

ஸீதையைப் பறித்துக்கொண்டு சடக்கென்றுகாயத்தில் அவ்வரக்கன் கிளம்பும்பொழுது 'நினைக்கின்றேன்' இராமபாணத்திற்குப் பயந்து நடுவிலவன் நழுவவிட வீழ்ந்து போயிருப்பாள். 7½

இல்லாவிட்டால் ஆகாயமார்க்கமாய்க்கொண்டுவரும்பொழுது "தோன்றுகிறது" கடலைக்கண்டுபயந்து அம்மை அதில் விழுந்துபோயிருப்பாள். 8½

இராவணன் துடையினது வேகத்தாலும் புயங்களின் நெருக்காலும் நெருக்குண்ட அந்த நெடுங்கண்ணாள் உயிரிழந்தாள் போலும். 9½

மென்மேலெனக்கடலை அவன் கடந்துவரும்பொழுது கிருகிருவென்று தலைசுத்திக் கடலில்தானே விழுந்திருப்பாள்; இது நிச்சயம். 10½

தன் சீலத்தைக் காக்கவென்று அவள்கொண்ட பிடிவாதத்தை இந்த ராக்ஷஸப்பையல் கண்டு பொறுக்கமாட்டாமல், கதியற்றுப் பரிதவிக்கின்ற அவளைப் புசித்துத் தான் போகட்டானோ! 11½

இல்லையென்று பொய்யிலாத அந்த மையகண்ணாளை, கெடுமதியரான இந்த ராவணன் மனைவியர்தான் தின்றுவிட்டனரோ! 12½

பூர்ணசந்திரனுக்கு நிகராய் தாமரை யிதழ்போன்ற திருக்கண்கள் படைத்த அந்த ராமன் முகாரவிந்தத்தை நினைத்துக்கொண்டே ஐயோ! மாய்ந்திருப்பாள். 13½

ஹா ராமா ஹா லக்ஷ்மணா! என்றும் ஹா அயோத்தியே! என்றும் பலமுறையாகக் கதறி வைதேஹி தன்னுடலை விட்டிருப்பாள். 14½

𑌅𑌥𑌵𑌾 𑌨𑌿𑌹𑌿𑌤𑌾 𑌮𑌨𑍍𑌯𑍇 𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌯 𑌨𑌿𑌵𑍇𑌶𑌨𑍇॥
𑌨𑍂𑌨𑌂 𑌲𑌾𑌲𑌪𑍍𑌯𑌤𑍇 𑌸𑍀𑌤𑌾 𑌪𑌞𑍍𑌜𑌰𑌸𑍍𑌥𑍇𑌵 𑌶𑌾𑌰𑌿𑌕𑌾। ௧௫

𑌜𑌨𑌕𑌸𑍍𑌯 𑌸𑍁𑌤𑌾 𑌸𑍀𑌤𑌾 𑌰𑌾𑌮𑌪𑌤𑍍𑌨𑍀 𑌸𑍁𑌮𑌧𑍍𑌯𑌮𑌾॥
𑌕𑌥𑌮𑍁𑌤𑍍𑌪𑌲𑌪𑌤𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑍀 𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌯 𑌵𑌶𑌂 𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍। ௧௬

𑌵𑌿𑌨𑌷𑍍𑌟𑌾 𑌵𑌾 𑌪𑍍𑌰𑌣𑌷𑍍𑌟𑌾 𑌵𑌾 𑌮𑍃𑌤𑌾 𑌵𑌾 𑌜𑌨𑌕𑌾𑌤𑍍𑌮𑌜𑌾॥
𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌿𑌯𑌭𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨 𑌨𑌿𑌵𑍇𑌦𑌯𑌿𑌤𑍁𑌂 𑌕𑍍𑌷𑌮𑌮𑍍। ௧௭

𑌨𑌿𑌵𑍇𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑍇 𑌦𑍋𑌷𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌦𑍍 𑌦𑍋𑌷𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌦𑌨𑌿𑌵𑍇𑌦𑌨𑍇॥
𑌕𑌥𑌂 𑌨𑍁 𑌖𑌲𑍁 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌵𑌿𑌷𑌮𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑌾𑌤𑌿 𑌮𑍇। ௧௮

𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵𑌂 𑌗𑌤𑍇 𑌕𑌾𑌰𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌕𑌾𑌲𑌂 𑌕𑍍𑌷𑌮𑌂 𑌚 𑌕𑌿𑌮𑍍॥
𑌭𑌵𑍇𑌦𑌿𑌤𑌿 𑌮𑌤𑌂 𑌭𑍂𑌯𑍋 𑌹𑌨𑍂𑌮𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌵𑌿𑌚𑌾𑌰𑌯𑌤𑍍। ௧௯

𑌯𑌦𑌿 𑌸𑍀𑌤𑌾𑌮𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌹𑌂 𑌵𑌾𑌨𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑍁𑌰𑍀𑌮𑌿𑌤𑌃॥
𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌤𑌤𑌃 𑌕𑍋 𑌮𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑍍𑌥𑍋 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿।

𑌮𑌮𑍇𑌦𑌂 𑌲𑌙𑍍𑌘𑌨𑌂 𑌵𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌸𑌾𑌗𑌰𑌸𑍍𑌯 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿॥
𑌪𑍍𑌰𑌵𑍇𑌶𑌶𑍍𑌚𑍈𑌵 𑌲𑌙𑍍𑌕𑌾𑌯𑌾𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍। ௨௧

இல்லாவிட்டால் இராவணன் மனையிலேயே கூண்டி விட்ட சாரிகைபோல் எங்காகிலும் ஏகாந்தமாய் வைக்கப்பட்டு கதறுகின்றுளோ! 15½

ஜனகர் திருமகளாய் புவியிற் பிறந்து இராமனையும் மாலையிட்ட அச்சீரிடைய கமலக்கண்ணி இராவணனுக்கெப்படி தான் வசப்படுவாள்! 16½

பிராட்டி யிப்பொழுது மறைக்கத்தான்பட்டாளோ, (தானுய்) மறித்து தான்விட்டாளோ, பிரிவில் தரியாமல் துஞ்சியே போனுளோ, எப்படியோ! அன்புக்கிடமான அவள் சேதியை யிராமனுக்குத் தெரிவிப்பதென்பது கொஞ்சமும் சேராது. 17½

இனி அறிவித்தாலும் குற்றமே; அறியாவிடினும் குற்றமே; என்னதான் செய்யலாகும்! ஸங்கடமா யிருக்கின்றது. 18½

“காரியமிப்படியிருக்கும்பொழுது தத்காலம் செய்ய வடுப்பதுதான் என்!” என்கிற பக்ஷத்தை மீளவும் ஹனுமான் விசாரிக்கலுற்ருர். 19½

ஸீதையைக்காணும லிங்கிருந்து சுக்கிரீவன் புரிக்குச் சென்ருல், யானடையும் புருஷார்த்தம் யாதுண்டு? யாதொன்றும் காணேன். 20½

முதலில் யான் சாகரத்தைத்தாண்டியது வியர்த்தம்; இலங்கையிற் புகுந்து ராக்ஷஸரைக்கண்டதும் அதற்கு முன்னே; 21½

𑌕𑌿𑌂 𑌨𑍁 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿 𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑍋 𑌹𑌰𑌯𑍋 𑌵𑌾 𑌸𑌮𑌾𑌗𑌤𑌾𑌃 ॥
𑌕𑌿𑌷𑍍𑌕𑌿𑌨𑍍𑌧𑌾𑌂 𑌸𑌮𑌨𑍁𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂 𑌤𑍌 𑌵𑌾 𑌦𑌶𑌰𑌥𑌾𑌤𑍍𑌮𑌜𑍌 । ௨௨

𑌗𑌤𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌯𑌦𑌿 𑌕𑌾𑌕𑍁𑌤𑍍𑌸𑍍𑌥𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌪𑌰𑌮𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 ॥
𑌨 𑌦𑍃𑌷𑍍𑌟𑍇𑌤𑌿 𑌮𑌯𑌾 𑌸𑍀𑌤𑌾 𑌤𑌤𑌸𑍍𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿 𑌜𑍀𑌵𑌿𑌤𑌮𑍍 ॥ ௨௩

𑌪𑌰𑍁𑌷𑌂 𑌦𑌾𑌰𑍁𑌣𑌂 𑌕𑍍𑌰𑍂𑌰𑌂 𑌤𑍀𑌕𑍍𑌷𑍍𑌣𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌤𑌾𑌪𑌨𑌮𑍍 ॥
𑌸𑍀𑌤𑌾𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌂 𑌦𑍁𑌰𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌸 𑌨 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 । ௨௪

𑌤𑌂 𑌤𑍁 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌗𑌤𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌪𑌞𑍍𑌚𑌤𑍍𑌵𑌗𑌤𑌮𑌾𑌨𑌸𑌮𑍍 ॥
𑌭𑍃𑌶𑌾𑌨𑍁𑌰𑌕𑍍𑌤𑍋 𑌮𑍇𑌧𑌾𑌵𑍀 𑌨 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌃 ॥ ௨௫

𑌵𑌿𑌨𑌷𑍍𑌟𑍌 𑌭𑍍𑌰𑌾𑌤𑌰𑍌 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌭𑌰𑌤𑍋𑌽𑌪𑌿 𑌮𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥
𑌭𑌰𑌤𑌂 𑌚 𑌮𑍃𑌤𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌶𑌤𑍍𑌰𑍁𑌘𑍍𑌨𑍋 𑌨 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 । ௨௬

𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌮𑍃𑌤𑌾𑌨𑍍𑌸𑌮𑍀𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌥 𑌨 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌤𑌰𑌃
𑌕𑍌𑌸𑌲𑍍𑌯𑌾 𑌚 𑌸𑍁𑌮𑌿𑌤𑍍𑌰𑌾 𑌚 𑌕𑍈𑌕𑍇𑌯𑍀 𑌚 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 । ௨௭

𑌕𑍃𑌤𑌜𑍍𑌞𑌃 𑌸𑌤𑍍𑌯𑌸𑌨𑍍𑌧𑌶𑍍𑌚 𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑌃 𑌪𑍍𑌲𑌵𑌗𑌾𑌧𑌿𑌪𑌃 ॥
𑌰𑌾𑌮𑌂 𑌤𑌥𑌾 𑌗𑌤𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌤𑌤𑌸𑍍𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿 𑌜𑍀𑌵𑌿𑌤𑌮𑍍 । ௨௮

𑌦𑍁𑌰𑍍𑌮𑌨𑌾 𑌵𑍍𑌯𑌥𑌿𑌤𑌾 𑌦𑍀𑌨𑌾 𑌨𑌿𑌰𑌾𑌨𑌨𑍍𑌦𑌾 𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌨𑍀 ॥
𑌪𑍀𑌡𑌿𑌤𑌾 𑌭𑌰𑍍𑌤𑍃𑌶𑍋𑌕𑍇𑌨 𑌰𑍁𑌮𑌾 𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿 𑌜𑍀𑌵𑌿𑌤𑌮𑍍 । ௨௯

கிஷ்கிந்தையிற் சென்றபின் என்னை மஹாராஜராகட்டும், வானரர்தாமாகட்டும், அந்தராஜகுமாரர்தாமாகட்டும் என் சொல்லப்போகிறார்களோ அறியகில்லேன். 22½

சென்றவுட னிந்த சாலக்கடுஞ்செய்தியைக் காகுத்தனுக் குரைத்தேனென்றால், உடனே அவர் வாழ்நாளையிழந்துவிடுவர். 23½

செவிக்கின்னாதாய் பயங்கரமாய் கொடிதாய் ஸஹிக்கமுடியாததாய், புலன்களைப் பொசுக்குவதான (சீதையைப்பற்றிய) இக்கொடுஞ் சொல்லைக்கேட்டால் தரிக்கமாட்டார். 24½

அப்படி அவர் கஷ்டத்தி லகப்பட்டுப் பிராணனையிழப்பதாயிருக்குந் தரணத்தை மேதாவியான இலக்குமணன் கண்டால், அவரிடத்தில் மிக அன்புடையராகையால் தாமும் தாளப்போகிறதில்லை. 25½

உடன்பிறந்தா ருயிரிழந்தா ரெனக் கேட்டபோதே பரதனும் மடப்போகிறார்; பரதன் போனது கண்டால் சத்துருக்கனும் தரிக்கப்போகிறதில்லை. 26½

தனயர்கள் துஞ்சக்கண்டால் (கோசலைமுதலிய) தாய்மாரும் தரிக்ககில்லார்; இதில் ஸம்சயமில்லை. 27½

நன்றியுடையராய் ஸத்தியஸந்தரான சுக்கிரீவனென்னும் வானரர்கோன் இராமனப்படியாகக் கண்டால், உடனே தாமு முயிரிழப்பர். 28½

சஞ்சலமுற்ற நெஞ்சமும் வேதனையுமுற்றுப் பேதைபோல் களிப்பென்பதற் றொழிந்து சோகத்திற் பட்டு அந்த உருமையும், நாதன் பிரிவினால் வயிறெரிந்து உயிரிழப்பாள். 29½

வாலிஜேன து து:கேன பீடிதா ஶோககர்ஶிதா ||
பஞ்சத்வம் ச கதே ராஜ்ஞி தாராபி ந பவிஷ்யதி | ௨௦
மாதாபித்ரோர்விநாஶேன ஸுக்ரீவவ்யஸனேன ச ||
குமாரோப்யங்கத: கஸ்மாத் தாரயிஷ்யதி ஜீவிதம் | ௨௧
பர்த்ருஜேன து து:கேன ஹ்யபிபூதா வனௌகஸ: ||
ஶிராம்ஸ்யபிஹனிஷ்யந்தி தலைர்முஷ்டிபிரேவ ச || ()

ஸான்த்வேனானுப்ரதானேன மானேன ச யஶஸ்வினா ||
லாலிதா: கபிராஜேன ப்ராணாம்ஸ்த்யக்ஷ்யந்தி வானரா: | ()

ந வனேஷு ந ஶைலேஷு ந நிரோதேஷு வா புன: ||
க்ரீடாமனுபவிஷ்யந்தி ஸமேத்ய கபிகுஞ்ஜரா: | ௨௪
ஸபுத்ரதாரா: ஸாமாத்யா பர்த்ருவ்யஸனபீடிதா: ||
ஶைலாக்ரேப்ய: பதிஷ்யந்தி ஸமேத்ய விஷமேஷு ச | ()

விஷமுத்பந்தனம் வாபி ப்ரவேஶம் ஜ்வலனஸ்ய வா ||
உபவாஸமதோ ஶஸ்த்ரம் ப்ரசரிஷ்யந்தி வானரா: | ௨௬

கோரமாரோதனம் மன்யே கதே மயி பவிஷ்யதி ||
இக்ஷ்வாகுகுலநாஶஶ்ச நாஶஶ்சைவ வனௌகஸாம் | ௨௭

ஸோஹம் நைவ கமிஷ்யாமி கிஷ்கிந்தாம் நகரீமித: ||
ந ச ஶக்ஷ்யாம்யஹம் த்ரஷ்டும் ஸுக்ரீவம் மைதிலீம் வினா |

வாலியைப் பறிகொடுத்த வருத்தங்கொண்டு ஏற்கனவே பீடையுற்றிளைத்தாள் தாரை; இராஜாவு முயிரிழந்தாரென்றால் தானும் மாய்வுறுவாள், (இதுகிடக்க,) தாய் தந்தை சிறுதந்தை துஞ்சக்கண்டால், அங்கதனுக்குயிர் தங்கவிடந் தானேது! 31½

இறைவனை யிழந்த துயரம் தலைமண்டையிட்டு வானரர்கள் தலைகளைக் கைகளால்மோதி முட்டிகளாலிடித்துக் கொள்வார்கள். 32½

புகழ்பெற்ற கவியரசன் இன்சொல்லாலும் கொடையாலும் வெகுமானத்தாலும், லாளனம் செய்யப்பட்ட வானரர்கள், பிராணனை விட்டுவிடப் போகிறார்கள். 33½

இனி, வனங்களிலும் மலைகளிலும் மற்று மிடங்களிலும் வானரமுதலியவைகள் கூடிவாழப் போகிறதில்லை. ()

பெருமானை யிழந்த பெருந்துயரத்தால் வானரர்கள், தனயரும் தாரங்களும் துணைவருமாய் கூடிக்கொண்டு கிரிசிகரங்களிலிருந்து படுபள்ளங்களில் விழப்போகிறார்கள்.

விஷத்தைக் குடிப்பதோ, உருப்போட்டுக்கொள்வதோ, நெருப்பில் புகுவதோ, உபவசிப்பதோ, ஆயுதத்திற் படுவதோ செய்யப்போகிறார்கள். 36½

யான் சென்றேனென்றால், எங்கு பார்த்தாலும் கொடிய ரோதனமும், இக்ஷ்வாகுவம்ச நாசமும், வனசரர்க்குக் கேடும் உண்டாகப் போகின்றன. 37½

ஆகையால் அவ்வளவுக் கிடமாம்படி யானிங்கிருந்து செல்லக் கடவேனல்லேன்; மைதிலியைக் காணுமல் சுக்கிரீவனைக் காணவுமாட்டேன். 38½

𑌮𑌯𑍍𑌯𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌚𑍇𑌹𑌸𑍍𑌥𑍇 𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑍌 𑌮𑌹𑌾𑌰𑌥𑍌 ॥
𑌆𑌶𑌯𑌾 𑌤𑍌 𑌧𑌰𑌿𑌷𑍍𑌯𑍇𑌤𑍇 𑌵𑌾𑌨𑌰𑌾𑌶𑍍𑌚 𑌮𑌨𑌸𑍍𑌵𑌿𑌨𑌃 । ௩௯

𑌹𑌸𑍍𑌤𑌾𑌦𑌾𑌨𑍋 𑌮𑍁𑌖𑌾𑌦𑌾𑌨𑍋 𑌨𑌿𑌯𑌤𑍋 𑌵𑍃𑌕𑍍𑌷𑌮𑍂𑌲𑌿𑌕𑌃 ॥
𑌵𑌾𑌨𑌪𑍍𑌰𑌸𑍍𑌥𑍋 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌹𑍍𑌯𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌜𑌨𑌕𑌾𑌤𑍍𑌮𑌜𑌾𑌮𑍍 । ௪௦

𑌸𑌾𑌗𑌰𑌾𑌨𑍂𑌪𑌜𑍇 𑌦𑍇𑌶𑍇 𑌬𑌹𑍁𑌮𑍂𑌲𑌫𑌲𑍋𑌦𑌕𑍇 ॥
𑌚𑌿𑌤𑌾𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌸𑌮𑌿𑌦𑍍𑌧𑌮𑌰𑌣𑍀𑌸𑍁𑌤𑌮𑍍 । ௪௧

𑌉𑌪𑌵𑌿𑌷𑍍𑌟𑌸𑍍𑌯 𑌵𑌾 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌨𑍀𑌂 𑌸𑌾𑌧𑌯𑌿𑌷𑍍𑌯𑌤𑌃 ॥
𑌶𑌰𑍀𑌰𑌂 𑌭𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌵𑌾𑌯𑌸𑌾𑌶𑍍𑌶𑍍𑌵𑌾𑌪𑌦𑌾𑌨𑌿 𑌚 । ௪௨

𑌇𑌦𑌂 𑌮𑌹𑌰𑍍𑌷𑌿𑌭𑌿𑌰𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑌂 𑌨𑌿𑌰𑍍𑌯𑌾𑌣𑌮𑌿𑌤𑌿 𑌮𑍇 𑌮𑌤𑌿𑌃 ॥
𑌸𑌮𑍍𑌯𑌗𑌾𑌪𑌃 𑌪𑍍𑌰𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌨 𑌚𑍇𑌤𑍍𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌜𑌾𑌨𑌕𑍀𑌮𑍍 । ௪௩

𑌸𑍁𑌜𑌾𑌤𑌮𑍂𑌲𑌾 𑌸𑍁𑌭𑌗𑌾 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌮𑌾𑌲𑌾 𑌯𑌶𑌸𑍍𑌵𑌿𑌨𑍀 ॥
𑌪𑍍𑌰𑌭𑌗𑍍𑌨𑌾 𑌚𑌿𑌰𑌰𑌾𑌤𑍍𑌰𑍀𑌯𑌂 𑌮𑌮 𑌸𑍀𑌤𑌾𑌮𑌪𑌶𑍍𑌯𑌤𑌃 । ௪௪

யான் செல்லாமல் இங்குதானே நின்றேனாகில், மஹாத்மாக்களாய் மஹாரதர்களான அவ்விருவரும் ஆசையினால் உயிர்த்திருப்பார்கள். மநஸ்விகளான வானரரு மப்படியே தரிப்பர்கள். 39½

யானோ, மைதிலியைக் காணாமையால், எங்காகிலுமோர் மரத்தடியி லிருந்துகொண்டு கையிலும் வாயிலும் தன்னடையே கிடைத்த ஆஹாரத்தைப் புசித்து, வானப்பிரஸ்தன்போல் காலத்தைக் கழிப்பேனாக. 40½

(காயுங் கிழங்கும் தண்ணீரும் வாய்த்த) கடற்கரையின் தரையில் ஓர் சிதையைச்செய்து, அதில் அரணியிற் பிறந்து சொலிக்கின்ற நெருப்பில் புகுதக் கடவேன். 41½

இல்லாவிடில் பிராயோபவேசம் செய்து நிராஹார விரதத்துடன் உட்கார்ந்துவிட்டால், காக்கைகளும் காட்டுமிருகங்களும் காயத்தைப் பிடுங்கித் தின்க. 42½

இதுதான் மஹர்ஷிகள் கண்டுபிடித்த பெரும்போக்கென்ப தென் நினைவு; சீதையைக் காணாவிடில் சித்தமாய்த் தண்ணீரில்குதித்து விடுகிறேன். (பெரும்போக்கு-மரணம்.) 43½

(இலங்கை, ஜயம் பெறுவாய் என்றதனால்) நல்ல ஆரம்பத்தோடு கூடியதாய், (வெண்ணில வெரிக்கின்ற மாலைமையால்) அழகியதாய், எனக்குப் புகழ்செய்கின்ற மாலை போன்றதாய், (யானிலங்கையை புகுந்த இரவென்று) உலகெங்கும் பெயர் பெறுவதாய், (கண்விழித்ததனால்) நெடிதாயிருக்கின்ற இவ்விரவு, சீதையைக் காணாதவெனக்கு வீணாய் முடிந்தது. 44½

𑌤𑌾𑌪𑌸𑍋𑌵𑌾 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌨𑌿𑌯𑌤𑍋 𑌵𑍃𑌕𑍍𑌷𑌮𑍂𑌲𑌿𑌕𑌃॥
𑌨𑍇𑌤𑌃𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌤𑌾𑌮𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌸𑌿𑌤𑍇𑌕𑍍𑌷𑌣𑌾𑌮𑍍। ()

𑌯𑌦𑍀𑌤𑌃𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌸𑍀𑌤𑌾𑌮𑌨𑌧𑌿𑌗𑌮𑍍𑌯𑌤𑌾𑌮𑍍॥
𑌅𑌙𑍍𑌗𑌦𑌸𑍍𑌸𑌹𑌿𑌤𑍈𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍈𑌰𑍍 𑌵𑌾𑌨𑌰𑍈𑌰𑍍𑌨𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿। ()

𑌵𑌿𑌨𑌾𑌶𑍇𑌬𑌹𑌵𑍋𑌦𑍋𑌷𑌾 𑌜𑍀𑌵𑌨𑍍𑌭𑌦𑍍𑌰𑌾𑌣𑌿𑌪𑌶𑍍𑌯𑌤𑌿॥
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌧𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌧𑍍𑌰𑍁𑌵𑍋𑌜𑍀𑌵𑌤𑌿𑌸𑌙𑍍𑌗𑌮𑌃। ()

𑌏𑌵𑌂𑌬𑌹𑍁𑌵𑌿𑌧𑌂𑌦𑍁𑌃𑌖𑌂 𑌮𑌨𑌸𑌾𑌧𑌾𑌰𑌯𑌨𑍍𑌮𑍁𑌹𑍁𑌃॥
𑌨𑌾𑌧𑍍𑌯𑌗𑌚𑍍𑌛𑌤𑍍𑌤𑌦𑌾𑌪𑌾𑌰𑌂 𑌶𑍋𑌕𑌸𑍍𑌯𑌕𑌪𑌿𑌕𑍁𑌞𑍍𑌜𑌰𑌃। ௪௮

𑌰𑌾𑌵𑌣𑌂𑌵𑌾𑌵𑌧𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌦𑌶𑌗𑍍𑌰𑍀𑌵𑌂𑌮𑌹𑌾𑌬𑌲𑌮𑍍॥
𑌕𑌾𑌮𑌮𑌸𑍍𑌤𑍁𑌹𑍃𑌤𑌾𑌸𑍀𑌤𑌾 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌚𑍀𑌰𑍍𑌣𑌂𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿। ௪௯

𑌅𑌥𑌵𑍈𑌨𑌂𑌸𑌮𑍁𑌤𑍍𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯 𑌉𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌰𑌿𑌸𑌾𑌗𑌰𑌮𑍍॥
𑌰𑌾𑌮𑌾𑌯𑍋𑌪𑌹𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌪𑌶𑍁𑌂𑌪𑌶𑍁𑌪𑌤𑍇𑌰𑌿𑌵। ௫௦

𑌇𑌤𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑌾𑌂𑌸𑌮𑌾𑌪𑌨𑍍𑌨𑌸𑍍𑌸𑍀𑌤𑌾𑌮𑌨𑌧𑌿𑌗𑌮𑍍𑌯𑌤𑌾𑌮𑍍॥
𑌧𑍍𑌯𑌾𑌨𑌶𑍋𑌕𑌪𑌰𑍀𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌾𑌮𑌾𑌸𑌵𑌾𑌨𑌰𑌃। ௫௧

இல்லாவிடில், நியமத்துடன்கூடி விருட்சமூலத்தி லிருந்து தவசியாயாகிலும் போவேனேயல்லது மைய கண்ணுளான தேவியைக் காணுமல் இங்கிருந்து செல்லே னல்லேன். 45½

சீதையைக் காணப் பெருத யான் அங்கதனேடு சேர்வோமென்றாலும், அவரும் வானரர் யாவருடன் மாய்வுறப் போகிருர். 46½

பிராணனை யிழப்பதில் பலதோஷங்களுண்டு; உயிர்த் திருந்தாலும் நன்மைகளைப் பெறலாகும்; ஆகையால் பிராணனைத் தரித்திருக்கிறேன்; உயிர்த்திருந்தால் நன் மையுண்டாவது நிச்சயம். 47½

இப்படி அடிக்கடி பலவிதத் துக்கத்தை மனத்தில் தரித்துக்கொண்டு அந்த கபிஸ்ரேஷ்டன் சோகத்தின் கரையைக் காணப்பெற்றிலர். 48½

நல்லது, மஹாபலவானுய் தசகண்டனுன ராவணனை யாகிலும் வதித்து விடுகிறேன்; சீதையைக் கொண்டு போனதற் கீதொரு பதிலாகட்டும். 49½

இல்லையாகில் இவனைத் தூக்கிக்கொண்டு ஸாகரத் தின் மீதேறச்சென்று, ஆட்டுக்கிடாவை அக்கினிதேவ னுக்குப் பலியிடுவதுபோ லிராமனிடம் கொண்டு செல்லு கின்றேன். 50½

இவ்வாறு யோசித்து, சீதையைக் காணுமையால் காணுமாறென்னென்று சற்று நிதானித்து, மீளவும் சோகத்திற் கிலக்காகி சிந்திக்கலுற்ருர். 51½

யாவஜ்ஜீவந்தாம் ஹி வத்ஸ்யாமி ராகவேந்த்ரம் யஶஸ்விநீ ॥
தாவதேதாம் வாஸம் யங்காம் விதிநோதிவர்தந: வர்தந: ()

ஸம்வர்திவவநாச்சாவி ராமம்யஶ்யாநயாத்யஹ ॥
கவஶ்யஸ்நாவவொஹாய ப்ராம் நித்ரேஹெஜஸவர்த்மநா நாஸ்ய ।

உமேஹவநிய தாஹாமோ வத்ஸ்யாமி நியமேதம் த்ரியம் ॥
நக்ஷ்ய மேதவிநமேஶ்யம் ஸ்வேவப்ரேதநாஸ்வா நாமா: । ௫௪

சுஶோகவநிகாவெயம் த்யஶ்யேதயாமஹாத்ரம ॥
மாமேஹிகமிஷ்யாமி நஹீயம் விவிதாமயா । ௫௫

வஸந்தநாத்ரம் ஸ்வயாதிக்யா நஶ்விநளமாந்தேதாவிச ॥
நக்ஷ்யக்வாகமிஷ்யாமி ரக்ஷஸாம் ஶோகவர்தந: । ௫௬

ஜிக்வாதாராக்ஷஸாநுஸவப்ரா நிக்ஷாகாகாமதநம்தீநீ ॥
ஸம்ப்ரஹாஸ்யாமிராமாய யதாஸித்தம் தபஸ்விநே । ௫௭

ஸமாஹாஸதப்ரிவஸ்யாக்வா விஞாவகர்யியேதம் த்ரியம் ॥
உச்சிஷ்டஹாமேதஜா ஹநாமாநுமாராதாத்மஜ: । ௫௮

கீர்த்திமதியான ராமன் தேவியைக் காணுமளவும் இவ்விலங்கையில் சிறிதிடமின்றி பலமுறையாய்த் தேடகிற்பேன். 52½

ஒருக்கால் முன்னமே சம்பாதியின் சொற்படியிராமனை யழைத்து வந்திருக்கும் பக்ஷத்தில், தேவியைக் காணாத ராகவன் வானரர் யாவரையும் எரித்துப்பொகட்டிருப்பர். 53½

இவ்விடத்தில் தானே ஆஹார நியதியுடன் ஜிதேந்திரியனாய் நின்றுவிட்டேனானால், அந்த மானிடரும் மற்றும் வானவரும் எனக்காக நசிக்கமாட்டார்கள். 54½

மேலும் அசோகவன மொன்றிதோ விசேஷ மரங்களுடன் காணப்படுகின்றது; இதில் புகுதுகிறேன்; இதுவரையில் இதில் தேடினேனில்லையே. 55½

அஷ்டவசுக்களையும், ஏகாதசருத்திரனையும், துவாதச ஆதித்யரையும் ஸப்த மருத்துக்களையும் தலையில் வணங்கி அரக்கருக்குத் துயருண்டாகும்படி இதோ போகின்றேன். 56½

அரக்கரனைவரையும் ஜயித்து, தவப்பயனைத் தவசிக் களிப்பதுபோல இக்ஷ்வாகு குலநந்தினியை யிராகவனுக்குக் கொடுக்கின்றேன். 57½

சிந்தையினால் கரணங்களழிந்துக்கிடந்த மாருதியார் சிறிதுநேரம் சிந்தித்திருந்து உடனே பெருந்தேசொடு கிளம்பிவிட்டார். 58½

𑌨𑌮𑍋𑌸𑍍𑌤𑍁𑌰𑌾𑌮𑌾𑌯𑌸𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌾𑌯 𑌦𑍇𑌵𑍍𑌯𑍈𑌚𑌤𑌸𑍍𑌯𑍈
𑌜𑌨𑌕𑌾𑌤𑍍𑌮𑌜𑌾𑌯𑍈। 𑌨𑌮𑍋𑌸𑍍𑌤𑍁𑌰𑍁𑌦𑍍𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌯𑌮𑌾𑌨𑌿𑌲𑍇𑌭𑍍𑌯𑍋
𑌨𑌮𑍋𑌸𑍍𑌤𑍁𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌰𑍍𑌕𑌮𑌰𑍁𑌦𑍍𑌗𑌣𑍇𑌭𑍍𑌯𑌃। ௫௯

𑌸𑌤𑍇𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑍁𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑌾𑌯𑌚𑌮𑌾𑌰𑍁𑌤𑌿𑌃॥ *
𑌦𑌿𑌶𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌸𑌮𑌾𑌲𑍋𑌕𑍍𑌯 𑌹𑍍𑌯𑌶𑍋𑌕𑌵𑌨𑌿𑌕𑌾𑌂𑌪𑍍𑌰𑌤𑌿।
𑌸𑌗𑌤𑍍𑌵𑌾𑌮𑌨𑌸𑌾𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑌶𑍋𑌕𑌵𑌨𑌿𑌕𑌾𑌂𑌶𑍁𑌭𑌾𑌂॥ *
𑌉𑌤𑍍𑌤𑌰𑌂𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌾𑌮𑌾𑌸 𑌵𑌾𑌨𑌰𑍋𑌮𑌾𑌰𑍁𑌤𑌾𑌤𑍍𑌮𑌜𑌃। ௬௧

𑌧𑍍𑌰𑍁𑌵𑌂𑌤𑍁𑌰𑌕𑍍𑌷𑍋𑌬𑌹𑍁𑌲𑌾 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿𑌵𑌨𑌾𑌕𑍁𑌲𑌾॥
𑌅𑌶𑍋𑌕𑌵𑌨𑌿𑌕𑌾𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌾 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌾। ௬௨

𑌰𑌕𑍍𑌷𑌿𑌣𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌰𑌵𑌿𑌹𑌿𑌤𑌾 𑌨𑍂𑌨𑌂𑌰𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑌿𑌪𑌾𑌦𑌪𑌾𑌨𑍍॥
𑌭𑌗𑌵𑌾𑌨𑌪𑌿𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾 𑌨𑌾𑌤𑌿𑌕𑍍𑌷𑍋𑌭𑌂𑌪𑍍𑌰𑌵𑌾𑌤𑌿𑌵𑍈॥ ( )

𑌸𑌂𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑍋𑌽𑌯𑌂𑌮𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌚 𑌰𑌾𑌮𑌾𑌰𑍍𑌥𑍇𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌯𑌚॥
𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂𑌮𑍇𑌸𑌂𑌵𑌿𑌧𑌾𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌦𑍇𑌵𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌷𑌿𑌗𑌣𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌿𑌹। ( )

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌸𑍍𑌵𑌯𑌂𑌭𑍂𑌰𑍍𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌦𑍇𑌵𑌾𑌶𑍍𑌚𑍈𑌵𑌦𑌿𑌶𑌨𑍍𑌤𑍁𑌮𑍇॥ *
𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌗𑍍𑌨𑌿𑌶𑍍𑌚𑌵𑌾𑌯𑍁𑌶𑍍𑌚 𑌪𑍁𑌰𑍁𑌹𑍂𑌤𑌶𑍍𑌚𑌵𑌜𑍍𑌰𑌭𑍃𑌤𑍍॥ *
𑌵𑌰𑍁𑌣𑌃𑌪𑌾𑌶𑌹𑌸𑍍𑌤𑌶𑍍𑌚 𑌸𑍋𑌮𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍌𑌤𑌥𑍈𑌵𑌚॥
𑌅𑌶𑍍𑌵𑌿𑌨𑍌𑌚𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑍌 𑌮𑌰𑍁𑌤𑌶𑍍𑌶𑌰𑍍𑌵𑌏𑌵𑌚। ௬௬

தம்பியுடன் தாசரதிக்கிதோ நமஸ்காரம்; ஜனகன் திருமகளாரான தேவியர்க்கும் தண்டம்; உருத்திரன் இந்திரன் இயமன் வாயு சந்திரன், சூரியன் தெய்வக் கணங்களென்கிற யாவர்க்கும் நமஸ்காரம். 59½

இவ்வாறவர்களை நமஸ்கரித்தந்த மாருதியார் சுக்கிரீவனையும் தொழுது, அசோகவனமிருக்கும் திசைமுழுது முற்றுநோக்கி, முதலில் அழகான அவ்வனத்திற்கு மனதாற்சென்று மேல்நடக்கவேண்டியதைப்பற்றி சிந்தித்திருந்தார். 61½

காவலுக்கடைத்த வரக்கர்கள் நிறைந்து மரங்களடர்ந்து (உழுதல் களையெடுத்தல் முதலிய) சிறப்புகள் யாவும் செய்யப்பட்ட அசோகவனிகை, முக்கியமாய் பார்க்கவேண்டியதே. 62½

காவலாளிகள் நிச்சயமாய் மரங்களைக்காத்துக்கிடப்பர்கள்; ஸர்வாதாரனான வாயுபகவானும் இங்கு மோதியடிக்கத்துணியமாட்டார். 63½

ஆகிலும் இதில் புகுவதற்கு யானிதோ சுருக்கிவிட்டேன் என்சரீரத்தை (இராமன்காரியத்திற்காகவும் இராவணன் கண்ணிற்படாமைக்காகவும்) இனி என் காரியத்தைத் தேவரும் ருஷிகணங்களுந்தா னிங்குதலைக்கட்டித்தரவேண்டும். 64½

தனக்குத்தானே பிறந்த நான்முகக்கடவுளும், தேவர்களும், வாயுவும், அக்கினியும், வச்சிரம்தரித்த விந்திரனும், பாசம்பிடித்த வருணனும், சந்திர சூரியர்களும், அசுவனித்தேவரும், மருத்துக்களும், உருத்திரனும் என்கிற யாவரும் எனக்கு ஸித்தியை யளிக்கவேண்டும். 66½

ஸிம்ஹஸவர்ணீ ஹத்வா தா நிஹத்வா தானாம் தைவத: ப்ரஹா:॥
தாஸ்யம் திஷ்டேயதா ந்ருப ஹ்ருத்ப்ரஹ்ருஷ்டா: ஸமிதௌ காவரா:। ()

தத: ஸந்த ஸம்வாதம் ஸ்ருத்வா தச்ச தஸ்ய வசனம் ஸாபிஷிக்தம் வசோ
வதாஸஹோவாச தம்॥ த்ருஷ்ட்வா ததாயுதாவத நம் க்ஷாத்ரம் ஹம்
ப்ரஸந்தாராயிவ தாத்ருஶம் ததம்। ஸ அ௨

க்ஷாமேத்ரண்வாவே நந்த்ரயம் ஸஂக்ஷுணா ஸாதா
ராணாயம் த்ருதவேஷயாவிணா। பவாஹிஹத்தா ஹ்ருப
வா தவல்லீந் கயம் நாஶேத்ருஷிவயேத்ருஸாஹவேக। ()

இதி ஶ்ரீ உத்தரகாண்டே - த்ரயோதஶஸ்ஸர்க:

ஸர்வபூதங்களும் அவற்றிற்கிறைவனும், வழியிற் கிடந்த மற்றவரும் என் சித்தியைச்செய்து தரவேண்டும். 67½

எடுத்த மூக்கும் வெண்பற்களும் குற்றமற்று வெளுத்த புன்சிரிப்பும் தாமரையிதழ்போன்ற தடங்கண்களுமாய், தெளிந்த சந்திரனெனப் பொலிவுற்ற தேவியின் திருமுகத்தை யெப்பொழுது காண்பேன்! 68½

அற்பனாய் நெஞ்சிலீரமற்ற செயல்செய்பவனாய், மிகவும் பயங்கரனாயிருக்கச் செய்தே நல்லவன்போல்வேஷந் தரித்த (ராவணப்) பாவியினால் வலுவில் கொண்டுவரப்பட்டுத் தவிக்கின்ற தேவியார் எப்படியென் கண்ணுக்கு விஷயமாவர்! 69½

பதின்மூன்றாம் ஸர்க்கம் முற்றிற்று.

ஶ்ரீ உத்தரகாண்டே - சது...ஸர்கஃ

[illegible] ॥ 1

[illegible] ॥ 2

[illegible] ॥ 3

[illegible] ॥ 4

பதினான்காம் ஸர்க்கம்

இப்படி முகூர்த்தம் சிந்தித்திருந்து, முதலில் அவ்வனத்திற்கு மனதில் சென்று, உடனே அந்தராவணன் மனையிலிருந்து அதிவேகமாப் அசோகவனத்தின் மதிலின்மேல் பாய்ந்தேறினர். 1

அங்கமெங்கும் மயிர்பொங்கி மதிள்மீதிருக்கின்ற மாருதியார், வஸந்தகாலத்தினுதியில் மலர்ந்த நுனிகளையுடைய (ஆச்சா, அசோகம், சம்பகம், தேன்மா முதலிய) மரங்களைக்கண்டார். 3

பிறகு மாமரங்கள் நிறைந்து பற்பலக்கொடிகள் படர்ந்த மரச்சாலையைநோக்கி நாணில்விடுபட்ட நாராசம்போல் பாயலுற்றார். 4

பறவைகளெங்குங் கரைந் தழகாய் அச்சாலையில் நுழைந்து, அதுதான் வெள்ளிமயமாயும் பொன்மயமாயும் விளங்குகின்ற விருக்ஷங்களடர்ந்து, பறவைகளும் மிருகக்கணங்களுங் கூடியழகாய், சூரியனுதித்தாற்போல் துலங்குகின்றதாய், சித்திரமான சிறுவனங்களுற்றதாய், பூவுங்காயுமான நானாவித விருக்ஷங்கள் சூழப்பெற்றதாய், மதித்த குயில்களும் வண்டுகளும் எப்பொழுதும் ஆரவாரிக்க, மதித்தமயில்கள் கேகாரவம்செய்ய, பலவகைப் பறவைகள் நிறைந்து ஜனங்களுக்கினிது செய்கின்ற வசந்தகாலத்திற்கிணங்கி விளங்கக் கண்டார். 8

காமுகாணோ வராணோ ஹாம் ராஜமார்தீர்க்திந்த்ர்தாஷு।
ஸாவப்ரஸாத்வாநுவிஹமாநு ஸெயாயாகாஸவாநஸ்:॥ ௯

உத்பதத்பிர்ஜகணை: பக்ஷஸ்வாயாஸ்காஹதா:।
கலகலாரவிவியாநு காகாசா:பாஷ்வ்ருஷ்டய:॥ ௧௦

பாஷ்பாவகீர்ணுஸ்மாஶாஹே ஹநாகாநுகாராதஜ:।
குஶோகவநிகாகெஜ்ய யயாபாஷ்யொமிஸி:॥ ௧௧

ஷிமஸ்வபுரா:ப்ரயாவம்தம் வ்ருக்ஷஷம்பமதம்கவிஷு।
த்ருஷ்டாஸவபுராணிஹங்கதாநி வஸம்தஜதிகெநிரெ॥ ௧௨

வ்ருக்ஷஹ்ய:பதிகெ:பாஷெ ாவகீர்ணுராவ்ருயஸ்வெயெ:। ராராஜவஸாயாதத்ர ப்ரகெதவவிஹங்கஷிதா॥ ௧௩

தர்ஷிநாதெதாரவ ஷாரஸாஷிப்ர=ம்விதா:।
காஸாகாநிவிவித்ராணி ஸஹர்ஜா:கவிநாதஜா॥ ௧௪

நிஜங்கதபத்ருஶிவார ஸ்ரீணுபாஷ்வஶத்ருகா:।
நிக்ஷித்வஸ்த்ராஹரணா யங்கதர்ாஜவவராஜிதா:॥ ௧௫

ஹநங்கதாவெமவகா கம்விதாஷேநமொத்ரா:।
பாஷ்வணர்ஷஶாந்யாஶா காகாசா:பாஷ்ஷாஷிந:॥

ஏதமில் சீதையென்னு மிராசன்குமரியைத்தேடிச் சென்ற திருவடிகள், சுகமாயுறங்கிக்கிடந்த பறவைகளை யெழுப்பிவிட்டார். 9

அப்பொழுது, உயரக்கிளம்புகின்ற பறவைக்கணங்களின் சிறகடியால், ஆச்சாமரங்கள் அனேகவிதமா யலர் மாரிபொழியலுற்றன. 10

அம்மலர்கள் நிறைந்த மாருதியார், அசோகவனத்திடையில் அலர்மலைபோல் விளங்கலானர். 11

திசையெங்குந்திரிந்து தோப்புகளில் புகுகின்ற மாருதியை, சகலபூதங்களும் கண்டு வஸந்தருதுவென்று நினைப்பிட்டன. 12

மரங்களினின்று முதிர்ந்த வகைவகையான மலர்களால், அப்புவியானது அலங்காரம்செய்துகொண்ட மாதரைப்போல் அழகுற்றது. 13

பலசாலியான அந்த ஹனுமானது வேகத்தால் அசைவுற்ற தருக்கள், விசித்திரமான குஸுமங்களை உதிர்த்து நின்றன. 14

இலைகளுதிர்ந்த நுனிகளும் சிதறுண்ட மலரும் கனியுமான அம்மரங்கள், ஆட்டத்தில் தோல்வியடைந்து ஆடையாபரணங்களைப் பறிகொடுத்த சூதர்கள்போல் தெம்பட்டன. 15

வேகவானன ஹனுமானல் குலுக்கப்பட்ட (மலர் நிறைந்த) நன்மரங்கள், பலபலவென்று மலர்களையும் கனிகளையும் இலைகளையும் உதிர்த்துவிட்டன. 16

𑌵𑌿𑌹𑌂𑌗𑌸𑌂𑌘𑍈𑌰𑍍𑌹𑍀𑌨𑌾𑌸𑍍𑌤𑍇 𑌸𑍍𑌕𑌂𑌧𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌰𑌯𑌾
𑌦𑍍𑌰𑍁𑌮𑌾𑌃। 𑌬𑌭𑍂𑌵𑍁𑌰𑌗𑌮𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇 𑌮𑌾𑌰𑍁𑌤𑍇𑌨𑍇𑌵𑌨𑌿𑌰𑍍𑌧𑍂-
𑌤𑌾𑌃॥ ௧௭

𑌨𑌿𑌰𑍍𑌧𑍂𑌤𑌕𑍇𑌶𑍀 𑌯𑍁𑌵𑌤𑌿𑌰𑍍𑌯𑌥𑌾 𑌮𑍃𑌦𑌿𑌤𑌵𑌰𑍍𑌣𑌕𑌾।
𑌨𑌿𑌷𑍍𑌪𑍀𑌤𑌶𑍁𑌭𑌦𑌨𑍍𑌤𑍋𑌷𑍍𑌠𑍀 𑌨𑌖𑍈𑌰𑍍𑌦𑌨𑍍𑌤𑍈𑌶𑍍𑌚𑌵𑌿𑌕𑍍𑌷𑌤𑌾॥
𑌤𑌥𑌾𑌲𑌾𑌂𑌗𑍂𑌲𑌹𑌸𑍍𑌤𑍈𑌶𑍍𑌚 𑌚𑌰𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌚𑌮𑌰𑍍𑌦𑌿𑌤𑌾।
𑌬𑌭𑍂𑌵𑌾𑌶𑍋𑌕𑌵𑌨𑌿𑌕𑌾 𑌪𑍍𑌰𑌭𑌗𑍍𑌨𑌵𑌰𑌪𑌾𑌦𑌪𑌾॥ ௧௯

𑌮𑌹𑌾𑌲𑌤𑌾𑌨𑌾𑌂𑌦𑌾𑌮𑌾𑌨𑌿 𑌵𑍍𑌯𑌧𑌮𑌤𑍍𑌤𑌰𑌸𑌾𑌕𑌪𑌿𑌃।
𑌯𑌥𑌾𑌪𑍍𑌰𑌾𑌵𑍃𑌷𑌿𑌵𑌿𑌂𑌧𑍍𑌯𑌸𑍍𑌯 𑌮𑍇𑌘𑌜𑌾𑌲𑌾𑌨𑌿𑌮𑌾𑌰𑍁𑌤𑌃 ௨௦

𑌸𑌤𑌤𑍍𑌰𑌮𑌣𑌿𑌭𑍂𑌮𑍀𑌶𑍍𑌚 𑌰𑌾𑌜𑌤𑍀𑌶𑍍𑌚𑌮𑌨𑍋𑌰𑌮𑌾𑌃।
𑌤𑌥𑌾𑌕𑌾𑌂𑌚𑌨𑌭𑍂𑌮𑍀𑌶𑍍𑌚 𑌦𑌦𑌰𑍍𑌶𑌵𑌿𑌚𑌰𑌨𑍍𑌕𑌪𑌿𑌃॥
𑌵𑌾𑌪𑍀𑌶𑍍𑌚𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌕𑌾𑌰𑌾𑌃 𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌃𑌪𑌰𑌮𑌵𑌾𑌰𑌿𑌣𑌾।
𑌮𑌹𑌾𑌰𑍍𑌹𑍈𑌰𑍍𑌮𑌣𑌿𑌸𑍋𑌪𑌾𑌨𑍈𑌰𑍁𑌪𑌪𑌨𑍍𑌨𑌾𑌸𑍍𑌤𑌤𑌸𑍍𑌤𑌤𑌃॥
𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌪𑍍𑌰𑌵𑌾𑌲𑌸𑌿𑌕𑌤𑌾 𑌸𑍍𑌫𑌾𑌟𑌿𑌕𑌾𑌨𑍍𑌤𑌰𑌕𑍁𑌟𑍍𑌟𑌿𑌮𑌾𑌃।
𑌕𑌾𑌂𑌚𑌨𑍈𑌸𑍍𑌤𑌰𑍁𑌭𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌰𑍈𑌸𑍍𑌤𑍀𑌰𑌜𑍈𑌰𑍁𑌪𑌶𑍋𑌭𑌿𑌤𑌾𑌃।
𑌫𑍁𑌲𑍍𑌲𑌪𑌦𑍍𑌮𑍋𑌤𑍍𑌪𑌲𑌵𑌨𑌾 𑌶𑍍𑌚𑌕𑍍𑌰𑌵𑌾𑌕𑍋𑌪𑌕𑍂𑌜𑌿𑌤𑌾𑌃।
𑌨𑌤𑍍𑌯𑍂𑌹𑌰𑍁𑌤𑌸𑌂𑌘𑍁𑌷𑍍𑌟𑌾 𑌹𑌂𑌸𑌸𑌾𑌰𑌸𑌨𑌾𑌦𑌿𑌤𑌾𑌃॥ *
𑌦𑍀𑌰𑍍𑌘𑌾𑌭𑌿𑌰𑍍𑌦𑍍𑌰𑍁𑌮𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌭𑌿𑌃 𑌸𑌰𑌿𑌦𑍍𑌭𑌿𑌶𑍍𑌚𑌸𑌮𑌨𑍍𑌤𑌤𑌃।
𑌅𑌮𑍃𑌤𑍋𑌪𑌮𑌤𑍋𑌯𑌾𑌭𑌿𑌃 𑌶𑌿𑌵𑌾𑌭𑌿𑌰𑍁𑌪𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌾𑌃॥ *
𑌲𑌤𑌾𑌶𑌤𑍈𑌰𑌵𑌤𑌤𑌾𑌃 𑌸𑌨𑍍𑌤𑌾𑌨𑌕𑍁𑌸𑍁𑌮𑌾𑌵𑍃𑌤𑌾𑌃।
𑌨𑌾𑌨𑌾𑌗𑍁𑌲𑍍𑌮𑌾𑌵𑍃𑌤𑌵𑌨𑌾𑌃 𑌕𑌰𑌵𑍀𑌰𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌃॥ ௨௬

பறவைக்கணங்கள் குறைந்து கிளைகள் மாத்திரமாய் நிற்கின்ற அம்மரங்கள், வாயுவினால் குலுக்கப்பட்டவைகள்போல் அழகிழந்தன. 17

குழலை யவிழ்த்து சாந்தைக் குலைத்து அதரத்தைக் குடித்து வெளுக்கடித்து நகதந்தங்களால் கிள்ளிக்கடித்த இளமாதைப்போல், அந்த அசோகவனிகை மரங்கள் முறிபடக் காலாலும் கையாலும் வாலாலும் மிதியுண்டது. 19

கார்காலத்தில் விந்தமலையில் விளங்கு கார்மேக வரிசைகளைக் காற்று அடித்துக் கலைப்பதுபோல், மாலை மாலையாய்க் கிடந்த பெருங்கொடிகளையெல்லாம் மாருதியார் மலங்கச்செய்தார். 20

அநந்தரம் அந்த வானரன் மணிமயமாயும், ரஜதமயமாயும் சுவர்ணமயமாயும் அழகாய் விளங்குமிடங்கள் தோறும் திரிந்துகொண்டே, சிறந்த தண்ணீர் நிறைந்து ஆங்காங்கு விலையுயர்ந்த ரத்தினமயப் படிக்கட்டுகளுடன் கூடி, முத்துக்கள் பவழங்கள் போன்ற மணலுடைத்தாய், படிகமயத்தரைகளுடன், கரையில் முளைத்த பொன்மயமான செடிகளா லழகு செய்யப்பட்டு மலர்ந்த தாமரையும் நெய்தலும் அடர்ந்து, சக்கரவாகங்கள், நத்தியூகங்கள், ஹம்ஸம், ஸாரஸம் என்கிற நீர்ப்பறவைகள் ஒலி செய்ய, கரையில் நாற்புறமும் மரங்களுடன்கூடி நீண்டவைகளான ஓடைகள், அமுதம்போல் மதுரமான தண்ணீருடன் கூடி, கொடிகள் பலவும்படர்ந்து, கற்பகத் தருக்களு மிருக்கப்பெற்று, பலவகைப்புதர்கள் சூழ்ந்தடர, இடையிடையே அலரிச்செடிகள் வரிசைசெய்யப் பெற்று விளங்குகின்ற கரைகளுற்ற விதம்விதமான வாவிகளையுங் காணலானர். 26

ததே³தாம்ப³ரஸங்காஶம் ப்ரபஶ்யஸி வரம் கி³ரிம்।
விசித்ரகூடம் கூடைஶ்ச ஸர்வத꞉ பரிவாரிதம்॥ *
ஶிலாக்³ரை꞉ ஶ்ருங்கை³ர்ஹரிததம் நாநாவ்ருக்ஷைஸ்ஸமாவ்ருதம்।
த்³வீபிஹரிஶார்தூ³லைர் ருக்ஷைஞ்ஜக³திவவ்ருதம்॥ ௨௮

ஈத்³ருஶம் வநராஜஸ்தா² நதீ³ம் நிபதிதாம் கவி꞉।
ஸங்காஶவஸந்தஸ்ய ப்ரியஸ்ய பதிதாம் ப்ரியாம்॥ *

ஜலே நிபதிதாம் ஶ்ரேஷ்டா² பாதை³ர் வர்ஷோபஶோபி⁴தாம்।
பாயஸோபமாஸ்தி⁴வக்ஷிப்தாம் ப்ரஸந்நாம் ப்ரியத³ம் ஸஹி꞉॥ *
பா³ணநாவ்ருத்தசேதாயாம் ச ஈஈஶ உஸஹாஶமகவி꞉।
ப்ரஸந்நாஸ்தவகாம் தஸ்ய காஞ்சநாம் பா³ணவஷ்டிதாம்॥ ௩௧
தஸ்யாஸ்துகூலஸஞ்ஜாதைர்நாநாத்³விஜக³ணாயுதா꞉।
த்³வீபிஹரிஶார்தூ³லைர் ஹநுமாநுர்மதா க³ஜ꞉॥ *
க்ருத்ரிமாம் தீ³ர்கி⁴காம் சாபி பத்³மிநீம் ஶீதவாரிணா।
மணிப்ரவரஸோபாநாம் ஸூத்ரஸிக்தஶோபி⁴தாம்॥ *
விவிதை⁴ர்மஸங்கை³ஶ்ச விசித்ராம் சித்ரகாநநாம்।
ப்ராஸாதை³ர்ஹர்ம்யை꞉ நிர்ஜலை꞉ த்விபுலகக்ஷ்யகை꞉॥ *
காநநை꞉ க்ருத்ரிமைஶ்சாபி ஸர்வதஸ்ஸம்வ்ருதாம்। ()
யத³க்ஷிணவாயவாஸ்தா பாஞ்சாலகா³தா⁴ராகா³꞉॥ *
ஸத்ராக்³ராஸ்பிதபீடிகா ஸ்வேதவிஶாலவேதி³கா꞉। ௩௫

பிறகு, புயல்போ லுயர்ந்த சிகரங்களுற்று, விசித்திரமான கொடுமுடிகளுடன்கூடி, சுற்ருேரம் குன்றுகள் சூழ, சிலேச்சாலேகள் நிறைந்து பலவகை மரங்கள் சூழ்ந்து உலகத்தில் நிகரற்று விளங்கும் ஓர் செய்குன்றைக் காண்பாராஞர். 28

அநந்தரம், காதலன் மடியினின்று (கோபத்தால்) குதித்துவரும் காதலிபோல், அம்மலேயினின்றும் புறப்பட்டிழிகின்ற ஆற்றையுங்கண்டார். 29

அதுதான் ஜலத்தில் முழுகிய மரங்கள் தடுக்கத்தடையுண்டு மீளவுந் திரும்பிச்செல்லுந் தண்ணீருடைத்தாய், அதனுல், தோழிகள் தேற்றத் தேறிய காதலியார் மீளவும் காந்தனைநாடிச் செல்வதுபோல் காட்சிதந்தது. 31

அதற்கப்பால், பலவகைப் பறவைக்குலங்களுடைத்தான தாமரையிஞேடைகளேயும்; தண்ணீர் நிறைந்து சிறந்த மணிப்படிகளுடைத்தாய், முத்துமணல் செறிந்து விதம்விதமான மிருகக் குலங்களாலழகுற்று, சுற்ருேரம் விசித்திரமான தோட்டங்களும், விசுவகருமன் நிருமித்த மிகப்பெரிய மாளிகைகளும் எப்புறமும் கைத்தொழிலாற் கற்பித்த சிங்காரவனங்களுமுற்ற செய்வாவிகளேயுங் கண்டார். 34½

மலர்களும் கனிகளுமாய் அங்கு யாவையாவை சில மரங்களுண்டோ அவைகள்யாவும், குடைகள்போல் பரந்து சுவர்ணமயமான படிகளும் மேடைகளுமாயிராநின்றன. 35½

𑌲𑌤𑌾𑌪𑍍𑌰𑌤𑌾𑌨𑍈𑌰𑍍𑌬𑌹𑍁𑌭𑌿𑌃 𑌪𑌰𑍍𑌣𑍈𑌶𑍍𑌚 𑌬𑌹𑍁𑌭𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑌾𑌮𑍍॥ 𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑍀𑌂 𑌶𑌿𑌂𑌶𑌪𑌾𑌮𑍇𑌕𑌾𑌂 𑌦𑌦𑌰𑍍𑌶 𑌹𑌨𑍁𑌮𑌾𑌨𑍍𑌕𑌪𑌿𑌃॥ 𑌵𑍃𑌤𑌾𑌂 𑌹𑍇𑌮𑌮𑌯𑍀𑌭𑌿𑌸𑍍𑌤𑍁 𑌵𑍇𑌦𑌿𑌕𑌾𑌭𑌿𑌸𑍍𑌸𑌮𑌨𑍍𑌤𑌤𑌃॥

𑌸𑍋𑌽𑌪𑌶𑍍𑌯𑌦𑍍𑌭𑍂𑌮𑌿𑌭𑌾𑌗𑌾𑌂𑌶𑍍𑌚 𑌗𑌰𑍍𑌤𑌪𑍍𑌰𑌸𑍍𑌰𑌵𑌣𑌾𑌨𑌿 𑌚।
𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌵𑍃𑌕𑍍𑌷𑌾𑌨𑌪𑌰𑌾𑌨𑍍 𑌦𑌦𑌰𑍍𑌶 𑌶𑌿𑌖𑌿𑌸𑌨𑍍𑌨𑌿𑌭𑌾𑌨𑍍॥ ௨௮

𑌤𑍇𑌷𑌾𑌂 𑌦𑍍𑌰𑍁𑌮𑌾𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌭𑌯𑌾 𑌮𑍇𑌰𑍋𑌰𑌿𑌵 𑌦𑌿𑌵𑌾𑌕𑌰𑌃।
𑌅𑌮𑌨𑍍𑌯𑌤 𑌤𑌦𑌾 𑌵𑍀𑌰𑌃 𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑍋𑌽𑌸𑍍𑌮𑍀𑌤𑌿 𑌵𑌾𑌨𑌰𑌃॥ ௨௯

𑌤𑌾𑌂 𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑍈𑌸𑍍𑌤𑌰𑍁𑌗𑌣𑍈𑌰𑍍𑌮𑌾𑌰𑍁𑌤𑍇𑌨 𑌚 𑌵𑍀𑌜𑌿𑌤𑌾𑌮𑍍।
𑌕𑌿𑌂𑌕𑌿𑌣𑍀𑌶𑌤𑌨𑌿𑌰𑍍𑌘𑍋𑌷𑌾𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌵𑌿𑌸𑍍𑌮𑌯𑌮𑌾𑌗𑌮𑌤𑍍॥ ௩௦

𑌸𑌪𑍁𑌷𑍍𑌪𑌿𑌤𑌾𑌗𑍍𑌰𑌾𑌂 𑌰𑍁𑌚𑌿𑌰𑌾𑌂 𑌤𑌰𑍁𑌣𑌾𑌂𑌕𑍁𑌰𑌪𑌲𑍍𑌲𑌵𑌾𑌮𑍍॥*
𑌤𑌾𑌮𑌾𑌰𑍁𑌹𑍍𑌯 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍁𑌶𑍍𑌶𑌿𑌂𑌶𑌪𑌾𑌂 𑌪𑌰𑍍𑌣𑌸𑌂𑌵𑍃𑌤𑌾𑌮𑍍॥ *

𑌇𑌤𑍋 𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌵𑍈𑌦𑍇𑌹𑍀𑌂 𑌰𑌾𑌮𑌦𑌰𑍍𑌶𑌨𑌲𑌾𑌲𑌸𑌾𑌮𑍍।
𑌇𑌤𑌶𑍍𑌚𑍇𑌤𑌶𑍍𑌚 𑌦𑍁𑌃𑌖𑌾𑌰𑍍𑌤𑌾𑌂 𑌸𑌂𑌪𑌤𑌨𑍍𑌤𑍀𑌂 𑌯𑌦𑍃𑌚𑍍𑌛𑌯𑌾॥ *

𑌅𑌶𑍋𑌕𑌵𑌨𑌿𑌕𑌾 𑌚𑍇𑌯𑌂 𑌦𑍃𑌢𑌂 𑌰𑌮𑍍𑌯𑌾 𑌦𑍁𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑌃।
𑌚𑌂𑌪𑌕𑍈𑌶𑍍𑌚𑌨𑍍𑌦𑌨𑍈𑌶𑍍𑌚𑌾𑌪𑌿 𑌵𑌕𑍁𑌲𑍈𑌶𑍍𑌚 𑌵𑌿𑌭𑍂𑌷𑌿𑌤𑌾॥*

𑌇𑌯𑌂 𑌚 𑌨𑌲𑌿𑌨𑍀 𑌰𑌮𑍍𑌯𑌾 𑌦𑍍𑌵𑌿𑌜𑌸𑌂𑌘𑌨𑌿𑌷𑍇𑌵𑌿𑌤𑌾।
𑌇𑌮𑌾𑌂 𑌸𑌾 𑌰𑌾𑌮𑌮𑌹𑌿𑌷𑍀 𑌨𑍂𑌨𑌮𑍇𑌷𑍍𑌯𑌤𑌿 𑌜𑌾𑌨𑌕𑍀॥ *

அதில் விசேஷமான தழைகளுந் தொங்கலும் சூழப் பெற்று, சுவர்ணமயமான திண்ணைகள் சூழ்ந்த பொன் மயமான தோர் அசோகமரத்தை அனுமான் கண் டார். 37

மேலும் அங்குள்ள பூமிபாகங்களையும் பள்ளத்திற் பாய்கின்ற வெள்ளங்களையும், மயில்போல் கறுத்த சோலை கள் சூழ்ந்த சுவர்ணமயத் தருக்களையுங் கண்ணுற்ற னர். 38

மேருமலையின் ஒளிபடர்ந்த மார்த்தாண்ட பிம்பம் போல் அம்மரங்களின் மின்படிந்த ஹனுமான், தம்முரு வைப் பொன்னுருவாய் நினைத்துக்கொண்டார். 39

பொன்மயமான மரங்களினிடையில் காற்றுவீசக் கிங்கிணிகளொலிக்கப்பெற்ற அவ்வசோகத்தை அனு மான் கண்டு ஆச்சரியங் கொண்டார். 40

அநந்தரம் அந்த ஹனுமான், நன்றாய் மலரெடுத்த நுனிகளுடைத்தாய், பருவம் நிரம்பிய தளிரும் குருத்து முடைத்தாய், சோலைசூழ்ந்த அவ்வசோகத்தின்மீதூர்ந்த வராய் "இராமனைக்காணக் காமுற்று துயரத்தால்நொந்து அங்குமிங்கு மலைகின்ற இராமன் தேவி ஒருக்காலிங்கு தெம்படுவள்; ஆகையால் இங்கிருந்து பார்க்கிறேன்; துஷ்டப்பையலான இராவணனுக்குச் சொந்தான இவ் வசோகவனமோ செண்பகம், சந்தனம், மகிழ் இவற்று டன் கூடி மிக அழகாய் விளங்காநின்றது; இதோ ஒரு தாமரையோடை பறவைக்கணங்கள் திரியப்பெற்று ரம ணீயமாய் தெம்படுகின்றது; வெகுசாய் இராமன் தேவி இங்குவரக்கூடும்; இராமனது ஆசைமணாட்டியான அம் மாதரசி வனஸஞ்சாரத்தில் சமத்தி (=ஸமர்த்தை)யாகை

𑌸𑌾 𑌰𑌾𑌮𑌾 𑌰𑌾𑌮𑌮𑌹𑌿𑌷𑍀 𑌰𑌾𑌘𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌸𑌤𑍀।
𑌵𑌨𑌸𑌂𑌚𑌾𑌰𑌕𑍁𑌶𑌲𑌾 𑌨𑍂𑌨𑌮𑍇𑌷𑍍𑌯𑌤𑌿 𑌜𑌾𑌨𑌕𑍀॥ *
𑌭𑌯𑌵𑌾 𑌮𑍃𑌗𑌶𑌾𑌵𑌾𑌕𑍍𑌷𑍀 𑌵𑌨𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣𑌾।
𑌵𑌨𑌮𑍇𑌷𑍍𑌯𑌤𑌿 𑌸𑌾 𑌚𑍇𑌹 𑌰𑌾𑌮𑌚𑌿𑌨𑍍𑌤𑌾𑌨𑍁𑌕𑌰𑍍𑌶𑌿𑌤𑌾॥ *
𑌰𑌾𑌮𑌶𑍋𑌕𑌾𑌭𑌿𑌸𑌨𑍍𑌤𑌪𑍍𑌤𑌾 𑌸𑌾 𑌦𑍇𑌵𑍀 𑌵𑌾𑌮𑌲𑍋𑌚𑌨𑌾।
𑌵𑌨𑌵𑌾𑌸𑌰𑌤𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍇𑌷𑍍𑌯𑌤𑍇 𑌵𑌨𑌚𑌾𑌰𑌿𑌣𑍀॥ *
𑌵𑌨𑍇𑌚𑌰𑌾𑌣𑌾𑌂 𑌸𑌤𑌤𑌂 𑌨𑍂𑌨𑌂 𑌸𑍍𑌪𑍃𑌹𑌯𑌤𑍇 𑌪𑍁𑌰𑌾।
𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌦𑌯𑌿𑌤𑌾 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾 𑌜𑌨𑌕𑌸𑍍𑌯 𑌸𑍁𑌤𑌾 𑌸𑌤𑍀॥ *
𑌸𑌂𑌧𑍍𑌯𑌾𑌕𑌾𑌲𑌮𑌨𑌾𑌃 𑌶𑍍𑌯𑌾𑌮𑌾 𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑍇𑌷𑍍𑌯𑌤𑌿 𑌜𑌾𑌨𑌕𑍀।
𑌨𑌦𑍀𑌂 𑌚𑍇𑌮𑌾𑌂 𑌶𑌿𑌵𑌜𑌲𑌾𑌂 𑌸𑌂𑌧𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍇 𑌵𑌰𑌵𑌰𑍍𑌣𑌿𑌨𑍀॥ ௪௯

𑌤𑌸𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌾𑌪𑍍𑌯𑌨𑍁𑌰𑍂𑌪𑍇𑌯𑌮𑌶𑍋𑌕𑌵𑌨𑌿𑌕𑌾 𑌶𑍁𑌭𑌾।
𑌶𑍁𑌭𑌾 𑌯𑌾 𑌪𑌾𑌰𑍍𑌥𑌿𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌪𑌤𑍍𑌨𑍀 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌸𑌂𑌮𑌤𑌾॥ ௫௦

𑌯𑌦𑌿 𑌜𑍀𑌵𑌤𑌿 𑌸𑌾 𑌦𑍇𑌵𑍀 𑌤𑌾𑌰𑌾𑌧𑌿𑌪𑌨𑌿𑌭𑌾𑌨𑌨𑌾।
𑌆𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌸𑌾𑌽𑌵𑌶𑍍𑌯𑌮𑌿𑌮𑌾𑌂 𑌶𑌿𑌵𑌜𑌲𑌾𑌂 𑌨𑌦𑍀𑌮𑍍॥ ௫௧

𑌏𑌵𑌂 𑌤𑍁 𑌮𑌤𑍍𑌵𑌾 𑌹𑌨𑍂𑌮𑌾𑌨𑍍 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑍋
𑌮𑌨𑍁𑌜𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑌤𑍍𑌨𑍀𑌮𑍍। 𑌅𑌵𑍇𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑌶𑍍𑌚 𑌦𑌦𑌰𑍍𑌶 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌸𑍁-
𑌪𑍁𑌷𑍍𑌪𑌿𑌤𑍇 𑌪𑌰𑍍𑌣𑌘𑌨𑍇 𑌨𑌿𑌲𑍀𑌨𑌃॥ ௫௨

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 - 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃

யால் இங்குவரக்கூடும். அப்படியன்றாகிலும் வனவாஸ ரஸத்தை அனுபவிக்க வல்லளாகையாலும் இராமன் சிந்தையினால் மெலிந்தவளாகையாலும் அவ்வுழைக்கணோக்கி பொழுது போக்காயிங்கு வரவுங்கூடும். இராமனது சோகத்தால் பரிதவிக்கின்ற அவள், நித்தியமாயிங்கு வரவுங் கூடும். ஏற்கனவே அவள் வனத்தில் திரியும் பிராணிகளைக் காண்பதில் பிரீதியுடையவள்; மேலும் இராமனுக்குப் பாரியையாய் ஜனகர் தம் திருமகளாய் பதிவிரதையான பிராட்டி, ஸந்தியாகாலத்தில் மனம் வைத்தவளாய் ஸந்தியார்த்தமாக பரிசுத்தமான தீர்த்தம் நிறைந்த இந்த நதிக்கு நிச்சயமாய் வரவும்சேரும். 49

அரசரேறான சனகர்க்குத் திருமகளாய் இராமனுக்குச் சம்மதமான் தேவியராயிருக்கின்ற அவ்வழகிக்கு ஏற்றாப்போலவே இவ்வசோகவனமும் அழகாயிருக்கின்றது. 50

அம்மதிநிகர்முகத்தாள் உயிர்த்துமாத்திர மிருக்குமாகில் பரிசுத்த நீருடைய இந்நதிக்கு நிச்சயமாய் வரவே வருவாள்.” 51

என்றிப்படி நினைத்துக்கொண்டு மஹானுபாவனான ஹனுமான் நன்றாய் மலர்ந்த அந்தமரத்தின் சோலைநடுவில் மறைந்திருந்து இராகவன் றேவியின் துவரவை யெதிர்பார்த்தவராய் வனமுழுதும் உற்றுநோக்கினார். 52

பதினான்காம் ஸர்க்கம் முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌉𑌤𑍍𑌤𑌰𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 - 𑌪𑌞𑍍𑌚𑌦𑌶𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃

𑌸 𑌵𑍀𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑌸𑍍𑌤𑌤𑍍𑌰𑌸𑍍𑌥𑍋 𑌮𑌾𑌰𑍍𑌗𑌮𑌾𑌣𑌶𑍍𑌚𑌮𑍇𑌦𑌿𑌨𑍀𑌮𑍍।
𑌅𑌵𑍇𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑌶𑍍𑌚𑌮𑌹𑍀𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌂 𑌤𑌾𑌮𑌨𑍍𑌵𑌵𑍇𑌕𑍍𑌷𑌤॥ ௧

𑌸𑌂𑌤𑌾𑌨𑌕𑌲𑌤𑌾𑌭𑌿𑌶𑍍𑌚 𑌪𑌾𑌦𑌪𑍈𑌰𑍁𑌪𑌶𑍋𑌭𑌿𑌤𑌾𑌮𑍍।
𑌦𑌿𑌵𑍍𑌯𑌗𑌂𑌧𑌰𑌸𑍋𑌪𑍇𑌤𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑌸𑍍𑌸𑍁𑌮𑌨𑍋𑌯𑍁𑌤𑌾𑌮𑍍॥ *
𑌤𑌾𑌂 𑌸 𑌨𑌂𑌦𑌨𑌸𑌂𑌕𑌾𑌶𑌾𑌂 𑌮𑍃𑌗𑌪𑌕𑍍𑌷𑌿𑌭𑌿𑌰𑌾𑌵𑍃𑌤𑌾𑌮𑍍।
𑌹𑍃𑌦𑍍𑌯𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌸𑌂𑌛𑌾𑌯𑌾𑌂 𑌕𑍋𑌕𑌿𑌲𑌾𑌕𑍁𑌲𑌨𑌿𑌸𑍍𑌵𑌨𑌾𑌮𑍍॥*
𑌚𑌾𑌂𑌪𑍇𑌯𑌬𑌕𑍁𑌲𑍈𑌰𑍍𑌵𑌾𑌪𑌿 𑌵𑍀𑌥𑍀𑌭𑌿𑌰𑍁𑌪𑌶𑍋𑌭𑌿𑌤𑌾𑌮𑍍।
𑌬𑌹𑍍𑌵𑌾𑌸𑌨𑌕𑌦𑌂𑌬𑍈𑌶𑍍𑌚 𑌬𑌹𑍁𑌦𑍍𑌰𑍁𑌮𑌹𑌿𑌤𑌾𑌯𑌤𑌾𑌮𑍍
𑌸𑌰𑍍𑌵𑌰𑍍𑌤𑍁𑌕𑍁𑌸𑍁𑌮𑍋𑌤𑍍𑌫𑍁𑌲𑍍𑌲𑌾𑌂 𑌷𑌟𑍍𑌪𑌦𑍈𑌶𑍍𑌚𑍈𑌵 𑌪𑌾𑌦𑌪𑍈𑌃।
𑌪𑍁𑌷𑍍𑌪𑌿𑌤𑌾𑌨𑌾𑌮𑌶𑍋𑌕𑌾𑌨𑌾𑌂 𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 𑌸𑍂𑌰𑍍𑌯𑍋𑌦𑌯𑌪𑍍𑌰𑌭𑌾𑌮𑍍
𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑍍𑌤𑌾𑌮𑌿𑌵 𑌤𑌤𑍍𑌰𑌸𑍍𑌥𑍋 𑌮𑌾𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌸𑌮𑌵𑍈𑌕𑍍𑌷𑌤।
𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾𑌂 𑌵𑌿𑌹𑌗𑍈𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑌾𑌧𑌿𑌵𑌾𑌸𑌕𑌮𑍍॥ *
𑌵𑌿𑌨𑌿𑌷𑍍𑌟𑌪𑍍𑌤𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌾𑌭𑍈𑌃 𑌪𑌦𑍍𑌮𑌾𑌵𑌰𑍍𑌤𑌸𑌮𑍈𑌃।
𑌕𑍁𑌮𑍁𑌦𑍋𑌤𑍍𑌪𑌲𑌷𑌣𑍍𑌡𑍈𑌶𑍍𑌚 𑌦𑌿𑌵𑍍𑌯𑍈𑌃 𑌶𑍋𑌕𑌨𑌾𑌶𑌨𑍈𑌃॥

𑌪𑌦𑍍𑌮𑌾𑌕𑌰𑌾𑌭𑌿𑌰𑌾𑌮𑍈𑌶𑍍𑌚 𑌸𑍍𑌵𑌚𑍍𑌛𑌶𑍀𑌤𑌵𑌿𑌶𑍇𑌷𑌿𑌣𑍀𑌮𑍍।
𑌕𑌰𑍍𑌣𑌿𑌕𑌾𑌰𑍈𑌃 𑌕𑍁𑌸𑍁𑌮𑌿𑌤𑍈𑌃 𑌕𑌿𑌂𑌶𑍁𑌕𑍈𑌶𑍍𑌚 𑌸𑍁𑌪𑍁𑌷𑍍𑌪𑌿-
𑌤𑍈𑌃॥ ௮

𑌸 𑌦𑍇𑌶𑌃 𑌪𑍍𑌰𑌭𑌯𑌾 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑍍𑌤 𑌇𑌵 𑌸𑌰𑍍𑌵𑌤𑌃॥ ௯

பதினைந்தாம் ஸர்க்கம்

மைதிலியைத் தேடுகின்ற அன்னவரங்கிருந்தபடியே அடிவாரத்தில் பிரதேசத்தை முழுதும் பார்த்தார். 1

கற்பகக் கொடிகளாலும் தருக்களாலும் அழகியதாய், திவ்வியமான கந்தமும் ரஸமுங்கூடியதாய், எங்கும் அலங்காரமாய், நந்தநத்தை யொத்ததாய், மிருகங்களும் பக்ஷிகளும்நிறைந்ததாய், மெத்தைமேடைகளடர்ந்ததாய், குயில்கள் கூடிக்குலாவுவதாய், சுவர்ணமயமான நெய்தலும் தாமரையும் மலர்ந்த வாவிகள் சூழ்ந்தழகியதாய், அனேக ஆஸநங்களும் மேல்போர்வைகளு முடையதாய், அனேகம் நிலமாளிகைகளுடையதாய், ஸகலருதுக்களிலுமுள்ள மலர்களுங் கனிகளுமான மரங்களாலழகியதாய், மலரெடுத்த அசோகங்களின் சோபையினால் உதிக்கும் சூரியன்போல் சொலிக்கின்றதாய், எண்ணிறந்த பறவைகள் விசித்திரமான மலர்களை மூக்கிலெடுத்துக்கொண்டு ஏககாலத்தி னுயரக் கிளம்பும்பொழுது இலைகளற்றதுபோல் விளங்கு கிளைகளுற்றதாய், வேர் துடங்கி மலர்ந்த மலர்களின் சுமைகளைத் தாங்கமாட்டாமல் தரையைத் தொடுவதுபோலிருக்கின்ற சோகநாசகங்களான அசோகங்களுடனும் கர்ணிகாரங்களுடனும் பலாசங்களுடனும் கூடி விளங்குகின்றதான அவ்விடத்தை அங்கிருந்தபடியே ஹனுமான் கண்டார். 8

அந்த காந்தியினால் அவ்விடமெங்கும் சொலிப்பது போல் தெம்பட்டது. 8½

𑌪𑍁𑌨𑍍𑌨𑌾𑌗𑌾𑌸𑍍𑌸𑌪𑍍𑌤𑌪𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌚 𑌚𑌂𑌪𑌕𑍋𑌦𑍍𑌦𑌾𑌲𑌕𑌾𑌸𑍍𑌤𑌥𑌾 । *
𑌵𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑌮𑍂𑌲𑌾𑌬𑌹𑌵𑌃 𑌶𑍋𑌭𑌨𑍍𑌤𑍇𑌸𑍍𑌮𑌸𑍁𑌪𑍁𑌷𑍍𑌪𑌿𑌤𑌾𑌃 ।
𑌶𑌾𑌤𑌕𑍁𑌂𑌭𑌨𑌿𑌭𑌾𑌃𑌕𑍇𑌚𑌿𑌤𑍍 𑌕𑍇𑌚𑌿𑌦𑌗𑍍𑌨𑌿𑌶𑌿𑌖𑌾𑌪𑍍𑌰𑌭𑌾𑌃 ॥ *
𑌨𑍀𑌲𑌾𑌂𑌜𑌨𑌨𑌿𑌭𑌾𑌃𑌕𑍇𑌚𑌿𑌤𑍍 𑌤𑌤𑍍𑌰𑌾𑌶𑍋𑌕𑌾𑌸𑍍𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌃 । ௧௦

𑌨𑌂𑌦𑌨𑌂𑌵𑌿𑌵𑌿𑌧𑍋𑌦𑍍𑌯𑌾𑌨𑌂 𑌚𑌿𑌤𑍍𑌰𑌂𑌚𑍈𑌤𑍍𑌰𑌰𑌥𑌂𑌯𑌥𑌾 ॥ *
𑌅𑌤𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌮𑌿𑌵𑌾𑌚𑌿𑌂𑌤𑍍𑌯𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌂𑌰𑌮𑍍𑌯𑌂𑌶𑍍𑌰𑌿𑌯𑌾𑌵𑍃𑌤𑌮𑍍 ।
𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌮𑌿𑌵𑌚𑌾𑌕𑌾𑌶𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍍𑌗𑌣𑌾𑌯𑍁𑌤𑌮𑍍 ॥ *
𑌪𑍁𑌷𑍍𑌪𑌰𑌤𑍍𑌨𑌶𑌤𑍈𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌰𑌂 𑌪𑌂𑌚𑌮𑌂𑌸𑌾𑌗𑌰𑌂𑌯𑌥𑌾 । [𑌭𑌿𑌃 *
𑌸𑌰𑍍𑌵𑌰𑍍𑌤𑍁𑌪𑍁𑌷𑍍𑌪𑍈𑌰𑍍𑌨𑌿𑌚𑌿𑌤𑌂 𑌪𑌾𑌦𑌪𑍈𑌰𑍍𑌮𑌧𑍁𑌗𑌂𑌧𑌿
𑌨𑌾𑌨𑌾𑌨𑌿𑌨𑌾𑌦𑍈𑌰𑍁𑌦𑍍𑌯𑌾𑌨𑌂𑌰𑌮𑍍𑌯𑌂𑌮𑍃𑌗𑌗𑌣𑍈𑌰𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑍈𑌃
𑌅𑌨𑍇𑌕𑌗𑌂𑌧𑌪𑍍𑌰𑌵𑌹𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌗𑌂𑌧𑌂𑌮𑌨𑍋𑌰𑌮𑌮𑍍 ॥ *
𑌶𑍈𑌲𑍇𑌂𑌦𑍍𑌰𑌮𑌿𑌵𑌗𑌂𑌧𑌾𑌢𑍍𑌯𑌂 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂𑌗𑌂𑌧𑌮𑌾𑌦𑌨𑌮𑍍 । ௧௪

𑌅𑌶𑍋𑌕𑌵𑌨𑌿𑌕𑌾𑌯𑌾𑌂𑌤𑍁 𑌤𑌸𑍍𑌯𑌾𑌂𑌵𑌾𑌨𑌰𑌪𑍁𑌂𑌗𑌵𑌃 ॥ *
𑌸𑌦𑌦𑌰𑍍𑌶𑌾𑌵𑌿𑌦𑍂𑌰𑌸𑍍𑌥𑌂 𑌚𑍈𑌤𑍍𑌯𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌮𑍁𑌚𑍍𑌛𑍍𑌰𑌿𑌤𑌮𑍍 ।
𑌮𑌧𑍍𑌯𑍇𑌸𑍍𑌤𑌂𑌭𑌸𑌹𑌸𑍍𑌰𑍇𑌣 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂𑌕𑍈𑌲𑌾𑌸𑌪𑌾𑌣𑍍𑌡𑍁𑌰𑌮𑍍 ॥
𑌪𑍍𑌰𑌵𑌾𑌲𑌕𑍃𑌤𑌸𑍋𑌪𑌾𑌨𑌂 𑌤𑌪𑍍𑌤𑌕𑌾𑌂𑌚𑌨𑌵𑍇𑌦𑌿𑌕𑌮𑍍 ।
𑌮𑍁𑌷𑍍𑌣𑌂𑌤𑌮𑌿𑌵𑌚𑌕𑍍𑌷𑍂𑌂𑌷𑌿 𑌦𑍍𑌯𑍋𑌤𑌮𑌾𑌨𑌮𑌿𑌵𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 ॥ *
𑌵𑌿𑌮𑌲𑌂𑌪𑍍𑌰𑌾𑌂𑌶𑍁𑌭𑌾𑌵𑌤𑍍𑌵𑌾𑌦𑍁𑌲𑍍𑌲𑌿𑌖𑌂𑌤𑌮𑌿𑌵𑌾𑌂𑌬𑌰𑌮𑍍 । ௧௭

அடிபருத்து மலரெடுத்த புன்னை, ஏழிலைப்பாலை, செண்பகம், உத்தாலகம், அசோகம் (முதலிய) மரங்கள் சில சுவர்ணம்போலும் சில அக்கினிச் சுவாலைபோலும் சில கறுத்தமைபோலும் காட்சிதந்தன. 10½

பலவகைச் சிங்காரவனங்களுற்ற இந்திரன் நந்தவனம்போலும் விசித்திரமான குபேரன் சைத்திரரதவனம் போலும் விளங்குவதாய், உலகிலில்லாத விசேஷமுற்றதாய், நினைக்கவு மரிதென்னும்படி திவ்வியமானதாய், புஷ்பங்களென்கிற சோதிக்கணங்களுடன் கூடி இரண்டாவது ஆகாயம்போலும் புஷ்பங்களென்னு மிரத்தினங்களுற்ற ஐந்தாவது ஆழிபோலும் விளங்குமதாய், மூவிரண்டு ருதுக்களிலுமுண்டான மலர்கொண்டு மணக்கின்ற மலர்களடர்ந்து பலவாறு கூவுகின்ற பறவைகளும் மிருகக்கணங்களுங் கூடியதாய், விதம்விதமான கந்தங்கமழ்கின்றதாய், புண்ணிய கந்தமுற்றதாய், மனதைக்கவர்வதாய், கந்தம்நிறைந்த விரண்டாம் கெந்தமாதன (பருவத)ம் போல் அந்தவனம் அழகுற்றது. 14½

அநந்தரம் அந்த வானரோத்தமன், அசோகவனத்தினிடையில் கொஞ்சதூரத்தில் ஓர் மந்திரம், நடுவில் ஆயிரம் தூண்கள் நாட்டப்பட்டு, கைலாஸம்போல் வெளுத்து, பவழப்படிகளமைந்து, செம்பொன்செய் திண்ணைகளுற்று, கண்களைப்பறிப்பதுபோல் காந்தியுடன் விளங்கி, நிர்மலமாயுன்னதமாய் ஆகாயத்தைக் கிழிப்பது போ லிருக்கக் கண்டார். 17½

𑌤𑌤𑍋𑌮𑌲𑌿𑌨𑌸𑌂𑌵𑍀𑌤𑌾𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌭𑌿𑌸𑍍𑌸𑌮𑌾𑌵𑍃𑌤𑌾𑌮𑍍 ॥ *

𑌉𑌪𑌵𑌾𑌸𑌕𑍃𑌶𑌾𑌂 𑌦𑍀𑌨𑌾𑌂 𑌨𑌿𑌶𑍍𑌵𑌸𑌨𑍍𑌤𑍀𑌂𑌪𑍁𑌨𑌃𑌪𑍁𑌨𑌃 ।
𑌦𑌦𑌰𑍍𑌶𑌶𑍁𑌕𑍍𑌲𑌪𑌕𑍍𑌷𑌾𑌦𑍌 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌰𑍇𑌖𑌾𑌮𑌿𑌵𑌾𑌮𑌲𑌾𑌮𑍍 ॥ ௧௯

𑌮𑌨𑍍𑌦𑌂𑌪𑍍𑌰𑌖𑍍𑌯𑌾𑌯𑌮𑌾𑌨𑍇𑌨 𑌰𑍂𑌪𑍇𑌣 𑌰𑍁𑌚𑌿𑌰𑌪𑍍𑌰𑌭𑌾𑌮𑍍 ।
𑌪𑌿𑌨𑌦𑍍𑌧𑌾𑌂𑌧𑍂𑌮𑌜𑌾𑌲𑍇𑌨 𑌶𑌿𑌖𑌾𑌮𑌿𑌵𑌵𑌿𑌭𑌾𑌵𑌸𑍋𑌃 ॥ *

𑌪𑍀𑌤𑍇𑌨𑍈𑌕𑍇𑌨𑌸𑌂𑌵𑍀𑌤𑌾𑌂 𑌕𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑍇𑌨𑍋𑌤𑍍𑌤𑌮𑌵𑌾𑌸𑌸𑌾 ।
𑌸𑌪𑌙𑍍𑌕𑌾𑌮𑌨𑌲𑌙𑍍𑌕𑌾𑌰𑌾𑌂 𑌵𑌿𑌪𑌦𑍍𑌮𑌾𑌮𑌿𑌵𑌪𑌦𑍍𑌮𑌿𑌨𑍀𑌮𑍍 ॥ *

𑌵𑍍𑌰𑍀𑌡𑌿𑌤𑌾𑌂𑌦𑍁𑌃𑌖𑌸𑌨𑍍𑌤𑌪𑍍𑌤𑌾𑌂 𑌪𑌰𑌿𑌮𑍍𑌲𑌾𑌨𑌾𑌂𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌨𑍀𑌮𑍍 ।
𑌗𑍍𑌰𑌹𑍇𑌣𑌾𑌙𑍍𑌗𑌾𑌰𑌕𑍇𑌣𑍇𑌵 𑌪𑍀𑌡𑌿𑌤𑌾𑌮𑌿𑌵𑌰𑍋𑌹𑌿𑌣𑍀𑌮𑍍 ॥ *

𑌅𑌶𑍍𑌰𑍁𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑍁𑌖𑍀𑌂𑌦𑍀𑌨𑌾𑌂 𑌕𑍃𑌶𑌾𑌮𑌨𑌶𑌨𑍇𑌨𑌚 ।
𑌶𑍋𑌕𑌧𑍍𑌯𑌾𑌨𑌪𑌰𑌾𑌂𑌦𑍀𑌨𑌾𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂𑌦𑍁𑌃𑌖𑌪𑌰𑌾𑌯𑌣𑌾𑌮𑍍 ॥ *

𑌪𑍍𑌰𑌿𑌯𑌂𑌜𑌨𑌮𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍀𑌂 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍀𑌂𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌗𑌣𑌮𑍍 ।
𑌸𑍍𑌵𑌗𑌣𑍇𑌨𑌮𑍃𑌗𑍀𑌂𑌹𑍀𑌨𑌾𑌂 𑌶𑍍𑌵𑌗𑌣𑌾𑌭𑌿𑌵𑍃𑌤𑌾𑌮𑌿𑌵 ॥ *

𑌨𑍀𑌲𑌨𑌾𑌗𑌾𑌭𑌯𑌾𑌵𑍇𑌣𑍍𑌯𑌾 𑌜𑌘𑌨𑌂𑌗𑌤𑌯𑍈𑌕𑌯𑌾 ।
𑌨𑍀𑌲𑌯𑌾𑌨𑍀𑌰𑌦𑌾𑌪𑌾𑌯𑍇 𑌵𑌨𑌰𑌾𑌜𑍍𑌯𑌾𑌮𑌹𑍀𑌮𑌿𑌵 ॥ *

𑌸𑍁𑌖𑌾𑌰𑍍𑌹𑌾𑌂𑌦𑍁𑌃𑌖𑌸𑌨𑍍𑌤𑌪𑍍𑌤𑌾𑌂 𑌵𑍍𑌯𑌸𑌨𑌾𑌨𑌾𑌮𑌕𑍋𑌵𑌿𑌦𑌾𑌮𑍍 ।
𑌤𑌾𑌂𑌸𑌮𑍀𑌕𑍍𑌷𑍍𑌯𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑍀 𑌮𑌧𑌿𑌕𑌂𑌮𑌲𑌿𑌨𑌾𑌂𑌕𑍃𑌶𑌾𑌮𑍍 ॥
𑌤𑌰𑍍𑌕𑌯𑌾𑌮𑌾𑌸𑌸𑍀𑌤𑍇𑌤𑌿 𑌕𑌾𑌰𑌣𑍈𑌰𑍁𑌪𑌪𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 । ௨௬

𑌹𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑌾𑌤𑌦𑌾𑌤𑍇𑌨 𑌰𑌕𑍍𑌷𑌸𑌾𑌕𑌾𑌮𑌰𑍂𑌪𑌿𑌣𑌾 ॥
𑌯𑌥𑌾𑌰𑍂𑌪𑌾𑌹𑌿𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌵𑍈 𑌤𑌥𑌾𑌰𑍂𑌪𑍇𑌯𑌮𑌙𑍍𑌗𑌨𑌾 । ()

பிறகு, அழுக்குடையுடுத்து ராக்ஷஸிகள் புடைசூழ உபவாஸத்தாலிளைத்து, பேதைபோல் அடிக்கடி பெருமூச்செறிந்து, வளர்பிறையினுதியில் தெளிவான மதிக்கலை போன்றுளொருத்தி காணப்பட்டாள். 19

மெதுவாய் கண்டுபிடிக்கக்கூடிய ஸௌந்தரிய முற்றவளாய், புகைசூழ்ந்த அக்கினிச்சுவாலைபோல் புழுதி படிந்ததோர் பொன்னுடை யுடுத்தவளாய், அழுக்கடைந்து அலங்காரமின்றி மலரற்ற தாமரையோடை போன்றவளாய், நாணமுற்றவளாய், துயரத்தில் படுகின்றவளாய், மிகவும் வாடினவளாய், தவஞ்செய்பவளாய், அங்காரகக் கிரஹத்தால் பீடிக்கப்பட்ட ரோஹிணி போன்றவளாய், கண்ணீர் நிறைந்த முகத்தினளாய், சோகமும் சிந்தையுமேகதியானவளாய், ஏழையாய், எப்பொழுதும் துயரமே யனுபவிப்பவளாய், அனுகூலமானொருத்தரைக் காணப்பெறுமையோடு அரக்கிகளைக் கூட்டமாய்க் காண்பவளாய், ஆனதுபற்றி, தன்னினத்தை விட்டு நாய்க்கூட்டத்தின் நடுவுபட்ட மான்பேடுபோன்றவளாய், கிருஷ்ணஸர்ப்பம்போல் பின்புறத்தளவு தொங்குகின்ற பின்னலால் சரத்காலத்தில் கறுத்ததோர் வனவரிசையுற்ற பூமிபோல் விளங்குகின்றவளாய், இன்பத்திற்கேற்றவளாய், விசனத்தை அனுபவிக்கத் தெரியாமலிருக்கச்செய்தே துயரத்தில்பட்டு பரிதவிக்கின்றவளாய், விசாலமான கண்களுடையவளாய், மிகவும் அழுக்கடைந்து இளைத்தவளான அவளைக்கண்டு கீழ்ச்சொன்ன குறிகளால் சீதையென்று ஊஹித்துக்கொண்டார். 26½

"அந்நாளில் அவ்வரக்கன் வேற்றுருக்கொண்டு அபஹரித்துச் செல்லும்பொழுது எவ்வித ரூபத்தோடு கண்டோமோ அவ்விதமாகவே இவள் காணப்படுகிறாள்." ()

𑌪𑍂𑌰𑍍𑌣𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌨𑌨𑌾𑌂𑌸𑍁𑌭𑍍𑌰𑍂𑌂 𑌚𑌾𑌰𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌪𑌯𑍋𑌧
𑌰𑌾𑌮𑍍॥ *

𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑍀𑌂𑌪𑍍𑌰𑌭𑌯𑌾𑌦𑍇𑌵𑍀𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌵𑌿𑌤𑌿𑌮𑌿𑌰𑌾𑌦𑌿𑌶𑌃।
𑌤𑌾𑌂𑌨𑍀𑌲𑌕𑍇𑌶𑍀𑌂𑌬𑌿𑌂𑌬𑍋𑌷𑍍𑌠𑍀𑌂 𑌸𑍁𑌮𑌧𑍍𑌯𑌾𑌂𑌸𑍁𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿
𑌤𑌾𑌮𑍍॥ *

𑌸𑍀𑌤𑌾𑌂𑌪𑌦𑍍𑌮𑌪𑌲𑌾𑌶𑌾𑌕𑍍𑌷𑍀𑌂 𑌮𑌨𑍍𑌮𑌥𑌸𑍍𑌯𑌰𑌤𑌿𑌂𑌯𑌥𑌾॥
𑌇𑌷𑍍𑌟𑌾𑌂𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑌜𑌗𑌤𑌃 𑌪𑍂𑌰𑍍𑌣𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑍍𑌰𑌭𑌾𑌮𑌿𑌵॥ *
𑌶𑍋𑌕𑌜𑌾𑌲𑍇𑌨𑌮𑌹𑌤𑌾 𑌵𑌿𑌤𑌤𑍇𑌨𑌨𑌰𑌾𑌜𑌤𑍀𑌮𑍍।
𑌸𑌂𑌸𑌕𑍍𑌤𑌾𑌂𑌧𑍂𑌮𑌜𑌾𑌲𑍇𑌨 𑌶𑌿𑌖𑌾𑌮𑌿𑌵𑌵𑌿𑌭𑌾𑌵𑌸𑍋𑌃॥ *

𑌤𑌾𑌂𑌸𑍍𑌮𑍃𑌤𑍀𑌮𑌿𑌵𑌸𑌂𑌦𑌿𑌗𑍍𑌧𑌾𑌮𑍃𑌦𑍍𑌧𑌿𑌂 𑌨𑌿𑌪𑌤𑌿𑌤𑌾𑌮𑌿𑌵।
𑌵𑌿𑌹𑌤𑌾𑌮𑌿𑌵𑌚𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌮𑌾𑌶𑌾𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌹𑌤𑌾𑌮𑌿𑌵॥ *

𑌸𑍋𑌪𑌸𑌰𑍍𑌗𑌾𑌂𑌯𑌥𑌾𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂𑌸𑌕𑌲𑍁𑌷𑌾𑌮𑌿𑌵।
𑌅𑌭𑍂𑌤𑍇𑌨𑌾𑌪𑌵𑌾𑌦𑍇𑌨 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌂𑌨𑌿𑌪𑌤𑌿𑌤𑌾𑌮𑌿𑌵॥ *

𑌰𑌾𑌮𑍋𑌪𑌰𑍋𑌧𑌵𑍍𑌯𑌥𑌿𑌤𑌾𑌂 𑌰𑌕𑍍𑌷𑍋𑌹𑌰𑌣𑌕𑌰𑍍𑌶𑌿𑌤𑌾𑌮𑍍।
𑌅𑌬𑌲𑌾𑌂𑌮𑍃𑌗𑌶𑌾𑌬𑌾𑌕𑍍𑌷𑍀𑌂 𑌵𑍀𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑌾𑌂𑌤𑌤𑌸𑍍𑌤𑌤𑌃॥

𑌬𑌾𑌷𑍍𑌪𑌾𑌂𑌬𑍁𑌪𑌰𑌿𑌪𑍂𑌰𑍍𑌣𑍇𑌨𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑌕𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌿𑌪𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌾।
𑌵𑌦𑌨𑍇𑌨𑌾𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑍇𑌨 𑌨𑌿𑌶𑍍𑌵𑌸𑌂𑌤𑍀𑌂𑌪𑍁𑌨𑌃𑌪𑍁𑌨𑌃॥

𑌮𑌲𑌪𑌂𑌕𑌧𑌰𑌾𑌂𑌦𑍀𑌨𑌾𑌂 𑌮𑌂𑌡𑌨𑌾𑌰𑍍𑌹𑌾𑌮𑌮𑌂𑌡𑌿𑌤𑌾𑌮𑍍।
𑌪𑍍𑌰𑌭𑌾𑌂𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌰𑌾𑌜𑌸𑍍𑌯 𑌕𑌾𑌲𑌮𑍇𑌘𑍈𑌰𑌿𑌵𑌾𑌵𑍃𑌤𑌾𑌮𑍍॥ *
𑌤𑌸𑍍𑌯𑌸𑌂𑌦𑌿𑌦𑌿𑌹𑍇𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌮𑍁𑌹𑍁𑌸𑍍𑌸𑍀𑌤𑌾𑌂𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍁।
𑌆𑌮𑍍𑌨𑌾𑌯𑌾𑌨𑌾𑌮𑌯𑍋𑌗𑍇𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂𑌪𑍍𑌰𑌶𑌿𑌥𑌿𑌲𑌾𑌮𑌿𑌵॥ ௩௮

நிறைமதி முகமும், நற்புருவங்களும், அழகாய்த் திரண்ட தனங்களும், திசையெங்கும் தன்னொளியா லிருளகலச் செய்பவளாய், கருங்குழலும் கோவை யிதழும், சீரிடையும் செப்பமுமுடையளாய், தாமரையிதழ்க் கண்களுடன் மன்மதன் தேவியான ரதிபோன்றவளாய். பருவத்தில் நிலவுபோல் அனைத்துலகுக்கு மினியளாய், நியமம்பூண்ட தவசிபோல் புவியிலிருப்புற்ற திருமேனியளாய், நாகராஜன் தேவிபோல் பயந்து மிகவும் பெருமூச்செறிபவளாய், புகைசூழ்ந்த தீயொளிபோல் மிகவும் அதிகமான சோகஜாலத்திற் கிலக்காகி சோபையற்றவளாய், ஸந்தேஹந் தருகின்ற ஸ்மிருதி வசனம்போலும், குறைவுற்ற செல்வம்போலும், நம்பிக்கையற்ற சிரத்தைபோலும், பயனற்ற ஆசைபோலும், தடையுற்ற காரியஸித்திபோலும், கலக்கமுற்ற மதிபோலும், இல்லாத பழியினால் இழிவுற்ற புகழ்போலும், இராமனைச் சேரத் தடைபட்டு விசனமுற்றவளாய், அரக்கர விழுப்புண்டு வருத்தமுற்றவளாய், பெண்மை தோற்றும்படி மான் பேடுபோல் மிரண்டு அங்கு மிங்கும் விழிப்பவளாய், கண்ணீர் நிறைந்து கறுத்த கண்களும் வளைவுற்ற விமைகளும் பொருந்தி கலக்கமுற்ற முகத்தோடு அடிக்கடி மூச்செறிபவளாய், புழுதி படிந்தவளாய், ஏழையாய், அலங்காரத்திற் கேற்றிருந்து அலங்காரமற்றவளாய், கார்மேகத்திடைப்பட்ட சந்திரன் ஒளிபோலும், அப்பியாஸந் தவறிப்போய் கலகலத்த கல்விபோலும் தெம்படுகின்ற ஸீதையைக் காண அவர் மனதில் ஸந்தேஹமுண்டாயிற்று. 38

து:கேந பா பா யே ஸீ தாம் ஹ நா ஶா ந நம் க்ருதா ।
ஸம்க்ஷாரோணயயா ஹீ நாம் வாசகேஷு ராஜாம் மதா ॥ ௧௯

தாம் ஸர்வ க்ஷ்விஶாலாக்ஷீம் ராஜவர்த்மநி ஸம்ஸ்திதா ।
த: ரூபா ஸஸீ தேதி காரணேஶ்வரவாதிபி: ॥ ௨௦

தேவதேஹ்யா யா நி வாம்ஶேஷ தத்ராராஜோ ந்வக்ஷிதாயக ॥
தாந்யாஹரண ஜாலாநி ஶாவாஶோஹீந்யக்ஷயக ॥ *
ஸர்க்ருதளாண ரூவேஷ ள வஶ்வம் ஷ ள வஸ ஸம்ஸ்திதள ।
மணிவித்ராணி ஹஸ்தவஷாஹரணாநிவ ॥
ஶ்யாமோநிதிரய க்த்வா த்யாஸம்ஸ்யா நவ ஜிவ । ௨௧

தாநேவேதாநிமேந்ஹம் யாநி ராஜோ ந்வக்ஷிதாயக ॥ ()

தத்யாந்வஹீநாநி தாந்ஹம் நாவ க்ஷயே ।
யாந்யஸ்யா நாவஹீநாநி தாநீமாநி நஸம்ஶய: ॥ ௨௨

வீதம் கநக வட்டாஹம் ஸ்ரஸ்தம் தச ஸநம் ஶாஹ ।
உத்தரீயம் நமாஸ்த்ம் கஷா த்ருஷ்டம் வ்ருவம் மதே: ॥ *
ஹரிஷணாநிவ மேவ்யாநி த்ருஷ்டா நியாரணீ தமே ।
கநயேவாவிஜாநி ஸ நவம் திலோம் திவ । ௨௩

பிறகு, சாஸ்திர மரியாதைக் குட்படாத சப்தம் (தன்பொருளைக் காட்டாது) வேறு பொருளைத் தருவது போல் அலங்கார ஹீனையா யிருக்கின்ற தேவியை, ஹனுமான் மிகவருத்தப்பட்டு சீதையென் றறிந்துகொண்டார்.

பரந்த கண்கள் படைத்த அக்கோதிலா ராஜன் குமரியை அனுமான் கண்டு, இவள்தான் சீதை யென்கைக்கு வேண்டுங் காரணங்கொண்டு ஊஹிக்கத் தொடங்கினர்.

வைதேஹியி னங்கங்களி லெங்கெந்த ஆபரணங்களிருப்பதாக இராமன் அப்பொழுது சொன்னாரோ அவை யாவையும் கிளையில் விளங்கக்கண்டார். அவை யாவன:—நன்றாய்ச்செய்த குண்டலங்களும், கர்ணப்பூக்களும், நெடுநா ளணிந்திருந்தமையால் கறுத்து ரத்தினமும் பவழமும் கோத்து விசித்திரமான கைக் கடகங்களும். 42½

"இராம னெவைகளைச் சொன்னாரோ அவையே இவைக" ளென்று நினைக்கின்றேன். 43

அங்கு (ரிசியமூகமலையில்) எவைகள் விழுந்தனவோ அவை இங்கு காணப்படவில்லை; அங்கு விழாதவைகளெவையோ அவை இங்கு காணப்படுகின்றன; அதில் ஸந்தேஹமில்லை. 44

அக்காலத்தில் பொற்பட்டம்போ லழகாய் உத்தரீயமொன்று வானரர் காணும்பொழுது மரத்தில் தொத்திக் கிடந்தது. அப்படியே இவள் கட்டிப் பொகட்ட முக்கியமான பெரிய வாபரணங்களும் ஒலிசெய்துக் கொண்டு தரையில் வீழ்ந்து காணப்பட்டன. 46

𑌇𑌦𑌂 𑌵𑌿𑌰𑌗𑍃𑌹𑍀𑌤𑌸𑍍𑌯𑌾 𑌅𑌸𑌂𑌕𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌮𑍍।
𑌤𑌯𑌾𑌵𑌿𑌨𑌾𑌕𑍃𑌤𑌂 𑌤𑌪𑍁𑌣𑌂 𑌤𑌥𑌾𑌶𑍍𑌰𑍀𑌰𑍍𑌹𑍍𑌯𑍇𑌤𑌰𑌾𑌜𑍍𑌞॥ ௪௭

𑌇𑌯𑌂𑌕𑌨𑌕𑌵𑌰𑍍𑌣𑌾𑌙𑍍𑌗𑍀 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯𑌮𑌹𑌿𑌷𑍀𑌪𑍍𑌰𑌿𑌯𑌾।
𑌪𑍍𑌰𑌣𑌷𑍍𑌟𑌾𑌪𑌿𑌸𑌤𑍀𑌯𑌸𑍍𑌯 𑌮𑌨𑌸𑍋 𑌨𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌤𑌿॥ ௪௮

𑌇𑌯𑌂𑌸𑌾𑌯𑌤𑍍𑌕𑍃𑌤𑍇𑌰𑌾𑌮𑌃 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑌿𑌃𑌪𑌰𑌿𑌤𑌪𑍍𑌯𑌤𑍇।
𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑍇𑌨𑌾𑌨𑍃𑌶𑌂𑌸𑍍𑌯𑍇𑌨 𑌶𑍋𑌕𑍇𑌨𑌮𑌦𑌨𑍇𑌨𑌚॥ ௪௯

𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌪𑍍𑌰𑌣𑌷𑍍𑌟𑍇𑌤𑌿𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌾𑌦𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍇𑌤𑍍𑌯𑌾𑌨𑍃𑌶𑌂𑌸𑍍𑌯𑌤𑌃
𑌪𑌤𑍍𑌨𑍀𑌨𑌷𑍍𑌟𑍇𑌤𑌿𑌶𑍋𑌕𑍇𑌨 𑌪𑍍𑌰𑌿𑌯𑍇𑌤𑌿𑌮𑌦𑌨𑍇𑌨𑌚॥ ௫௦

𑌅𑌸𑍍𑌯𑌾𑌦𑍇𑌵𑍍𑌯𑌾𑌯𑌥𑌾𑌰𑍂𑌪𑌮𑌙𑍍𑌗𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌙𑍍𑌗𑌸𑍌𑌷𑍍𑌠𑌵𑌮𑍍।
𑌰𑌾𑌮𑌸𑍍𑌯𑌚𑌯𑌥𑌾𑌰𑍂𑌪𑌂 𑌤𑌸𑍍𑌯𑍇𑌯𑌮𑌸𑌿𑌤𑍇𑌕𑍍𑌷𑌣𑌾॥ ௫௧

𑌅𑌸𑍍𑌯𑌾𑌦𑍇𑌵𑍍𑌯𑌾𑌮𑌨𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌿𑌂 𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑌚𑌾𑌸𑍍𑌯𑌾𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌮𑍍।
𑌤𑍇𑌨𑍇𑌯𑌂𑌸𑌚𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑌮𑌪𑌿𑌜𑍀𑌵𑌤𑌿॥ ௫௨

இந்த வஸ்திரமோ நெடுநாளா யுடுத்தப்பட்டு கசங்கிக் கிடந்ததென்றாலும் அதைப்போலவே வருணமும் செயலு முடைத்தா யிருக்கிறது. 47

கைத்தப்பிப்போயிருந்தும் யாதொருத்தி யிராமன் மனதை விட்டு நீங்காம லிருக்கின்றாளோ, இராமன தன் பிற்குரியப் பட்டத்தரசியான அன்னவ ளீதோ பொன் வர்ணமாய்க் காணப்படுகிறாள். 48

எவளை யுத்தேசித் திராமன், கருணை, தண்ணளி, சோகம், வேட்கை யென்கிற நான்கினோடும் பரிதவிக்கின்றாரோ அவள்தா னிவள். 49

பெண்ணாய்ப் பிறந்தவளை ஆபத்தில் கைநழுவ விட்டோமென்று கருணையாலும், நம்மை யடுத்தவளைக் காவா தொழிந்தோமென்று தண்ணளியாலும், உடலிற் பாதியான தேவியை யிழந்தோமென்கிற சோகத்தாலும், அன்பிற் குரியாளைக் கிடைக்கப் பெற்றிலோ மென்கிற வேட்கையாலும் பரிதவிக்கின்றார். 50

இத்தேவியினது அங்க அவயவங்களின் செப்பமெப்படியோ அப்படியே யிராமனுக்கும் காண்கின்றது; ஆதலின் அன்னவர்க்கே இந்த மையகண்ணா ளுரித்தாகின்றாள். 51

இத்தேவியின் திருவுள்ளம் அவ்விரிடத்தும் அன்னவர் திருவுள்ள மிவளிடத்தும் நிலைபெற்றிருக்கின்றன; ஆகவே தான் முகூர்த்தமாகிலு முயிர்த்திருக்கிறார்கள். ()

துஷ்கரம் க்ருதவான் ராமோ ஹீனோ யதனயா ப்ரபு:।
தாரயத்யாத்மனோ தேஹம் ந ஶோகேனாவஸீததி॥ ௫௨

துஷ்கரம் குருதே ராமோ ய இமாம் மத்தகாஶினீம்।
ஸீதாம் வினா மஹாபாஹுர் முஹூர்தமபி ஜீவதி॥ ௫௩

ஏவம் ஸீதாம் ததா த்ருஷ்ட்வா ஹ்ருஷ்ட: பவனஸம்பவ:।
ஜகாம மனஸா ராமம் ப்ரஶஶம்ஸ ச தம் ப்ரபும்॥ ௫௪

இதி ஶ்ரீ ஸுந்தரகாண்டே - பஞ்சதஶஸ்ஸர்க:

செயற்கரிய செயலைச் செய்தாரையா இராமபிரான்! இவளைப் பிரிந்தும் தரிக்கவல்லாரன்ரூே! அதற்குமேல் போகத்திற்கிட்டுவைத்த சரீரம் சோகத்தை யனுபவிக்கச் செய்தே அதைவிட்டொழிக்கலாயிருக்க அதுசெய்யாது அதையும் சுமக்கிருரன்றே! சிதிலமா யழிந்து போகைக் குத் துயரந்தான் போந்ததில்லையோ! 53

கூடாத தொன்றைச் செய்கிரு ரிராமபிரான்:— பெண்கள் நாயகமான இந்த ஸீதையைப் பிரிந்து ஒரு முகூர்த்தமும் ஜீவிக்க வரிதாயிருக்க அது செய்கிருரே!"

இவ்வாறு ஸீதையைக்கண்டு களிகொண்ட வாயு மைந்தன், அப்பொழுதே பிரபுவான ராமனை மனதினுல் சென்றடைந்து புகழவும் புகழ்ந்தார். 55

பதினைந்தாம் ஸர்க்கம் முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀 𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 - 𑌷𑍋𑌡𑌶𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃

𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌯𑌤𑍁𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌤𑌵𑍍𑌯𑌾𑌂 𑌸𑍀𑌤𑌾𑌂𑌤𑌾𑌂𑌹𑌰𑌿𑌪𑍁𑌙𑍍𑌗𑌵𑌃॥
𑌗𑍁𑌣𑌾𑌭𑌿𑌰𑌾𑌮𑌂𑌰𑌾𑌮𑌂𑌚 𑌪𑍁𑌨𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌤𑌾𑌪𑌰𑍋𑌽𑌭𑌵𑌤𑍍॥ ௧

𑌸𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑌮𑌿𑌵𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌾 𑌬𑌾𑌷𑍍𑌪𑌪𑌰𑍍𑌯𑌾𑌕𑍁𑌲𑍇𑌕𑍍𑌷𑌣𑌃।
𑌸𑍀𑌤𑌾𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯𑌤𑍇𑌜𑌸𑍍𑌵𑍀 𑌹𑌨𑍂𑌮𑌾𑌨𑍍𑌵𑌿𑌲𑌲𑌾𑌪𑌹॥ ௨

𑌮𑌾𑌨𑍍𑌯𑌾𑌗𑍁𑌰𑍁𑌵𑌿𑌨𑍀𑌤𑌸𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌸𑍍𑌯𑌗𑍁𑌰𑍁𑌪𑍍𑌰𑌿𑌯𑌾।
𑌯𑌦𑌿𑌸𑍀𑌤𑌾𑌪𑌿𑌦𑍁𑌃𑌖𑌾𑌰𑍍𑌤𑌾 𑌕𑌾𑌲𑍋𑌹𑌿𑌦𑍁𑌰𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑌃॥ ௩

𑌰𑌾𑌮𑌸𑍍𑌯𑌵𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌜𑍍𑌞𑌾 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌸𑍍𑌯𑌚𑌧𑍀𑌮𑌤𑌃।
𑌨𑌾𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂𑌕𑍍𑌷𑍁𑌭𑍍𑌯𑌤𑍇𑌦𑍇𑌵𑍀 𑌗𑌙𑍍𑌗𑍇𑌵𑌜𑌲𑌦𑌾𑌗𑌮𑍇॥ ௪

𑌤𑍁𑌲𑍍𑌯𑌶𑍀𑌲𑌵𑌯𑍋𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌂 𑌤𑍁𑌲𑍍𑌯𑌾𑌭𑌿𑌜𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌮𑍍।
𑌰𑌾𑌘𑌵𑍋𑌽𑌰𑍍𑌹𑌤𑌿𑌵𑍈𑌦𑍇𑌹𑍀𑌂 𑌤𑌂𑌚𑍇𑌯𑌮𑌸𑌿𑌤𑍇𑌕𑍍𑌷𑌣𑌾॥ ௫

பதினாறாம் ஸர்க்கம்

இவ்வாறு ஹனுமான், புகழத்தகுந்த ஸீதையையும் குணக்கடலா யினிய ராமனையும் புகழ்ந்தவராய் மீளவும் சிந்திக்கத் தொடங்கினார். 1

உரிய விஷயத்தில் உரத்த பக்தியுடையவரான ஹனுமான் இப்படி சீதையைப்பற்றிச் சிறிதுநேரம் சிந்தித்திருந்து கண்ணும் கண்ணீருமாய் அழத்தொடங்கினார். 2

வஸிஷ்டாதி குருக்களிடத்தில் படிந்து பண்பட்டிருக்கும் இலக்குமனாருடைய பூஜைக்குப் பாத்திரையாய், பெரியரான ராகவன் அன்பிற்குரியளாயிருக்கும் அயோனிஜையான பிராட்டியும் துயரில் பட்டாளென்றால், காலத்தை யொருவருங் கடக்கவல்லா ரல்லரென்பது சரியாயிற்றே! 3

இராமன் முயற்சியும் புத்திமானான லக்ஷ்மணன் எழிலும் தெரிந்தவளாகையால் பிராட்டி, (மழைகாலத்தில் புதுவெள்ளத்தால் கங்கைபோல்) மிகவும் கலங்கினாளில்லை. 4

தன்மை, பருவம், நடக்கை, நற்பிறவி, லக்ஷணம் இவைகளில் ஒத்திருக்கின்ற இந்த மையகண்ணாளான பிராட்டிக்கு இராகவன் தகுந்தவர்; அன்னவர்க்குமிவள் தக்கவள். 5

𑌤𑌾𑌂𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌨𑌵𑌹𑍇𑌮𑌾𑌭𑌾𑌂 𑌲𑍋𑌕𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌮𑌿𑌵𑌶𑍍𑌰𑌿𑌯𑌮𑍍।
𑌜𑌗𑌾𑌮𑌮𑌨𑌸𑌾𑌰𑌾𑌮𑌂 𑌵𑌚𑌨𑌂𑌚𑍇𑌦𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍॥ ௬

𑌤𑌸𑍍𑌯𑌾𑌹𑍇𑌤𑍋𑌰𑍍𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑍍𑌯𑌾 𑌹𑌤𑍋𑌵𑌾𑌲𑍀𑌮𑌹𑌾𑌬𑌲𑌃
𑌰𑌾𑌵𑌣𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑍋𑌵𑍀𑌰𑍍𑌯𑍇 𑌕𑌬𑌨𑍍𑌧𑌶𑍍𑌚𑌨𑌿𑌪𑌾𑌤𑌿𑌤𑌃॥ ௭

𑌵𑌿𑌰𑌾𑌧𑌶𑍍𑌚𑌹𑌤𑌸𑍍𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑍇 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍋𑌭𑍀𑌮𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑌃।
𑌵𑌨𑍇𑌰𑌾𑌮𑍇𑌣𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍇𑌣𑍇𑌵𑌶𑌂𑌬𑌰𑌃॥ ௮

𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿 𑌰𑌕𑍍𑌷𑌸𑌾𑌂𑌭𑍀𑌮𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑍍।
𑌨𑌿𑌹𑌤𑌾𑌨𑌿𑌜𑌨𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌶𑌰𑍈𑌰𑌗𑍍𑌨𑌿𑌶𑌿𑌖𑍋𑌪𑌮𑍈𑌃॥ ௯

𑌖𑌰𑌶𑍍𑌚𑌨𑌿𑌹𑌤𑌸𑍍𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑍇 𑌤𑍍𑌰𑌿𑌶𑌿𑌰𑌾𑌶𑍍𑌚𑌨𑌿𑌪𑌾𑌤𑌿𑌤𑌃।
𑌦𑍂𑌷𑌣𑌶𑍍𑌚𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌾 𑌰𑌾𑌮𑍇𑌣𑌵𑌿𑌦𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌾॥ ௧௦

𑌐𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌂𑌵𑌾𑌨𑌰𑌾𑌣𑌾𑌂𑌚 𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌂𑌵𑌾𑌲𑌿𑌪𑌾𑌲𑌿𑌤𑌮𑍍।
𑌅𑌸𑍍𑌯𑌾𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑍇𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌵𑌾𑌨𑍍𑌲𑍋𑌕𑌸𑌤𑍍𑌕𑍃𑌤𑌮𑍍॥ ௧௧

𑌸𑌾𑌗𑌰𑌶𑍍𑌚𑌮𑌯𑌾 𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍𑌨𑌦𑌨𑌦𑍀𑌪𑌤𑌿𑌃।
𑌅𑌸𑍍𑌯𑌾𑌹𑍇𑌤𑍋𑌰𑍍𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌃𑌪𑍁𑌰𑍀𑌚𑍇𑌯𑌂𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌾॥

𑌯𑌦𑌿𑌰𑌾𑌮𑌸𑍍𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾𑌂 𑌮𑍇𑌦𑌿𑌨𑍀𑌂𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌤𑌯𑍇𑌤𑍍।
𑌅𑌸𑍍𑌯𑌾𑌃𑌕𑍃𑌤𑍇𑌜𑌗𑌚𑍍𑌚𑌾𑌪𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌵𑌮𑍇𑌮𑌤𑌿𑌃॥ ௧௩

உலகத்திற் கினியளான திருமகள் போன்றவளாய் புடமிட்ட தங்கம்போல் நிறத்தளான தேவியைக்கண்டதும் இராகவனை மனதினால் கிட்டி இவ்வார்த்தையு முரைக்கலானார். 6

பரந்த கண்கள்படைத்த இவள் நிமித்தமாய் மஹா பலவானான வாலி கொல்லப்பட்டான்; வீரியத்தில் இராவணனையொத்த கபந்தனும் பட்டான். 7

கடுமிடுக்கனான விராதனும், (மஹேந்திரனோடு சம்பரன் போராடினாற்போல்) இராமனுடன் வனத்தில் பொருது அமரில் கெட்டான். 8

கடுந்தொழில் புரியும் பதினாலாயிர மரக்கரும், ஜனஸ்த்தானத்தில் அக்கினிச் சுவாலைபோன்ற பாணங்களால் நாசப்பட்டார்கள். 9

கரனும் பட்டான்; அப்படியே திரிசிரனும் மாய்ந்தான்; பெருமிடுக்கனான தூஷணனும் மருமக்ஞரான ராகவனால் சாவுண்டான். 10

வாலி பரிபாலித்துவந்த வானர ராச்சிய மொருவர்க்குக் கிட்டுவதோ? அதையும் சுக்கிரீவமஹாராஜன் இவள் நிமித்தமாய் உலகெங்கும் புகழப் பெற்றுவிட்டார். 11

விசால நேத்திரையான இவளுக்காக யானும் (நதிகளுக்கரசாய் கம்பீரமான) நெடுங்கடலைத்தாண்டிவந்து இந்நகரத்தையும் ஆராய்ந்தேன். 12

இதுதான்பற்றுமோ? இராம னிவளுக்காக (கடலுடுத்த பூமியோ அல்லது புவனமோ) அதைத் தலைகீழாய்ச் செய்தாலும் யுக்த மென்பதே என்றன் சிந்தை.

𑌰𑌾𑌜𑍍𑌯𑌂𑌵𑌾 𑌤𑍍𑌰𑌿𑌷𑍁𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌸𑍀𑌤𑌾𑌵𑌾𑌜𑌨𑌕𑌾𑌤𑍍𑌮𑌜𑌾 ।
𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌰𑌾𑌜𑍍𑌯𑌂𑌸𑌕𑌲𑌂 𑌸𑍀𑌤𑌾𑌯𑌾𑌨𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍𑌕𑌲𑌾𑌮𑍍 ॥

𑌇𑌯𑌂𑌸𑌾𑌧𑌰𑍍𑌮𑌶𑍀𑌲𑌸𑍍𑌯 𑌮𑍈𑌥𑌿𑌲𑌸𑍍𑌯𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।
𑌸𑍁𑌤𑌾𑌜𑌨𑌕𑌰𑌾𑌜𑌸𑍍𑌯 𑌸𑍀𑌤𑌾𑌭𑌰𑍍𑌤𑍃𑌦𑍃𑌢𑌵𑍍𑌰𑌤𑌾 ॥ *

𑌉𑌤𑍍𑌥𑌿𑌤𑌾𑌮𑍇𑌦𑌿𑌨𑍀𑌂𑌭𑌿𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇𑌹𑌲𑌮𑍁𑌖𑌕𑍍𑌷𑌤𑍇 ।
𑌪𑌦𑍍𑌮𑌰𑍇𑌣𑍁𑌨𑌿𑌭𑍈𑌃𑌕𑍀𑌰𑍍𑌣𑌾𑌶𑍁𑌭𑍈𑌃 𑌕𑍇𑌦𑌾𑌰𑌪𑌾𑌂𑌸𑍁
𑌭𑌿𑌃 ॥ ௧௬

𑌵𑌿𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌯𑌶𑍀𑌲𑌸𑍍𑌯 𑌸𑌂𑌯𑍁𑌗𑍇𑌷𑍍𑌵𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑌃 ।
𑌸𑍍𑌨𑍁𑌷𑌾𑌦𑌶𑌰𑌥𑌸𑍍𑌯𑍈𑌷𑌾 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌾𑌰𑌾𑌜𑍍𑌞𑍋𑌯𑌶𑌸𑍍𑌵𑌿𑌨𑍀 ॥()

𑌧𑌰𑍍𑌮𑌜𑍍𑌞𑌸𑍍𑌯𑌕𑍃𑌤𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯𑌵𑌿𑌦𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।
𑌇𑌯𑌂𑌸𑌾𑌦𑌯𑌿𑌤𑌾𑌭𑌾𑌰𑍍𑌯𑌾 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌵𑌶𑌮𑌾𑌗𑌤𑌾 ॥ ௧௮

𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌭𑍋𑌗𑌾𑌨𑍍𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌭𑌰𑍍𑌤𑍃𑌸𑍍𑌨𑍇𑌹𑌬𑌲𑌾𑌤𑍍𑌕𑍃𑌤𑌾 ।
𑌅𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑍁𑌃𑌖𑌾𑌨𑌿 𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑌿𑌰𑍍𑌜𑌨𑌂𑌵𑌨𑌮𑍍 ॥ *

𑌸𑌂𑌤𑍁𑌷𑍍𑌟𑌾𑌫𑌲𑌮𑍂𑌲𑍇𑌷𑍁 𑌭𑌰𑍍𑌤𑍃𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌣𑍇𑌰𑌤𑌾 ।
𑌯𑌾𑌪𑌰𑌾𑌂𑌭𑌜𑌤𑍇 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌂 𑌵𑌨𑍇𑌪𑌿𑌭𑌵𑌨𑍇𑌯𑌥𑌾 ॥ *

𑌸𑍇𑌯𑌂𑌕𑌨𑌕𑌵𑌰𑍍𑌣𑌾𑌙𑍍𑌗𑍀 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂𑌸𑍁𑌸𑍍𑌮𑌿𑌤𑌭𑌾𑌷𑌿𑌣𑍀 ।
𑌸𑌹𑌤𑍇𑌯𑌾𑌤𑌨𑌾𑌮𑍇𑌤𑌾𑌮𑌨𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌮𑌭𑌾𑌗𑌿𑌨𑍀 ॥ ௨௧

இம் மூவுலகங்களினு முள்ள ராஜ்ஜியம் பெரிதா, பிராட்டி பெரியளாவென்று பார்க்கப் புக்கால், மூவுலகத்துமுள்ள ராஜ்ஜியமுழுதும் சீதையின் ஓரம்சத்திற் கீடுசொல்லாது. 14

தருமசீலனாய் மிதிலையர்கோனான அந்த ஜனகரென்னும் மஹாத்மாவுக்குப் பெண்ணாய், பதியினிடத்தில், திடமான விரதம் பூண்ட இவள், புவியைப் பிளந்து கொண்டு கலப்பைச்சாலையி னின்றும் தாமரைத் துகள் போன்ற புழுதிபடிந்து தோன்றினாள். 16

விக்கிரமசாலியாய், நல்லொழுக்கம் பூண்டவராய், யுத்தகளத்தினின்றும் திரும்பாத தீரனான தசரதற்கு இந்த கீர்த்திமதி மூத்த மருமகள். 17

தருமக்ஞனாய் கிருதக்ஞனாய் பிரஸித்தனான ராமபிரானுக்கு உயிர்த்துணையான ப்ரிய பாரியை; இத்தகைத்த இவள் ராக்ஷஸிகள் வசத்தி லகப்படடாள். ஐயோ! 18

பர்த்தாவினிடத்தில் பிரேமம் பிடித்திழுக்கவே ஸகல போகங்களையும் திருணமாயெண்ணி துக்கங்களை யொருபொருட்டா யெண்ணாமல் நிர்ஜனமான வனத்தில் வந்து புகுந்தவளாய், காய்கிழங்குகளைக்கொண்டு திருப்தியடைந்து பர்த்தாவின் பணிவிடையில் ஊன்றியவளாய், வனத்திலுங்கூட அரமனையிற்போல், விசேஷ அன்பு பாராட்டினாள் யாவள், (பொன்னிறமேனியளாய் எப்பொழுதும் புன் சிரிப்புடன் பாஷிக்கின்றவளாய், துயரத்தை யனுபவித் தறியாதவளான) அன்னவள், இதோ இவ்விதமான யாதனையை அனுபவிக்கின்றாள். 21

𑌇𑌮𑌾𑌂 𑌤𑍁 𑌶𑍀𑌲𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌾𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌤𑌿 𑌰𑌾𑌘𑌵𑌃।
𑌰𑌾𑌵𑌣𑍇𑌨 𑌪𑍍𑌰𑌮𑌥𑌿𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌾𑌮𑌿𑌵 𑌪𑌿𑌪𑌾𑌸𑌿𑌤𑌃॥ ௨௨

𑌅𑌸𑍍𑌯𑌾 𑌨𑍂𑌨𑌂 𑌪𑍁𑌨𑌰𑍍𑌲𑌾𑌭𑌾𑌦𑍍 𑌰𑌾𑌘𑌵𑌃 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌮𑍇𑌷𑍍𑌯𑌤𑌿।
𑌰𑌾𑌜𑌾 𑌰𑌾𑌜𑍍𑌯𑌪𑌰𑌿𑌭𑍍𑌰𑌷𑍍𑌟𑌃 𑌪𑍁𑌨𑌃𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑍇𑌵 𑌮𑍇𑌦𑌿𑌨𑍀𑌮𑍍॥ ௨௩

𑌕𑌾𑌮𑌭𑍋𑌗𑍈𑌃 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌾 𑌹𑍀𑌨𑌾 𑌬𑌨𑍍𑌧𑍁𑌜𑌨𑍇𑌨 𑌚।
𑌧𑌾𑌰𑌯𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍋 𑌦𑍇𑌹𑌂 𑌤𑌤𑍍𑌸𑌮𑌾𑌗𑌮𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌿𑌣𑍀॥ ௨௪

𑌨𑍈𑌷𑌾 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑍋 𑌨𑍇𑌮𑌾𑌨𑍍𑌪𑍁𑌷𑍍𑌪𑌫𑌲𑌦𑍍𑌰𑍁
𑌮𑌾𑌨𑍍। 𑌏𑌕𑌸𑍍𑌥𑌹𑍃𑌦𑌯𑌾 𑌨𑍂𑌨𑌂 𑌰𑌾𑌮𑌮𑍇𑌵𑌾𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌤𑌿॥ ()

𑌭𑌰𑍍𑌤𑌾 𑌨𑌾𑌮 𑌪𑌰𑌂 𑌨𑌾𑌰𑍍𑌯𑌾 𑌭𑍂𑌷𑌣𑌂 𑌭𑍂𑌷𑌣𑌾𑌦𑌪𑌿।
𑌏𑌷𑌾 𑌤𑍁 𑌰𑌹𑌿𑌤𑌾 𑌤𑍇𑌨 𑌭𑍂𑌷𑌣𑌾𑌰𑍍𑌹𑌾 𑌨 𑌶𑍋𑌭𑌤𑍇॥

𑌦𑍁𑌷𑍍𑌕𑌰𑌂 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌰𑌾𑌮𑍋 𑌹𑍀𑌨𑍋 𑌯𑌦𑌨𑌯𑌾 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃।
𑌧𑌾𑌰𑌯𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍋 𑌦𑍇𑌹𑌂 𑌨 𑌦𑍁𑌃𑌖𑍇𑌨𑌾𑌵𑌸𑍀𑌦𑌤𑌿॥ ௨௭

𑌇𑌮𑌾𑌮𑌸𑌿𑌤𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌂 𑌶𑌤𑌪𑌤𑍍𑌰𑌨𑌿𑌭𑍇𑌕𑍍𑌷𑌣𑌾𑌮𑍍।
𑌸𑍁𑌖𑌾𑌰𑍍𑌹𑌾𑌂 𑌦𑍁𑌃𑌖𑌿𑌤𑌾𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌮𑌮𑌾𑌪𑌿 𑌵𑍍𑌯𑌥𑌿𑌤𑌂 𑌮𑌨𑌃॥()

இராவணனால் கொண்டுவரப்பட்டு நன்னெறியில் தவறாத இன்னவளை (தண்ணீர்ப்பந்தலைக் கண்ட தாக மெடுத்தவன்போல்) இராகவன் காண வடுக்கும். 22

இழந்துபோன செல்வத்தை மீளவும் பெற்ற வரசன் போல் இராகவன் இவளை மீண்டும் பெறுவதனால் நிச்சய மாய் சந்தோஷமுறுவர். 23

இஷ்டமான போகங்களையும் பந்துஜனங்களையுமிழந் தும் இவள் தன் தேகத்தைத் தரிப்பதெல்லாம் மீளவும் அவரைப் பெறுவோமென்கிற ஆசை. 24

இவள் இந்த ராக்ஷஸிகளையாவது கனியும் மலரு மான மரங்களையாவது காண்பவளல்ல; மற்றப்படி தன் மனதை இராமனுக் கெழுதிக்கொடுத்து நிச்சயமாய் அவ ரையே நாடியிருக்கிறாள். 25

மாதர்களுக்கு அணிகளெல்லாவற்றிலும் புருஷன் சிறந்த ஆணியாகும்; பூஷணத்துக் கேற்றவளான இவள் அந்த நாயகனென்னும் பூஷணமின்றி விளங்குகிறாளில்லை.

இராமன் செயற்கரிய செயலைச் செய்கிறார்:- இவளை யொழிந்து சரீரத்தைத் தரிக்கிறார்; தன்னை யழித்துக் கொள்வதற்கு வேண்டும் துயரமிருந்தும் அது செய்யாம லிருக்கின்றார். 27

கருங்குழலும் மலர்க்கண்ணு முடையளாய், இன்பத் திற் கேற்றிருந்து துன்பத்தை யனுபவிக்கின்ற இவளைக் கண்டு, இடங்கை வலங்கை தெரியாதி விலங்காய்ப்பிறந்த வெனக்குக்கூட மனம் கொதிக்கின்றதே! (பரம தயாளு வான இராமனுக் கென்னாகவேண்டும்.) 28

𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌕𑍍𑌷𑌮𑌾𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑌸𑌨𑍍𑌨𑌿𑌭𑌾𑌕𑍍𑌷𑍀 𑌯𑌾𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌰𑌾𑌘𑌵
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑍍। 𑌸𑌾𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌭𑌿𑌰𑍍𑌵𑌿𑌕𑍃𑌤𑍇𑌕𑍍𑌷𑌣𑌾𑌭𑌿𑌃 𑌸𑌂
𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑍃𑌕𑍍𑌷𑌮𑍂𑌲𑍇॥ ௨௯

𑌹𑌿𑌮𑌹𑌤𑌨𑌲𑌿𑌨𑍀𑌵𑌨𑌷𑍍𑌟𑌶𑍋𑌭𑌾 𑌵𑍍𑌯𑌸𑌨𑌪𑌰𑌂𑌪𑌰
𑌯𑌾𑌤𑌿𑌪𑍀𑌡𑍍𑌯𑌮𑌾𑌨𑌾। 𑌸𑌹𑌚𑌰𑌰𑌹𑌿𑌤𑍇𑌵𑌚𑌕𑍍𑌰𑌵𑌾𑌕𑍀𑌜𑌨𑌕𑌸𑍁
𑌤𑌾𑌕𑍃𑌪𑌣𑌾𑌂𑌦𑌶𑌾𑌂𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌾॥ ௩௦

𑌅𑌸𑍍𑌯𑌾𑌹𑌿𑌪𑍁𑌷𑍍𑌪𑌾𑌵𑌨𑌤𑌾𑌗𑍍𑌰𑌶𑌾𑌖𑌾 𑌶𑍋𑌕𑌂𑌦𑍃𑌢𑌂
𑌵𑍈𑌜𑌨𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌶𑍋𑌕𑌾𑌃। 𑌹𑌿𑌮𑌵𑍍𑌯𑌪𑌾𑌯𑍇𑌨𑌚𑌮𑌨𑍍𑌦𑌰𑌶𑍍𑌮𑌿 𑌰
𑌭𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌿𑌤𑍋𑌨𑍈𑌕𑌸𑌹𑌸𑍍𑌰𑌰𑌶𑍍𑌮𑌿𑌃॥ ௩௧

𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌮𑌰𑍍𑌥𑌂𑌕𑌪𑌿𑌰𑌨𑍍𑌵𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌸𑍀𑌤𑍇𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌵𑌨𑌿
𑌵𑌿𑌷𑍍𑌟𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃𑌸𑌂𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌿𑌷𑌸𑌾𑌦𑌵𑍃𑌕𑍍𑌷𑍇 𑌬𑌲𑍀𑌹𑌰𑍀
𑌣𑌾𑌮𑍃𑌷𑌭𑌸𑍍𑌤𑌰𑌸𑍍𑌵𑍀॥ ௩௨

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 - 𑌷𑍋𑌡𑌶𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃

பூமியெனப் பொறுமையும், தாமரையெனக் கண்ணும் படைத்த யாதொருத்தி இராம லக்ஷ்மணர்களால் காக்கப்பட்டாளோ, அவளிப்பொழுது இந்த மரத்தடியில் விகாரமான கண்கள் படைத்த வரக்கிகளால் காவல் பூண்டாள். 29

பனியிற்படுகின்ற தாமரையோடைபோல் அழகழிந்து, துயரக்கோர்வையினுல் சாலவும் நோயுண்டு, சேவலைப்பிரிந்த சக்கரவாகப் பேடுபோல் சனகன் திருமகள், கடுமையான நிலையில் நிறுத்தப்பட்டாள். 30

மலர்களைச் சுமக்கப்பொருது வண்க்குற்ற கொம்புகளூற்ற அசோகமரங்கள், இவளுக்கு மிகுந்த சோகத்தையுண்டுபண்ணுகின்றன; அப்படியே கலைமழுங்கிக் கிடந்த சந்திரனும் இப்பொழுது (பனிநீங்கி வஸந்தம்பெறவே) ஆயிரம் கரங்களும் துலங்கக் கிளம்பாநின்ருன். 31

என்றிந்த விஷயத்தை யோசித்துக்கொண்டே பலவானன வானரோத்தமன் "இவள் சீதை" யென்கிற நிச்சயத்துடன் அந்த மரத்தில்தானே நிலைத் துட்கார்ந்தார்.

பதினுரும் ஸர்க்கம் முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌸𑍍𑌕𑌾𑌨𑍍𑌦𑌪𑍁𑌰𑌾𑌣𑍇 - 𑌸𑌪𑍍𑌤𑌦𑌶𑌶𑍍𑌲𑍋𑌕𑍀

𑌤𑌤𑌃 𑌕𑌾𑌮𑌦𑌷𑌂 𑌵𑌾𑌮𑍇 𑌨𑌿𑌷𑌣𑍍𑌣𑌾𑌂 𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌂 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌸𑌹𑌸𑍍𑌰𑌂𑌶𑍍𑌰𑍀 𑌹𑌂𑌸𑍋 𑌨𑍀𑌲𑌿𑌵𑍋𑌦𑌕𑌮𑍍 ॥ ௧

𑌸𑌾𑌧𑍍𑌵𑌿𑌵𑍍𑌯𑍃𑌦𑍍𑌧𑌿𑌵𑌕𑌾𑌵𑍁𑌨𑍍𑌵𑌸 𑌪𑍍𑌰𑌹𑌯𑌾𑌨𑌿𑌷𑍁𑌮𑌪𑍍𑌰𑌹𑌃 ।
𑌸𑌂𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌶𑍍𑌚𑌿𑌹𑌿𑌸𑍍𑌲𑍀𑌦𑍈𑌤 𑌸𑍍𑌵𑌿𑌷𑍇𑌵𑍇𑌵𑌵𑌨𑌾𑌦𑍍𑌜𑌜𑌮𑍍 ॥ ௨

𑌸𑌦𑌦𑌶𑌲𑌤𑌤𑍍𑌸𑍍𑌵𑍀𑌤𑌾𑌂 𑌵𑌰𑌣𑍁𑌸𑌂𑌶𑍍𑌰𑍁𑌨𑌿𑌹𑌾𑌨𑌨𑌾𑌮𑍍 ।
𑌶𑍋𑌕𑌹𑌾𑌰𑌿𑌣𑍀𑌵𑍃𑌨𑍍𑌦𑍍𑌸𑍍𑌵𑌾𑌂 𑌹𑌾𑌰𑍇𑌣𑌲𑌾𑌵𑌦𑌿𑌵𑌾𑌂𑌹𑌸𑌿 ॥ ௩

𑌦𑌿𑌶𑍍𑌰𑌕𑍍𑌷𑌰𑌣𑍋𑌵𑍇𑌦𑍇𑌹𑍀𑌂 𑌹𑌨𑌾𑌮𑌾𑌨𑍁𑌮𑌾𑌰𑌾𑌤𑌾𑌦𑍍𑌜𑌃 ।
𑌸𑌦𑌦𑌶𑌲𑌾𑌵𑌿𑌦𑌲𑌰𑌸𑍍𑌵𑌾 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌵𑍇𑌲𑌾𑌰𑌦𑌶𑌲𑌨𑌾𑌃 ॥
𑌹𑌕𑌾𑌕𑍍𑌷𑍀𑌶𑌕𑌕𑌣𑌲𑌾𑌂𑌚 𑌕𑌣𑌲𑌪𑍍𑌰𑌾𑌵𑌰𑌣𑌾𑌂 𑌤𑌥𑌾 ।
𑌕𑌕𑌣𑍁𑌰𑌾𑌂𑌶𑌂𑌕𑌾𑌕𑌣𑍁𑌰𑌾𑌂𑌚 𑌸𑍍𑌸𑍋𑌕𑍋𑌸𑍍𑌵𑌾𑌸𑌨𑌾𑌸𑌿𑌕𑌾𑌮𑍍 ॥
𑌕𑌤𑌿𑌕𑌾𑌯𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌂𑌶𑍀𑌂𑌚 𑌤𑌨𑌾𑌶𑍀𑌵𑍁𑌶𑌿𑌰𑍋𑌯𑌾𑌰𑌾𑌮𑍍 ।
𑌸𑍍𑌵𑍍𑌤𑌕𑍇𑌶𑍀𑌂 𑌤𑌥𑌾𑌽𑌕𑍇𑌶𑍀𑌂 𑌕𑍇𑌶𑌕𑌂𑌬𑌳𑌯𑌾𑌰𑌿𑌣𑍀𑌮𑍍 ॥ *
𑌮𑌂𑌬𑌕𑌣𑌲𑌮𑌟𑌾𑌂𑌚 𑌮𑌂𑌬𑍋𑌦𑌰𑌵𑌯𑍋𑌯𑌾𑌰𑌾𑌮𑍍 ।
𑌮𑌂𑌬𑍋𑌷𑍍𑌠𑍀𑌂𑌚𑌾𑌬𑌾𑌕𑍋𑌷𑍍𑌠𑍀𑌂𑌚 𑌮𑌂𑌬𑌾𑌸𑍍𑌯𑌾𑌂𑌮𑌂𑌬𑌜𑌾𑌨𑌨𑌾𑌮𑍍 ॥ *
𑌶𑍍𑌰𑍀𑌸𑍍𑌵𑌶𑍀𑌵𑍁𑌰𑌾𑌂 𑌤𑌥𑌾𑌕𑌾𑌬𑍍𑌜𑌾𑌂 𑌵𑌿𑌕𑌟𑌾𑌂𑌵𑌾𑌦𑌨𑌾𑌂 𑌤𑌥𑌾 ।
𑌕𑌰𑌾𑌳𑌾𑌂𑌹𑌾𑌨𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌂𑌚 𑌵𑌿𑌂𑌶𑌾𑌕𑍍𑌷𑍀𑌂𑌵𑌿𑌕𑍃𑌤𑌾𑌨𑌨𑌾𑌮𑍍 ॥ ௮

பதினேழாம் ஸர்க்கம்

அப்பொழுது ஆம்பற்குவியல்போ லழகாய் நிர்மல மான சந்திரன், (கறுத்த தெண்ணீரில் அன்னம் சென் றதுபோல்) தெளிவுற்ற ஆகாயத்தில் மிகவும் கழித்தான். 1

ஒளிகொண்டு ஒத்தாசைசெய்பவன்போல் தெளிந்த காந்திபொருந்திய சந்திரன், குளிர்ந்த கிரணங்களால் வாயுகுமாரனை வழிபட்டனன். 2

அப்பொழுது பாரம்சுமந்து நீரில்கிடக்கு மோடம் போல் சோகம்சுமந்து நிறைமதிமுகத்த சீதைதனை அனு மான் கண்டார். 3

வைதேஹியைப் பார்த்திருந்த வாதாத்மஜன், கொஞ்சதூரத்திலிருந்து கோரமாய் தெம்படுகின்ற ராக்ஷ ஸிகளைக் கண்டார். அவர்கள்தான்: ஒத்தைக்கண்ணி, ஒத் தைக்காதி, மூடுகாதி, காதிழந்தாள், மூளிக்காதி, நட்ட மூக்கி, மண்டைபருத்தாள், குட்டைமயிராள், குறைந்த மயிராள், பொட்டற்றலைச்சி, கம்பளித்தலைச்சி, தொங்கு காதும் முகமுமுடையாள், தொங்குவயிறும் முலையுமுடை யாள், தொங்கும் உதடி, மேவாக்கட்டையில் முளைத்த உதடி, தொங்கும் வாயாள், முழங்கால் தொங்கி, ஓரிடம் குறுகி யோரிடம் நீண்டாள், கூனி, முட்டிபருத்தவள், குள்ளி, முடக்குடையாள், பள்ளமூஞ்சி என்றிவ்வாறு இருந்தார்கள். 8

विकृताः [illegible] कोट्यायनाः [illegible] हविःप्रियाः।
[illegible] गृध्रमुखास्तथा॥ *

वराह [illegible] महिषाजशिवामुखाः।
गजोष्ट्रहयवक्त्राश्च [illegible]॥ *

[illegible] वक्त्रकाः।
गोमुखाः [illegible]॥ *

[illegible] नासाः कतिनासाश्च तिर्यङ्नासा विनासिकाः।
गजसन्निभनासाश्च [illegible] नासिकाः॥ *

हस्तिपादा [illegible] पादाः [illegible]।
कतिचित् [illegible] कतिचित् [illegible]॥ *

कतिचित् [illegible] जिह्वा [illegible]।
[illegible] सहस्र [illegible]॥ *

[illegible]।
[illegible] हस्ताश्च कोट्यायनाः [illegible] हविःप्रियाः॥ *

[illegible] विकृताननाः।
[illegible]॥ *

मांसशोणितदिग्धाङ्गा मांसशोणितभोजनाः।
[illegible] रोमहर्षणदर्शनाः॥ *

संयमं [illegible]। [illegible]

விகாரமானவர்களும், செம்பட்டை நிறத்தோரும், கறுத்தோரும், கோவக்காரிகளும், கலகக்காரிகளும், காளாயஸம் பெருஞ்சூலம் கூடம் முற்கரகம் இவைதரித்தோரும், பன்றி மான் புலி எருமை ஆடு நரி இவை போன்ற முகத்தோரும், யானை ஒட்டகம் குதிரை இவை போன்ற காலுடையோரும், உடலில் தலையோரும், ஒற்றைக் கையினரும், ஒற்றைக் காலினரும், கழுதைக்காதரும், குதிரைக்காதரும், மாட்டுக்காதரும், யானைக்காதரும், குரங்குக்காதரும், மூக்கற்றவரும், பெருமூக்கரும், கறுமூக்கரும், கோணமூக்கரும், யானைமூக்கரும், நட்டமூக்கரும், யானையடியோரும், பேரடியோரும், மாட்டடியோரும், கால்குடுமியரும், மிகவும் பெரியதலையுங் கழுத்தும் படைத்தோரும், மிகவும் பருத்த முலையும் வயிறுமுடையோரும், மிகவும் பெரிய வாயும் கண்ணும்படைத்தோரும், நீண்ட நாக்கும் நகமு முடையோரும், ஆட்டுமுகத்தோரும், யானைமுகத்தோரும், மாட்டுமுகத்தோரும், பன்றிமுகத்தோரும், குதிரை ஒட்டகம் கழுதை இவைபோல் வாயுடையோருமாய் கோரமான பார்வையுடையருமான ராக்ஷஸிகளையும், சூலம் முற்கரம் கையிலேந்தியவரும், கோவக்காரிகளும், கலகக்காரிகளும், வக்கிரமானவரும், புகைத்தலையோருமான விகார முகம் படைத்த ராக்ஷஸிகளையும், எப்போதும் குடிப்போரும், மாமிசமும் கள்ளும் ஆமளவும் தின்போரும். புலாலுமிரத்தமும் பூசியிருப்போரும், புலாலுமிரத்தமும் புசித்துக்கிடப்போருமாய் கண்டபொழுதே மயிர்க்கூச்செழும்படி, கிளைகள் தழைத்த மரத்தைச் சூழ்ந்து குந்திகிடக்கின்ற ராக்ஷஸிகளையும் அந்த வானரோத்தமன் கண்டார். 17½

தஸ்யாயஸ்தாஸ்து தாம் தே³வீம் ராஜபுத்ரீமநிந்தி³தாம்॥ *
து³க்ஷயாரோஹஸுக்ஷ்வாந்து ஸந்நரோநுஜநகாத்மஜாம்।
நிஷ்ப்ரபா⁴ம் ஶோகஸந்தப்தாம் மலஸங்கீர்ணமூர்த⁴ஜாம்॥ *
க்ஷீணபுண்யாம் ச்யுதாம் பூ⁴மௌ தாராம் நிபதிதாமிவ।
சாரித்ரவ்யபதே³ஶாட்⁴யாம் ப⁴ர்த்ருத³ர்ஶநது³ர்க³தாம்॥ *
பூ⁴ஷணைருத்தமைர்ஹீநாம் ப⁴ர்த்ருவாத்ஸல்யபூ⁴ஷணாம்। ராக்ஷஸாதி⁴பஸம்ருத்³தா⁴ம் ப³ந்து⁴பி⁴ஶ்ச விநாக்ருதாம்॥ *
வியூதா²ம் ஸிம்ஹஸம்ருத்³தா⁴ம் ப³த்³தா⁴ம் க³ஜவதூ⁴மிவ।
சந்த்³ரரேகா²ம் பயோதா³ந்தே ஶாரதா³ப்⁴ரைரிவாவ்ருதாம்
க்லிஷ்டரூபாமஸம்ஸ்பர்ஶாத³யுக்தாமிவ வல்லகீம்। உ௩
ஸீதாம் ப⁴ர்த்ருவஶே யுக்தாமயுக்தாம் ராக்ஷஸீவஶே॥ *
அஶோகவநிகாமத்⁴யே ஶோகஸாக³ரமாப்லுதாம்।
தாபி⁴꞉ பரிவ்ருதாம் தத்ர ஸக்³ரஹாமிவ ரோஹிணீம்॥ *
த³த³ர்ஶ ஹநுமாந்தே³வீம் லதாமகுஸுமாமிவ॥ உ௪

ஸா மலேந ச தி³க்³தா⁴ங்கீ³ வபுஷா சாப்யலங்க்ருதா꞉ *
ம்ருணாலீ பங்கதி³க்³தே⁴வ விபா⁴தி ந விபா⁴தி ச॥ உ௫

மலிநேந து வஸ்த்ரேண பரிக்லிஷ்டேந பா⁴மிநீம்॥ *
ஸம்வ்ருதாம் ம்ருக³ஶாவாக்ஷீம் த³த³ர்ஶ ஹநுமாந்கபி꞉।

அதனடியில் அரசன் புதல்வியாய் ஏதமில்தேவி யான அந்த ஜானகியார், ஒளியிழந்து துயருழன்று புழுதிபடிந்த குழலோடு, புண்ணியங்குறைந்து திவத்தி னின்றும் நழுவிப் புவியில் வீழ்ந்த நக்ஷத்திரம்போல், பதிவிரதையென்னும் பட்டத்திற் கிட்டுப்பிறந்தவளாய், பதியைக்காணுத குறையுடன், சிறந்தவாபரணங்களின்றி பதியினிடத்தில் பக்தியே பூஷணமாய், அரக்கர்கோனல் தகையப்பட்டு உறவினரைப்பிரிந்து, அதனுல் மந்தையி னின்று விடுபட்டு சிங்கத்தால் தடைபட்டுக் கட்டுண்ட பிடிபோலும் கார்காலக் கடைசியில் சரத்காலமேகங்க ளால் சூழப்பட்ட சந்திரன் கலைபோலும் அழகுகுன்றி, கையாளப் பெருமையால் கவைக்குதவாத வீணைபோ லிருக்கும்படியை, குதுஹலங் கொப்பளிக்க ஹனுமான் கண்டார். (பிடி-பெண்யானை.) 22½

அரக்கிகள் வசத்தி லகப்பட்டிருந்தாலும் அப்படி-யின்றி தன்னைப் பதியின்வச மொப்புவித்து, அசோக வனத்திடையில் சோகக்கடலில் மூழ்கினவளாய் கிரஹ ணத்தி லகப்பட்ட ரோஹிணிபோல் அவர்கள்சூழ, பூங் கொடிபோல் பொலிவுற்ற தேவிதனை யனுமான் கண் டார். 24½

இயற்கையில் அழகான அவள் மேனி புழுதிபடிந்து, சேற்றில் புறண்ட தாமரைபோல் பொலிவுற்றும் பொலி வுறவில்லை. 25½

மிகவுங் கசங்கி யழுக்கடைந்த வஸ்திரமுடுத்து, மான் கன்றுபோல் விழித்து, முகம்வாடி, பதியின் பெருமை

𑌤𑌾𑌂 𑌦𑍇𑌵𑍀𑌂 𑌶𑍀𑌲𑌵𑌤𑍀𑌂 𑌨𑌾𑌮 𑌸𑌤𑍀𑌂 𑌹𑍍𑌯𑌰𑍍𑌕𑌤𑍇𑌜𑌸𑌾 ॥ *
𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌂 𑌸𑍍𑌵𑌸𑍍𑌥𑌨𑌸𑍍𑌥𑍇 𑌚 𑌸𑍀𑌤𑌾𑌮𑌿𑌤𑌿 𑌕𑌥𑌯𑌨𑍍𑌤𑍁 𑌤𑌾𑌮𑍍 ॥ ௨௭

𑌤𑌾𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌹𑌨𑍂𑌮𑌾𑌨𑍍 𑌵𑍀𑌤𑌾𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑌾𑌂 𑌪𑌶𑍍𑌯 𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑌣𑌾𑌮𑍍
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌂 𑌵𑌿𑌭𑍂𑌷𑌾𑌂 𑌚 𑌵𑍀𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑌾𑌂 𑌸 𑌜𑍍𑌞𑌾𑌤𑌃 ।

𑌉𑌵𑌾𑌚 𑌤𑌤𑍍𑌰 𑌨𑌿𑌷𑍍𑌯𑌾𑌤𑍇 𑌵𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑍀𑌮𑍍 ॥ *
𑌸𑌂𑌵𑌾𑌦𑌯𑍇𑌤𑍍 𑌶𑍋𑌕𑌾𑌨𑌾𑌂 𑌦𑍁𑌃𑌖𑌸𑌨𑍍𑌤𑌾𑌪𑌿𑌤𑌾𑌂 𑌤𑌾𑌮𑍍 ।

𑌤𑌾𑌂 𑌕𑍍𑌷𑍀𑌰𑌸𑌾𑌗𑌰𑍋𑌦𑍍𑌭𑍂𑌤𑌾𑌂 𑌶𑍍𑌰𑍀𑌂 𑌵𑌿𑌨𑌾𑌭𑌰𑌣𑌶𑍋𑌭𑌿𑌨𑍀𑌮𑍍 ॥ *
𑌪𑍍𑌰𑌹𑍃𑌷𑍍𑌟𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌦𑍇𑌵𑍇𑌶 𑌨𑌾𑌰𑌦𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌭𑌾𑌷𑌤 ।

𑌸𑌹𑌜𑌾𑌨𑌿𑌵 𑌸𑌶𑍍𑌰𑍀𑌣𑌿 𑌤𑌾𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌚 𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑌣𑌾𑌮𑍍
𑌉𑌵𑌾𑌚 𑌤𑌤𑍍𑌰 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌸𑌵𑌤𑍀𑌮𑍍 । ௩௧

𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌰𑌾𑌜𑌸𑌮 𑌰𑍂𑌕𑍍𑌷𑌣𑌾𑌯𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌮𑍍 ॥ *
𑌸𑍀𑌤𑌾𑌦𑌰𑍍𑌶𑌨𑌸𑌂𑌹𑍃𑌷𑍍𑌟𑍋 𑌹𑌨𑍂𑌮𑌾𑌨𑍍𑌸𑌂𑌵𑍃𑌤𑍍𑌯 𑌸 𑌤𑌾𑌂 𑌵𑌚𑌃

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌉𑌤𑍍𑌤𑌰𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 - 𑌸𑌪𑍍𑌤𑌦𑌶𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃 ॥

கொண்டு திடனுற்று, தன் சீலங்கொண்டு தன்னைக் காத்துக்கிடக்கின்ற கார்விழியாளை அனுமான் கண்டார். 27½

உழைக்கன்றுபோல் நோக்குடையளாய், மிரண்டு நாற்புறமும் விழிக்கின்ற மான்பேடு போன்றவளாய், தளிரெடுத்த தருக்களைப் பெருமூச்செறிந்து படச்செய்பவள்போலும், சோகங்களின் துகைபோலும், மேற்கிளம்பிய துயரத்தி னலைபோலும் (உருவெடுத்த) பொறுமைபோலும், நன்குவகுத்த அவயவங்கள்கொண்டு ஆபரணமின்றியே அழகாயிருக்கின்ற மைதிலியை ஹனுமான் கண்டு இணையிலாக் களிப்படைந்தார். 30½

அந்த மாழைநோக்கியைக்கண்ட மாருதியார், கண்களால் ஆநந்தமழை பொழிந்து அங்கிருந்தே ராகவனை யடிபணிந்தார். 31½

ஸீதையைச் சேவித்த சந்தோஷத்தினுல் அந்தவீரன், இராமனையு மிலக்குமனையுந் தண்டனிட்டு (அம்மரத்தில் தானே) மறைந்திருந்தார். 32½

பதினேழாம் ஸர்க்கம் முற்றிற்று.

ஸ்ரீஸுந்தரகாண்டே . அஷ்டாதஶஸ்ஸர்க:॥

ததா விப்ரேக்ஷமாணஸ்ய வனம் புஷ்பிதபாதபம்।
விசின்வதஶ்ச வைதேஹீம் கிஞ்சிச்சேஷா நிஶாபவத்॥ க

ஷடங்கவேதவிதுஷாம் க்ரதுப்ரவரயாஜினாம்।
ஶுஶ்ராவ ப்ரஹ்மகோஷாம்ஶ்ச விராத்ரே ப்ரஹ்மரக்ஷஸாம்॥

அத மங்கலவாதித்ரை: ஶப்தை: ஶ்ரோத்ரமனோஹரை:।
ப்ராபோத்யத மஹாபாஹுர் தஶக்ரீவோ மஹாபல:॥

விபுத்ய து யதாகாலம் ராக்ஷஸேந்த்ர: ப்ரதாபவான்।
ஸ்ரஸ்தமால்யாம்பரதரோ வைதேஹீமன்வசிந்தயத்॥ ௪

ப்ருஶம் நியுக்தஸ்தஸ்யாம் ச மதனேன மதோத்கட:।
ந ஸ தம் ராக்ஷஸ: காமம் ஶஶாகாத்மனி கூஹிதும்॥ ௫

ஸ ஸர்வாபரணைர்யுக்தோ பிப்ரச்ச்ரியமனுத்தமாம்।
தாம் நகைர்பஹுபிர்ஜுஷ்டாம் ஸர்வபுஷ்பபலோபகை:॥ *

வ்ருதாம் புஷ்கரிணீபிஶ்ச நானாபுஷ்போபஶோபிதாம்। *
ஸதாமதைஶ்ச விஹகைர் விசித்ராம் பரமாத்புதாம்॥

பதினெட்டாம் ஸர்க்கம்

இப்படி யவர் மலரெடுத்த அவ்வனத்தைப் பார்த்துக்கொண்டே வைதேஹியைக் கண்டுபிடிக்கும்போது இரவெல்லாம் கழிந்து கொஞ்சம் மிகுந்தது. 1

அந்த அபரராத்திரியில், ஆறங்கத்தோடு வேதம் வல்லவராய், சிறந்த வேள்விகள் முடிப்பவரான பிராம்மண ராக்ஷஸர்கள் செய்யும் வேதகோஷம் செவிப்பட்டது. 2

அநந்தரம் மஹாபலவானான சதகண்டனென்னும் திண்டோள் மன்னன், மங்கள வாத்தியங்களாலும், செவிக்கினிய சத்தங்களாலும் பள்ளியினின்றுமெழுப்பப்பட்டான். 3

பிரதாபவானான ராக்ஷஸராஜன், கிரமமான காலத்தில் விழித்துக்கொண்டு தோளில் மாலை நழுவிவிழவெழுந்திருந்து வைதேஹியைப்பற்றி சிந்திக்கலுற்றான். 4

மன்மதனாலவளிடத்தில் மிகவும் மோஹமூட்டப்பட்டு மதம் மிகுத்த அவ்வரக்கன், காமவேட்கையைத் தனக்குள் ளடக்கமாட்டிற்றிலன். 5

அன்னவன் ஸர்வாபரண பூஷிதனாய் அதிசுந்தரனாய் ரத்தினங்கள் பதித்த செம்பொன் தோரணங்கள் கட்டிய வீதிகளைப் பார்த்துக்கொண்டு, மலருங் கனியுமான மரங்கள் பல சூழ்ந்து, பலவகைப் புஷ்பங்கள் பூத்தழகாய புஷ்கரிணிகள் புடைசூழ்ந்து எப்பொழுதுங் கொழுத்து

𑌈𑌹𑌾𑌮𑍃𑌗𑍈𑌶𑍍𑌚 𑌵𑌿𑌵𑌿𑌧𑍈𑌰𑍍𑌜𑍁𑌷𑍍𑌟𑌾𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌮𑌨𑍋-
𑌹𑌰𑍈𑌃 । 𑌵𑍀𑌥𑍀𑌸𑍍𑌸𑌂𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑌶𑍍𑌚 𑌮𑌣𑌿𑌕𑌾𑌂𑌚𑌨𑌤𑍋𑌰-
𑌣𑌾𑌃॥ *

𑌨𑌾𑌨𑌾𑌮𑍃𑌗𑌗𑌣𑌾𑌕𑍀𑌰𑍍𑌣𑌾𑌂 𑌫𑌲𑍈𑌃𑌪𑍍𑌰𑌪𑌤𑌿𑌤𑍈𑌰𑍍𑌵𑍃𑌤𑌾
𑌅𑌶𑍋𑌕𑌵𑌨𑌿𑌕𑌾𑌮𑍇𑌵 𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌶𑌤𑍍𑌸𑌨𑍍𑌤𑌤𑌦𑍍𑌰𑍁𑌮𑌾𑌮𑍍॥ * [𑌪𑍁.

𑌅𑌙𑍍𑌗𑌨𑌾𑌶𑍍𑌶𑌤𑌶𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌤𑌂 𑌵𑍍𑌰𑌜𑌨𑍍𑌤𑌮𑌨𑍁𑌵𑍍𑌰𑌜𑌨𑍍।
𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌿𑌵 𑌪𑍌𑌲𑌸𑍍𑌤𑍍𑌯𑌂 𑌦𑍇𑌵𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌯𑍋𑌷𑌿𑌤𑌃॥ ௧௦

𑌦𑍀𑌪𑌿𑌕𑌾𑌃𑌕𑌾𑌂𑌚𑌨𑍀𑌃𑌕𑌾𑌶𑍍𑌚𑌿 𑌜𑍍𑌜𑌗𑍃𑌹𑍁𑌸𑍍𑌤𑌤𑍍𑌰𑌯𑍋𑌷𑌿𑌤𑌃।
𑌵𑌾𑌲𑌵𑍍𑌯𑌜𑌨𑌹𑌸𑍍𑌤𑌾𑌶𑍍𑌚 𑌤𑌾𑌲𑌵𑍃𑌨𑍍𑌤𑌾𑌨𑌿𑌚𑌾𑌪𑌰𑌾𑌃॥ ௧௧

𑌕𑌾𑌂𑌚𑌨𑍈𑌰𑌪𑌿𑌭𑍃𑌙𑍍𑌗𑌾𑌰𑍈𑌰𑍍 𑌜𑌹𑍍𑌰𑍁𑌸𑍍𑌸𑌲𑌿𑌲𑌮𑌗𑍍𑌰𑌤𑌃।
𑌮𑌣𑍍𑌡𑌲𑌾𑌗𑍍𑌰𑌾𑌨𑍍𑌬𑍃𑌸𑍀𑌂𑌶𑍍𑌚𑍈𑌵𑌗𑍃𑌹𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌾𑌃𑌪𑍃𑌷𑍍𑌠𑌤𑍋𑌯𑌯𑍁𑌃

𑌕𑌾𑌚𑌿𑌦𑍍𑌰𑌤𑍍𑌨𑌮𑌯𑍀𑌂𑌸𑍍𑌥𑌾𑌲𑍀𑌂 𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌂𑌪𑌾𑌨𑌸𑍍𑌯𑌭𑌾𑌮𑌿𑌨𑍀।
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇𑌨𑍈𑌵 𑌤𑌦𑌾𑌜𑌗𑍍𑌰𑌾𑌹𑌪𑌾𑌣𑌿𑌨𑌾॥ ௧௩

𑌰𑌾𑌜𑌹𑌂𑌸𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑌾𑌶𑌂 𑌛𑌤𑍍𑌰𑌂𑌪𑍂𑌰𑍍𑌣𑌶𑌶𑌿𑌪𑍍𑌰𑌭𑌮𑍍।
𑌸𑍌𑌵𑌰𑍍𑌣𑌦𑌣𑍍𑌡𑌮𑌪𑌰𑌾 𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾𑌪𑍃𑌷𑍍𑌠𑌤𑍋𑌯𑌯𑍌॥ ௧௪

𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌮𑌦𑌪𑌰𑍀𑌤𑌾𑌕𑍍𑌷𑍍𑌯𑍋 𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌯𑍋𑌤𑍍𑌤𑌮𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃।
𑌅𑌨𑍁𑌜𑌗𑍍𑌮𑍁𑌃𑌪𑌤𑌿𑌂𑌵𑍀𑌰𑌂 𑌘𑌨𑌂𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌲𑍍𑌲𑌤𑌾𑌇𑌵॥ ௧௫

ள்ள பறவைகளா லழகுற்று மிகவும் வியக்கத்தக்கதாய், கண்ணுக்கினிய விதம்விதமான நாய்கள் கூடியதாய், பல வகை மிருகக்கணங்கள் நிறைந்து புவியில் சிந்திய கனிகள் செறிந்து, மரங்களடர்ந்த அசோகவனத்தில்தானே வந்து புகுந்தான். 9

தெய்வப்பெண்களும் கந்தருவக்கன்னிகளும் தேவேந்திரனைப் பின் செல்லுமாறு, அன்னவன் செல்லும்பொழுது அங்கனைகள் நூறுபெயர் அநுஸரித்தார்கள். 10

அதில் சிலபெண்கள் சுவர்ணமயத் தீபங்களேந்தினார்கள்; சிலர் மயில் விசிறிகளும் சிலர் பனைவிசிறிகளும் வீசிச் சென்றார்கள். 11

சிலர் பொன்மயமான கிண்டிகளில் குளிர்ந்த நீர் கொண்டு முன்னே சென்றார். பின்னும் சிலர் மண்டலமான திண்டுகளும் சித்திராஸனமுங்கொண்டு பின் சென்றார்கள். 12

ரஸிகையான ஓர் விலாஸவதி, மதுநிறைந்த ரத்தினமயமான பாத்திரத்தை வலக்கையி லேந்திவந்தாள். 13

அன்னத்தரசும் முழுமதியும் போன்ற வெண்குடையின் பொற்காம்பை மற்றொருத்தித் தரித்து பின்னே சென்றாள். 14

நித்திரைமயக்கம் கண்ணில்மேய, விராவணன் அந்தப்புரத்து உத்தமப்பெண்கள், மின்னற்கொடிகள் மேகத்தைத் தொடருமாபோல் வீரனான நாயகனைப் பின் சென்றார்கள். 15

𑌵𑍍𑌯𑌾𑌵𑌿𑌦𑍍𑌧𑌹𑌾𑌰𑌕𑍇𑌯𑍂𑌰𑌾𑌸𑍍 𑌸𑌮𑌾𑌮𑍃𑌦𑌿𑌤𑌵𑌰𑍍𑌣𑌕𑌾𑌃।
𑌸𑌮𑌾𑌗𑌲𑌿𑌤𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌸𑍍 𑌸𑌸𑍍𑌵𑍇𑌦𑌵𑌦𑌨𑌾𑌸𑍍𑌤𑌥𑌾॥ *
𑌘𑍂𑌰𑍍𑌣𑌨𑍍𑌤𑍍𑌯𑍋𑌮𑌦𑌶𑍇𑌷𑍇𑌣 𑌨𑌿𑌦𑍍𑌰𑌯𑌾𑌚𑌶𑍁𑌭𑌾𑌨𑌨𑌾𑌃।
𑌸𑍍𑌵𑍇𑌦𑌕𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌾𑌂𑌗𑌕𑍁𑌸𑍁𑌮𑌾𑌸𑍍 𑌸𑍁𑌮𑌾𑌲𑍍𑌯𑌾𑌕𑍁𑌲𑌮𑍂𑌰𑍍𑌧𑌜𑌾𑌃॥ *
𑌪𑍍𑌰𑌯𑌾𑌨𑍍𑌤𑌂 𑌨𑍈𑌰𑍃𑌤𑌪𑌤𑌿𑌂 𑌨𑌾𑌰𑍍𑌯𑍋𑌮𑌦𑌿𑌰𑌲𑍋𑌚𑌨𑌾𑌃।
𑌬𑌹𑍁𑌮𑌾𑌨𑌾𑌚𑍍𑌚𑌕𑌾𑌮𑌾𑌚𑍍𑌚 𑌪𑍍𑌰𑌿𑌯𑌭𑌾𑌰𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌮𑌨𑍍𑌵𑌯𑍁𑌃॥ ௧௮

𑌸𑌚𑌕𑌾𑌮𑌪𑌰𑌾𑌧𑍀𑌨𑌃 𑌪𑌤𑌿𑌸𑍍𑌤𑌾𑌸𑌾𑌂𑌮𑌹𑌾𑌬𑌲𑌃।
𑌸𑍀𑌤𑌾𑌸𑌕𑍍𑌤𑌮𑌨𑌾𑌮𑌨𑍍𑌦𑍋 𑌮𑌦𑌾𑌂𑌚𑌿𑌤𑌗𑌤𑌿𑌰𑍍𑌬𑌭𑍌॥ ௧௯

𑌤𑌤𑌃𑌕𑌾𑌂𑌚𑍀𑌨𑌿𑌨𑌾𑌦𑌂𑌚 𑌨𑍂𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌂𑌚𑌨𑌿𑌸𑍍𑌵𑌨𑌮𑍍।
𑌶𑍁𑌶𑍍𑌰𑌾𑌵𑌪𑌰𑌮𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌸𑌕𑌪𑌿𑌰𑍍𑌮𑌾𑌰𑍁𑌤𑌾𑌤𑍍𑌮𑌜𑌃॥ ௨௦

𑌤𑌂𑌚𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌕𑌰𑍍𑌮𑌾𑌣 𑌮𑌚𑌿𑌂𑌤𑍍𑌯𑌬𑌲𑌪𑍌𑌰𑍁𑌷𑌮𑍍।
𑌦𑍍𑌵𑌾𑌰𑌦𑍇𑌶𑌮𑌨𑍁𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂 𑌦𑌦𑌰𑍍𑌶𑌹𑌨𑍂𑌮𑌾𑌨𑍍𑌕𑌪𑌿𑌃॥ *
𑌦𑍀𑌪𑌿𑌕𑌾𑌭𑌿𑌰𑌨𑍇𑌕𑌾𑌭𑌿𑌃 𑌸𑌮𑌂𑌤𑌾𑌦𑌵𑌭𑌾𑌸𑌿𑌤𑌮𑍍।
𑌗𑌂𑌧𑌤𑍈𑌲𑌾𑌵𑌸𑌿𑌕𑍍𑌤𑌾𑌭𑌿𑌰𑍍𑌧𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑌾𑌭𑌿𑌰𑌗𑍍𑌰𑌤𑌃॥ *
𑌕𑌾𑌮𑌦𑌰𑍍𑌪𑌮𑌦𑍈𑌰𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌜𑌿𑌹𑍍𑌮𑌤𑌾𑌮𑍍𑌰𑌾𑌯𑌤𑍇𑌕𑍍𑌷𑌣𑌮𑍍।
𑌸𑌮𑌕𑍍𑌷𑌮𑌿𑌵𑌕𑌂𑌦𑌰𑍍𑌪𑌮𑌪𑌵𑌿𑌦𑍍𑌧𑌶𑌰𑌾𑌸𑌨𑌮𑍍॥ *
𑌮𑌥𑌿𑌤𑌾𑌮𑍃𑌤𑌫𑍇𑌨𑌾𑌭 𑌮𑌰𑌜𑍋𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍।
𑌸𑌲𑍀𑌲𑌮𑌨𑍁𑌕𑌰𑍍𑌷𑌂𑌤𑌂 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌂 𑌸𑌕𑍍𑌤𑌮𑌂𑌗𑌦𑍇॥ ௨௪

𑌤𑌂𑌪𑌤𑍍𑌰𑌵𑌿𑌟𑌪𑍇𑌲𑍀𑌨𑌃 𑌪𑌤𑍍𑌰𑌪𑍁𑌷𑍍𑌪𑌘𑌨𑌾𑌵𑍃𑌤𑌃।
𑌸𑌮𑍀𑌪𑌮𑍁𑌪𑌸𑌂𑌕𑍍𑌰𑌾𑌂𑌤𑌂 𑌨𑌿𑌧𑍍𑌯𑌾𑌤𑍁𑌮𑍁𑌪𑌚𑌕𑍍𑌰𑌮𑍇॥ ௨௫

மாற்றியணிந்த வாரமுந் தோள்வளையும், நன்றாய்க்
குலைந்த (சந்தனம் முதலிய) பூச்சும், அவிழ்ந்தலைந்த குழ
லும், வியர்வையுற்ற வதனமுமாய், மதமயக்கும் நித்தி
ரைக் கலக்கமுங்கூடி யழகுசெய் முகத்தோடு, வியர்வை
யிற் கசங்கிய மார்பில் மாலைகளும் அவிழ்ந்தலைந்தகுழலிற்
குலாவு மலர்ச்சரங்களு முடையராய், மதம்படு நோக்கிய
ரான அவ்வாசைமணாட்டிகள், அன்போடும் ஆதரவோ
டும் அவுணர்தங் கோமானை அநுஸரித்தார்கள். 18

அப்பெண்களுக்குப்பதியாய் மஹாபலவானான அம்
மதிகேடன், காமவலையிற்சிக்கி சீதையைக் காமுற்றவனாய்
மதங்கொண்டு நடக்கலுற்றான். 19

அப்படிவருகின்ற அந்த மாதரசிகளின் அரைவடத்
தோசையும் தண்டையொலியும் வாயுமைந்தன் செவிப்
பட்டன. 20

அநந்தரம், இணையற்ற செயல்செய்து எண்ணற்கரிய பலமும் வீறும் படைத்த ராவணனும்; வேட்கையும் கொழுப்பும் மதமும் மீதூர, கோணிச் சிவந்த கண்களுடன், கைதனில் வில்லின்றி கண்முன் நிற்கின்ற காமவேளென்னும்படி விளங்கி, அமுதத்திற் கடைந்தெடுத்த நுரைபோல் வெளுத்த உத்தம வஸ்திரம் நழுவித் தோள் வளையிற் றொத்திக்கொள்ள, அதை ஒய்யாரமாயெடுத்து மேற்போட்டுக்கொண்டு, வாசனைத் தைலமிட் டேற்றிய தீபங்கள் பல முன்னும் பின்னுமெங்குஞ் சொலிக்க, அசோகவனத்தின் வாசலைக்கிட்டிவர அதையுங்கண்டார்.

தழையும் மலரும் நெருக்குற்றுமறைக்கும்படி செழி
த்தகிளையில் ஒளித்திருக்கின்ற ஹனூமான், அவன் நெரு
ங்கி வருவதைக் காண்பாராயினார். 25

𑌅𑌵𑍇𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑌸𑍍𑌤𑍁𑌤𑌤𑍋 𑌦𑌦𑌰𑍍𑌶𑌕𑌪𑌿𑌕𑍁𑌞𑍍𑌜𑌰𑌃।
𑌰𑍂𑌪𑌯𑍌𑌵𑌨𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌾 𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌯𑌵𑌰𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃॥ ௨௬

𑌤𑌾𑌭𑌿𑌃𑌪𑌰𑌿𑌵𑍃𑌤𑍋𑌰𑌾𑌜𑌾 𑌸𑍁𑌰𑍂𑌪𑌾𑌭𑌿𑌰𑍍𑌮𑌹𑌾𑌯𑌶𑌾𑌃।
𑌤𑌨𑍍𑌮𑍃𑌗𑌦𑍍𑌵𑌿𑌜𑌸𑌂𑌘𑍁𑌷𑍍𑌟𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌃𑌪𑍍𑌰𑌮𑌦𑌾𑌵𑌨𑌮𑍍॥ ௨௭

𑌕𑍍𑌷𑍀𑌬𑍋𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌭𑌰𑌣 𑌶𑌂𑌕𑍁𑌕𑌰𑍍𑌣𑍋𑌮𑌹𑌾𑌬𑌲𑌃।
𑌤𑍇𑌨𑌵𑌿𑌶𑍍𑌰𑌵𑌸𑌃𑌪𑍁𑌤𑍍𑌰 𑌸𑌦𑍃𑌷𑍍𑌟𑍋𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌧𑌿𑌪𑌃॥ *
𑌵𑍃𑌤𑌃𑌪𑌰𑌮𑌨𑌾𑌰𑍀𑌭𑌿 𑌸𑍍𑌤𑌾𑌰𑌾𑌭𑌿𑌰𑌿𑌵𑌚𑌂𑌦𑍍𑌰𑌮𑌾𑌃। ௨௮
𑌤𑌂𑌦𑌦𑌰𑍍𑌶𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌾 𑌸𑍍𑌤𑍇𑌜𑍋𑌵𑌂𑌤𑌂 𑌮𑌹𑌾𑌕𑌪𑌿𑌃॥ ௨௯

𑌰𑌾𑌵𑌣𑍋𑌯𑌂𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍁 𑌰𑌿𑌤𑌿𑌸𑌂𑌚𑌿𑌂𑌤𑍍𑌯𑌵𑌾𑌨𑌰𑌃।
𑌅𑌵𑌪𑍍𑌲𑍁𑌤𑍋𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌾 𑌹𑌨𑍂𑌮𑌾𑌨𑍍𑌮𑌾𑌰𑍁𑌤𑌾𑌤𑍍𑌮𑌜𑌃॥ ௩௦

𑌸𑌤𑌥𑌾𑌪𑍍𑌯𑍁𑌗𑍍𑌰𑌤𑍇𑌜𑌾𑌸𑍍𑌸 𑌨𑍍𑌨𑌿𑌰𑍍𑌧𑍂𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑌤𑍇𑌜𑌸𑌾।
𑌪𑌤𑍍𑌰𑌗𑍁𑌹𑍍𑌯𑌾𑌂𑌤𑌰𑍇𑌸𑌕𑍍𑌤𑍋 𑌹𑌨𑍂𑌮𑌾𑌨𑍍𑌸𑌂𑌵𑍃𑌤𑍋𑌭𑌵𑌤𑍍
𑌸𑌤𑌾𑌮𑌸𑌿𑌤𑌕𑍇𑌶𑌾𑌂𑌤𑌾𑌂 𑌸𑍁𑌶𑍍𑌰𑍋𑌣𑍀𑌂𑌸𑌂𑌹𑌤𑌸𑍍𑌤𑌨𑍀𑌮𑍍।
𑌦𑌿𑌦𑍃𑌕𑍍𑌷𑍁𑌰𑌸𑌿𑌤𑌾𑌪𑌾𑌂𑌗𑌾 𑌮𑍁𑌪𑌾𑌵𑌰𑍍𑌤𑌤𑌰𑌾𑌵𑌣𑌃॥ ௩௨

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 - 𑌅𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃॥

இப்படி அவர் பார்த்துக்கொண்டிருக்கையில் உருவ மும் பருவமும் நிறைந்த இராவணனது உத்தமஸ்திரீகள் நெருங்கிவர அதையுங் கண்டார். 26

இங்ஙனம் அந்த சுந்தரிகள் சூழ அப்பெரும் புகழோன், மிருகங்களும் பறவைகளு மொலிசெய்யப்பெற்ற சிங்காரவனத்தில் வந்து புகுந்துவிட்டான். 27

மதித்து, விசித்திரமான வாபரணந்தரித்து, கருவத் தால் நெறித்த செவியுற்று, அந்த வல்லாள னிராவணன், தாரைகள் சூழ் சந்திரன்போல் நாரிகள் சூழ்ந்துவரக் காணலானார். 28½

அநந்தரம் பெருந்தேசுடைய அந்த வானரோத்த மன் தேசுடையொருவன் வருகிறானென் றவனைக் கணி சித்தார். 29

பிறகு பெருந்தோளுடைய அவனை யிராவணனெ ன்று தெரிந்துகொண்டு உடனே மேற்கிளையிலிருந்து கீழ்க் கிளையில் குதித்துவிட்டார். 30

அப்பொழுது பெருந்தேசுடையரான ஹனுமான், தம்மையும் மிஞ்சிய தேசுபடைத்த அவனைக்கண்டு தழை மேய்ந்த அக்கிளையில் ஒரிடுக்கி லொளிந்து கொண்டார்.

அன்னவனும், நெருங்கு தனமும் கருங்கணேக்கும் படைத்த அக்கருங்குழலியைக் காண்பானாய் அவ்விடம் நெருங்கிச் சென்றான். 32

பதினெட்டாம் ஸர்க்கம் முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 - 𑌏𑌕𑍋𑌨𑌵𑌿𑌂𑌶𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃॥

𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵 𑌤𑌤𑌃 𑌕𑌾𑌲𑍇 𑌰𑌾𑌜𑌪𑍁𑌤𑍍𑌰𑍀 𑌤𑍍𑌵𑌨𑌿𑌨𑍍𑌦𑌿𑌤𑌾।
𑌰𑍂𑌪𑌯𑍌𑌵𑌨𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌂 𑌭𑍂𑌷𑌣𑍋𑌤𑍍𑌤𑌮𑌭𑍂𑌷𑌿𑌤𑌮𑍍॥ *
𑌤𑌤𑍋 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑍈𑌵 𑌵𑍈𑌦𑍇𑌹𑍀 𑌰𑌾𑌵𑌣𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌧𑌿𑌪𑌮𑍍।
𑌪𑍍𑌰𑌾𑌵𑍇𑌪𑌤 𑌵𑌰𑌾𑌰𑍋𑌹𑌾 𑌪𑍍𑌰𑌵𑌾𑌤𑍇 𑌕𑌦𑌲𑍀 𑌯𑌥𑌾॥ ௨
𑌊𑌰𑍁𑌭𑍍𑌯𑌾𑌮𑍁𑌦𑌰𑌂 𑌛𑌾𑌦𑍍𑌯 𑌬𑌾𑌹𑍁𑌭𑍍𑌯𑌾𑌂 𑌚 𑌪𑌯𑍋𑌧𑌰𑍌
𑌉𑌪𑌵𑌿𑌷𑍍𑌟𑌾 𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑍀 𑌰𑍁𑌦𑌤𑍀 𑌵𑌰𑌵𑌰𑍍𑌣𑌿𑌨𑍀॥ ௩

𑌦𑌶𑌗𑍍𑌰𑍀𑌵𑌸𑍍𑌤𑍁 𑌵𑍈𑌦𑍇𑌹𑍀𑌂 𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌗𑌣𑍈𑌃।
𑌦𑌦𑌰𑍍𑌶 𑌦𑍀𑌨𑌾𑌂 𑌦𑍁𑌃𑌖𑌾𑌰𑍍𑌤𑌾𑌂 𑌨𑌾𑌵𑌂 𑌸𑌨𑍍𑌨𑌾𑌮𑌿𑌵𑌾𑌰𑍍𑌣𑌵𑍇॥

𑌅𑌸𑌂𑌵𑍃𑌤𑌾𑌯𑌾𑌮𑌾𑌸𑍀𑌨𑌾𑌂 𑌧𑌰𑌣𑍍𑌯𑌾𑌂 𑌸𑌂𑌶𑌿𑌤𑌵𑍍𑌰𑌤𑌾𑌮𑍍।
𑌛𑌿𑌨𑍍𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌤𑌿𑌤𑌾𑌂 𑌭𑍂𑌮𑍌 𑌶𑌾𑌖𑌾𑌮𑌿𑌵 𑌵𑌨𑌸𑍍𑌪𑌤𑍇𑌃॥ *
𑌮𑌲𑌮𑌣𑍍𑌡𑌨𑌦𑌿𑌗𑍍𑌧𑌾𑌙𑍍𑌗𑍀𑌂 𑌮𑌣𑍍𑌡𑌨𑌾𑌰𑍍𑌹𑌾𑌮𑌮𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌮𑍍।
𑌮𑍃𑌣𑌾𑌲𑍀 𑌪𑌙𑍍𑌕𑌦𑌿𑌗𑍍𑌧𑍇𑌵 𑌵𑌿𑌭𑌾𑌤𑌿 𑌨 𑌵𑌿𑌭𑌾𑌤𑌿 𑌚॥ ௬
𑌸𑌮𑍀𑌪𑌂 𑌰𑌾𑌜𑌸𑌿𑌂𑌹𑌸𑍍𑌯 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌵𑌿𑌦𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌃।
𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪 𑌹𑌯 𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑍈𑌰𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑍀𑌮𑌿𑌵 𑌮𑌨𑍋𑌰𑌥𑍈𑌃॥ *
𑌶𑍁𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑍀𑌂 𑌰𑍁𑌦𑌤𑍀𑌮𑍇𑌕𑌾𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑌶𑍋𑌕𑌪𑌰𑌾𑌯𑌣𑌾𑌮𑍍।
𑌦𑍁𑌃𑌖𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌮𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍀𑌂 𑌰𑌾𑌮𑌾𑌂 𑌰𑌾𑌮𑌮𑌨𑍁𑌵𑍍𑌰𑌤𑌾𑌮𑍍॥ *

பத்தொன்பதாம் ஸர்க்கம்

அநந்தரம் அவுணர்க்கிறைவ னணுகிச்சென்ற வக்க ணமே கோதில் குலமகளான அக்கோமாட்டி, உருவமும் பருவமும் நிறைந்து அணிகளணிந்து அவன் வருவதைக் கண்டவாற்ருல் கடுங்காற்றிலிடருற்ற வாழைமரம்போல் நடுநடுங்கினுள். 2

பரந்த கண்கள் படைத்த அப்பாவையரும், வயிற் றைத் துடைகளாலும் தனங்களைக் கரங்களாலும் மறை த்துக்கொண்டு அழுதவண்ணமா யுட்கார்ந்திருந்தாள். 3

தசக்கிரீவனும், அரக்கியரிடையி லடைப்புண்டு துய ரத்திற்பட்டு வூர்கடலி லகப்பட்ட ஓடம்போ லலைகின்ற வைதேஹியைக் காண்பானுனன். 4

அவள்தான், வெட்டுண்டு தரையில்வீழ்ந்த மரக்கிளை போல் வெறுந்தரையிலுட்கார்ந்து கொடுந்தவம் புரிகின் றவளாய், அழுக்கேயணியாக அற்புதஞ் செய்கின்ற திரு மேனியளாய், அலங்காரத்திற் கிட்டுப்பிறந்தும் அதுசெய் யப் பெருதவளாய், சேற்றிற்புறண்ட செந்தாமரைபோல் திகழ்ந்தும் திகழாதவளாயிருப்பது கண்டான். 6

பிறகு, கற்பில் நிலைநின்ற தன்னையறிந்த மன்னர் சிங்கமான ராமனிடம், சிந்தையென்னும் புரவிபூட்டிய மநோரதமென்னுந் தேரிலேறிப்போமவள் போன்றவ

𑌵𑍇𑌷𑍍𑌟𑌮𑌾𑌨𑌾𑌂 𑌤𑌥𑌾𑌵𑌿𑌷𑍍𑌟𑌾𑌂 𑌪𑌨𑍍𑌨𑌗𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌧𑍂𑌮𑌿𑌵। [𑌨𑌾॥
𑌧𑍂𑌪𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌂 𑌗𑍍𑌰𑌹𑍇𑌣𑍇𑌵 𑌰𑍋𑌹𑌿𑌣𑍀𑌂 𑌧𑍂𑌮𑌕𑍇𑌤𑍁

𑌵𑍃𑌤𑍍𑌤𑌶𑍀𑌲𑌕𑍁𑌲𑍇 𑌜𑌾𑌤𑌾 𑌆𑌚𑌾𑌰𑌵𑌤𑌿 𑌧𑌾𑌰𑍍𑌮𑌿𑌕𑍇।
𑌪𑍁𑌨𑌸𑍍𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌮𑌾𑌪𑌨𑍍𑌨𑌾𑌂 𑌜𑌾𑌤𑌾𑌮𑌿𑌵 𑌚 𑌦𑍁𑌷𑍍𑌕𑍁𑌲𑍇॥ *
𑌅𑌭𑍂𑌤𑍇𑌨𑌾𑌪𑌵𑌾𑌦𑍇𑌨 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌂 𑌨𑌿𑌪𑌤𑌿𑌤𑌾𑌮𑌿𑌵।
𑌆𑌮𑍍𑌨𑌾𑌯𑌾𑌨𑌾𑌮𑌯𑍋𑌗𑍇𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌶𑌿𑌥𑌿𑌲𑌾𑌮𑌿𑌵॥ *
𑌸𑌨𑍍𑌨𑌾𑌮𑌿𑌵 𑌮𑌹𑌾𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌂 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌮𑌿𑌵 𑌵𑌿𑌮𑌾𑌨𑌿𑌤𑌾𑌮𑍍।
𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌮𑌿𑌵 𑌪𑌰𑌿𑌕𑍍𑌷𑍀𑌣𑌾𑌮𑌾𑌶𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌹𑌤𑌾𑌮𑌿𑌵॥ *

𑌆𑌯𑌤𑍀𑌮𑌿𑌵 𑌵𑌿𑌧𑍍𑌵𑌸𑍍𑌤𑌾𑌮𑌾𑌜𑍍𑌞𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌹𑌤𑌾𑌮𑌿𑌵।
𑌦𑍀𑌪𑍍𑌤𑌾𑌮𑌿𑌵 𑌦𑌿𑌶𑌂 𑌕𑌾𑌲𑍇 𑌪𑍂𑌜𑌾𑌮𑌪𑌹𑍃𑌤𑌾𑌮𑌿𑌵॥ *
𑌪𑌦𑍍𑌮𑌿𑌨𑍀𑌮𑌿𑌵 𑌵𑌿𑌧𑍍𑌵𑌸𑍍𑌤𑌾𑌮𑌾𑌜𑍍𑌞𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌹𑌤𑌾𑌮𑌿𑌵।
𑌪𑍍𑌰𑌭𑌾𑌮𑌿𑌵 𑌤𑌮𑍋𑌧𑍍𑌵𑌸𑍍𑌤𑌾𑌮𑍁𑌪𑌕𑍍𑌷𑍀𑌣𑌾𑌮𑌿𑌵𑌾𑌪𑌗𑌾𑌮𑍍॥ *

𑌵𑍇𑌦𑍀𑌮𑌿𑌵 𑌪𑌰𑌾𑌮𑍃𑌷𑍍𑌟𑌾𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌮𑌗𑍍𑌨𑌿𑌶𑌿𑌖𑌾𑌮𑌿𑌵।
𑌪𑍌𑌰𑍍𑌣𑌮𑌾𑌸𑍀𑌮𑌿𑌵 𑌨𑌿𑌶𑌾𑌂 𑌰𑌾𑌹𑍁𑌗𑍍𑌰𑌸𑍍𑌤𑍇𑌨𑍍𑌦𑍁𑌮𑌣𑍍𑌡𑌲𑌾𑌮𑍍। *

𑌉𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑌪𑌰𑍍𑌣𑌕𑌮𑌲𑌾𑌂 𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌸𑌿𑌤𑌵𑌿𑌹𑌙𑍍𑌗𑌮𑌾𑌮𑍍।
𑌹𑌸𑍍𑌤𑌿𑌹𑌸𑍍𑌤𑌪𑌰𑌾𑌮𑍃𑌷𑍍𑌟𑌾𑌮𑌾𑌕𑍁𑌲𑌾𑌂 𑌪𑌦𑍍𑌮𑌿𑌨𑍀𑌮𑌿𑌵॥ *
𑌪𑌤𑌿𑌶𑍋𑌕𑌾𑌤𑍁𑌰𑌾𑌂 𑌶𑍁𑌷𑍍𑌕𑌾𑌂 𑌨𑌦𑍀𑌂 𑌵𑌿𑌸𑍍𑌰𑌾𑌵𑌿𑌤𑌾𑌮𑌿𑌵।
𑌪𑌰𑌯𑌾 𑌮𑍃𑌜𑌯𑌾 𑌹𑍀𑌨𑌾𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌪𑌕𑍍𑌷𑌨𑌿𑌶𑌾𑌮𑌿𑌵। *
𑌸𑍁𑌕𑍁𑌮𑌾𑌰𑍀𑌂 𑌸𑍁𑌜𑌾𑌤𑌾𑌙𑍍𑌗𑍀𑌂 𑌰𑌤𑍍𑌨𑌗𑌰𑍍𑌭𑌗𑍃𑌹𑍋𑌚𑌿𑌤𑌾𑌮𑍍।
𑌤𑌪𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌮𑌿𑌵𑍋𑌷𑍍𑌣𑍇𑌨 𑌮𑍃𑌣𑌾𑌲𑍀𑌮𑌚𑌿𑌰𑍋𑌦𑍍𑌧𑍃𑌤𑌾𑌮𑍍॥ *

ளாய், தன்னந்தனியளா யழுது வாடிச் சிந்தையும் சோக முமே கைக்கொள்ள, துயரத்தின் முடிவு காணமாட்டா மல் தயரதன் மதலையையே சிந்திப்பவளாய், மந்திரத்திற் பட்ட நாகராஜன் மனைவியைப்போல் புறளுமவளாய், தூமகேது வென்னுங் கிரஹத்தால் துன்புறுகின்ற ரோகிணிபோலும், நல்லொழுக்கமும் நற்குணமும் படைத்த நற்குலத்திற் பிறந்து தீக்குலத்திற் புக்கவள்போலும், வீண்பழிசுமந்த வண்புகழ்போலும், பயிற்சிக்குறைவினல் தழதழத்த கல்விபோலும், குறையத்தலைப்பட்ட கீர்த்தி போலும், இகழ்ச்சிக்கிடமான சிரத்தைபோலும், குறைவாகச்செய்கின்ற பூஜைபோலும், பயன் பெறப்பெருத ஆசைபோலும், குறையத்தலைப்பட்ட வரும்படிபோலும், தடைபட்டு நிற்கின்ற கட்டளைபோலும், உற்பாதகாலத்தி லொளிர்கின்ற திசைபோலும், செய்து பறித்துக்கொள் ளப்பட்ட சீரான பூஜைபோலும், அலங்கோலமாய்க்கிடக்கும் அம்புயக் கயம்போலும், சூரரைப்பறிகொடுத்த சேனையைப்போலும், இருளுக்குமிடந்தந்த வெளிச்சம் போலும், நீரால்குறையுற்ற நதிபோலும், தகாதவன்தீண்டிய யாகப்பிரதேசம்போலும், அணைவதாயிருக்கின்ற அக்கினிச்சுவாலைபோலும், இராகுவின் வாய்ப்பட்ட சந்திரனுற்ற பருவத்தி னிரவுபோலும், இலையும் மலரும்பறியுண்டு பறவைகளுந் துறப்புண்டு யானைத்துதிக்கையால் துழாவப்பெற்ற தாமரையோடைபோலும், பதியின் விரகத்திற்பட்டவ ளாதல்பற்றி தண்ணீர்வடிந் துலர்ந்த நதி

ஶ்ருஹீதாரோஜிதாம்ஷூம்ஹெ யக்ஷியவெநவிநா்ரூதாழ்।
நிஸ்வஸம்தீம்ஸாரதுர்வாதர்ஹம் ஶஜராஜவயஷிரிவ॥ *

ஏகயாதீவஷயாவெண்யா ஶொஹரோநா்யத்ததை:
நீஶயா நீரஷாவாயெ வநராஜ்யாஉஹீரிவ॥ *

உவவாவெஸநஶொகெஂந ஃயாநெநவஸஹயெநவ।
வஶிக்ஷீணாம்ரூஶாம்தீநா உஸ்வாஹாராம்தவொயநாழ்॥ *

க்ருயாவரோநாம்ஶர்வாதஷ்ரம் வ்ராம்ஜயீம்ஷைவதாரிவ।
ஹாவெநரவர்ரோவ்யவ்ய ஷஶத்ரீ வவராஹவழ்॥ *

ஸதீக்ஷரோணாம்ரர்தீஉநிம்ஷிதாம் ஸஶக்ஷ காஉ்ராய
தஶர்க்ஷொவநாழ் । கநர்வ்ராதாம்ராஉஉதீவஶெஉஷிஷீம்
வ்ரொஹயாரோஸவயாயாரவண:॥ ௨௫

இதி ஶ்ரீஉத்தராகாண்டே - ஏகோனவிம்ஶஸ்ஸர்க:

போலும், (சந்தனம் முதலிய) நற்பூச்சில்லாமையால் கிருஷ்ணபக்ஷத்திரவுபோலும், மெல்லியதாய் அழகிய மேனிக்குத்தக்கபடி ரத்தினத்திற்செய்த அந்தப்புரத்திலிருக்கத்தக்கவ ளாகையால், வெப்பத்திற் படுகின்ற (அப்போபறித்த)தாமரைத்தண்டுபோல் கொதிக்கின்றவளாய், ஆணைப்பிரித்துத் தனியே பிணித்த பிடிபோலும், துயரத்தின் மிகுதியினல் பெண்யானைபோல் அடிக்கடி மூச்செறிபவளாய், மழைக்காலங் கடந்தபின் ஓர் தோப்புடன் கூடி விளங்கும் பூமிபோல் கறுத்து நீண்ட பின்னலால் தன்னடையே விளங்குமவளாய், பட்டினி, சோகம், சிந்தை, பயம் இவற்ருல் சாலநொந் திளைத்தவளாய், ஊணொடுங்கிய தவசியாய், அரும்பாவி செய்கின்ற பரிபவத்திற்காற்ருது கைகூப்பிக்கொண்டு இராகவனையிரக்கின்ற தெய்வம்போலிருப்பவளாய், சீரார்ந்த விமையோடு சிவ்ந்து வெளுப்புற்று நீண்ட தடங்கண்களால் விழித்து விழித்துப்பார்த்து அழுகின்ற மைதிலியைப் பார்த்து, தனக்கே கேட்டைவிளைக்கக் கோலியவன்போலிராவணன் காமுற்றனன். 23

பத்தோன்பதாம் ஸர்க்கம் முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌸𑍍𑌕𑌾𑌨𑍍𑌦𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 - 𑌵𑌿𑌂𑌶𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃

𑌸𑌤𑌾𑌂 𑌪𑌤𑌿𑌵𑍍𑌰𑌤𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌨𑌿𑌰𑌾𑌨𑌨𑍍𑌦𑌾𑌂 𑌚 𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌨𑍀𑌮𑍍।
𑌸𑌾𑌕𑌾𑌰𑍇 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌾𑌮𑌾𑌰𑍇 𑌪𑌾𑌰𑍍𑌵𑌤𑍍𑌯𑍈 𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌶𑌾𑌰𑍍𑌯 𑌤𑌾𑌰
𑌵𑌣𑌃॥ ௧

𑌗𑌾𑌂𑌧𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌨𑌾𑌮𑌨𑌾𑌥𑍋𑌸𑌾𑌰 𑌮𑌹𑍇𑌶𑌾𑌨𑌾𑌥𑌮𑌨𑌾𑌦𑌰𑌮𑍍।
𑌕𑍃𑌶𑌾𑌨𑌿𑌵𑌾𑌸𑍍𑌤𑌾𑌨𑌂 𑌜𑌯𑌾𑌮𑍇𑌤𑌂 𑌕𑌵𑌿𑌸𑍍𑌤𑍁𑌸𑌿॥ ௨

𑌕𑌾𑌶𑍍𑌯𑍇𑌕𑌾𑌂 𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑍀 𑌬𑌹𑍁𑌶𑍃𑌙𑍍𑌗𑌸𑌮𑌂𑌵𑍃𑌤𑍇।
𑌸𑌰𑍍𑌵𑌂𑌗𑌮𑍍𑌯𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑍇 𑌸𑌰𑍍𑌵𑌦𑍋𑌷𑌵𑌿𑌨𑌾𑌶𑌨𑍇॥ ௩

𑌨𑌾𑌮𑌕𑍇𑌵𑌿𑌨𑍍𑌦𑍁𑌨𑍍𑌦𑌤𑍍𑌯𑌾𑌵𑌾 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌃 𑌕𑌾𑌮𑌰𑍂𑌪𑌿𑌣𑌃।
𑌵𑍃𑌷𑌵𑌤𑍍𑌤𑌰𑍇𑌤𑌸𑍍𑌤𑍇𑌤 𑌹𑌯𑌂𑌸𑍍𑌤𑍁𑌸𑍍𑌤𑍁𑌮𑌿𑌤𑍍𑌥॥ ௪

𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌵𑌾𑌰𑌕𑍍𑌷𑌸𑌾𑌂 𑌶𑍀𑌰𑍍𑌷 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑌃। *
𑌮𑌨𑍍𑌦𑌂𑌵𑌾𑌪𑌰𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌹𑌰𑌣𑌂𑌸𑌂𑌪𑍍𑌰𑌸𑌕𑍍𑌤𑍍𑌯𑌾॥
𑌲𑌵𑌂𑌦𑍇𑌵𑌤𑌦𑌾𑌕𑌾𑌰𑌾𑌙𑍍𑌗 𑌨𑌕𑌾𑌂𑌸𑍍𑌪𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿𑌦𑍇𑌯𑌿𑌮𑍍।
𑌕𑌾𑌮𑌂𑌕𑌾𑌮𑌸𑍍𑌪𑍃𑌹𑌰𑍇𑌦𑍇 𑌯𑌯𑌾𑌕𑌾𑌮𑌂𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌾𑌮𑍍॥ ௫

𑌦𑍇𑌵𑌿𑌨𑌮𑌹𑌯𑌂𑌕𑌾𑌯𑌰𑍍𑌮 𑌦𑌯𑌿𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑌿𑌤𑌿𑌪𑍍𑌰𑌿𑌯𑍇।
𑌪𑍍𑌰𑌣𑌯𑌸𑍍𑌯 𑌪𑌤𑌤𑍇𑌵𑌨 𑌦𑍇𑌵𑌂𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌕𑌮𑌾𑌯𑌵𑌾। ௭

𑌲𑌕𑍍𑌷𑌵𑍇𑌣𑍀𑌯𑌶𑌾𑌶𑍍𑌯𑌾 𑌸𑍍𑌯𑌾𑌨𑌂𑌦𑍇𑌹𑌿𑌨𑌦𑌂𑌬𑌰𑌮𑍍।
𑌕𑍍𑌷𑌾𑌮𑍇𑌨𑌵𑍍𑌯𑌵𑌵𑌾𑌸𑍍𑌸𑍁 𑌦𑍇𑌨𑌤𑌾𑌨𑍍𑌯𑌳𑌵𑌯𑌿𑌕𑌾𑌨𑌿𑌤𑍇॥ ௮

இருபதாம் ஸர்க்கம்

அநந்தரம் ராவணன், ஏழைபோல் களியற்றுத்தவிக்கின்ற அப்பதிவிரதையிடத்தில் இங்கிதமாய் சில வின்மொழிகள் கூறி, தன் இதயத்தைத் தெரிவிக்கலானான். 1

துதிக்கைத் துடையாய்! தனங்களையும் வயிற்றையும் நீ மறைப்பது கண்டால், என்னிடத்தில் பயத்தால் உன்னைக் காணக்கொடாய் போலும். 2

தடங்கண்ணாய்! உன்னைக் காமுற்றேனல்லேனோ! அன்பினாய்! அங்கமெலாமழகாய் அனைவர்க்குமினியளான நீ என்னை யாதரிப்பாய். 3

நீ என்னைக்கண்டு பயப்படப்புக்கால் அதையொழிக்க இப்புவியில் யாருளர்! மனிசரா, அல்லது நினைத்தபடியாக வல்ல நிசிசரரா! (யாவருமில்லை.) ஆதலின் அதையொழித்துவிடு. 4

அச்சமுடையாய்! அயல்மாதரைக்கூடவோ, வலுவில் பிடித்திழுக்கவோ ராக்ஷஸ ஜாதிக்கு உரிய செயலே; ஆயினும் இசைவின்றி யுன்னைத்தொடநினைக்கின்றிலேன்; ஆதலின் தானாயிசைந்து உன்காமத்தை யென்னிடத்தில் செலவிடுப்பாய். 6

பெருமாட்டி! பயப்படுவதற்கிங் கிடமில்லை; அன்பினாய்! என்னை நம்புவாய்; உண்மையா யென்னை விரும்புவாய்; இப்படி சோகத்திற் கிடங்கொடாதே கொள். 7

வகுக்கவும் பெறாத சடையும், திரைதனிற்கிடையும், சிந்தையும், அழுக்கடைந்த கந்தையும், வீண்பட்டினியுமுனக்கேற்குமோதான்! 8

𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿𑌚𑌰𑌮𑍍𑌯𑌾𑌣𑌿 𑌚𑌨𑍍𑌦𑌨𑌾𑌨𑍍𑌯𑌗𑌰𑍂𑌣𑌿𑌚।
𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌨𑌿𑌚𑌵𑌾𑌸𑌾𑌂𑌸𑌿 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌾𑌭𑌰𑌣𑌾𑌨𑌿𑌚॥ *

𑌭𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌣𑌿𑌚𑌪𑌾𑌨𑌾𑌨𑌿 𑌶𑌯𑌨𑌾𑌨𑍍𑌯𑌾𑌸𑌨𑌾𑌨𑌿𑌚।
𑌗𑍀𑌤𑌂 𑌨𑍃𑌤𑍍𑌤𑌂𑌚𑌵𑌾𑌦𑍍𑌯𑌂𑌚 [illegible]॥ ௧௦

[illegible]
[illegible]॥()

[illegible]।
[illegible]॥ ௧௨

[illegible]।
[illegible]॥ ௧௩

[illegible]।
[illegible]॥ ௧௪

[illegible]।
[illegible]॥()

[illegible]।
[illegible]॥ *

விசித்திரமான மாலைகளும் வகைவகையான சந்தனங்களும் அகிற்களும் விதம்விதமான வஸ்திரங்களும் திவ்வியமான அணிகளும் சிறந்த பானங்களும் படுக்கைகளும் பீடங்களும் பாட்டும் கூத்தும் வாத்தியமும் "மைதிலி!" என்னைப்பெற்றுற் பெறலாகும். 10

பெண்கள் நாயக மல்லையோ! இப்படியுங் கிடப்பாயோ! அங்கமெங்கு மணிகளணிந்து கொள்ளாயோ! பாவாய்! என்னையும் பெற்று இன்னமும் இவற்றிற்கேலா திருப்புதியோ! 11

ஐயோ! அழகாயமைந்த இவ்விளம்பருவம் அவமாய்க்கழிவதே! ஓடையில் நீர்போல் இஃதோடிப்போமானல் மீளவுங் கிடைப்பதோ! 12

பிரபஞ்ச கர்த்தாவான பிரமன், அழகைப்படைப்பானுய் உன்னைப்படைத்தபின் கையொழிந்து நிற்பான் போலும்? ஏனெனில்:—கண்ணுக்கினியாய்! உருவத்திலுனக்கொப்பாய் உலகத்திலொருத்தியுமேயில்லையன்றே!

புருஷனுய்ப்பிறந்தவன், "அவன் பிரமனே யாகட்டும்" "ஓ வைதஹி!" ரூபமும் யவ்வனமும் திகழநின்ற உன்றன்னைப்பெற்று அப்புறம்போவதுண்டோ! 14

தண்கதிரன் போன்ற திருமுகம்படைத்த தெரிவையரே! உனதங்கத்தி லென்கண் எங்கெங்கு தங்குமோ, அங்கங்கு ஆழ்ந்துவிடுமே. 15

மிதிலைக்கோன் செல்வமே! எனக்கு மனைட்டியாகுக; இந்த மயக்கத்தை யொழித்துக்கொள்; பற்பல விடங்களிலுங் தேடிக்கொணர்ந்த பலஉத்தமஸ்திரீகளுக்கும், அதா

[illegible]॥ ௧௬

[illegible]।
[illegible]॥ ௧௭

[illegible]॥ *
[illegible]॥ ௧௮

[illegible]॥
[illegible]॥ ௧௯

[illegible]॥
[illegible]॥ ()

[illegible]॥
[illegible]। *
[illegible]॥ ()

[illegible]।
[illegible]॥ ௨௩

[illegible]।
[illegible]॥ *
[illegible]॥ ௨௪

வது யாவர்க்கும் மேலாய் எனது பட்டத்தரசிகளிற் றலைமைபெற்று புகழ்பெறுவாய். 16½

அச்சமுடையாய்! உலகங்கள்தோறும் சென்று வலுவிற் கொணர்ந்த சிறந்தரத்தினங்களெத்தனையோ, அத்தனையும் இவ்வரசும் யானுமுனக்கே. 17½

பட்டணங்கள் பலவடர்ந்த புவிமுழுதும் "வேணுமாகில்" ஜயித்துனக்காய், ஜனகர்க்குத் தந்தடுவேன்; தையலரே! சிந்தைதனிற் கொள்வாயின்றே. 18½

உலகத்திலெனக் கெதிரியாக வல்லானொருவனைக் காணகில்லேன்; இப்படி சாலப் பெரிதான என் வீரமும் போரில் நிகரின்மையும் பார்த்திலையோ! 19½

தேவரும் தானவரும் போரதனிலெனக் கெதிராய்த் தோன்றி கொடிகள்முறிந்து வலிதொலைந்து சிதைந் தோடினார்கள். 20½

இப்பொழுது உன்சிந்தைக்கிசைந்தபடி அலங்காரம் செய்துகொள்வாய்; மணிமின்னு மணிகளை மேனிதனில் பூட்டிக்கொள்வாய்; அலங்காரமுங்கொண் டந்தமுறு முன்னுருவைக் காண்பேனாக. 22

நன்னுதலாய்! அலங்காரம் செய்துகொண்டு பயமின்றி தாராளமாய் உனக்கிஷ்டமான போகங்களைப்பருகி அனுபவிப்பாய். 23

உனதிஷ்டம்; பூமியோ அல்லது செல்வமோ வேணுமாகில் கொடுத்துவிடலாம்; அச்சமின்றி யென்னுடன் நம்பிக்கலந்து என்னை ஏவிக் காரியங்கொள்வாய்; எனதன்பிற்கிடமாகி இன்புறுகின்ற உன்னைப்பற்றி உன்பந்துக்களும் இன்புறலாகும். 24½

ஜபிம்ஶா நாவஶ்யகும் ஶ்ரியம்ஹத்ரேயஶஸ்துஷே॥ ௨௫

கிம்கரிஷ்யஸிராமேண ஸாஹதைவீரவாஸஸா।
விக்ஷிப்தேவிஜயோராமோ ரதஸ்ரீ வபு நமோஜவஃ॥ *
வ்ருத்தீஷும்பியஶாயீவ ஶம்கேஜீவதிவா நவா॥ ௨௬

நஹிவெவெதேஹிராமோஸாம் த்ருஷ்டும்வாவ்யாவதேவதத॥
வாரோபமாவெகரஸிவைத ரெஜேவெஜ்ர்யாதா
ஶிவாவ்ருதாத்॥
நவாவிஶஹஸ்தாதாம் வ்ராவாஹாதிராவவஃ॥ *
ஹிரண்யகஶிவாஃகீர்த்தி ஶிம்த்ரு ஹஸ்தமதாஶிவ॥ ௨௭

வாராஸ்லிதேவாராதி வாராநேத்ரேவியாஸிநி॥
ஶநோஹரஸிஶேஹீர ஸாவண்டுஃவந்தம்யா॥ ௨௮

க்லிஷ்டகளபெயவஸநாம் தந்வீவ்யநமம்சருதாத்। *
க்வாம்த்ருஷ்ட்வாமேலஷே தாமேஷே ரதிம்நோவம ஹாத்வ
ஹாத்॥ ௩௦

கஞ்சாரநிவாஸிந்ய ஸ்பாஸவமாணாதிதாஃ॥ *
யாவஞ்யாஶஸவாஸா வெஶ்வயும்கராஜாநகி॥ ௩௧

என்னையும், என் மினுக்கத்தையும், செல்வத்தையும், புகழையும், பாவாய்! நீபார்த்தாயோ! 25

சீருடையாய்! மரவுரியுடுத்த ராமனைக்கொண் டுனக் காவதென்ன? அவனோ, வெற்றியிழந்து செல்வங்குலைந்து வனமேகதியாய் விரதம் பூண்டு தரையிற்படுத்து "நினைக் கிறேன்" உயிர்த்திருக்கிறானோ இல்லையோ! 26½

வைதேஹி! கொக்குகள்பறக்கும்படி கறுத்திருண்ட கார்காலமேகத்தில் கரந்துறையும் நிலவுபோன்ற உன்ற ன்னை இனி, யிராமன் காண்பதுவும் கரிப்பேயன்றோ! 27½

இந்திரன் கைபட்ட கீர்த்தியை இரணியன் மீட்கமா ட்டாதாப்போல், * என்கையினின்று முன்றன்னை யிராக வனும் மீட்குந் திறத்தனல்லன். 28½

[* அதாவது:—இரணியன் தன் தேவியை மீட்டுவந்தா னேனும், "இந்திரன் கொண்டுபோனான்" என்றோர் மறு வுண்டானபோதே தன்கீர்த்தியிழந்தானென்று கருத்து.]

அச்சமுடையாய்! உன் சிரிப்பழகும் பல்லழகும் கண்ணழகும் உன் ஒயிலும் (பன்னகத்தைப் பறவைக் கிறைவ னிழுப்பதுபோல்) என்னகத்தை யழிக்கின்றதே.

கசங்கிய பட்டொன்றுடுத்து கோலம் செய்யப்பெ றாத கொம்பனைய நின்னைக்கண்டபின்பு (குறைவற்றிருக் கும்) என்றன் மனைவியரிடத்துச் சிறிது மின்புறப் பெற் றிலேனே. 30½

ஜானகி! அந்தப்புரத்தில் ஸகலமேன்மையும் பெற்று விளங்குமென் தேவிகள் அனைவர்க்கும் அரசு செலுத்து வாய். 31½

உத்ஹ்ய விதகெ ஶாஞெ த்ரெமோக்ஷ ப்ரயாராஷ்ட்ரிய:॥ *
தாஸ்தா: பரிவரிஷ்யந்தி ஶ்ரிய உத்வாரவேஸாயயா॥ ௩௨

யாநி வேஶ்ம வநே ஸாஹ்ர ரத்நாநி வஸநாநி ச॥ *
தாநி மோசாம் ஸ்தவஸ்ரேணி ஶோம் வஹம்க்ஷ்ய யாவத்॥

நாநா ரத்ந ப்ரவாளாத்யை நவமோந நவிக்ரமை:॥ *
நய மே ந நயா தாத்ய ஸ்தேஜஸாயஶஸாவிவா॥ ௩௪

விபவி ஹாரரத்வ ஹம்க்ஷ்வ ஹோமாநு யந நிவயம் வ்ரு
திஶாதிவேதி நீம் ச । உயிமமமமே நயயாவஸேவம் கவம் கவிச
வமேத்ய மமஞாவாம் பவாத்தே॥ ௩௫

காஸ்தித தார ஜாமவஸம் கதாநி ஹ்ருஉரய தாநி
வஸ்ரோத்ரு தீரஜாநி । கநகவிஉமஹார ஹாஷிதாம் பீ விஹ
ரஉயாவஹவீர காநநாநி॥ ௩௬

இதி ஶ்ரீ ஹஸ்தாத்ரிகாவ்யே - விம்ஶஸ்ஸர்க:॥

கருங்குழல் நுனியினுய்! உலகமூன்றிலும் பெயரெடுத்த பெண்கள் எனக்குடைமையன்ருே! அவர்களத்தனை பெயரும் (திருமகட்குத் தெய்வப்பெண்கள் பணிசெய்வதுபோல்) உனக்குப் பணிசெய்வார்கள். 32½

நற்புருவத்தாய்! குபேரன் பவநத்தில் எந்த செல்வமும் இரத்தினமுமுண்டோ அவைகளையும், இவ்வுலகங்களையும், (இவையாவும் படைத்த) என்றனையும், சுகமாய் அனுபவிப்பாய். 33½

தேவி! இராமன் எனக்கெதில் ஈடு! தவத்திலா, பலத்திலா, மிடுக்கிலா, பணத்திலா, பிரதாபத்திலா, புகழிலா! எதிலுமீடல்லன். 34½

ஆகையால் அணங்கே! வேண்டியதைப்பருகி இஷ்டப்படி திரிந்து போகங்களை நுகர்ந்து இன்புறுவாய். இப்புவியும் அதுகொண்ட செல்வமும் உனக்களிப்பேன்; சுகமாய் என்னிடத்தி லின்புற்று, உன்னைச் சேர்ந்தவர்க்கும் உன்றன்னுல் இன்பம் பயப்பாய். 35½

அச்சமுடையாய்! மலரெடுத்த மரவகைகள் நெருங்கப்பெற்று வண்டுகள் மொய்த்து கடலோரத்தில் முளைத்திருக்கும் காடுகளில், நிர்மலமான பொன்னின் மாலைகளணிந் தழகாய் என்னுடனே விளையாடுவாய். (என்ருன்.) 36½

இருபதாம் ஸர்க்கம் முற்றிற்று.

———

𑌶𑍍𑌰𑍀𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 - 𑌏𑌕𑌵𑌿𑌂𑌶𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃

𑌤𑌸𑍍𑌯 𑌤𑌦𑍍𑌵𑌚𑌨𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌸𑍀𑌤𑌾 𑌰𑍌𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌰𑌕𑍍𑌷𑌸𑌃।
𑌆𑌰𑍍𑌤𑌾 𑌦𑍀𑌨𑌸𑍍𑌵𑌰𑌾 𑌦𑍀𑌨𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌵𑌾𑌚 𑌶𑌨𑍈𑌰𑍍𑌵𑌚𑌃॥ ௧

𑌦𑍁𑌃𑌖𑌾𑌰𑍍𑌤𑌾 𑌰𑍁𑌦𑌤𑍀 𑌸𑍀𑌤𑌾 𑌵𑍇𑌪𑌮𑌾𑌨𑌾 𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌨𑍀।
𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍𑌤𑍀 𑌵𑌰𑌾𑌰𑍋𑌹𑌾 𑌪𑌤𑌿𑌮𑍇𑌵 𑌪𑌤𑌿𑌵𑍍𑌰𑌤𑌾॥ *
𑌤𑍃𑌣𑌮𑌨𑍍𑌤𑌰𑌤𑌃 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌵𑌾𑌚 𑌶𑍁𑌚𑌿𑌸𑍍𑌮𑌿𑌤𑌾॥ ௨½

𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌯 𑌮𑌨𑍋 𑌮𑌤𑍍𑌤𑌃 𑌸𑍍𑌵𑌜𑌨𑍇 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑌾𑌂 𑌮𑌨𑌃॥ *
𑌨 𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌯𑌿𑌤𑍁𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌸𑍁𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌿𑌵 𑌪𑌾𑌪𑌕𑍃𑌤𑍍॥ ( )

𑌅𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌨 𑌮𑌯𑌾 𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑍇𑌕𑌪𑌤𑍍𑌨𑍍𑌯𑌾 𑌵𑌿𑌗𑌰𑍍𑌹𑌿𑌤𑌮𑍍॥ *
𑌕𑍁𑌲𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌯𑌾 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌕𑍁𑌲𑍇 𑌮𑌹𑌤𑌿 𑌜𑌾𑌤𑌯𑌾॥ ௪½

𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌵𑍈𑌦𑍇𑌹𑍀 𑌰𑌾𑌵𑌣𑌂 𑌤𑌂 𑌯𑌶𑌸𑍍𑌵𑌿𑌨𑍀॥ *
𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌂 𑌪𑍃𑌷𑍍𑌠𑌤𑌃 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌭𑍂𑌯𑍋 𑌵𑌚𑌨𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍॥ ௫½

𑌨𑌾𑌹𑌮𑍌𑌪𑌯𑌿𑌕𑍀 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾 𑌪𑌰𑌭𑌾𑌰𑍍𑌯𑌾 𑌸𑌤𑍀 𑌤𑌵॥ *
𑌸𑌾𑌧𑍁 𑌧𑌰𑍍𑌮𑌮𑌵𑍇𑌕𑍍𑌷𑌸𑍍𑌵 𑌸𑌾𑌧𑍁 𑌸𑌾𑌧𑍁𑌵𑍍𑌰𑌤𑌂 𑌚𑌰। ௬½

இருபத்தோராம் ஸர்க்கம்

அப்பொழுது அவ்வாளவுணன் மொழிந்த அவ்வன் மொழியைச் சீதை செவியுற்று மிகவும் நொந்து, இரக்க மெழுங் குரலோடு ஏழைபோல் மெதுவாக பதிலுரைத் தாள். 1

துயரத்திற்பட்டுக் கதறுகின்ற அக்கற்புடைச்சீதை நடுக்குற்று, தவசியாய் இராகவனையே சிந்தித்தவளாய், புல்லொன்றை நடுவில் கிள்ளியெறிந்து, வெண்முறுவல் செய்கின்ற வதநங்கொண்டு பின் வருமாறு விளம்ப லுற்றாள். 2½

மனதை யென்னிடத்தினின்றும் மீட்டுக்கொண்டு உன்மனைவியரிடத்தில் வையடா; பாவத்தைச் செய்தவன் நற்பயனைப்பெறப் பார்ப்பதுபோல் என்னை யாசைப்படுவ துனக் காகாதடா. 3½

மஹாவம்சத்தில் பிறந்ததோடு புண்ணியமான குலத் திற் புகுந்து ஒருவர்க்கு மாலையிட்டபின், உலகும்பழிக்கு மடாதசெயலைச் செய்யத்தகாதடா. 4½

இவ்வாறுரைத்த வைதேஹி மீளவும் தன் பெருமைக் கேர்க்க அவ்வரக்கனை யசட்டைசெய்து இந்த விதம் சொல்லத்தொடங்கினாள். 5½

அடா! என்னை யுனக்குப் பெண்டாக்கிக் கொள்ள வடுக்குமோ; மற்றப்படி (உன்குலத்தைச் சுடுகின்ற நெரு ப்புபோல்) பதிவிரதையான வென்னைப் பொகட்டுக்கொடு நிற்கவேண்டாவோ! நல்லோரொழுக்கத்தை நாடி நல்ல படியே நல்விரதத்தை மேற்கொள்ளடா. 6½

𑌯𑌥𑌾 𑌤𑌵 𑌤𑌥𑌾𑌨𑍍𑌯𑍇𑌷𑌾𑌂 𑌦𑌾𑌰𑌾𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌾 𑌨𑌿𑌶𑌾𑌚𑌰॥ *
𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑍁𑌪𑌮𑌾𑌂𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑍇𑌷𑍁 𑌦𑌾𑌰𑍇𑌷𑍁 𑌰𑌮𑍍𑌯𑌤𑌾𑌮𑍍॥()

𑌅𑌤𑍁𑌷𑍍𑌟𑌂 𑌸𑍍𑌵𑍇𑌷𑍁 𑌦𑌾𑌰𑍇𑌷𑍁 𑌚𑌪𑌲𑌂 𑌚𑌲𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌮𑍍॥ *
𑌨𑌯𑌨𑍍𑌤𑌿 𑌨𑌿𑌕𑍃𑌤𑌿𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌂 𑌪𑌰𑌦𑌾𑌰𑌾𑌃 𑌪𑌰𑌾𑌭𑌵𑌮𑍍॥ ௮

𑌇𑌹 𑌸𑌨𑍍𑌤𑍋 𑌨 𑌵𑌾 𑌸𑌨𑍍𑌤𑌿 𑌸𑌤𑍋 𑌵𑌾 𑌨𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌸𑍇॥ *
𑌤𑌥𑌾𑌹𑌿 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌾 𑌤𑍇 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌾𑌚𑌾𑌰𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌾॥ ௯

𑌵𑌚𑍋 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌣𑍀𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑌥𑍍𑌯𑌮𑍁𑌕𑍍𑌤𑌂 𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣𑍈𑌃॥
𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌨𑌾𑌮𑌭𑌾𑌵𑌾𑌯 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌾 𑌨 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌸𑍇॥ ௧௦

𑌅𑌕𑍃𑌤𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯 𑌰𑌾𑌜𑌾𑌨𑌮𑌨𑌯𑍇 𑌰𑌤𑌮𑍍॥ *
𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌾𑌨𑌿 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌣𑌿 𑌨𑌗𑌰𑌾𑌣𑌿 𑌚।

𑌤𑌥𑍈𑌵 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌸𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯 𑌲𑌙𑍍𑌕𑌾 𑌰𑌤𑍍𑌨𑍌𑌘𑌸𑌙𑍍𑌕𑍁𑌲𑌾॥ *
𑌅𑌪𑌰𑌾𑌧𑌾𑌤𑍍𑌤𑌵𑍈𑌕𑌸𑍍𑌯 𑌨𑌚𑌿𑌰𑌾𑌦𑍍𑌵𑌿𑌨𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑌿॥ ௧௨

𑌸𑍍𑌵𑌕𑍃𑌤𑍈𑌰𑍍𑌹𑌨𑍍𑌯𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌰𑌾𑌵𑌣𑌾𑌦𑍀𑌰𑍍𑌘𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃॥
𑌅𑌭𑌿𑌨𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌵𑌿𑌨𑌾𑌶𑍇 𑌪𑌾𑌪𑌕𑌰𑍍𑌮𑌣𑌃।

உன்பெண்டீரைப் பாதுகாப்பதுபோல் அவரவர்க்கு முண்டன்றோ! ஆகையால் முன்னே உன்னைப்பார்த்து, இப்படிதான் பிறருமென்று நினைத்து உன்மனைவியரோடு கூடியிருப்பாய். 7½

தன் மாதரிடத்தில் ஆதரங்குன்றி சபலங்கொண்டு, புலன்களைப் போம்வழியே செலவிடுகின்ற வஞ்சகக் கோழையை, அயல்மாதர்கள் அல்லலுக் காளாக்குவர்கள். 8½

இவ்வூரில் நல்லோர்கள்தானில்லையோ! (விபீஷணன் முதலானோர்) இருக்கின்றார்கள்; ஆகினும் நீ அவர்களை அநுவர்த்திப்பவனல்லையே! அது நீ கண்டபடி யென்னெ ன்னில்:—நல்லொழுக்கத்தையொழித்தவிபரீதமான உன் புத்தியே காட்டுகிற தில்லையோ! 9½

சாதுக்களான அவர்கள் தாமாய் வந்து உனக்கு ஹிதம் சொன்னாலும் அதைக்கேட்பவனோ! அரக்கர்களை யில்லையெனத் துலைக்கவென்று உன்மனன்றான் அவ்வழியிலகப்பட்டுள்ளதே. 10½

திருந்தாத நெஞ்சமும் தீயவழியில் நேயமும் படைத்த அரசனிடத்திற் கிடைத்த செல்வம்மல்கிய தேசங்களும் நகரங்களும் தேய்ந்தறுமன்றே! அப்படியே செழுமணிகள் செறிந்த இவ்விலங்கை நகர் இவ்விடத்திலகப்பட்டு நீ ஒருவன் செய்கின்ற குற்றத்திற்காகச் சீக்கிரத்தில் நாசமுறப் போகின்றது. 12½

ராவண! தன்னைக்கொண்டு தானைய் முடிகின்ற தீத்தொழில் புரியுமுன் நாசத்தை நினைத்துப் பூதங்கள்யாவுங் களிக்கின்றன; உன் வஞ்சனையிற்பட்ட ஜனங்கள் யாவ

𑌸 𑌏𑌵𑌂 𑌸𑍍𑌵𑌾𑌂 𑌪𑌾𑌵𑌕𑍋𑌰𑍍𑌣𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌂𑌤𑌿 𑌨𑌿𑌕𑍍𑌷𑍍𑌯 𑌤𑌾𑌜𑌨𑌾𑌃॥ *
𑌦𑌿𑌵𑍇𑌷𑍍𑌵𑍍𑌯𑌤𑌦𑍍𑌯 𑌸𑌨𑌂𑌵𑍍𑌰𑌾𑌵𑍇𑌤𑍍𑌤 𑌰𑌳𑌕𑍍𑌰 𑌉𑌦𑍇𑌤𑍍𑌯𑌵𑌹𑌷𑌿𑌤𑌾𑌃॥ ௧௪ ௨
𑌶𑌕𑍍𑌰𑌾𑌦𑍋𑌹𑌯𑌿𑌤𑌂 𑌨𑌾𑌹 𑌦𑍇𑌵𑍇𑌶𑍍𑌵𑌯𑍇𑌰𑍍𑌣𑌯𑌦𑍇𑌨𑌵𑌾॥ *
𑌕𑌨𑍍𑌯𑌾𑌰𑌾𑌵𑌦𑍇𑌣𑌾𑌹𑌂 𑌹𑌾𑌕𑍍𑌷𑌸𑌰𑍇𑌣𑌵𑍍𑌰𑌹𑌾𑌯𑌯𑌾॥ ௧௫ ௨

𑌉𑌪𑌯𑌾𑌯𑌹𑌰𑍍𑌜𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌶𑍋𑌕𑌨𑌾𑌯𑌸𑍍𑌯𑌸𑌕𑍍𑌷𑍍𑌯𑌤॥ *
𑌚𑌯𑌂 𑌨𑌾𑌶𑍋𑌪𑌯𑌾𑌸𑍍𑌯𑌾𑌶𑌿 𑌹𑌰𑍍𑌜𑌤𑍇𑌨𑍍𑌯𑌸𑍍𑌯𑌕𑌸𑍍𑌯𑌵𑌿𑌕॥ ௧௬ ௨

𑌕𑌹𑌳𑍇𑌪𑌯𑌿𑌕𑍀𑌹𑌾𑌯𑌰𑍍𑌤 𑌤𑌦𑍇𑌵𑍍𑌯𑌵𑌪𑌸𑌰𑍍𑌯𑌾𑌵𑌦𑍇𑌤𑌃॥ *
𑌵𑍃𑌤𑌸𑍍𑌨𑌾 𑌤𑌸𑍍𑌯𑌵𑌿𑌵𑍍𑌰𑌸𑍍𑌯 𑌵𑌿𑌦𑍇𑌵𑍍𑌯𑌵𑌿𑌧𑌿𑌤𑌾𑌤𑍍𑌵𑌨𑌃 ௧௭ ௨

𑌸𑌾𑌯𑌰𑍍𑌰𑌾𑌵𑌣𑌰𑌾𑌦𑍇𑌣 𑌰𑌾𑌂𑌸𑌸𑍋𑌨𑌯𑌕𑌰𑍍𑌵𑌿𑌤𑌾𑌟𑌃॥
𑌵𑌦𑍇𑌵𑌾𑌶𑌿𑌤𑌯𑌾𑌸𑌾𑌬𑍁𑌂 𑌕𑌰𑍇𑌣𑍍𑌵𑍇𑌵𑌗𑌜𑌾𑌯𑌿𑌵𑌟॥ ௧௮ ௨

𑌦𑌿𑌤𑍍𑌰𑍁𑌳𑌵𑌯𑌿𑌕𑌂 𑌕𑌤𑌰𑍍𑌂 𑌰𑌾𑌃𑌸𑍍𑌸𑌾𑌨𑌂 𑌵𑌶𑍀𑌵𑍃𑌤𑌾॥ *
𑌵𑌯𑌂 𑌉𑌪𑌾𑌨𑌿𑌷𑍍𑌠𑌤𑌾𑌵𑍋𑌰𑌂 𑌕𑌯𑌾𑌸𑌳𑌵𑌰𑍍𑌰𑌷𑌷𑌰𑍍𑌹𑌃।

𑌵𑌿𑌧𑌿𑌤𑌸𑍍𑌵𑌹𑌿𑌯𑌉𑌜𑌕𑍍𑌤𑍁 𑌶𑍍𑌰𑌣𑌾𑌗𑌤𑌵𑌤𑍍𑌵𑌃॥ *
𑌦𑍇𑌨𑌦𑍇𑌃𑌤𑍍𑌰𑍀𑌹𑌵𑌤𑌨𑍍𑌦𑍇 𑌯𑌦𑌿𑌜𑍀𑌵𑌿𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌸𑌿।

ரும் "தைவாதீனமாய் கொடும்பாவி இந்தவிசனத்திற் பட்டானே!" என்று களிகொண் டுரைக்கப்போகின் றனர். $14\frac{1}{2}$

உனது அந்தப்புரத்தரசையும் செல்வக்கிளப்பத்தை யுங் காட்டி மசக்குவதற்கு நானிடமல்ல கிடாய்; கதி ரவனை விட்டு ஒளி நீங்காததுபோல இராகவனை விட்டு யான் நீங்குவதின்று. $15\frac{1}{2}$

உலகமெங்கும் நச்சப்பிறந்த மேனுணிப்புடைய ராக வன் புயத்தை அண்டைகொண்ட யான், இன்னுனென்று குறிப்பிடவும் இடமல்லாத ஒருவன் தோளைத் தீண்டுவ தெப்படி?. $16\frac{1}{2}$

மறையோது விரதங்களில் குளித்து, ஆத்மஞானி யான மறையவனுக்குரிய யோகவித்தைபோல், அப்புவி மன்ன னொருவர்க்கே யான் பொருந்தும் பாரியை. $17\frac{1}{2}$

நல்லது ராவண! வனத்தில் பிடியை மதயானையுடன் கூட்டுவதுபோல் துயர்துய்த்திருக்கு மென்னை இராமனு டன் சேர்ப்பாயாக. பிடி=பெண்யானை. $18\frac{1}{2}$

உன் இடம் உனக்குத் தக்கவேண்டுமானல் இராம னுடன் தோழமைகொள்ள வடுக்கும்; முடிவதாய்த் துணிந்தாலும் அது கோரமானகொலையாய் முடியாதபடி யாக வேண்டில், அந்த புருஷோத்தமனை அநுஸரிப்பாய்.

அவர்தாம், தர்மக்ஞரென்றும் சரணுகதவிஷயத்தில் சாலவன்புடையவரென்றும் பிரஸித்தமாகையால் உனக் குந் தெரிந்தவிஷயமே; ஆதலின், நீ ஜீவிக்க நினைத்தாயா கில் அவருடன் தோழமைகொள்ளப்பார்; அஞ்சினவர்

𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌯𑌸𑍍𑌵 𑌤𑍍𑌵𑌂 𑌚𑍈𑌨𑌂 𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌵𑌤𑍍𑌸𑌲𑌮𑍍॥ *
𑌮𑌾𑌂 𑌚𑌾𑌸𑍍𑌮𑍈 𑌪𑍍𑌰𑌯𑌤𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌨𑌿𑌰𑍍𑌯𑌾𑌤𑌯𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿॥

𑌏𑌵𑌂 𑌹𑌿 𑌤𑍇 𑌭𑌵𑍇𑌤𑍍𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿 𑌸𑌂𑌪𑍍𑌰𑌦𑌾𑌯 𑌰𑌘𑍂𑌤𑍍𑌤𑌮𑍇। *
𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌤𑍍𑌵𑌂 𑌹𑌿 𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣𑍋 𑌵𑌧𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 𑌰𑌾𑌵𑌣॥ ()

𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌦𑍍𑌵𑌜𑍍𑌰𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌷𑍍𑌟𑌂 𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌦𑌨𑍍𑌤𑌕𑌶𑍍𑌚𑌿𑌰𑌮𑍍॥ ※
𑌤𑍍𑌵𑌦𑍍𑌵𑌿𑌧𑌂 𑌤𑍁 𑌨 𑌸𑌙𑍍𑌕𑍍𑌰𑍁𑌦𑍍𑌧𑍋 𑌲𑍋𑌕𑌨𑌾𑌥𑌸𑍍𑌸 𑌰𑌾𑌘𑌵𑌃॥ ௨௫

𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌧𑌨𑍁𑌷𑌶𑍍𑌶𑌬𑍍𑌦𑌂 𑌶𑍍𑌰𑍋𑌷𑍍𑌯𑌸𑌿 𑌤𑍍𑌵𑌂 𑌮𑌹𑌾𑌸𑍍𑌵𑌨𑌮𑍍। ※
𑌶𑌤𑌕𑍍𑌰𑌤𑍁𑌵𑌿𑌸𑍃𑌷𑍍𑌟𑌸𑍍𑌯 𑌨𑌿𑌰𑍍𑌘𑍋𑌷𑌮𑌶𑌨𑍇𑌰𑌿𑌵॥ ௨௬

𑌇𑌹 𑌶𑍀𑌘𑍍𑌰𑌂 𑌸𑍁𑌪𑌰𑍍𑌵𑌾𑌣𑍋 𑌜𑍍𑌵𑌲𑌿𑌤𑌾𑌸𑍍𑌯𑌾 𑌇𑌵𑍋𑌰𑌗𑌾𑌃॥
𑌇𑌷𑌵𑍋 𑌨𑌿𑌪𑌤𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌰𑌾𑌮𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌃।
𑌰𑌕𑍍𑌷𑌾𑌂𑌸𑌿 𑌪𑌰𑌿𑌨𑌿𑌘𑍍𑌨𑌨𑍍𑌤𑌃 𑌪𑍁𑌰𑍍𑌯𑌾𑌮𑌸𑍍𑌯𑌾𑌂 𑌸𑌮𑌨𑍍𑌤𑌤𑌃॥ ※
𑌅𑌸𑌂𑌪𑌾𑌤𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌪𑌤𑌨𑍍𑌤𑌃 𑌕𑌙𑍍𑌕𑌵𑌾𑌸𑌸𑌃॥ ௨௭

𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌹𑌾𑌸𑌰𑍍𑌪𑌾𑌨𑍍 𑌸 𑌰𑌾𑌮𑌗𑌰𑍁𑌡𑍋 𑌮𑌹𑌾𑌨𑍍॥ ※
𑌉𑌦𑍍𑌧𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌵𑍇𑌗𑍇𑌨 𑌵𑍈𑌨𑌤𑍇𑌯 𑌇𑌵𑍋𑌰𑌗𑌾𑌨𑍍॥ ௨௮

𑌅𑌪𑌨𑍇𑌷𑍍𑌯𑌤𑌿 𑌮𑌾𑌂 𑌭𑌰𑍍𑌤𑌾 𑌤𑍍𑌵𑌤𑍍𑌤𑌃 𑌶𑍀𑌘𑍍𑌰𑌮𑌰𑌿𑌨𑍍𑌦𑌮𑌃॥ ※
𑌅𑌸𑍁𑌰𑍇𑌭𑍍𑌯𑌶𑍍𑌶𑍍𑌰𑌿𑌯𑌂 𑌦𑍀𑌪𑍍𑌤𑌾𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌰𑌿𑌵 𑌕𑍍𑌰𑌮𑍈𑌃॥ ௨௯

க்கு அபயந் தந்தருளுமவரை நீயும் வேண்டிக்கொண்டு, என்னையும் கரவற்ற நெஞ்சோடு கொடுத்துவிடப்பார்; இதுதான் உனக்கு ஹிதம். 21½

இப்படி இராகவனிடத்தில் என்னைக்கொண்டு விட்டால்தான் உனக்கு க்ஷேமம்; அல்லாதபோது, ராவண! உன்னைக் கொன்றல்லது விடார்காண். 22½

உன்னைப்போன்றவனை இந்திரன் விடுத்த வச்சிரம் விட்டாலும் விடும்; இயமனே நெடுங்காலம் உன்னை விட்டாலும் விடும்; லோகநாதனான இராகவன் சினங்கொண்டபின்பு விடுவாரென்று நினையாதேகொள். 23½

இந்திரன்விட்ட இடியினது சத்தம்போல் மஹாநாதத்துடன் கூடிய இராமனது வில்லொலியைக் கேட்கப் போகின்றாய். 24½

வெகுசீக்கிரத்தில் இங்கே இராமலக்ஷ்மணனுடைய நாமங்களைப் பூண்ட வெஞ்சரங்கள், முகத்தில் விஷஜ்வாலையுடன் ஸர்ப்பங்கள்போல் வந்து வீழ்ந்து, இந்நகரமுழுதும் அரக்கர்களைச் செகுத்துக்கொண்டு, கழுகின் இறகுடன் பார்த்த விடமெங்கும் பரவப்போகின்றன. 26½

ராக்ஷஸ ஸ்ரேஷ்ட்டர்களாகிற மஹாஸர்ப்பங்களை அந்த ராமனென்னும் பெரிய கருடன், ஸர்ப்பங்களைக் கருடன் கெடுப்பதுபோல் கெடுக்கப்போகின்றார். 27½

மாற்றாரை மாய்க்கவல்ல மன்னனார் (அசுரரிடத்தினின்றும் செல்வத்தை மாயவனார் மூவடியிட்டளந்து கொண்டதுபோல்) என்னை உன்னிடத்திலிருந்து விரைவில் மீட்கப் போகின்றார். 28½

ஜநஸ்தாநே ஹதஸ்தாநே நிஹதே ரக்ஷஸாம் பலே || *
அஶக்தேந த்வயா ரக்ஷ: க்ருதமேததஸாது வை || ௨௯

ஆஶ்ரமம் தயோஶ்ஶூந்யம் ப்ரவிஶ்ய நரஸிம்ஹயோ: || *
கோசரம் கதயோர்ப்ராத்ரோரபநீதா த்வயாதம || ௩௦

நஹி கந்தமுபாக்ராய ராமலக்ஷ்மணயோஸ்த்வயா || *
ஶக்யம் ஸந்தர்ஶநே ஸ்தாதும் ஶுநா ஶார்தூலயோரிவ

தஸ்ய தே விக்ரஹே தாப்யாம் யுகக்ரஹணமஸ்திரம் || *
வ்ருத்ரஸ்யேவேந்த்ரபாஹுப்யாம் பாஹோரேகஸ்ய
நிக்ரஹ: || ௩௨

க்ஷிப்ரம் தவ ஸ நாதோ மே ராம: ஸௌமித்ரிணா ஸஹ || *
தோயமல்பமிவாதித்ய: ப்ராணாநாதாஸ்யதே ஶரை: || ()

கிரிம் குபேரஸ்ய கதோऽபதாய வா ஸபாம்
கதோ வா வருணஸ்ய ராஜ்ஞ: | அஸம்ஶயம் தாஶரதேர்ந
மோக்ஷ்யஸே மஹாத்ரும: காலஹதோऽஶநேரிவ || ௩௪

ஶ்ரீஸுந்தரகாண்டே - ஏகவிம்ஶஸ்ஸர்க:

அட ராக்ஷஸ! ஜனஸ்தாநமென்னும் பாழிடத்தில் அரக்கர்சேனையாவும் பட்டுக்கிடக்க, அதுகண்டு பயந்து, கையிலாகாத உன்றன்னால் இந்த புன்செயல் செய்யப் பட்டது. 29½

ஸஹோதரர்களான அவ்வாண் சிங்கங்கள் வெளி யிற் போயிருந்த காலத்தில் சூனியமாய்க்கிடந்த ஆச்சிர மத்திற்புக்கு "அட பதரே!" என்னை யெடுத்துவந்தாய். ()

இராமலக்ஷ்மணனுடைய மணம்பட்டாலும்போதுமே; புலிகளின்முன் நிற்கமாட்டாத சுணங்கன்போல் நிற்கவும் வல்லாயல்லையே. (சுணங்கன்-நாய்.) 31½

அப்படி யொருக்கால் கோழையான நீ யொருவன் அவ்விருவருடன் போர்புரிய நேரிட்டிருந்தால், இரண்டு புயங்களுடன் சண்டைசெய்யு மிந்திரனுடன் ஒருகையில் சண்டையிட்ட விருத்திரன்போல் வெற்றிகெடுவாய். 32½

இளையவனுடன் கூடி யென்னுதன் இதோவந்து, அற்பஜலத்தை ஆதித்தன் சுவற்றுவதுபோல், உன் உயி ரைச் சரங்கள்கொண்டு கழற்றப்போகின்றார். 33½

குபேரனுக்கிடமான கைலாசத்தைக் கடந்து சென் றாலும், வருணன் சபைக்குள்போய் ஒளித்துக்கொண்டா லும், இடிவீழ்ந்த பெருமரம்போல் இராகவன் சரத்திற் கிலக்கான நீ தப்பித்துக் கொள்ள விரகில்லை. 34½

இருபத்தோராம் ஸர்க்கம் முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 - 𑌦𑍍𑌵𑌾𑌵𑌿𑌂𑌶𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃 ॥

𑌸𑍀𑌤𑌾𑌯𑌾𑌵𑌚𑌨𑌂𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌪𑌰𑍁𑌷𑌂𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌧𑌿𑌪𑌃 ।
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌵𑌾𑌚𑌤𑌤𑌸𑍍𑌸𑍀𑌤𑌾𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌿𑌯𑌂𑌪𑍍𑌰𑌿𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌮𑍍 ॥ ௧

𑌯𑌥𑌾𑌯𑌥𑌾𑌸𑌾𑌨𑍍𑌤𑍍𑌵𑌯𑌿𑌤𑌾 𑌵𑌶𑍍𑌯𑌃𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌤𑌥𑌾 𑌤𑌥𑌾 ।
𑌯𑌥𑌾𑌯𑌥𑌾𑌪𑍍𑌰𑌿𑌯𑌂𑌵𑌕𑍍𑌤𑌾 𑌪𑌰𑌿𑌭𑍂𑌤𑌸𑍍𑌤𑌥𑌾 𑌤𑌥𑌾 ॥ ௨

𑌸𑌨𑍍𑌨𑌿𑌯𑌚𑍍𑌛𑌤𑌿𑌮𑍇𑌕𑍍𑌰𑍋𑌧𑌂 𑌤𑍍𑌵𑌯𑌿𑌕𑌾𑌮𑌸𑍍𑌸𑌮𑍁𑌤𑍍𑌥𑌿𑌤𑌃 ।
𑌦𑍍𑌰𑌵𑌤𑍋𑌽𑌮𑌾𑌰𑍍𑌗𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯 𑌹𑌯𑌾𑌨𑌿𑌵𑌸𑍁𑌸𑌾𑌰𑌥𑌿𑌃 ॥ ௩

𑌵𑌾𑌮𑌃𑌕𑌾𑌮𑍋𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌕𑌿𑌲 𑌨𑌿𑌬𑌧𑍍𑌯𑌤𑍇 ।
𑌜𑌨𑍇𑌤𑌸𑍍𑌮𑌿𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍁𑌕𑍍𑌰𑍋𑌶𑌃 𑌸𑍍𑌨𑍇𑌹𑌶𑍍𑌚𑌕𑌿𑌲𑌜𑌾𑌯𑌤𑍇 ॥ ௪

𑌏𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌕𑌾𑌰𑌣𑌾𑌨𑍍𑌨𑌤𑍍𑌵𑌾𑌂 𑌘𑌾𑌤𑌯𑌾𑌮𑌿𑌵𑌰𑌾𑌨𑌨𑍇 ।
𑌵𑌧𑌾𑌰𑍍𑌹𑌾𑌮𑌵𑌮𑌾𑌨𑌾𑌰𑍍𑌹𑌾𑌂 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌵𑍍𑌰𑌜𑌿𑌤𑍇𑌰𑌤𑌾𑌮𑍍 ॥ ௫

𑌪𑌰𑍁𑌷𑌾𑌣𑍀𑌹𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌨𑌿 𑌯𑌾𑌨𑌿𑌯𑌾𑌨𑌿𑌬𑍍𑌰𑌵𑍀𑌷𑌿𑌮𑌾𑌮𑍍 ।
𑌤𑍇𑌷𑍁𑌤𑍇𑌷𑍁𑌵𑌧𑍋𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌤𑌵𑌮𑍈𑌥𑌿𑌲𑌿𑌦𑌾𑌰𑍁𑌣𑌃 ॥ ௬

𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍁𑌵𑍈𑌦𑍇𑌹𑍀𑌂 𑌰𑌾𑌵𑌣𑍋𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌧𑌿𑌪𑌃 ।
𑌕𑍍𑌰𑍋𑌧𑌸𑌂𑌰𑌮𑍍𑌭𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸𑍀𑌤𑌾𑌮𑍁𑌤𑍍𑌤𑌰𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ॥ ௭

𑌦𑍍𑌵𑍌𑌮𑌾𑌸𑍌𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌵𑍍𑌯𑍌𑌮𑍇 𑌯𑍋𑌽𑌵𑌧𑌿𑌸𑍍𑌤𑍇𑌮𑌯𑌾𑌕𑍃𑌤𑌃 ।
𑌤𑌤𑌶𑍍𑌶𑌯𑌨𑌮𑌾𑌰𑍋𑌹 𑌮𑌮𑌤𑍍𑌵𑌂𑌵𑌰𑌵𑌰𑍍𑌣𑌿𑌨𑌿 ॥ ௮

இருபத்திரண்டாம் ஸர்க்கம்

சீதை யுரைத்த கொடுஞ் சொற்களை அரக்கர்கோன் செவியுற்று உடனே கண்ணுக்கினியளான அக்காரிகை யைப்பார்த்து கடுமையாயிஃதுரைத்தான். 1

ஸாதாரணமா யொருபுருஷன் பெண்களுக்கு வசப் பட்டு எவ்வளவுக்கெவ்வளவு நல்வார்த்தைசொல்லி நயம் பேசுகிறனே அவ்வளவுக்கவ்வளவு அவமானப்படுகிறன்.

எனக்குன்னிடத்தில் உண்டான வேட்கையானது (வழிதப்பிப் பாய்கின்ற புரவிகளைச் சாரதி அடக்குமா போல்) என் சினத்தை யடக்குகின்றது. 3

மனிதர்களுக்குக் காமமென்பது பிசகு; ஏனெனில், ஒரு பிராணியிடத்தில் காமங்கொள்ளும்போது அங்கு கருணையும் அன்பும் தன்னடையே தோன்றுகின்றன; ஆகவேதான் போலி வனவாசியான ராமனிடத்தில் பற் றுடையளான உன்னைக் (கொலைபுரியவும் அவமானப்படு த்தவும் கூடுமாயிருந்தும்) கொல்லுவித்தேனில்லை. 5

ஓ மைதிலி! இப்பொழுது நீ பேசிய கடுமொழிகள் யாவையாவை சிலவுண்டோ, அவ்வச்சொற்கள் தோறும் உன்னைக் கடுமையான கொலைக்கிடமாக்கலாகும். 6

இவ்வாறு வைதேஹியைப்பார்த்து அந்த அரக்கர் கோன் இராவணன் அறைந்து, சினக்கொதிப்போ டிந்த விதம் செப்பலுற்றான். 7

இன்னும் இரண்டு மாதம் உன் இசைவை யெதிர்ப் பார்க்க வேண்டுவது; இதுவன்றே உனக்கு யானிட்ட கெடுவு; ஆகையால் ஓ சுந்தரி! அதற்குள்ளாக என் சயன

𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌂𑌦𑍍𑌵𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌤𑍁𑌮𑌾𑌸𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌭𑌰𑍍𑌤𑌾𑌰𑌂𑌮𑌾𑌮𑌨𑌿𑌚𑍍𑌛𑌤𑍀𑌮𑍍 ।
𑌮𑌮𑌤𑍍𑌵𑌾𑌂𑌪𑍍𑌰𑌾𑌤𑌰𑌾𑌶𑌾𑌯 𑌆𑌰𑌭𑌨𑍍𑌤𑍇𑌮𑌹𑌾𑌨𑌸𑍇 ॥ ௯

𑌤𑌾𑌂𑌤𑌰𑍍𑌜𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌂𑌸𑌂𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍇𑌣𑌜𑌾𑌨𑌕𑍀𑌮𑍍 ।
𑌦𑍇𑌵𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌕𑌨𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌾 𑌵𑌿𑌷𑍇𑌦𑍁𑌰𑍍𑌵𑌿𑌕𑍃𑌤𑍇𑌕𑍍𑌷𑌣𑌾𑌃 ॥ ௧௦

𑌓𑌷𑍍𑌠𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍈𑌰𑌪𑌰𑌾 𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌨𑍇𑌤𑍍𑌰𑍈𑌸𑍍𑌤𑌥𑌾𑌪𑌰𑌾𑌃 ।
𑌸𑍀𑌤𑌾𑌮𑌾𑌶𑍍𑌵𑌾𑌸𑌯𑌾𑌮𑌾𑌸𑍁𑌸𑍍𑌤𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌂𑌤𑍇𑌨𑌰𑌕𑍍𑌷𑌸𑌾 ॥ ௧௧

𑌤𑌾𑌭𑌿𑌰𑌾𑌶𑍍𑌵𑌾𑌸𑌿𑌤𑌾𑌸𑍀𑌤𑌾 𑌰𑌾𑌵𑌣𑌂𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌧𑌿𑌪𑌮𑍍 ।
𑌉𑌵𑌾𑌚𑌾𑌤𑍍𑌮𑌹𑌿𑌤𑌂𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌵𑍃𑌤𑍍𑌤𑌶𑍌𑌣𑍍𑌡𑍀𑌰𑍍𑌯𑌗𑌰𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ॥ ௧௨

𑌨𑍂𑌨𑌂𑌨𑌤𑍇𑌜𑌨𑌃𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑌸𑍍𑌤𑌿𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑍇𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।
𑌨𑌿𑌵𑌾𑌰𑌯𑌤𑌿𑌯𑍋𑌨𑌤𑍍𑌵𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑍋𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌿𑌗𑌰𑍍𑌹𑌿𑌤𑌾𑌤𑍍 ॥ ௧௩

𑌮𑌾𑌂𑌹𑌿𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃𑌪𑌤𑍍𑌨𑍀𑌂 𑌶𑌚𑍀𑌮𑌿𑌵𑌶𑌚𑍀𑌪𑌤𑍇𑌃 ।
𑌤𑍍𑌵𑌦𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌷𑍁𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌯𑍇𑌨𑍍𑌮𑌨𑌸𑌾𑌪𑌿𑌕𑌃 ()

𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌧𑌮𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾𑌮𑌮𑌿𑌤𑌤𑍇𑌜𑌸𑌃 ॥
𑌉𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑌸𑌿𑌯𑌤𑍍𑌪𑌾𑌪𑌂 𑌕𑍍𑌵𑌗𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇 ॥ ௧௫

த்தில் வந்தேறப்பார்; இரண்டுமாதங்கடந்தும் நீ என்னைக் கொழுனனுய்க் கொள்ளாவிடில் அடுத்த நாள் காலையில் என் புசிப்புக்காகும்படி உன்னைப் பாகசாலையில் பதம் செய்வார்கள். 9

இப்படி ராக்ஷஸராஜனுல் மிரட்டப்படுகின்ற ஜானகியைத் தெய்வப்பெண்களும் கந்தருவக்கன்னிகளுங் கண்டு மிரண்டு விழித்து விசனமுற்ருர்கள். 10

அப்பொழுது அதில் சிலர், உதட்டின் குறிகளாலும் கண் வாய் முதலியவற்றின் குறிகளாலும், அரக்கனலலைப்புண்ட தேவிக்கு ஆறுதல் செய்தார்கள். 11

இப்படி யவர்கள் தேற்றத்தேறிய ஸீதாதேவி, ராக்ஷஸராஜனன ராவணனைப் பார்த்து, தனக்கு ஹிதமான வார்த்தைகளைத் தனது கற்புடைமையின் பலச் செறுக்கு தோற்ற இந்தவிதம் செப்பலுற்ருள். 12

அட! நிச்சயமாய், உன்னை யிவ்வடாதசெயலை விட்டுத் திருப்பி நல்வழியில் கொண்டுபோக வல்லவ னொருவனில்லைபோலும். 13

இந்திரனுக் கின்றுணைவியான விந்திராணிபோல், தருமாத்மாவின் தேவியரான வென்றன்னை, உலகமூன்றிலு முன்னையொழிந்த வொருவன் சிந்தையிலும் சிந்திக்கமாட்டான். 14

அட ராக்ஷஸப் பதடியே! அளவற்ற மிடுக்குடையரான ராமன்தேவியை வாய்வந்தபடி பிதற்றிய நீ எங்கோடித் தப்பப்போகிருய். 15

யதா²த்³ருப்யஶ்ச மாதங்க³ஶ்ஶஶஶ்ச ஸஹிதோ வநே|
ததா² த்³விரத³வத்³ராம: த்வம் நீச ஶஶவத்ஸ்ம்ருத:|| ௧௬

ஸ இக்ஷ்வாகுநாத²ம் வை க்ஷிபந்நிஹ ந லஜ்ஜஸே|
சக்ஷுஷோ விஷயம் தஸ்ய ந தாவது³பக³ச்ச²ஸி|| ௧௭

இமே தே நயநே க்ரூரே விரூபே க்ருஷ்ணபிங்க³லே|
க்ஷிதௌ ந பதிதே கஸ்மாந்மாமநார்ய நிரீக்ஷத:|| ௧௮

தஸ்ய த⁴ர்மாத்மந: பத்நீம் ஸ்நுஷாம் த³ஶரத²ஸ்ய ச|
கத²ம் வ்யாஹரதோ மாம் தே ந ஜிஹ்வா வ்யவஶீர்யதே|| ௧௯

அஸந்தே³ஶாத்து ராமஸ்ய தபஸஶ்சாநுபாலநாத்|
ந த்வாம் குர்மி த³ஶக்³ரீவ ப⁴ஸ்ம ப⁴ஸ்மார்ஹதேஜஸா|| ௨௦

நாபஹர்துமஹம் ஶக்யா தஸ்ய ராமஸ்ய தீ⁴மத:|
விதி⁴ஸ்தவ வதா⁴ர்தா²ய விஹிதோ நாத்ர ஸம்ஶய:|| ௨௧

ஶூரேண த⁴நத³ப்⁴ராத்ரா ப³லை: ஸமுதி³தேந ச|
அபோஹ்ய ராமம் கஸ்மாச்சித்³தா³ரசௌர்யம் த்வயா க்ருதம்|| ௨௨

ஸீதாயா வசநம் ஶ்ருத்வா ராவணோ ராக்ஷஸாதி⁴ப:|
விவ்ருத்ய நயநே க்ரூரே ஜாநகீமந்வவைக்ஷத|| ௨௩

வனத்தில் மதயானையும் முயலுங் கூடினாற்போனால், மதவேழம் போன்ற ராமன் முன்னால் உன்னையுமோர் புன்மையான முயலென்னவேண்டும். 16

அத்தகைத்த நீ அந்த இக்ஷ்வாகு நாதனை யிகழ்ந்து பேசுகிறாய்; வெட்கந்தானில்லையோ! நீ இதுகாறும் அவர் கண்ணுக் கிலக்காறுயில்லை; ஆனபின்பன்றோ தெரியப் போகின்றது! 17

அட அற்ப! கறுக்கச் சிவக்க விகாரமாய் விழித் தென்னைப் பார்க்கின்ற உன் பொல்லாக் கண்கள், ஏனோ புவியில் பலபலவென் றுதிரவில்லை? 18

தருமாத்மாவான அவர்க்குத் தேவியாய் தயரதற்கு மருமகளான வென்னை வாய்வந்தபடி பிதற்றிய உன் நா அறுந்து விழாததேனோ? 19

இராமனது நியமனம் பெருமையாலும், என் தவத் தைக் காக்கவேண்டுகையாலும், "அட பத்துத்தலைய!" சாம்பலாவதற்கேற்ற உன்னை என் தேசுகொண்டு சாம்ப லாய்ச் செய்கிறேனில்லை. 20

மதிசாலியான ராகவனை விட்டுப்பிரிக்க உன்னாலாவ தல்ல; அப்படியிருக்கப் பிரியுண்டது, உன்னைக்கொல்ல நினைத்த விதியின் செயலா மித்தனை. 21

சூரனாய் குபேரனுடன் பிறந்து போதுமான பலங் கொண்ட நீ, இராமனை யப்புறப்படுத்தி தாரத்தைச் சோரம்செய்த தென்கொண்டோ!

சீதையின் சொல்லைக்கேட்டு ரக்ஷஸர்கோ னிராவ ணன் கண்களையுருட்டி விழித்து, ஜானகியை யுறுத்தி நோக்கினான். 23

𑌨𑍀𑌲𑌜𑍀𑌮𑍂𑌤𑌸𑌂𑌕𑌾𑌶𑍋 𑌮𑌹𑌾𑌭𑍁𑌜𑌶𑌿𑌰𑍋𑌧𑌰𑌃।
𑌸𑌿𑌂𑌹𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌗𑌤𑌿𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌦𑍀𑌪𑍍𑌤𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌗𑍍𑌰𑌲𑍋𑌚𑌨𑌃॥ *
𑌚𑌲𑌾𑌗𑍍𑌰𑌮𑌕𑍁𑌟𑌃𑌪𑍍𑌰𑌾𑌂𑌶𑍁 𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌰𑌮𑌾𑌲𑍍𑌯𑌾𑌨𑍁𑌲𑍇𑌪𑌨𑌃।
𑌰𑌕𑍍𑌤𑌮𑌾𑌲𑍍𑌯𑌾𑌂𑌬𑌰𑌧𑌰 𑌸𑍍𑌤𑌪𑍍𑌤𑌾𑌂𑌗𑌦𑌵𑌿𑌭𑍂𑌷𑌣𑌃॥ *
𑌶𑍍𑌰𑍋𑌣𑍀𑌸𑍂𑌤𑍍𑌰𑍇𑌣𑌮𑌹𑌤𑌾 𑌮𑍇𑌚𑌕𑍇𑌨𑌸𑍁𑌸𑌂𑌵𑍃𑌤𑌃।
𑌅𑌮𑍃𑌤𑍋𑌤𑍍𑌪𑌾𑌦𑌨𑌦𑍍𑌧𑍇𑌨 𑌭𑍁𑌜𑌗𑍇𑌨𑍇𑌵𑌮𑌂𑌦𑌰𑌃॥ ௨௯

𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌸𑌪𑌰𑌿𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌭𑍁𑌜𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇
𑌶𑍁𑌶𑍁𑌭𑍇𑌽𑌚𑌲𑌸𑌂𑌕𑌾𑌶𑌃 𑌶𑍃𑌂𑌗𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑌿𑌵𑌮𑌂𑌦𑌰𑌃॥ [𑌶𑍍𑌵𑌰𑌃।
𑌤𑌰𑍁𑌣𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌕𑍁𑌂𑌡𑌲𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌵𑌿𑌭𑍂𑌷𑌿𑌤𑌃।
𑌰𑌕𑍍𑌤𑌪𑌲𑍍𑌲𑌵𑌪𑍁𑌷𑍍𑌪𑌾𑌭𑍍𑌯𑌾 𑌮𑌶𑍋𑌕𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑌿𑌵𑌾𑌚𑌲𑌃॥ *
𑌸 𑌕𑌲𑍍𑌪𑌵𑍃𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑍋 𑌵𑌸𑌨𑍍𑌤𑌇𑌵𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌮𑌾𑌨𑍍।
𑌶𑍍𑌮𑌶𑌾𑌨𑌚𑍈𑌤𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑍋 𑌭𑍂𑌷𑌿𑌤𑍋𑌽𑌪𑌿𑌭𑌯𑌂𑌕𑌰𑌃॥ *
𑌅𑌵𑍇𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑍋 𑌵𑍈𑌦𑍇𑌹𑍀𑌂 𑌕𑍋𑌪𑌸𑌂𑌰𑌕𑍍𑌤𑌲𑍋𑌚𑌨𑌃।
𑌉𑌵𑌾𑌚𑌰𑌾𑌵𑌣𑌃𑌸𑍀𑌤𑌾𑌂 𑌭𑍁𑌜𑌂𑌗𑌇𑌵𑌨𑌿𑌶𑍍𑌵𑌸𑌨𑍍॥ ௩௦

𑌅𑌨𑌯𑍇𑌨𑌾𑌭𑌿𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌮𑌰𑍍𑌥𑌹𑍀𑌨𑌮𑌨𑍁𑌵𑍍𑌰𑌤𑍇।
𑌨𑌾𑌶𑌯𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑌦𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌂 𑌸𑍂𑌰𑍍𑌯𑌃𑌸𑌂𑌧𑍍𑌯𑌾𑌮𑌿𑌵𑍌𑌜𑌸𑌾॥ ௩௧

𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌮𑍈𑌥𑌿𑌲𑍀𑌂𑌰𑌾𑌜𑌾 𑌰𑌾𑌵𑌣𑌶𑍍𑌶𑌤𑍍𑌰𑍁𑌰𑌾𑌵𑌣𑌃।
𑌸𑌂𑌦𑌿𑌦𑍇𑌶 𑌤𑌤𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌰𑍍𑌘𑍋𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌃॥ *
𑌏𑌕𑌾𑌕𑍍𑌷𑍀𑌮𑍇𑌕𑌕𑌰𑍍𑌣𑌾𑌂𑌚 𑌕𑌰𑍍𑌣𑌪𑍍𑌰𑌾𑌵𑌰𑌣𑌾𑌂𑌤𑌥𑌾।

கருமேகம்போல் பருத்த புயமும் கழுத்தும் படைத்து, சிங்கம்போல் வனுவான நடையும் சொலிக்கின்ற நுனிநாவும் கண்களு முடையனுய், (கோபத்தால் குனுங்கவே உயரவெடுத்த நுனி மகுடத்துடன், விசித்திரமான மாலையும் சாந்துமணிந்து, விசேஷமாய்ச் சிவந்த மாலைகளும் பூம்பட்டாடையு முடுத்து, பளபளக்கின்ற தோள்வளைகளணிந்து, அமுதங்கடைந்த காலத்தில், மந்தரத்தைச் சூழ்ந்த வாசுகிபோல் கறுத்த அரைநூல்மாலை சூழப்பெற்று, விளங்குமவனுய், பருத்துருண்ட திண்டோள்களால் அந்த ராக்ஷஸர்கோன் சிகரங்களுடன் கூடிய மந்தரம்போல் பிரகாசித்தனன். 27

சிவந்த தளிரும் மலருமான இரண்டு அசோகமரங்களுடன் விளங்குமலைபோல் அந்தராவணன், நடுப்பகலில் சூரியன்போல் விளங்குமிரண்டு குண்டலங்களா லலங்கரிக்கப் பட்டவனுய், கற்பகவிருக்ஷத்தை ஒத்து வஸந்தருதுதா னுருவெடுத்ததோ வென்னும்படி பூஷிக்கப்பட்டிருந்தும், சுடலைக்கரைமண்டபம்போல் பயங்கரனுய், கோபத்தாற் சிவந்த கண்களாய் வைதேஹியை உற்றுநோக்கிப் பெரும்பாம்புபோல் சீறிக்கொண்டு இவ்வாறுரைத்தான்.

நீதியறியாத மோழையாய் செல்வத்தை யிழந்தானொருவனைச் சார்ந்தவளே! சூரியன் தன்னொளிகொண்டு சந்தியைத் தொலைப்பதுபோல் உன்னை யான் ஒழிப்பேன் காண்டி. 31

என்றுரைத்து பகைவரைப் பதறவைக்கின்ற அந்த ராவணன் உடனே கோரரூபிகளான ராக்ஷஸிகளை (அதாவது:—ஒத்தைக்கண்ணி, ஒத்தைக்காதி, மூடுகாதி, மாட்டுக்காதி, யானைக்காதி, தொங்குகாதி, காதிழந்தாள்,

𑌘𑍋𑌰𑌕𑌰𑍍𑌣𑌂 𑌹𑌸𑍍𑌤𑌿𑌕𑌰𑍍𑌣𑌂 𑌚 𑌲𑌮𑍍𑌬𑌕𑌰𑍍𑌣𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌚 । *
𑌹𑌸𑍍𑌤𑌿𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌵𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌚 𑌘𑍋𑌰𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌚 𑌭𑌈𑌰𑌵𑌾𑌃 ।
𑌶𑌶𑌕𑌾𑌕𑍍𑌷𑌾𑌶𑍍𑌚 𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌚 𑌵𑌾𑌨𑌰𑌾𑌃 ॥ *
𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌤𑌶𑌿𑌰𑌸𑌸𑍍𑌤𑍇 𑌵𑌾 𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌤𑌪𑍍𑌰𑌭𑌵𑌾𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌤𑌾𑌸𑍍𑌯𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌚 𑌦𑍀𑌰𑍍𑌘𑌜𑌿𑌹𑍍𑌵𑌾 𑌮𑌹𑌾𑌜𑌿𑌹𑍍𑌵𑌿𑌕𑌾𑌃 ॥ *
𑌨𑌾𑌨𑌾𑌵𑌿𑌕𑌾𑌰𑌾𑌂𑌸𑍍 𑌸𑌂𑌹𑌾𑌰𑌾𑌨𑍍 𑌘𑍋𑌰𑌾𑌨𑍍 𑌸𑌂𑌹𑌾𑌰𑌰𑍂𑌪𑌿𑌣𑌃 ॥ ()

𑌪𑌶𑍍𑌯𑌂𑌸𑍍𑌤𑌂 𑌦𑌶𑌗𑍍𑌰𑍀𑌵𑌸𑍍𑌤𑌦𑌾 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂 𑌸𑌮𑌜𑌾𑌨𑌤 ॥ *
𑌤𑌦𑌾 𑌕𑌾𑌲𑌾𑌨𑍍𑌤𑌕𑌾 𑌰𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌭𑌵𑌨𑌂 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂 𑌸𑌮𑍁𑌤𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 ॥ ௩௬

𑌪𑍍𑌰𑌤𑌿𑌯𑍋𑌦𑍍𑌧𑌾𑌰𑌮𑌨𑍍𑌯𑍇𑌷𑍁 𑌸𑌾𑌧𑌨𑌾𑌨𑌿 𑌤𑌤𑍋𑌽𑌭𑌵𑌨𑍍 ॥ *
𑌕𑍍𑌰𑍂𑌰𑌜𑌨𑍍𑌮𑌾𑌰𑍍𑌤𑌵𑍈𑌃 𑌸𑌂𑌯𑌮𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌨𑌨𑍍𑌦𑌨𑌮𑍍 ॥ ௩௭

𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑌾𑌷𑍍𑌯 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌹𑌸𑌨𑍍𑌨𑌿𑌵 ॥
𑌕𑌾𑌲𑌾𑌨𑍍𑌤𑌕𑌂 𑌤𑌦𑌾 𑌤𑌂 𑌜𑌾𑌨𑌨𑍍 𑌵𑍈 𑌯𑌮𑌸𑍍𑌯 𑌚 ॥ ௩௮

𑌉𑌪𑌗𑍃𑌹𑍍𑌯 𑌤𑌤𑌃 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌥𑌾𑌗𑌮𑌤𑍍 ॥ *
𑌵𑌰𑍍𑌷𑌶𑌤𑌂 𑌶𑌿𑌰𑌸𑌿 𑌸𑌂𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌃 ॥ ௩௯

𑌅𑌯𑌂 𑌤𑍁 𑌯𑍋 𑌮𑌹𑌾𑌰𑌾𑌜 𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌤𑌂 𑌤𑌦𑌾 𑌜𑌯𑌃 ॥ *
𑌵𑌿𑌷𑌣𑍍𑌣𑍋 𑌯𑌮 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 ॥ ௪௦

யானைக்காலி, குதிரைக்காலி, மாட்டுக்காலி, காலிற்குடுமியாள், ஓரவயவத்தாள், ஒத்தைக்காலி, பெருங்காலி, காலற்றாள், மிகவும் பெரிய கழுத்தும் தலையும் படைத்தவள், மிகவும் பருத்த முலையும் வயிறும் படைத்தவள், மிகப் பெரியவாயும் கண்களுமுடையாள், நெடுநாக்கி, நாக்கற்றாள், மூக்கற்றாள், சிங்கமுகத்தாள், பசுமுகத்தாள், பன்றிமுகத்தாள், என்பவர்) யாவரையுமழைத்துக் கட்டளையிட்டான். $35\frac{1}{2}$

அரக்கியர்காள்! நீங்கள் யாவருங்கூடி இந்த ஜனகன் மகள் எப்படியானால் விரைவில் எனக்கு வசப்படுவளோ அவ்வாறு செய்யவேண்டும். $36\frac{1}{2}$

அநுகூலமாயும் பிரதிகூலமாயும் நடப்பதாலும், ஸாம தாநபேதங்களாலும், தண்டிப்பதாய் ஒருப்படுவதாலும் வழிப்படுத்துங்கள். $37\frac{1}{2}$

என்று இப்படி அந்த ராக்ஷஸேந்திரன் ஒருதடவைக்குப் பல தடவையாய் ஆக்ஞைசெய்து காமமுங் கோபமும் கொள்ளைகொள்ளவே சீதையைச் சால மிரட்டினான். $38\frac{1}{2}$

அப்பொழுது தான்னியமாலினியென்னு மோரரக்கி சடக்கென நெருங்கிச் சென்று தசகண்டனைத் தழுவிக் கொண் டிந்தவார்த்தை சொன்னாள். $39\frac{1}{2}$

ஓ மஹாராஜ! தமக்கென்ன என்னுடன் கிரீடிக்கலாகாதோ? ராக்ஷஸேசுவர! உருமாறிக் கிடக்கிற இப்பேதை மானிடச்சீதையுடன் உமக்காவதென்ன?

𑌨𑍂𑌨𑌮𑌸𑍍𑌯𑌾 𑌮𑌹𑌾𑌰𑌾𑌜 𑌨 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑍍𑌭𑍋𑌗𑌸𑌤𑍍𑌤𑌮𑌾𑌨𑍍 ॥
𑌵𑌿𑌦𑌧𑌾𑌤𑍍𑌯𑌮𑌰𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠 𑌸𑍍𑌤𑌵𑌬𑌾𑌹𑍁𑌬𑌲𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌨𑍍 ॥ ௪௧

𑌅𑌕𑌾𑌮𑌾𑌂 𑌕𑌾𑌮𑌯𑌾𑌨𑌸𑍍𑌯 𑌶𑌰𑍀𑌰𑌮𑍁𑌪𑌤𑌪𑍍𑌯𑌤𑍇 ।
𑌇𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍀𑌂 𑌕𑌾𑌮𑌯𑌾𑌨𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌶𑍋𑌭𑌨𑌾 ॥ ௪௨

𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌤𑍁 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑌾 𑌸𑌮𑍁𑌤𑍍𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑌸𑍍𑌤𑌤𑍋 𑌬𑌲𑍀 ।
𑌪𑍍𑌰𑌹𑌸𑌨𑍍𑌮𑍇𑌘𑌸𑌂𑌕𑌾𑌶𑍋 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌸𑍍𑌸 𑌨𑍍𑌯𑌵𑌰𑍍𑌤𑌤 ॥ ௪௩

𑌪𑍍𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑌸𑍍𑌸 𑌦𑌶𑌗𑍍𑌰𑍀𑌵𑌃 𑌕𑌂𑌪𑌯𑌨𑍍𑌨𑌿𑌵 𑌮𑍇𑌦𑌿𑌨𑍀𑌮𑍍 ।
𑌜𑍍𑌵𑌲𑌦𑍍𑌭𑌾𑌸𑍍𑌕𑌰𑌵𑌰𑍍𑌣𑌾𑌭𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌵𑍇𑌶 𑌨𑌿𑌵𑍇𑌶𑌨𑌮𑍍 ॥ ௪௪

𑌦𑍇𑌵𑌗𑌂𑌧𑌰𑍍𑌵𑌕𑌨𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌨𑌾𑌗𑌕𑌨𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌤𑌃 ।
𑌪𑌰𑌿𑌵𑌾𑌰𑍍𑌯 𑌦𑌶𑌗𑍍𑌰𑍀𑌵𑌂 𑌵𑌿𑌵𑌿𑌶𑍁𑌸𑍍𑌤𑌂 𑌗𑍃𑌹𑍋𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ॥ ௪௫

𑌸 𑌮𑍈𑌥𑌿𑌲𑍀𑌂 𑌧𑌰𑍍𑌮𑌪𑌰𑌾𑌮𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑌵𑍇𑌪𑌮𑌾𑌨𑌾𑌂 𑌪𑌰𑌿𑌭𑌰𑍍𑌤𑍍𑌸𑍍𑌯 𑌰𑌾𑌵𑌣𑌃 । 𑌵𑌿𑌹𑌾𑌯 𑌸𑍀𑌤𑌾𑌂 𑌮𑌦𑌨𑍇𑌨 𑌮𑍋𑌹𑌿𑌤𑌃 𑌸𑍍𑌵𑌮𑍇𑌵 𑌵𑍇𑌶𑍍𑌮 𑌪𑍍𑌰𑌵𑌿𑌵𑍇𑌶 𑌭𑌾𑌸𑍍𑌵𑌰𑌮𑍍 ॥ ௪௬

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 - 𑌦𑍍𑌵𑌾𑌵𑌿𑌂𑌶𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃

உமது தோள்வலியால் ஸம்பாதித்த போகங்களைக் கொண்டு இந்த சீதை அனுபவிக்கும்படி நிச்சயமாய் பிரமதேவன் எழுத்திடவில்லைபோலும். 41½

காதலற்றவளைக் காதலிப்பதில் வீணாய் காயம் கொதிப்படைகின்றது: காதலுற்றவளைக் காமுற்றால் கனத்த களிப் படையலாகும். 42½

என்றிந்தவிதம் அவள் எடுத்துப் பேசக் கேட்டவனாய் உடனே ராவணன் மேகம் கர்ஜிப்பதுபோல் சிரித்துக்கொண்டே திரும்பிவிட்டான். 43½

புவியதிரப் புறப்பட்ட தசக்கிரீவன், வெயிலெரிக்கும் பருதியெனப் பொலிவுற்ற மனையதனில் புக்கொழிந்தான். 44½

அப்படியே தெய்வப்பெண்களும் கந்தருவக்கன்னியரும் நாகக்கன்னிகளும் அந்த தசகந்தரனைச் சூழ்ந்து கொண்டு மாளிகையிற் புகுந்தார்கள். 45½

தருமதீதிற் கென்ன பழுது வருமோவென்று அஞ்சி நடுங்கும் சீதையை அந்த ராவணன் இப்படி பலவாறாக மிரட்டிப்பார்த்து, அங்கொன்றும் பலிக்காமையால் அவளைவிட்டுவிட்டு, காமமயக்கத்தோடு தனது தேஜோமயமான மாளிகையிற் புகுந்துவிட்டான். 46½

இருபத்திரண்டாம் ஸர்க்கம் முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 - 𑌤𑍍𑌰𑌯𑍋𑌵𑌿𑌂𑌶𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃॥

𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌮𑍈𑌥𑌿𑌲𑍀𑌂 𑌰𑌾𑌜𑌾 𑌰𑌾𑌵𑌣𑌶𑍍𑌶𑌤𑍍𑌰𑍁𑌰𑌾𑌵𑌣𑌃।
𑌸𑌂𑌦𑌿𑌶𑍍𑌯 𑌚 𑌤𑌤𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌰𑍍𑌨𑌿𑌰𑍍𑌜𑌗𑌾𑌮 𑌹॥ ௧

𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍇 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍇 𑌤𑍁 𑌪𑍁𑌨𑌰𑌨𑍍𑌤𑌃𑌪𑍁𑌰𑌂 𑌗𑌤𑍇।
𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑍋 𑌭𑍀𑌮𑌰𑍂𑌪𑌾𑌸𑍍𑌤𑌾 𑌸𑍀𑌤𑌾𑌂 𑌸𑌮𑌭𑌿𑌦𑍁𑌦𑍍𑌰𑍁𑌵𑍁𑌃॥ ௨

𑌤𑌤𑌸𑍍𑌸𑍀𑌤𑌾𑌮𑍁𑌪𑌾𑌗𑌮𑍍𑌯 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑌃 𑌕𑍍𑌰𑍋𑌧𑌮𑍂𑌰𑍍𑌛𑌿𑌤𑌾𑌃।
𑌪𑌰𑌂 𑌪𑌰𑍁𑌷𑌯𑌾 𑌵𑌾𑌚𑌾 𑌵𑍈𑌦𑍇𑌹𑍀𑌮𑌿𑌦𑌮𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍॥ ௩

𑌪𑍌𑌲𑌸𑍍𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌵𑌰𑌿𑌷𑍍𑌠𑌸𑍍𑌯 𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃।
𑌦𑌶𑌗𑍍𑌰𑍀𑌵𑌸𑍍𑌯 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌂 𑌸𑍀𑌤𑍇 𑌨 𑌬𑌹𑍁 𑌮𑌨𑍍𑌯𑌸𑍇॥ ௪

𑌤𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑍇𑌕𑌜𑌟𑌾 𑌨𑌾𑌮 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀 𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍।
𑌆𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯 𑌕𑍍𑌰𑍋𑌧𑌤𑌾𑌮𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑍀 𑌸𑍀𑌤𑌾𑌂 𑌕𑌰𑌤𑌲𑍋𑌦𑌰𑍀𑌮𑍍॥ ௫

𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑍀𑌨𑌾𑌂 𑌷𑌣𑍍𑌣𑌾𑌂 𑌤𑍁 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍋 𑌯𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌃।
𑌮𑌾𑌨𑌸𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌃 𑌪𑍁𑌲𑌸𑍍𑌤𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌃॥ ௬

𑌪𑍁𑌲𑌸𑍍𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌤𑍇𑌜𑌸𑍍𑌵𑍀 𑌮𑌹𑌰𑍍𑌷𑌿𑌰𑍍𑌮𑌾𑌨𑌸𑌸𑍍𑌸𑍁𑌤𑌃।
𑌨𑌾𑌮𑍍𑌨𑌾 𑌸 𑌵𑌿𑌶𑍍𑌰𑌵𑌾 𑌨𑌾𑌮 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌸𑌮𑌪𑍍𑌰𑌭𑌃॥ ௭

இருபத்துமூன்ரும் ஸர்க்கம்

பகைவரைப் பதறவைக்கு மிராவணராஜன் மைதிலிக் கிவ்வாறுரைத்து உடனே ராக்ஷஸர்களுக்குத்திரவு செய்து வெளிப்படலானன். 1

அரக்கர் கோன் வெளிப்பட்டு அந்தப்புரத்தையடைந்தவுடனே அரக்கியர் யாவரும் பயங்கரமான வுருவத்தோடு சீதையை உறுக்கலுற்ருர்கள். 2

சீதையைக் கிட்டிச்சென்ற ராக்ஷஸிகள் சீத்தம் தலைக்கேறவே, கொடுஞ்சொற்கள்கொண்டு சீதையுடன் இங்ஙனம் கூறலுற்ருர்கள். 3

சீதாய்! நமதுமன்ன னிராவணனை யின்னனென்று மதிக்கவில்லை; புலஸ்தியன் மரபிற்ருேன்றிய பெரியன் கண்டாய், பத்துத்தலை ராவணர்க்குப் பாரியையாமது உனக்கொருபொருட்டாய்ப் போந்ததில்லையோ? 4

அப்பொழுது ஏகஜடை யென்னுமோரரக்கி, நுண்ணிடைய சீதையரைக்கூவி, சினத்தினல் கண்கள் சிவக்க இஃதுரைத்தாள். 5

பிரஜாபதிகள் அறுவரில் நான்காமவர், பிரமனர் மனதிற்ருேன்றிய புலஸ்தியரென்பவர் மிகவும் பிரஸித்தர். 6

அந்த புலஸ்தியருக்கு அதிதேஜஸ்வியான விச்சிரவஸ் என்னும் மஹர்ஷி மனதிற்பிறந்து பிரமன்போல் புகழ்படைத்தார். 7

தஸ்ய புத்ரோ விஶாலாக்ஷி ராவணஶ்ஶத்ருராவண:|
தஸ்ய த்வம் ராக்ஷஸேந்த்³ரஸ்ய பா⁴ர்யா ப⁴விதுமர்ஹஸி||
மயோக்தம் சாருஸர்வாங்கி³ வாக்யம் கிம் நாநுமந்யஸே|| ௮

ததோ ஹரிஜடா நாம ராக்ஷஸீ வாக்யமப்³ரவீத்|| *
விவ்ருத்ய நயனே கோபான்மார்ஜாரஸத்³ருஶேக்ஷணா|| ௯

யேந தே³வாஸ்த்ரயஸ்த்ரிம்ஶ தே³வராஜஶ்ச நிர்ஜிதா:||
தஸ்ய த்வம் ராக்ஷஸேந்த்³ரஸ்ய பா⁴ர்யா ப⁴விதுமர்ஹஸி|| ()

ததஸ்து ப்ரக⁴ஸா நாம ராக்ஷஸீ க்ரோத⁴மூர்ச்சி²தா|| *
ப⁴ர்த்ஸயந்தீ ததா³ கோ⁴ரமித³ம் வசநமப்³ரவீத்|| ௧௧

வீர்யோத்ஸிக்தஸ்ய ஶூரஸ்ய ஸங்க்³ராமேஷ்வநிவர்திந:|| *
ப³லிநோ வீர்யயுக்தஸ்ய பா⁴ர்யாத்வம் கிம் ந லப்ஸ்யஸே:|| ()

ப்ரியாம் ப³ஹுமதாம் பா⁴ர்யாம் த்யக்த்வா ராஜா மஹாப³ல:||*
ஸர்வாஸாம் ச மஹாபா⁴கா³ம் த்வாமுபைஷ்யதி ராவண:||()

ஸம்ருத்³த⁴ம் ஸ்த்ரீஸஹஸ்ரேண நாநாரத்நோபஶோபி⁴தம்|| *
அந்த:புரம் ஸமுத்ஸ்ருஜ்ய த்வாமுபைஷ்யதி ராவண:|| ()

அந்யா து விகடா நாம ராக்ஷஸீ வாக்யமப்³ரவீத்|| ௧௫

அடி அங்கண்விழியினுய், அன்னவர்க்குப் பிறந்த மன்ன னிராவணனை மணம்புணர்வ துனக்குப் போதும் சுந்தரி! என்ன! என்சொல் உனக்கேர்க்கவில்லையோ? 8½

பிறகு கருஞ்சடையென்னு மரக்கி, கோபத்தால் தனது பூனைக்கண்களை யுருட்டிவிழித்து இந்தவிதம் சொல்லத் தொடங்கினுள். 9½

முப்பத்து மூவகைத் தேவர்களையும், தேவர்க்கரசையும் சயித்தான் யாவன், அந்தராக்ஷஸர் கோனுக்கு நீ மனைவியாவது மிகப்பொருந்தும். 10½

பிறகு பிரகஸையென்னும் ராக்ஷஸி, மிகவும் சினமூண்டு அப்பொழுது கடுமையாய் மிரட்டிக்கொண்டே இந்தப்படி சொல்லுகிருள். 11½

வீரச்செருக்குடன் போரிற் சென்ருல் திரும்பாத தனிவீரனுக்குத் தாரமாகவென்ருல் உனக்கேனே கசக்கும்! 12½

மனைவியர் அனைவர்க்குள்ளும் மனதிற்கினியளாய் மதிப்புடையளான மண்டோதரியென்னும் மாண்புடையாளையும் துறந்து மன்ன னிராவணன் உன்னைப்பெறுவான்; இதுதான் மட்டோ? 13½

பலவகை யணிகளுமணிந்த பெண்கள் நிறைந்த அந்தப்புரத்தையு மப்படியேவிட்டு, இராவணனுர் உன்னைச் சேர்ந்தால் இதுபோதாதோ? 14½

பிறகு விகடையென்னும் மற்ருேரரக்கி பிதற்றுகின்ருள். 15

𑌅𑌸𑌕𑍃𑌦𑍍𑌦𑍇𑌵𑌤𑌾 𑌯𑍁𑌦𑍍𑌧𑍇 𑌨𑌾𑌗𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌦𑌾𑌨𑌵𑌾𑌃 ।
𑌨𑌿𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌃 𑌸𑌮𑌰𑍇 𑌯𑍇𑌨 𑌸 𑌤𑍇 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌮𑍁𑌪𑌾𑌗𑌤𑌃 ॥ ௧௬

𑌤𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌸𑍍𑌯 𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।
𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌂 𑌨𑍇𑌚𑍍𑌛𑌸𑍇𑌽𑌧𑌮𑍇 ॥ ௧௭

𑌤𑌤𑌸𑍍𑌤𑍁 𑌦𑍁𑌰𑍍𑌮𑍁𑌖𑍀 𑌨𑌾𑌮 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀 𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ॥ ௧௭½

𑌯𑌸𑍍𑌯 𑌸𑍂𑌰𑍍𑌯𑍋 𑌨 𑌤𑌪𑌤𑌿 𑌭𑍀𑌤𑍋 𑌯𑌸𑍍𑌯 𑌚 𑌮𑌾𑌰𑍁𑌤𑌃 ॥ *
𑌨 𑌵𑌾𑌤𑌿 𑌸𑍍𑌮𑌾𑌯𑌤𑌾𑌪𑌾𑌙𑍍𑌗𑍇 𑌕𑌿𑌂 𑌤𑍍𑌵𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌨 𑌤𑌿𑌷𑍍𑌠𑌸𑌿 ॥ ௧௮½

𑌪𑍁𑌷𑍍𑌪𑌵𑍃𑌷𑍍𑌟𑌿𑌂 𑌚 𑌤𑌰𑌵𑍋 𑌮𑍁𑌮𑍁𑌚𑍁𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌵𑍈 𑌭𑌯𑌾𑌤𑍍 ॥ *
𑌶𑍈𑌲𑌾𑌶𑍍𑌚 𑌸𑍁𑌭𑍍𑌰𑍁 𑌪𑌾𑌨𑍀𑌯𑌂 𑌜𑌲𑌦𑌾𑌶𑍍𑌚 𑌯𑌦𑍇𑌚𑍍𑌛𑌤𑌿 ।
𑌤𑌸𑍍𑌯 𑌨𑍈𑌰𑍃𑌤𑌰𑌾𑌜𑌸𑍍𑌯 𑌰𑌾𑌜𑌰𑌾𑌜𑌸𑍍𑌯 𑌭𑌾𑌮𑌿𑌨𑌿 ॥ *
𑌕𑌿𑌂 𑌤𑍍𑌵𑌂 𑌨 𑌕𑍁𑌰𑍁𑌷𑍇 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍇 𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌯 𑌹𑌿

𑌸𑌾𑌧𑍁 𑌤𑍇 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑍋 𑌦𑍇𑌵𑌿 𑌕𑌥𑌿𑌤𑌂 𑌸𑌾𑌧𑍁 𑌭𑌾𑌮𑌿𑌨𑌿 ॥ *
𑌗𑍃𑌹𑌾𑌣 𑌸𑍁𑌸𑍍𑌮𑌿𑌤𑍇 𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑌨𑍍𑌯𑌥𑌾 𑌨 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 ॥ ௨௧½

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 - 𑌤𑍍𑌰𑌯𑍋𑌵𑌿𑌂𑌶𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃

நாகர், கந்தருவர் தானவர் என்கிற தெய்வகணங்களை அமர்க்களத்தில் பலகாலும் புடைப்பான் யாவன் அன்னவன், உன்னை அண்டிவந்தால் அதுகாணுயோ? 16

ஸகலமும் நிறைந்த பெரியோனுய ராக்ஷஸராஜனிராவணன் உன்னை மனைவியாக மதிக்கும்போது "அடி அதமே!" உனக்கேனோ இசைந்ததில்லை? 17

அநந்தரம் துர்முகியென்னும் அரக்கி அறையலுற்றாள். 17½

எவனைக்கண்டால் சூரியனும் சோதிகுன்றி, வாயுவும் பயந்து வீசமாட்டானோ "அடிநெடுநோக்கி!" அன்னவற்கேனோ நீ ஆகமாட்டாய்? 18½

எவனைக்கண்டால் மரங்களுங்கூட மலர்களைப்பொழிந்து, மலைகளும் மேகங்களும் அவன் வேண்டும்போது மழைபொழியுமோ, அந்த அரக்கர் மன்னனை "அடி மாதே" நீ ஏனோ மணமகனாக மதிக்கிற்றிலை? 20½

உனக்கு நன்மையை நாங்கள் உள்ளபடியே சொன்னோமடி யம்மே; தையலரே! இதை நல்லபடியே அங்கீகரித்தாலல்லது நீதரிக்க விரகில்லை. 21½

இருபத்துமூன்ரும் ஸர்க்கம் முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 - 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌂𑌶𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃

𑌤𑌤𑌸𑍍𑌸𑍀𑌤𑌾𑌮𑍁𑌪𑌾𑌗𑌮𑍍𑌯 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑍋𑌵𑌿𑌕𑍃𑌤𑌾𑌨𑌨𑌾𑌃।
𑌪𑌰𑍁𑌷𑌂𑌪𑌰𑍁𑌷𑌾𑌨𑌾𑌰𑍍𑌯𑌾 𑌊𑌚𑍁𑌸𑍍𑌤𑌾𑌂𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑍍॥ ௧

𑌕𑌿𑌂𑌤𑍍𑌵𑌮𑌨𑍍𑌤𑌃𑌪𑍁𑌰𑍇𑌸𑍀𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌮𑌨𑍋𑌹𑌰𑍇।
𑌮𑌹𑌾𑌰𑍍𑌹𑌶𑌯𑌨𑍋𑌪𑍇𑌤𑍇 𑌨𑌵𑌾𑌸𑌮𑌨𑍁𑌮𑌨𑍍𑌯𑌸𑍇॥ ௨

𑌮𑌾𑌨𑍁𑌷𑍀𑌮𑌾𑌨𑍁𑌷𑌸𑍍𑌯𑍈𑌵 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌂𑌬𑌹𑍁𑌮𑌨𑍍𑌯𑌸𑍇।
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌹𑌰𑌮𑌨𑍋𑌰𑌾𑌮𑌾𑌨𑍍𑌨𑌤𑍍𑌵𑌂𑌜𑌾𑌤𑍁𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌸𑌿॥ ௩

𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌵𑌸𑍁𑌭𑍋𑌕𑍍𑌤𑌾𑌰𑌂 𑌰𑌾𑌵𑌣𑌂𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍
𑌭𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑍁𑌪𑌸𑌂𑌗𑌮𑍍𑌯 𑌵𑌿𑌹𑌰𑌸𑍍𑌵𑌯𑌥𑌾𑌸𑍁𑌖𑌮𑍍॥ ௪

𑌮𑌾𑌨𑍁𑌷𑍀𑌮𑌾𑌨𑍁𑌷𑌂𑌤𑌂𑌤𑍁 𑌰𑌾𑌮𑌮𑌿𑌚𑍍𑌛𑌸𑌿𑌶𑍋𑌭𑌨𑍇।
𑌰𑌾𑌜𑍍𑌯𑌾𑌦𑍍𑌭𑍍𑌰𑌷𑍍𑌟𑌮𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌰𑍍𑌥𑌂 𑌵𑌿𑌕𑍍𑌲𑌵𑌂𑌤𑍍𑌵𑌮𑌨𑌿𑌨𑍍𑌦𑌿𑌤𑍇॥ ௫

𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌨𑌾𑌂𑌵𑌚𑌶𑍍𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌸𑍀𑌤𑌾𑌪𑌦𑍍𑌮𑌨𑌿𑌭𑍇𑌕𑍍𑌷𑌣𑌾।
𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑌶𑍍𑌰𑍁𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌭𑍍𑌯𑌾 𑌮𑌿𑌦𑌂𑌵𑌚𑌨𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍॥ ௬

𑌯𑌦𑌿𑌦𑌂𑌲𑍋𑌕𑌵𑌿𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌟𑌮𑍁𑌦𑌾𑌹𑌰𑌥𑌸𑌂𑌗𑌤𑌾𑌃।
𑌨𑍈𑌤𑌨𑍍𑌮𑌨𑌸𑌿𑌵𑌾𑌕𑍍𑌯𑌂𑌮𑍇 𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑌾𑌤𑌿𑌵𑌃॥ ௭

இருபத்திநாலாம் ஸர்க்கம்

அநந்தரம், ஸீதையிடத்திற்கு அக்கொடிய வரக்கி
கள் யாவரும் வந்தணுகி, அவளைப்பார்த்து செவிக் கின்
னாத சொற்களைச் சொல்லத் தொடங்கினர் . 1

ஸீதாய்! ஸகலப்பிராணிகளுக்கு மினியதாய், சிறந்த
சயநங்கள் வகுத்த அந்தப்புரத்திலிருப்பு உனக்கேன்
ஏற்கவில்லையோ! 2

நீ மனுஷ்ய ஜாதியிற் பிறந்தாயாகையால் அந்த
மனிதன் மனைவியாயிருத்தலையே சால மதிக்கின்றாய்;
இராமனிடத்தில் வைத்த அம்மனதை மீட்டுக்கொள்;
இனி ஒருக்காலும் அப்படி நீ ஆகப்போகிறதில்லை. 3

உலகு மூன்றிலுமுள்ள செல்வத்தை ஒருங்கே அனு
பவிக்கின்ற ராக்ஷஸ ராஜனான ராவணனைக் கணவனு
யணைந்து உனக்கு இச்சையான வண்ணம் விஹரிக்கப்
பார். 4

நீ மானிட சாதியிற் பிறந்ததுகொண்டு மனிதனையே
கணிசிக்கிறாயென்றாலும், அதற்காகிலும் அவன் நன்னி
லையி லிருந்தானில்லையே! அரசிழந்து குறைவாளனாய்
பேதையை, ஏனோ நல்ல போகத்திற் கிட்டுப்பிறந்த நீ
நேசிப்பாய்! 5

அரக்கியர் சொற்கேட்ட கமலக்கண் சீதை கண்க
ளில் நீர் ததும்ப இந்தவிதம் சொல்லத்தொடங்கினள். 6

வாரீர்! நீங்கள் யாவருமாய்க் கூடி ஒருமிடறாய்ச்
சொல்லுகின்ற உலகம் பழிக்குமிந்த பாவச்சொற்கள்,
என்மனதிற் சிறிதும் சேருவதல்ல. 7

𑌨 𑌮𑌾𑌨𑍁𑌷𑍀 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌸𑍍𑌯 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾 𑌭𑌵𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌤𑌿।
𑌕𑌾𑌮𑌂 𑌖𑌾𑌦𑌤 𑌮𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾 𑌨 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌵𑍋 𑌵𑌚𑌃 ௮

𑌦𑍀𑌨𑍋 𑌵𑌾 𑌰𑌾𑌜𑍍𑌯𑌹𑍀𑌨𑍋 𑌵𑌾 𑌯𑍋 𑌮𑍇 𑌭𑌰𑍍𑌤𑌾 𑌸 𑌮𑍇 𑌗𑍁𑌰𑍁𑌃।
𑌤𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌨𑍁𑌰𑌕𑍍𑌤𑌾𑌸𑍍𑌮𑌿 𑌯𑌥𑌾 𑌸𑍂𑌰𑍍𑌯𑌂 𑌸𑍁𑌵𑌰𑍍𑌚𑌲𑌾॥ ௯

𑌯𑌥𑌾 𑌶𑌚𑍀 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑌾 𑌶𑌕𑍍𑌰𑌂 𑌸𑌮𑍁𑌪𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿।
𑌅𑌰𑍁𑌨𑍍𑌧𑌤𑍀 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌂 𑌚 𑌰𑍋𑌹𑌿𑌣𑍀 𑌶𑌶𑌿𑌨𑌂 𑌯𑌥𑌾॥ *
𑌲𑍋𑌪𑌾𑌮𑍁𑌦𑍍𑌰𑌾 𑌯𑌥𑌾𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌂 𑌸𑍁𑌕𑌨𑍍𑌯𑌾 𑌚𑍍𑌯𑌵𑌨𑌂 𑌯𑌥𑌾।
𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑍀 𑌸𑌤𑍍𑌯𑌵𑌨𑍍𑌤𑌂 𑌚 𑌕𑌪𑌿𑌲𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍀 𑌯𑌥𑌾॥ *
𑌸𑍌𑌦𑌾𑌸𑌂 𑌮𑌦𑌯𑌨𑍍𑌤𑍀𑌵 𑌕𑍇𑌶𑌿𑌨𑍀 𑌸𑌗𑌰𑌂 𑌯𑌥𑌾।
𑌨𑍈𑌷𑌧𑌂 𑌦𑌮𑌯𑌨𑍍𑌤𑍀𑌵 𑌭𑍈𑌮𑍀 𑌪𑌤𑌿𑌮𑌨𑍁𑌵𑍍𑌰𑌤𑌾॥ *
𑌤𑌥𑌾𑌹𑌮𑌿𑌕𑍍𑌷𑍍𑌵𑌾𑌕𑍁𑌵𑌰𑌂 𑌰𑌾𑌮𑌂 𑌪𑌤𑌿𑌮𑌨𑍁𑌵𑍍𑌰𑌤𑌾॥ ௧௨
𑌸𑍀𑌤𑌾𑌯𑌾 𑌵𑌚𑌨𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑌃 𑌕𑍍𑌰𑍋𑌧𑌮𑍂𑌰𑍍𑌛𑌿𑌤𑌾𑌃॥
𑌭𑌰𑍍𑌤𑍍𑌸𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑍍𑌮 𑌪𑌰𑍁𑌷𑍈𑌰𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑍈𑌰𑍍𑌰𑌾𑌵𑌣𑌚𑍋𑌦𑌿𑌤𑌾𑌃॥
𑌅𑌵𑌲𑍀𑌨𑌃 𑌸 𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑍋 𑌹𑌨𑍂𑌮𑌾𑌞𑍍𑌶𑌿𑌂𑌶𑌪𑌾𑌦𑍍𑌰𑍁𑌮𑍇॥ *
𑌸𑍀𑌤𑌾𑌂 𑌸𑌂𑌤𑌰𑍍𑌜𑌯𑌨𑍍𑌤𑍀𑌸𑍍𑌤𑌾 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌰𑌶𑍃𑌣𑍋𑌤𑍍𑌕𑌪𑌿𑌃॥ ()
𑌤𑌾𑌮𑌭𑌿𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌸𑌂𑌕𑍍𑌰𑍁𑌦𑍍𑌧𑌾 𑌵𑍇𑌪𑌮𑌾𑌨𑌾𑌂 𑌸𑌮𑌨𑍍𑌤𑌤𑌃॥ *
𑌭𑍃𑌶𑌂 𑌸𑌂𑌲𑌿𑌲𑌿𑌹𑍁𑌰𑍍𑌦𑍀𑌪𑍍𑌤𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌲𑌮𑍍𑌬𑌾𑌨𑍍𑌦𑌶𑌨𑌚𑍍𑌛𑌦𑌾𑌨𑍍।

மனுஷ்ய ஜாதியிற் பிறந்தவள் அரக்கனுக்கு அணங்
காகச் சிறிதுந் தகாது; மேலும் யான் உங்கள் சொற்படி
நடப்பவளல்ல; ஆதலின், என்னை யாவருமாய் கூடித்
தின்றுவிடுங்கள். 8

ஏழையோ ஏதிலனோ, எவன் எனக்குப்பதியோ
அவன்றான் எனக்குப் பெரியவன்; சூரியனைச் சுவர்ச்சலை
சூழ்வதுபோல் அவனைத்தான் நிச்சலும் யான் நச்சு
வேன். 9

இந்திரனை மஹாபாக்கியவதியான இந்திராணிபோ
லும், வஸிஷ்டனை அருந்ததிபோலும், சந்திரனை ரோஹி
ணிபோலும், அகத்தியரை லோபாமுத்திரைபோலும்,
சியவனரை ஸுகன்னிபோலும், ஸத்தியவானை ஸாவித்ரி
போலும், கபிலனை ஸ்ரீமதிபோலும், ஸௌதாஸனை மத
யந்திபோலும், சகரனைக் கேசினிபோலும், நைஷதனை
பதிவிரதையான தமயந்திபோலும், இக்ஷ்வாகு குலக்
கொழுந்தான ராகவனென்னுமென் மணாளனையே யான்
தொடருமவள். 12½

சீதையின் சொற்கேட்ட ராக்ஷஸிகள் கோபம் தலை
மண்டையிடவே ராவணன் சொற்படி கொடுமையான
சொற்கள் கொண்டு மிரட்டலுற்றார்கள். 13½

வாயைத் திறவாமல் அசோகமரத்தில் ஒளிந்து கிடக்
கின்ற ஹனுமான் சீதை சொன்னதையும் அதற்கவ்வரக்கி
கள் மிரட்டுவதையுங் கேட்டுக்கொண்டிருந்தார். 14½

பயத்தால் நடுங்குகின்ற சீதையை அரக்கியர் நாற்
புறமும் சூழ்ந்து சினமேற்கொண்டு உதடுகளைத் தொங்
கும்படி பிதுக்கிக்கொண்டு நாக்குகளால் நொணசினார்

ஊசு: பரமஸங்க்ருத்தா: ப்ரக்ருஹ்யாஶு பரஶ்வதான்॥ *
நேயமர்ஹதி பர்தாரம் ராவணம் ராக்ஷஸாதிபம்॥ கசு

ஸம்பர்த்ஸ்யமானா பீமாபீ ராக்ஷஸீபிர்வரானனா॥ *
ஸா பாஷ்பமபமார்ஜந்தீ ஶிம்ஶபாம் தாமுபாகமத்॥ கஎ

ததஸ்தாம் ஶிம்ஶபாம் ஸீதா ராக்ஷஸீபிஸ்ஸமாவ்ருதா॥ *
அபிகம்ய விஶாலாக்ஷீ தஸ்தௌ ஶோகபரிப்லுதா॥ கஅ

தாம் க்ருஶாம் தீனவதனாம் மலினாம்பரதாரிணீம்॥ *
பர்த்ஸயாஞ்சக்ரிரே ஸீதாம் ராக்ஷஸ்யஸ்தாம் ஸமந்தத:॥ ககூ

ததஸ்தாம் வினதா நாம ராக்ஷஸீ பீமதர்ஶனா॥ *
அப்ரவீத்குபிதாகாரா கராலா நிர்ணதோதரீ॥ உ௰

ஸீதே பர்யாப்தமேதாவத் பர்து: ஸ்னேஹோ நிதர்ஶித:॥
ஸர்வத்ராதிக்ருதம் பத்ரே வ்யஸனாயோபகல்பதே॥ உக

பரிதுஷ்டாஸ்மி பத்ரம் தே மானுஷஸ்தே க்ருதோ விதி:॥
மமாபி து வச: பத்யம் ப்ருவந்த்யா: குரு மைதிலி॥ ()

கள். மேலும் கோபாதிசயத்தோடு கைகளில் ஆயுதங்களைத் தூக்கிக்கொண்டு 'அரக்கர்கோனாகிய நம்மிராவணர்க் கிவள் சிறிதும் தகா' தென்றார்கள். 16½

அப்பொழுதந்த நன்னுதலாள் சீதை, பயங்கரரான ராக்ஷஸிகளால் மிரட்டப்பட்டவளாய் கண்களில் நீரைத் துடைத்துக்கொண்டே (அநுமானிருக்கும்) அந்த அசோகமரத் தண்டையில் வந்து சேர்ந்தாள். 17½

அநத்தரம் அம்மரத்தடியில் வந்தடைந்த அங்கண் சீதை, அரக்கிகள் மீளவும் வந்து சூழ்ந்துகொள்ளவே சோகத்தில் மூழ்கினவளாய் திகைத்து நின்றாள். 18½

இளைத்துக்கறுத்த முகத்தோடு மலினமான வஸ்திரம் தரித்துப் பேதைபோல் எளிமையான நிலையி லிருக்கின்ற சீதையை அரக்கியர்கள் நாற்புறமும் சூழ்ந்து மிரட்டலுற்றார்கள். 19½

அநந்தரம் வினதை யென்னுமோ ரரக்கி பருத்த வயிறும் பயங்கரமான உருவமுமாய் மிகவும் சினத்தோடு இங்ஙனம் செப்பலுற்றாள். 20½

அடி சீதாய்! பதியினிடத்தில் உனக்குள்ள சினேகம் நன்கு தெரிவிக்கப்பட்டது; போதும் இதுவரையில் நிறுத்து; எவ்விஷயமும் அதிகமாய்ச் செய்யுமிடத்தில் விசனமாய்த் தலைக்கட்டும். 21½

மனிதர்க்குரிய செயலை நீ செவ்வே யநுஷ்டித்தது கண்டு நான் மிகக்களித்தேன்; மைதிலி! இனி யான் சொல்லும் ஹிதவசநத்தைக் கேட்டு அதின்படியும் செய்யப்பார். 22½

𑌰𑌾𑌵𑌣𑌂 𑌭𑌜 𑌭𑌰𑍍𑌤𑌾𑌰𑌂 𑌭𑌰𑍍𑌤𑌾𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌰𑌕𑍍𑌷𑌸𑌾𑌮𑍍॥ *
𑌵𑌿𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌰𑍂𑌪𑌵𑌨𑍍𑌤𑌂 𑌚 𑌸𑍁𑌰𑍇𑌶𑌮𑌿𑌵 𑌵𑌾𑌸𑌵𑌮𑍍।
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌤𑍍𑌯𑌾𑌗𑌶𑍀𑌲𑌂 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌿𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍॥ ௨௪

𑌮𑌾𑌨𑍁𑌷𑌂 𑌕𑍃𑌪𑌣𑌂 𑌰𑌾𑌮𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌰𑌾𑌵𑌣𑌮𑌾𑌶𑍍𑌰𑌯।
𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌂𑌗𑌰𑌾𑌗𑌾 𑌵𑍈𑌦𑍇𑌹𑌿 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌾॥ *
𑌅𑌦𑍍𑌯𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑍀 𑌭𑌵।
𑌅𑌗𑍍𑌨𑍇𑌸𑍍𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 𑌯𑌥𑌾 𑌦𑍇𑌵𑍀 𑌶𑌚𑍀𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌶𑍋𑌭𑌨𑍇॥ ௨௬

𑌕𑌿𑌂 𑌤𑍇 𑌰𑌾𑌮𑍇𑌣 𑌵𑍈𑌦𑍇𑌹𑌿 𑌕𑍃𑌪𑌣𑍇𑌨 𑌗𑌤𑌾𑌯𑍁𑌷𑌾।
𑌏𑌤𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 𑌚 𑌮𑍇 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌯𑌦𑌿 𑌤𑍍𑌵𑌂 𑌨 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌸𑌿॥ *
𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌂 𑌭𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌹𑍇 𑌵𑌯𑌮𑍍

𑌅𑌨𑍍𑌯𑌾 𑌤𑍁 𑌵𑌿𑌕𑌟𑌾 𑌨𑌾𑌮 𑌲𑌮𑍍𑌬𑌮𑌾𑌨𑌪𑌯𑍋𑌧𑌰𑌾॥ *
𑌅𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍𑌕𑍁𑌪𑌿𑌤𑌾 𑌸𑍀𑌤𑌾𑌂 𑌮𑍁𑌷𑍍𑌟𑌿𑌮𑍁𑌦𑍍𑌯𑌮𑍍𑌯 𑌗𑌰𑍍𑌜𑌤𑍀॥ ௨௮

𑌬𑌹𑍂𑌨𑍍𑌯𑌪𑍍𑌰𑌿𑌯𑌰𑍂𑌪𑌾𑌣𑌿 𑌵𑌚𑌨𑌾𑌨𑌿 𑌸𑍁𑌦𑍁𑌰𑍍𑌮𑌤𑍇॥ *
𑌅𑌨𑍁𑌕𑍍𑌰𑍋𑌶𑌾𑌨𑍍𑌮𑍃𑌦𑍁𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 𑌸𑍋𑌢𑌾𑌨𑌿 𑌤𑌵 𑌮𑍈𑌥𑌿𑌲𑌿।
𑌨 𑌚 𑌨𑌃 𑌕𑍁𑌰𑍁𑌷𑍇 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌹𑌿𑌤𑌂 𑌕𑌾𑌲𑌪𑍁𑌰𑌸𑍍𑌸𑌰𑌮𑍍॥ ௩௦

𑌆𑌨𑍀𑌤𑌾𑌸𑌿 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌪𑌾𑌰𑌮𑌨𑍍𑌯𑍈𑌰𑍍𑌦𑍁𑌰𑌾𑌸𑌦𑌮𑍍।
𑌰𑌾𑌵𑌣𑌾𑌨𑍍𑌤𑌃𑌪𑍁𑌰𑌂 𑌘𑍋𑌰𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌾 𑌚𑌾𑌸𑌿 𑌮𑍈𑌥𑌿𑌲𑌿॥ *

ராக்ஷஸர் யாவர்க்கும் பதியான ராவணனைப் பதியாய்ப்பணிவாய்; அவன்றான் தேவர்களுக்குப் பதியான விந்திரன்போல் உருவத்திலும் விக்கிரமத்திலும் சிறப்புற்றவன்; அதிஸமர்த்தன்; கொடையாளி; அனைவர்க்கும் பிரியமான காட்சியைத்தருமவன். 24

மனிதனைப் பிறந்த ராமனை இத்துடன் விட்டு இனியாகிலும் இராவணனை யடைந்தாயாகில், திவ்யமான பூச்சும் பூஷணமும் பூணப்பெற்று, இன்றுமுதல் அனைத்துலகுக்கும் அரசுசெலுத்தி, அக்கினிக்குச் சுவாகை போலும் இந்திரர்க்குச் சசிபோலும் விளங்குவாய் காண். 26

வைதேஹி! இனி நீ ராமனைப்பெற்றாலும் வயது சென்ற அவ்வேழையோடுனக்கென்ன பயனுண்டு? யான் சொல்லவேண்டியதைச் சொன்னேன்; நீ யிந்தப்படி செய்யாவிடில் இக்கணமே யாங்கள் யாவருமா யுன்றனைத் தின்றுவிடுவோம் காண்டி என்றாள். $27\frac{1}{2}$

பிறகு விகடையென்னு மோரரக்கி புவியிற் புரளுந் தனங்களோடு முட்டியைப்பிடித்தோங்கி சினத்துடன் கர்ஜ்ஜித்து சீதையைப்பார்த் திவ்வாறு செப்பலுற்றாள்.()

அடி மதிகேடி! நீ சொன்ன இன்னாதசொற்கள் பலவும் யாங்கள் கேட்டு, கிடக்கட்டுமென்று உன்னிடத்தில் கருணையாலும் தாக்ஷிண்யத்தாலும் பொறுத்தோம் இது காறும்; இப்பவும் காலத்திற்கேற்றபடி எங்கள் சொல்லைத் தலைக்கட்டினையில்லையே. 30

கடலைக்கடந்து ஒருவராலும் அணுகப்போகாத ராவணனது கடுமையான அந்தப்புரத்தில் கொண்டு சேர்

ராவணஸ்ய க்³ருʼஹே ருத்³தா⁴மஸ்மாபி⁴ஸ்து ஸுரக்ஷிதாம் |
ந த்வாம் ஶக்த: பரித்ராதுமபி ஸாக்ஷாத்புரந்த³ர: || ௩௨

குருஷ்வ ஹிதவாதி³ந்யா வசநம் மம மைதி²லி |
அலமஶ்ருப்ரபாதேந த்யஜ ஶோகமநர்த²கம் || ௩௩

ப⁴ஜ ப்ரீதிம் ப்ரஹர்ஷம் ச த்யஜைதாம் நித்யதை³ந்யதாம் |
ஸீதே ராக்ஷஸராஜேந ஸஹ க்ரீட³ யதா²ஸுக²ம் || ௩௪

ஜாநாஸி ஹி யதா² பீ⁴ரு ஸ்த்ரீணாம் யௌவநமத்⁴ருவம் |
யாவந்ந தே வ்யதிக்ராமேத் தாவத்ஸுக²மவாப்நுஹி || ௩௫

உத்³யாநாநி ச ரம்யாணி பர்வதோபவநாநி ச |
ஸஹ ராக்ஷஸராஜேந சர த்வம் மதி³ரேக்ஷணே || ௩௬

ஸ்த்ரீஸஹஸ்ராணி தே ஸப்த வஶே ஸ்தா²ஸ்யந்தி ஸுந்த³ரி |
ராவணம் ப⁴ஜ ப⁴ர்தாரம் ப⁴ர்தாரம் ஸர்வரக்ஷஸாம் || ௩௭

உத்பாட்ய வா தே ஹ்ருʼத³யம் ப⁴க்ஷயிஷ்யாமி மைதி²லி |
யதி³ மே வ்யாஹ்ருʼதம் வாக்யம் ந யதா²வத் கரிஷ்யஸி || ௩௮

ததஶ்சண்டோ³த³ரீ நாம ராக்ஷஸீ க்ரோத⁴மூர்ச்சி²தா |
ப்⁴ராமயந்தீ மஹச்சூ²லமித³ம் வசநமப்³ரவீத் || ௩௯

க்கப்பட்டாய், இராவணன் மனையிலடைப்புண்டு எங்கள் காவலில் வைப்புண்ட வுன்னை நேரே யிந்திரனே வந்தாலும் தப்புவிக்க வல்லானல்லன். 32

ஆதலின் மைதிலி! உனக்கு இதம்சொல்லுகிறேன் என் சொல்லைக்கேள்; கண்ணீரைப் பெருகவிட்டது போதும்; கேட்டைத்தருகின்ற சோகத்தை யித்துடன் ஒழித்துவிடு. 33

அன்பும் ஆர்வமும் அடைந்து இந்த ஓயாத பேதைமையை ஒழித்து சீதாய்! அவுணர்கோனோடு உனக்கு ஆனபடி யாடப்பார். 34

பெண்ணே! பயப்படாதே; பெண்களுக்கு யவ்வனமென்பது நிலைத்திருப்ப தொன்றல்லவென் றுனக்குத் தெரியுமன்றே! ஆகையால் உன்பருவம் கடந்துபோவதற்கு முன்னமே கலந்து அனுபவிக்கப்பார். 35

சிங்காரவனங்களும், செய்குன்றுகளும், மற்றும் பொழில்களும், இராக்ஷஸர் பதியுடன் கூடி யுலாவுதற்கு (ஓ மாழைநோக்கி!) உனக்கெத்தனையிடமுண்டு. 36

சுந்தரி! அரக்கர்கள் பதியான ராவணனைப் பதியாக நீ நினைத்தபோதே உன்னைச்சேவிப்பதற்கு எத்தனை ஆயிரம் பெண்கள் உன் வசத்தில். 37

ஆகையால் என் சொற்படி செய்யாயாகில் மிதிலையின் பதிக்கு அருமைச்செல்வமான உன் இதயத்தை இக்கணமே பிடுங்கித்தின்பேன். 38

அநந்தரம் சண்டோதரி யென்னுமோர் பேரரக்கி கோபந்தலைக்கேறி பெருஞ் சூலமொன்றைச் சுழற்றிக்கொண்டு இந்தவிதம் சொல்லலுற்றாள். 39

𑌇𑌮𑌾𑌂 𑌹𑌰𑌿𑌣𑌲𑍋𑌲𑌾𑌕𑍍𑌷𑍀𑌂 𑌤𑍍𑌰𑌾𑌸𑍋𑌤𑍍𑌕𑌮𑍍𑌪𑌿𑌪𑌯𑍋𑌧𑌰𑌾𑌮𑍍।
𑌰𑌾𑌵𑌣𑍇𑌨 𑌹𑍃𑌤𑌾𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌦𑍌𑌰𑍍𑌹𑍃𑌦𑍋 𑌮𑍇 𑌮𑌹𑌾𑌨𑌭𑍂𑌤𑍍॥

𑌯𑌕𑍃𑌤𑍍𑌪𑍍𑌲𑍀𑌹𑌮𑌥𑍋𑌤𑍍𑌪𑍀𑌡𑌂 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌚 𑌸𑌬𑌨𑍍𑌧𑌨𑌮𑍍।
𑌅𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑍍𑌯𑌪𑌿 𑌤𑌥𑌾 𑌶𑍀𑌰𑍍𑌷𑌂 𑌖𑌾𑌦𑍇𑌯𑌮𑌿𑌤𑌿 𑌮𑍇 𑌮𑌤𑌿𑌃॥ ௪௧

𑌤𑌤𑌸𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌘𑌸𑌾 𑌨𑌾𑌮 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀 𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍।
𑌕𑌣𑍍𑌠𑌮𑌸𑍍𑌯𑌾 𑌨𑍃𑌶𑌂𑌸𑌾𑌯𑌾𑌃 𑌪𑍀𑌡𑌯𑌾𑌮 𑌕𑌿𑌮𑌾𑌸𑍍𑌯𑌤𑍇॥ *
𑌨𑌿𑌵𑍇𑌦𑍍𑌯𑌤𑌾𑌂 𑌤𑌤𑍋 𑌰𑌾𑌜𑍍𑌞𑍇 𑌮𑌾𑌨𑍁𑌷𑍀 𑌸𑌾 𑌮𑍃𑌤𑍇𑌤𑌿 𑌹।
𑌨𑌾𑌤𑍍𑌰 𑌕𑌶𑍍𑌚𑌨 𑌸𑌨𑍍𑌦𑍇𑌹𑌃 𑌖𑌾𑌦𑌤𑍇𑌤𑌿 𑌸 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿॥ ௪௨

𑌤𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌜𑌾𑌮𑍁𑌖𑍀 𑌨𑌾𑌮 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀 𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍।
𑌵𑌿𑌶𑌸𑍍𑌯𑍇𑌮𑌾𑌂 𑌤𑌤𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌸𑌮𑌾𑌨𑍍𑌕𑍁𑌰𑍁𑌤 𑌪𑌿𑌣𑍍𑌡𑌕𑌾𑌨𑍍॥ *
𑌵𑌿𑌭𑌜𑌾𑌮 𑌤𑌤𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾 𑌵𑌿𑌵𑌾𑌦𑍋 𑌮𑍇 𑌨 𑌰𑍋𑌚𑌤𑍇।
𑌪𑍇𑌯𑌮𑌾𑌨𑍀𑌯𑌤𑌾𑌂 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂 𑌲𑍇𑌹𑍍𑌯𑌮𑍁𑌚𑍍𑌚𑌾𑌵𑌚𑌂 𑌬𑌹𑍁॥ ௪௩

𑌤𑌤𑌶𑍍𑌶𑍂𑌰𑍍𑌪𑌣𑌖𑌾 𑌨𑌾𑌮 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀 𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍।
𑌅𑌜𑌾𑌮𑍁𑌖𑍍𑌯𑌾 𑌯𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 𑌹𑌿 𑌤𑌦𑍇𑌵 𑌮𑌮 𑌰𑍋𑌚𑌤𑍇॥ *
𑌸𑍁𑌰𑌾𑌚𑌾𑌨𑍀𑌯𑌤𑌾𑌂 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌶𑍋𑌕𑌵𑌿𑌨𑌾𑌶𑌿𑌨𑍀।
𑌮𑌾𑌨𑍁𑌷𑌂 𑌮𑌾𑌂𑌸𑌮𑌾𑌸𑍍𑌵𑌾𑌦𑍍𑌯 𑌨𑍃𑌤𑍍𑌯𑌾𑌮𑍋𑌥 𑌨𑌿𑌕𑍁𑌮𑍍𑌭𑌿𑌲𑌾𑌮𑍍॥ ()
𑌏𑌵𑌂 𑌸𑌂𑌭𑌰𑍍𑌤𑍍𑌸𑍍𑌯𑌮𑌾𑌨𑌾 𑌸𑌾 𑌸𑍀𑌤𑌾 𑌸𑍁𑌰𑌸𑍁𑌤𑍋𑌪𑌮𑌾।
𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌭𑌿𑌸𑍍𑌸𑍁𑌘𑍋𑌰𑌾𑌭𑌿𑌰𑍍𑌧𑍈𑌰𑍍𑌯𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌜𑍍𑌯 𑌰𑍋𑌦𑌿𑌤𑌿॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 - 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌂𑌶𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃॥

பயத்தால் தனங்கள் குலுங்க, மான்போலலையுங் கண்களுடன் கூடிய இவளை இராவணன் கொண்டுவந்த நாள் தொடங்கி எனக்கோராசையுண்டு; அதாவது:—இவள் மார்பில் வலம் இடம் கீழ் மேல் இப்புடைகளிலுள்ள மாமிசங்களையும், நாடிகளையும், முடியையும் அப்படியே புசிக்கவேண்டுமென்பதாம். 41

பிறகு பிரகஸையென்னுமோரரக்கி சொல்லுகிறாள்:-கொஞ்சமும் கரையாத இவள் நெஞ்சத்தை முன்னே பிடித்துவிடுவோம்; சும்மா விருப்பதேன்? வேணுமாகில் அரசனுக்கு, அவள் மனுஷ்யை யாகையால் இங்குதரிக்க மாட்டாம லிறந்துவிட்டாளென்போம், அரசனும் அவ்விஷயத்தில் "ஸந்தேஹமின்றிபுசியுங்க" ளென்றே சொல்லப்போகிறார். 43

